AMIRTHASAGARAN

OR

SON OF KODEESVARAN.

T. K. Chittiar
Karaikudi

S. S. ARUNAGIRINATHAN,

AUTHOR OF

"Tirukkalukundram Tragedy," & "Kumutharanjani," Etc.

E. M. GOPALAKRISHNA KONE,

PUBLISHER

North Chitrai St, MADURA.

1930.

அமிர்தசாகரன்

அல்லது

கோடீசுவரனுடைய குமாரன்.

மூன்று அழகிய சித்திரப்படங்களுடன் கூடிய
அருமையான ஒரு தமிழ்க் கதை.

ஆனந்தமனோகரன், குமுதரஞ்சனி, வீரகேசரி, பத்மாட்சி
முதலிய பல நாவல்களின் ஆசிரியர்
எஸ். எஸ். அருணகிரிநாதன் அவர்கள்
எழுதியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்
ஸ்ரீகோபால்மஹால், மதுரை.

ஜிஸ்தர் செய்தது] [விலை ரூபா 1—4—0

Printed at
The Excelsior Press,
Madura.

உரிமை உரை.

காலஞ் சென்ற

திரு. நாகை-சோ. தண்டபாணிப்பிள்ளை அவர்கட்கு:—

அன்பு நிறைந்த நண்பரே!

நான் இச்சிறு புத்தகத்தைத் தாங்கள் என்னிடம் கொண்டிருந்த அன்பிற் கறிகுறியாகத் தங்களுக்கு உரிமையாக்குகிறேன். தாங்கள் இவ்வுலகத்தில், முப்பத்தோராமாண்டு முடியுமுன்னரே, ஆங்கிலமும், தமிழும் அழகுபெறக் கற்று, அடக்கமே உருவெடுத்து வந்தாற்போல் விளங்கினீர்கள்; ஆகலின், தங்கள் பெருமையை எவர் அறியினும் அறியாவிடினும் தமிழ்த் தாய் அறிந்துள்ளாள் என்பது திண்ணம். நண்பரே! தாங்கள் எனக்கு உற்ற தோழராகவும், என் நலத்தைக் கருதுவதில் அன்பு நிறைந்த ஒரு சகோதரைப் போன்றும், உலகானுபவத்தை ஊட்டுவதில் ஒரு சிறந்த நூலைப்போன்றும் விளங்கினீர்கள். இவற்றை என் மனச்சான்று ஒருபோதும் மறவாது. நான் தங்களோடு நட்புரிமை கொண்டு இன்பமாகக் கழித்த நாட்கள் என் நினைவிற்கு வரும்போது தங்கள் பிரிவாகிய கொடுமை என்னை வருத்துகின்றது. மாசற்ற மணியாகிய தங்களைக் கொண்டு சென்ற யமன் கண் கெட்டவனாய் இருத்தல் வேண்டும். அவன் கண் தெரியப் பெற்றவனாயின், மலையிடைப் பிறவா மணிபோன்ற தங்களை இவ்வுலகினின்றும், இவ்வளவு இளம்பருவத்தே பிரித்திருக்கமாட்டான். ஆம்; எமன் கண்கெட்டவனே! ஆதலினன்றே அவனுக்கு அந்தகனெனும் பெயரும் அமைந்தது? நண்பரே! தங்கள் பூதவுடம்பு அழிந்தது; புகழ் உடம்பு அழியவில்லை. தாங்கள் இயற்றிய அரும்பெரு நூல்களின் அருமையை அறிந்த தமிழ் மக்கள் பலரும் தங்களை என்றும் மறவார்கள் என்பது திண்ணம்! எல்லாம் செய்யவல்ல இறைவன் தங்களை இப்போது மிகவுயர்ந்த பதவியில் வைத்துளார் எனத் துணிந்து, அதற்காக நான் அவரை மனமொழி மெய்களாற் பன்முறை வணங்கி வழிபடுகின்றேன்.

தங்கள் அன்பினை மறவா நண்பன்:

எஸ். எஸ். அருணகிரிநாதன்.

முன்னுரை.

சகோதர சகோதரிகாள்!

"புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா ஒருவன் உரைப்பவும்—கண்ணுடி
நல்லார் வருந்தியும் கேட்பரோ மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து"

என்று நாலடியாரில் கூறியபடி, ஒருவன் சிறந்த நூலுணர்ச்சி இல்லாதவனுயினும் அவன் கூறுவதைப் பெரியோர் இகழாது கேட்பர் என்பது அறிவுடையார் அறிந்ததாம்.

அறிவுடையார் பலர் எழுதிய தேனினும், பாலினும் இனிய பல கதைகளைப் படித்த உங்களுக்கு, இக்கதை எவ்வளவு தூரம் இன்பமளிக்கக் கூடுமென்பதை நான் அறியேன். இருப்பினும் என்னால் எழுதப்படும் கதைகளை எல்லாம் அன்புடன் ஏற்று என்னை ஆதரிக்கும் பெருநோக்கம் உங்களுக்கு உண்டென்பதை அறிந்தே இக்கதையைப் புத்தக வடிவில் உங்களுக்கு அனுப்பத் துணிந்தேன். இதனை அன்புடன் ஏற்றுக்கொள்ளுவீர்கள் என்பது என் துணிபு. என்பால் பேரன்பு கொண்டுள்ள உங்களுக்கு நான் என் நன்றியறிதலைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுவதைத் தவிர வேறு என்ன செய்ய வல்லேன்!

இக்கதை அச்சாகும்போது இதில் அவசியமான பல திருத்தங்களைச் செய்துதவிய எனது இன்னுயிர் நண்பரும், சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலைத் தமிழ்ப் புலவருமாகிய திருவாளர் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கட்கும், இப்புத்தகத்தையும், ஆனந்தமனோகரன் என்னும் மற்றொரு புத்தகத்தையும் ஏற்று என் இஷ்டப்படி அச்சிட்டுத் தமிழ் நாட்டாருக்குதவிய ஸ்ரீமான் E. M. கோபாலகிருஷ்ணக்கோனர் அவர்கட்கும், நான் என் மனமுவந்து வந்தன மளிக்கின்றேன்.

புரசைப்பாக்கம் }
சென்னை. }

இங்ஙனம்,
எஸ். எஸ். அருணகிரிநாதன்.

முகவுரை.

"அமிர்த சாகரன்" என்னும் பெயரிய இந்நூல் இதன் பெயருக்குத் தக்கபடி வாசகருக்கு ஒரு "அமிர்த சாகரம்" போன்றே அகம் புறம் இரண்டினும் ஆனந்தம் அளித்துக் கொண்டு செல்கின்றது. இந்நூலை இயற்றிய எமது நண்பர் எஸ். எஸ். அருணகிரிநாதன் என்பவர் இதுபோன்ற சில நாவல் களுக்கும் பல நற்றமிழ் நூல்களுக்கும் ஒரு தகப்பனுதலால் தமிழ்நாடு இவரை நன்குணர்ந்திருக்கலாம். இவ் இனிய கதை யை எழுதிய இவ் ஆசிரியரின் கருத்து 'நமதுநாட்டுமக்கள் நல் வழியில் நடந்து சன்மார்க்கராய் விளங்கவேண்டும்' என்பதே.

நாவல் என்பது ஆங்கிலமொழி; தமிழில் இதன்பொருள் கட்டுக்கதை. இதனைத் தமிழ்மொழி என்றே கூறி "நா-வல்" எனப்பிரித்து நாவினது வன்மை பெற்றவர்க்கே அதாவது:- கற்றபடி பேசவும் எழுதவும் வல்லார்க்கே அன்றித் தனித் தனி கற்றவல்லார்க்கோ பேசவல்லார்க்கோ எழுத முடியாதது என்றுபொருள் படுத்துவதே சாலப்பொருந்தும். இருவேறுல கத்தியற்கை: திருவேறுதெள்ளியராதலும் வேறு என்று பண முள்ளாரையும் படிப்புள்ளாரையும் பிரித்துள்ளார் நாயனூர். அத்தெள்ளியரிலுங்கூடக் கற்று வல்லுநர் வேறு எழுத்து வல் லுநர் வேறு என்று நாம் பிரிக்கின்றோம். இதிலிருந்து நாவல் எழுதுவதின் அருமை நன்கு விளங்கும்.

இந்நூல் எடுத்தாரை விடாதும் முடித்தாரைப் பேதமை அடாதும் ஆக்கவல்லதாகவே இவரெழுதிய எல்லா நூல்களை யும் தமிழ்நாடு ஆவலுடன் ஆதரித்து வருவது போன்று இத னையும் ஆதரிக்குமென்பது துணிபு.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ் வித்வான், மதுரை.

அத்தியாய அட்டவணை.

K

T. Kumarappan

T. Kumarappan



ஆனுல் சரி; அப்படியே வாருங்கள்! அங்கேப் போவோம்.'

[பக்கம் 77.]

அமிர்த சாகரன்

அல்லது

கோடீசுவரனுடைய குமாரன்

முதலாவது அத்தியாயம்.

ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று.

"அறன்வரையா னல்ல செயினும் பிறன் வரையாள்
பெண்மை நயவாமை நன்று"—திருக்குறள்.

இந்து தேசமென்றும், இந்தியா என்றும் இப்பொழுது அழைக்கப்படும் நம்முடைய புண்ணிய பூமியாகிய இப் பரதகண்டம்—புண்ணியத்திற்கும், புகழிற்கும், ஞானத்திற்கும் புகலிடமாயிருந்த இப்பரதகண்டம் அநேகம் நூற்றாண்டுகளுக்கு முன், உலகத்தில் இப்போது நாகரிகத்தில் தலையெடுத்து நிற்கின்ற ஏனைய தேசங்களினும் மேம்பாடுடையதாய், சீருஞ் செல்வமும், பேரும் புகழும் ஒருங்கே பெற்று உத்தமகுணம் நிறைந்த சத்தியவான்களான அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்ததென்பது சரித்திர ஆராய்ச்சியுடையார் அனைவரும் அறிந்த விஷயமேயாகும். அத்தகைய உத்தம நிலையிலிருந்த நமது புண்ணிய பூமியானது எல்லாம் வல்ல தனிப் பெருந் தடங்கடலாகிய திருவருளின் அருட் குறைவாலோ, மக்களின் மனச்சாட்

சிக்கு விரோதமான செய்கையாலோ வளர்பிறை போல் வளர்வதொழிந்து, தேய் பிறைபோல் படிப்படியாகத் தன் னிலையிலிருந்து குறைந்து, நாகரிகத்தையும் செல்வத்தையும் இழந்து, அழியாப் பெரும்புகழ் பெற்ற சிபி, புரூரவன், நளன், அரிச்சந்திரன், இராமன் முதலிய மண்டலாதிபர் களையும் இழந்து, கண்கள் தெரியாமல் ஜாதி, மதம் என் னும் இருள் நிரப்பிய காடுகளினுட்சென்று, பல தேசங்களி லிருந்து வந்த துர்க்குணம் நிரம்பிய பல தீய அரசர்களின் ஆக்கினைகளுக்குட்பட்டுப் பல நூற்றாண்டுகள் வரையில் துன்புற்றுக் கொண்டிருக்கையில், மலடிவயிற்று மகன்போ லும், புதையலெடுத்த தனம்போலும், தாய் முகம் கண்ட சேய்போலும், மழை வரவுகண்ட பயிர்போலும் நாம் உள் ளம் உவந்து களிக்கும் வண்ணம் "பாரத புத்திரர்களே!" என்று கூவி அழைத்து "அஞ்சேல்! அஞ்சேல்!" என்று நமக்கு அபயஸ்தம் கொடுத்துத் தங்களுடைய புஜபல சாமர்த்தியத்தாலும், அதிதீவிர புத்தியின் திறமையினாலும் நீதியுள்ள அரசர்களை நிலைநிறுத்தி நீதியற்றவர்களைத் தொலைத்துத் தங்களுடைய வெற்றியின் அறிகுறியாக யூனி யன் ஜாக் என்னும் பெயருடைய அழகிய துவஜத்தை நிலை நாட்டி எங்கும் ஒரே படித்தாய்ப் பாரபட்சமின்றி நீதியு டன் அரசுபுரிந்துவரும் காருண்யம் வாய்ந்த நமது ஆங்கி லேய அரசாட்சி ஏற்பட்டது. அது ஏற்பட்ட சில காலத் திற்குப்பின் நமது கதை ஆரம்பமாகிறது.

இந்தியாவில் அக்பர் சக்கரவர்த்தி அரசு செலுத்திக் கொண்டிருந்த காலத்தில் அவர் பல காரணங்களை முன் னிட்டுச் சிலருக்கு அநேகம் கிராமங்களை வெகுமதியாகக் கொடுத்ததுண்டு. அதுபோலவே அவர் தம்மிடம் மந்திரி என்னும் உயர்பதவியில் வேலைபார்த்துக் கொண்டிருந்த

நித்தியாநந்தர் என்னும் பெயருடைய ஒருவருக்கு, அவர் நித்தியாநந்தர்—தமக்கும் இராஜ புத்திரர்களுக்கும் இருந்த பகையை நீக்கி அவர்களைத் தமக்கு உண்மைவாய்ந்த நண்பர்களாக்கி, அவர்களுடைய புத்திரிகளில் இருவரைத் தமக்கு மணம் செய்துவைத்த பேருதவிக்காக நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய இரண்டு பெரிய ஊர்களை இனமாகக் கொடுத்து ஜமீன்தார் என்னும் பட்டமும் கொடுத்தார்.

அவ்விரண்டு ஊர்களையும் நித்தியாநந்தர் தம்முடைய காலத்திற்குப் பிறகு தம்முடைய குமாரனையும் மைத்துனனையும் அழைத்து ஆளுக்கு ஓர் ஊராக அநுபவித்துக் கொள்ளும்படி கூறிவிட்டு மரணமடைந்தார். அந்த இரண்டு ஊர்களில் ஒன்றின் பெயர் மங்களபுரி; மற்றொன்றின்பெயர் சேதுபுரி. மங்களபுரியை நித்தியாநந்தர் புத்திரனாகிய ஜீமூதகேதுவும், சேதுபுரியை நித்தியாநந்தரின் மைத்துனனாகிய அமிர்தநாதனும் அநுபவித்துக்கொண்டு வந்தனர். இவர்களுக்குப் பிறகு இவர்களின் புத்திரர்களும் பௌத்திரர்களும் ஒருவருக்குப்பின் ஒருவராக அவ்வூர்களில் வாழ்ந்து வந்தனர். நமது கதை ஆரம்பமான காலத்தில் சேதுபுரியில் கடைசியாக இருந்தவரான இராஜேஸ்வரர் என்பவருக்குப் புத்திரனில்லாமையால் தமது ஒரே புத்திரியும், இங்கிலீஷ் முதலிய பல பாஷைகளைக்கற்றுத் தேர்ந்தவளும் மங்கைப் பருவம் கடந்தவளும், விவாகமாகாதவளும், புத்தியில் பெரியவளுமாகிய ஜயகுமாரி என்னும் தம்முடைய அருந்தவச் செல்வியிடம் சேதுபுரி ஜமீனை ஒப்புவித்துக் காலஞ்சென்றார். அதுமுதற்கொண்டு ஜயகுமாரி தன் சேதுபுரி ஜமீனின் வரவு செலவுகளைத் தன்னுடைய தந்தையினும் அதிக சாமர்த்தியமாகக் கவனித்துக் கொண்டு வருகிறாள். அவள் வயதோ பதினெட்டு நிற்க.

மேற்கூறியவாறே மங்களபுரியை ஜீமூதகேதுவுக்குப் பிறகு அவனுடைய புத்திரர் பௌத்திரர்கள் அநுபவித்துக் கொண்டு வந்தனர். கடைசியாக, அதாவது, ஜயகுமாரி சேதுபுரிஜமீனை ஆண்டுகொண்டுவருகையில்மங்களபுரியைச் சதாநந்தர் என்பவர் ஆண்டுகொண்டிருந்தார். அவர் முதலில் காந்திபுரம் என்னும் ஊரின் ஜமீன்தாரான சுந்தரமூர்த்தியின் குமாரத்தியாகிய கேதாம்பாளை மணந்து வாழ்ந்திருந்தார். அவ்வம்மணி ஒரு புத்திரனையும் ஒரு பெண்ணையும் பெற்றுப் பிறகு இருபது ஆண்டு ஜீவித்திருந்து தம்முடைய முப்பத்து எட்டாவது வயதில், அதாவது சதாநந்தரின் நாற்பத்து ஐந்தாவது வயதில் தம்முடைய ஒரே புத்திரனும் இருபது வயது நிரம்பியவனும் பி. ஏ., முதல்தரப் பரீட்சையில் தேறியவனுமாகிய அமிர்தசாகரன் என்பவனையும், அருமைப் புத்திரியையும் பிரிந்து ஊழின்பெருவலியாலேற்பட்ட வியாதியினால் இறந்தனள்.

மனைவி இறந்தவுடன் இப்போதும் சில பிரபுக்களும், ஜமீன்தார்களும் தாங்கள் கூன் வளைந்த கிழவர்களாயினும் தம் பண இறுமாப்பினால் இளம் வயதுடைய பெண்களை—அப்பெண்களின் பிரியத்தைப் பெறவோ அல்லது அவர்களின் வெறுப்பைப் பெறவோ—மணந்து மகிழ்வுற்றுப் பின்னர்க் காலனுக்கு ஆளாகி அவர்களை நடுத்தெருவில் விட்டுப் போவதைப் போலவே சதாநந்தர் தம்மனைவி இறந்த மறுமாதமே ஜயபுரி ஜமீன்தாராகிய இராஜேஸ்வரர் இறப்பதற்கு முன் அவருடைய கடைசி சகோதரியாகிய மோகவதி என்பவளை மணந்துகொண்டார். ஆனால் அவர் அமிர்தசாகரன் பேரில் பிரியமில்லாமல் இப்படி மறுவிவாகம் செய்து கொண்டார் போலும்! என்று சிலர் நினைக்கலாம். அப்படி நினைப்பது தவறு. அவர் அமிர்தசாகரனை நேசிப்பது

போல் யாரும் தங்களுடைய புத்திரர்களை அவ்வளவு அருமையாய் நேசித்திருக்கமாட்டார்கள். இது பின்னால் வரும் விஷயங்களால் நாம் சொல்லாமலே விளங்கும். ஜமீன்தார்களிற் சிலர் எவ்வளவு வயதுடையவர்களாயினும் சரியே, மனைவியின்றி இருப்பது கௌரவக் குறைவென்று கருதுவது போலவே சதானந்தரும் எண்ணினர் போலும், இவ்வொரு விஷயமே அவர் மறுவிவாகம் செய்து கொண்டதற்குத் தகுந்த காரணமாயிருக்க வேண்டும்.

அமிர்தசாகரன்—சதானந்தரின் குமாரனாகிய அமிர்தசாகரன்—நல்ல அழகுடையவன்; கல்வியுடையவன்; அதிபுத்திசாலி; நற்குலக்கொழுந்து. அவனைப்போல் நற்குணம் வாய்ந்த ஒருவன் உலகமுழுவதுந் தேடினாலும் அகப்படமாட்டான். வாசகர்களே! அவனுடைய குணம் போகப் போக உங்களுக்குத் தெரியும்.

சதானந்தருக்குச் சொந்தமான மங்களபுரி சுமார் ஐந்து கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ளதாகையால் அனைவரும் அவரைக் கோடீசுவரர் சதாநந்தர் என்று கூறுவது வழக்கம். நாமும் அக்காரணம் பற்றியே அமிர்தசாகரனைக் கோடீசுவரனுடைய குமாரன் என்று கூறத்துணிந்தோம்.

* * * *

மங்களபுரி ஓர் அழகிய ஊர். அது பல வளங்களையும் உடையது. ஜீவரக்ஷணி ஓர் அழகிய நதி. எக்காலத்திலும் ஜலம் குறையாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால் அவ்வூர் வேளாண்மையைக்குறித்து நாம் சொல்லவேண்டியதில்லை. வேளாண்மை மிகுவதினால் குடிகள் செழிப்புற்றிருந்தனர். 'குடியுயரக் கோனுயரும்' என்றபடி சதானந்தரும் யாதொரு குறைவுமின்றித் தமது இளையாளாகிய மோகவதியோடு வாழ்ந்துகொண்டிருந்தார்.

சதானந்தர் வசிக்கும் பங்களா இக்காலத்தில் ஜமீன்தாரர்களிற் சிலருடைய வீடுகள் நாகரிகமற்று விளங்குவதைப் போலன்றி, ஒரு மைல் சுற்றளவுள்ள ஓர் அழகிய தோட்டத்தின் நடுவில் மிகவும் விசித்திர வேலைப் பாடுகளுடன் கட்டப்பட்டிருந்தது. வீட்டைச் சுற்றிலும் பாக்கு மரங்களும் தென்னைமரங்களும் செழித்தோங்கி வளர்ந்திருந்தன. பலவித புஷ்பச் செடிகள் நன்றாகப் புஷ்பித்துக் கம கம வென்று பரிமளித்துக்கொண் டிருந்தன. ஜீவரக்ஷணி நதியின் ஒரு பாகம் இத்தோட்டத்தின் நடுவில் செல்லுகின்றது. அதில் திருச்சியில் காவேரி நதிக்கரையில் கருங்கற்களால் கட்டப் பட்டிருப்பதுபோல் படிக்கட்டுகள் வெள்ளைச் சலவைக் கற்களால் அழகாகக் கட்டப்பட்டிருந்தன. மா, பலா, கொய்யா, மாதுளை, பேரி, அன்னதாழை முதலிய பழந்தரும் மரங்களும், இஞ்சி, நாரத்தை, வாழை முதலிய தருக்களும் செடி கொடிகளும் ஏராளமாக இருந்தன. கோவைப் பழங்கள் பசுமை நிறமான செடிகளில் செக்கச்செவேரென்று இருப்பதைப் பார்க்கப் பார்க்கப் பரமாநந்தமா யிருந்தது. சரக்கொன்றை மரங்கள் நீண்ட காய்களைத் தொங்கவிட்டுக் கொண்டு வரிசை வரிசையா யிருந்தன. ஆலமரங்களும், திரண்டு பிரமாண்டமாக வளர்ந்து விழுதுகளைப் பூமியில் செலுத்தி வெயிலுக் குபயோகமாகவும், அநேகம் பறவைகளுக்கு இருப்பிடமாகவும் இருந்தன. கொய்யா முதலிய பழங்களைப் பறிப்பவர்கள் ஒருவருமே இல்லைபோலும், அவைகளை அணில்களும் வௌவால்களுமே மனமகிழ உண்டு வந்தன. இதுவுமன்றி அத்தோட்டத்தின் நடுவில் பெரிய குளம் ஒன்று இருந்தது. அதன் தென்புறம் தவிர, மற்ற மூன்று புறங்களிலும் அழகிய கற்களால் படிக்கட்டுகள் கட்டப்பட்டிருந்தன. அக் குளத்தில் தாமரை இலை

களும் பூக்களும் நிரம்பியிருந்தன. அதன் நடுவில் அழகிய மாளிகை ஒன்று வெயிற்கால உபயோகத்திற்காகக் கட்டப்பட்டிருந்தது. அதிகம் கூறுவானேன்! அந்த அழகிய தோட்டத்தைப் போலும், அதன் மத்தியில் கட்டப்பட்டிருந்த பங்களாவின் அழகைப் போலும் நாம் எங்குமே பார்த்ததில்லை என்பதோடு நிறுத்தி இனிமேல் நடைபெற்றுள்ள கதையை ஆரம்பிப்போம்.

நாம் மேற்கூறிய கோடீசுவரர் சதாநந்தரின் பங்களாத் தோட்டத்தின் வெளி வாயிலில் ஒருபுறம் 'கோடீசுவரர் சதாநந்தர்' என்றும் மற்றொருபுறம் 'சுகாநந்த கற்பகத் தோட்டம்' என்றும் எழுதப்பெற்ற இரண்டு பித்தளைப் பலகைகள் மாட்டப்பட்டிருந்தன. நிற்க.

ஒரு தினம் இரவு பத்துமணி இருக்கலாம். பங்களாவில் இருந்த கடிகாரங்களெல்லாம் டாங், டாங், என்று பத்துமுறை சப்தித்தன. பௌர்ணமிச் சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்ததால் களங்கமற்ற வானம் இருளின்றி விளங்கியது. பங்களாவில் இருந்தவர்களெல்லாம் உறங்கிவிட்டார்கள். சதாநந்தர் குமாரன் அமிர்தசாகரனுடைய நாய்கள் மட்டும் இங்கு மங்கும்குரைத்துக்கொண்டிருந்தன. வேறு சந்தடியே கிடையாது. இந்தச் சமயத்தில் அமிர்தசாகரன் பங்களாவின் மேன்மாடியில் தன்னுடைய அறையில் அழகிய நாற்காலி ஒன்றில் ஏதோ கவலையுடன் உட்கார்ந்துகொண்டிருந்தான். சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக்கொண்டும், புஷ்பச் செடிகளின் வாசனை பரிமளத்துடன் வீசிக்கொண்டும் இருந்த இவ்வழகிய இரவில் பரம ஏழையும சந்தோஷம் அடைவானே! அமிர்தசாகரன் மட்டும்—கோடீசுவரருடைய குமாரனாகிய அமிர்தசாகரன் மட்டும்—ஏன் கவலையோடிருக்கின்றான்? ஏன் அவன் மாடி

மேற்சென்று உலாவலாகாது? உறக்கம் வரவில்லையானல் ஏதாவது புத்தகங்களை வாசிக்கிறதுதானே? இக்கேள்விகளெல்லாம் அவனைக் கேட்பவர்கள் யார்? ஒருவருமில்லை. அமிர்தசாகரன் பெருமூச்செறிந்து கொண்டு நாற்காலியில் இப்படியும் அப்படியுமாகத் திரும்பித் திரும்பி உட்காருவான்; எதையெதையோ எண்ணி யெண்ணி ஏங்குவான். முடிவில் அவன்—அமிர்தசாகரன்—தனக்குத் தானே வெளிப்படையாகப் பின் வருமாறு பேசலானன்.

"இறைவனின் திருவுளக்கருத்து யாதோ? மக்களுக்கு இன்பமும் துன்பமும் மாறிமாறி வருகின்றன. எல்லாம் செய்யவல்ல இறைவனுடைய கருணை இவ்விதமானல் யான் செய்வது என்ன? 'அவனன்றி ஓரணுவும் அசையாது' ஆகையால் நான் ஆலோசிப்பதிற் பயனென்ன? உலகானுபவம் அறிந்த அனைவரும் இவ்வுலகஇன்பத்தைச் சிற்றின்பமென்று வெறுத்துக்கூறி இருக்கின்றனர். அதைக் கொஞ்சமேனும் கவனியாமல் அந்தத் துஷ்டை என்னை, 'கண்மணி! என்னுயிர்க்காதலா!' என்று பலவிதமாகக் கூறுவதோடும், என்னை அவள் தன் வசப்படுத்திக் கொள்ளப் பார்க்கிருள். பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்குவித குணங்களில் ஒன்ருயினும் அவளுக்கில்லை. அவளுக்கும் எனக்கும் உள்ள முறையையும் எண்ணிப்பாராமல் அவள் தன் மனம் போனபடி என்னிடம் பேசிக் கொஞ்சுகிருள். 'கற்புடைய மங்கையர்களுக்குக் கணவனே தெய்வம்' என்றும், 'தெய்வம் தொழாஅள் கொழுநற்றெழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை' என்றும் பெரியோர்கள் மொழிந்திருக்கின்ருர்கள். அவ்வார்த்தைகளை ஒரு சிறிதும் கவனியாமலும், யான் கூறும் நற்போதனைகளைக் கேளாமலும் "தான் பிடித்த முயலுக்கு

மூன்றேகால்" என்று சாதித்த ஒரு சாதுவின் சீடனைப் போல் அவள் தான் கொண்ட எண்ணத்தையே பெரிதெனக் கருதுகிறாள். அடி பாதகி! நான் உன்னுடைய வயிற்றில் பிறக்காவிடினும் நீ என் தந்தைக்கு மனைவியல்லவா? என்னை நீ உன்னுடைய மைந்தனென்று எண்ணாமல் இவ்வாறு பேசுவது தகுமா? ஹே! பாவி! நான் உன்னுடைய இஷ்டத்திற்கு உடன்படாவிடில் நீ என் தந்தையிடம் என்னைப்பற்றி இகழ்வாகச் சில விஷயங்களைச் சொல்லி என்னை இவ்வீட்டிலிருந்து வெளியேற்றி விடுவேனென்று கூறினையன்றோ? என் தந்தை உன் வசப்பட்டிருப்பதே நீ அங்ஙனம் கூறியதற்குக் காரணம்போலும்! ஆயினும் என்ன? உன்னுடைய எண்ணம் இனி எப்பொழுதும் என்வரையில் நிறைவேறாது. உன்னுடைய பிரியத்திற்கு உடன்படாத யான் இனி இங்கிருப்பதால் நீ எனக்குப் பெரிய தீங்கை விளைவிப்பதோடும் என்னை அபகீர்த்திக் குட்படுத்தியும் விடுவாய். 'நாம் தனவந்தன் வீட்டுப் பெண்; தனவந்தனுக்கு மனைவியாயிருக்கிறோம்; எதை வேண்டுமானாலுஞ் செய்யலாம்' என்னும் எண்ணம் உனக்கு அதிகரித்து இருப்பதாகத் தெரிகிறது. இதோ ஆகாயவாணி வைரக்கற்கள் பதித்த நீல நிற வஸ்திரத்தை உடுத்திக்கொண்டிருப்பது போல நீல நிறமான ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் முத்துக்களைப்போல் பிரகாசிக்கின்றன. அவைகளின் இடையே முழுமதியம் பிரகாசிப்பது அநேகங்கோடி மனிதர்களின் நடுவில் அருங்குணம் வாய்ந்தவர் சிறந்து விளங்குவதுபோ லிருக்கின்றன. இப்போது எவ்வளவு தூரம் நடந்தாலும் தேகத்துக்குச் சிரமமிராது. அமிர்தவதனவின் பிரியத்தில் ஈடுபட்டிருக்கும் யான் வேறொரு ஸ்திரீயை நேசிப்பேனோ? இல்லை. இனி, இங்கு நான் தாமதிப்பேனாயின் என் சிற்றன்னை—

காலஞ் சென்ற ஜயபுரி ஜமீன்தார் இராஜேஸ்வரருடைய இளைய சகோதரியாகிய என் சிற்றன்னை—வந்து என்னைத் துன்புறுத்துவாள். இதோ போகிறேன்'' என்று கூறிக் கொண்டே அமிர்தசாகரன் அங்குத் தனக்காக வைக்கப்பட்டிருந்த சிற்றுணவுகளிற் கொஞ்சம் எடுத்துக் கொண்டு வேறு ஒன்றையும் எடுத்துக்கொள்ளாமலே ஒரு கடிதம் எழுதி அதை மடித்துத் தன் மேஜையின்மேல் வைத்துவிட்டுத் தான் உடுத்திக்கொண்டிருந்த இரண்டு வஸ்திரங்களோடும் ஒரு ஷர்ட் (Shirt) டோடும் திக்கற்றவனைப்போல் 'கடவுளே! நீயே கதி' என்று கூறிக்கடவுளை எண்ணி,

"அண்ணலே வென்னருமை யையாவோ பன்னிரண்டு
கண்ணாவோ வேல்பிடித்த கையாவோ செம்பவள
வண்ணாவோ நற்றணிகை மன்னாவோ வென்றென்றே
யெண்ணாவோ துன்பத் திருங்கடற்குள் மன்னினனே''

"மஞ்சட் பூச்சின் மினுக்கி விளைஞர்கண்
மயங்க வேசெய்யும் வாள்விழி மாதர்பாற்
கெஞ்சிக் கொஞ்சி நிறையழிந் துன்னருட்
கிச்சை நீத்துக் கிடந்தன னாயினேன்
மஞ்சற் றோங்கும் பொழிற்றணி காசல
வள்ள லென்வினை மாற்றுதல் நீதியே
தஞ்சத் தால்வந் தடைந்திடு மன்பர்க
டம்மைக் காக்குந் தனியருட் குன்றமே''

"மன்னப்பார் போற்றுமணியேநின் பொன்னருளைத்
துன்னப் பாராது சுழன்றே னருணைகிரி
தன்னப்பா நற்றணிகை தன்னிலமர்ந்தருளு
மென்னப்பா வென்னுமிந்த வேழைக் கிரங்காயோ''

என்னும் பாசுரங்களை—எடுத்தவிடமெல்லாம் அருளாருயப் பெருகப்பார்த்தாலும், படித்தாலும், படிக்கப்பக்கம் நின்று

கேட்டாலும் இத்தனைக்குந் தித்திக்குந் தன்மையுடைய தான, திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் காரணப் பெயர் கொண்ட ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பாசுரங்களை—உள்ள முருகும்படி மெல்லப் பாடிக்கொண்டே தன்னை ஒருவரும் பார்க்கா வண்ணம் வீட்டினின்றும் புறப்பட்டுச் சிறிதுதூரம் நடந்து தோட்டத்திற்கு வெளியிற் சென்றான்.

"இன்று இவ்வீட்டைவிட்டுப் போகும்படி யாயிற்றே" என்று எண்ணித் துக்கித்தான். மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு தன்னைச் சுற்றிலும் ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டுக் கண்களில் நீர் ததும்ப அரைமைல் தூரம் நடந்தான். தான் போகும் வழி இரண்டு சிறு பாதைகளாகப் பிரிந்துபோவதைக் கண்டான். எவ்வழியாகப் போவதென்று தயங்கி நின்றான். இறுதியிலொரு வழியாகச் சென்றான். மரம் செடிகளற்ற பெரும் மணல் வெளியில் தான் தனியே போவதை எண்ணிப் பயந்தான். தன் சிற்றன்னையின் துர்க்குணத்தைப் பற்றித் துக்கித்தான். "கடவுளே! இனியேனும் என் மாற்றாந்தாயின் மதியைத் திருத்தி அவளை நல்வழியில் நடக்கச் செய்வாய்" என்று பன்முறை பகவானை நோக்கிப் பஜித்தான். அதிக தூரம் நடந்தறியாதவனாதலாலும், பயத்தினாலும் அவனுக்கு ஸ்வாசம் அதிகரித்தது. அமிர்தசாகரனுக்குத் தான் போகுமிடம் இன்னதென்று தெரியவில்லை. பிறகு அரைமணி நேரத்திற்குள் ஒரு சாலை மார்க்கத்தை அடைந்தான். சாலையின் இருபுறங்களிலும் ஆல், அரசு, மா, புன்னை முதலிய பலவித மரங்கள் பூதாகாரமாய் ஆகாயத்தை அளாவி அடர்ந்து வளர்ந்திருந்தன. மரங்களின் அடர்த்தியால் அங்கு அதிக வெளிச்சமில்லை. அவன் சாலை மார்க்கத்தை அடைந்தவுடன் கீச்சுக்

கீச்சென்னும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தமும் பிறகு கொஞ்ச நேரத்திற்குள் நின்று விட்டது. அமிர்தசாகரன் தன்னுடைய மனத்தில் திகிற்கொண்டானாயினும், தைரியத்தோடு பின்னும் தன்னுடைய விதியை நொந்துகொண்டு போகையில், மரங்களிலிருந்த குரங்குகள் ஒன்றோடொன்று சண்டை இட்டுக்கொண்டு திடீர், திடீரென்று கீழே விழுவதையும், கோட்டான்கள் 'குக்குக்குகுகூ' என்று கூவுவதையுங்கண்டு பயமுற்றான். மேலே நிமிர்ந்து பார்த்தான். மரங்களின் அடர்த்தியால் சந்திரனுடைய ஜோதி கொஞ்சமும் கண்களிற்படவில்லை. அமிர்தசாகரன் சாலையின் ஓரத்தில் யாரோ படுத்திருப்பதைக் கண்டான். அவன் அச்சத்துடன் அருகிற்சென்று "யார்" என்று உற்றுநோக்கினான். உடனே பயமும் திகிலும், அனுதாபமும் ஆச்சரியமும் ஒருங்கேகொண்டு, "ஆ! கண்மணீ! அமிர்தவதனா! நீ எப்படி இங்கு வந்தாய்! நீ இவ்விதம் இங்கு பிரக்ஞையின்றி மூர்ச்சையடைந் திருப்பதற்குக் காரணம் யாது? ஆ! என்னுருயிரே! இனி யான் என்ன செய்வேன்!" என்று சொல்லிக்கொண்டே அவளருகில் அடியற்ற பெரும் மரம்போல் திடீரென்று விழுந்து மூர்ச்சை அடைந்தான்.

பதினைந்து நிமிஷங்களாயின. அமிர்தசாகரன் பிரக்ஞையுற்றெழுந்தான். தரையின்மீது படுத்திருக்கும் பதிவிரதா சிரோமணியைப் பார்த்தான். பதை பதைத்தான். "கண்மணீ! உன் கண்களைத் திறந்து பாராயோ? விதி வலியால் இங்கு வந்த எனக்கு உன் கெதியைப் பார்த்தவுடன் மனம் புண்ணாகின்றதே. உன்னிரு கண்களைத் திறந்து பாராயோ? நீ இக்கெதிக்குள்ளாயதற்குக் காரணம் யாதோ? உன்னை யார் இக் கெதி யாக்கினார்களோ? என் உயிர் என்னுடைய உடலை விட்டுப் போய்விடும்போலிருக்கின்றதே!

நான் இக்கோலமானதற்கு என் சிற்றன்னை காரணமா யிருந்தாள். நீ இக்கோல மடைந்ததற்குக் காரணமா யிருந்த பாவிகள் எவரோ? ஐயோ எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே! என் அன்பே 'என்னுருயிர் அன்பா!' என்று என்னை அழைக்கும் உன் வாய் திறக்க வில்லையே. அன்பு நிறைந்த பார்வையுடன் என்னைப் பார்க்கும் உன்னிரு கண்களும் மூடினவே. சூரியனைக்கண்ட தாமரைப் புஷ்பம்போல் பொலிவுற்றிருக்கும் உன்னுடைய முகம் கருகி இருக்கின்றதே. என்னுருயிரே!" என்று அலறிக்கொண்டே அமிர்த சாகரன் அமிர்தவதனவின் தலையைத் தன்னுடைய மடியின்மீது வைத்துக்கொண்டு அச்சமயம் தன்னால் செய்யக் கூடிய உபசாரங்களையெல்லாம் செய்தான். தன்னுடைய அங்கவஸ்திரத்தினல் கொஞ்சநேரம் விசிறினன். கண்ணீரை வடியவிட்டான். "கண்ணே, கண்மணியே!" என்று கதறினன். பயனில்லை. அவன் பின்னும் தன்னலான உபசாரங்களைச் செய்தான். அவள் கண்களைத் திறந்தாள்; பார்த்தாள் அமிர்தசாகரனை! அவளுடைய முகம் கொஞ்சம் பொலிவுற்றது. பேசுவதற்குச் சக்தியில்லை. மிரள மிரள விழித்து முன்போல் கண்களை மூடிக் கொண்டாள். பார்த்தான் அமிர்தசாகரன். "அமிர்தா! மோசம் செய்து விடாதே. நான் என்ன செய்வேன்? உன்னுடைய உயிர் போய்விடுமானல் நான் என்னுடைய உயிரைப் போக்கிக் கொள்ளுவேனேயன்றிப் பிறகு நான் இப் பூமியிலிரேன். ஐயோ என் கற்பகமே! தரையின்பேரில் இப்படிப்புரளுகின்றுயே. கண்ணே! உன் உடம்புக்கென்ன? உன் வாயைத் திறந்து ஒருவார்த்தை சொல்லக் கூடாதா? அதிகமாக வாதை பண்ணுகிறுயே? அதற்குக் காரணம் என்ன? கருணை நிரம்பிய உன்னுடைய பார்வை அன்புக்கோர் அடைக்கல

மாயிருந்தது போக இப்போது பார்ப்பவர்கள் பயப்படத் தக்க நிலைமையை அடைந்திருக்கின்றனவே. ஐயோ! அவைகள்—உன்னுடைய கண்கள்—கீழ் மேலாக சுழலுகின்றனவே. அமிர்தவதனு! அமிர்தவதனு! இதற்கோ உன்னை நான் நேசித்தேன்? அமிர்தவதனு! இப்போது நான் சொல்லுகிறேன். நான் உன்னைக் காதலிக்கின்றேன். அது உனக்குத் தெரியும். நான் என்னுடைய முழுமனவல்லமையுடன் உன்னைக் காதலிக்கின்றேன். நீ என்னை விட்டுப் பிரிந்தால் என் மனம் சம்மதிக்காது, சகிக்காது. நான் உன்னை இழக்கச் சம்மதிப்பேனோ? சம்மதியேன். எல்லாவற்றினும் காதல் சிறந்த தன்றோ? நீ என்னை விட்டுப் பிரிந்தால் நான், இறந்து போனவர்களில் ஒருத்தி என்று எண்ணிக்கொண்டு பொறுமையுடன் உன்னை மறந்துவிட முடியுமா? முடியாது. கண்மணீ! நீ சுகமுற்று என்னுயுள் பரியந்தம் என்னைவிட்டு அகலாமலிருக்க மாட்டாயா? உண்மையாய் உன்னை நான் காதலிக்கின்றேன்—காதலித்துமிருக்கின்றேன். அமிர்தவதனு! என்னுருயிரே! நீ எனக்குச் சொந்தமானவளன்றோ? உன்னை விரும்பியல்லவோ நான் இத்தனை வருடங்களாகக் காத்துக்கொண்டிருந்தேன். இவற்றை உன்றன் மனமும் என்றன் சிந்தையும் அறிந்தது தானே! உன்னை நான் விரும்பினேன், விரும்புகின்றேன். எனக்குப் பிரியமானவள் யார்? நீ, நீ, நீயே அமிர்தவதனு! இன்று நன்றாகச் சந்திரன் பிரகாசியாமலிருந்தால் உன்னை நான்காணமுடியாதவனுவேன். இதுவும் திருவருளின் கிருபையேயாம்' என்று இவ்வாறு சொல்லிக்கொண்டே அமிர்தசாகரன் அமிர்தவதனுவின் முகத்தை மெல்லத் துடைத்து மறுபடியும் அவள் தலையைத் தன் மடிமீதுவைத்து மூர்ச்சை தெளியுமாறு பலவித உபசாரங்களைச் செய்தான்.

அமிர்தவதனா தன்னுடைய கண்களைத் திறந்து பார்த்தாள். கொஞ்சம் களைதெளிந்தவளாய் இருந்தபோதிலும் அவளுக்குப் பேசச் சக்தி இல்லை. தான் தன்னுடையகாதலன் அமிர்தசாகரன் மடியின் மீது தன்னுடைய தலையை வைத்துப் படுத்திருப்பதைக் கண்டாள். களிப்பென்னும் கடலிலாழ்ந்தாள். உள்ளத்தை உரைக்க அவளால் முடியவில்லை. அமிர்தசாகரன் 'என் கண்ணே, உனக்கு என்ன செய்கிறது? யாதுவேண்டும்? சொல்' என்று வினவினான். அவன் சொல்வதெல்லாம் அமிர்தவதனாவுக்கு நன்றாக விளங்கியபோதிலும், அவள் பேசுவதற்குச் சக்தியற்றவளாயிருந்தாள். அவள் பட்ட கஷ்டத்தினாலும், நஞ்சுகலந்த உணவைப் புசித்ததினாலும், வெகுதூரம் பிரயாணம் செய்த இளைப்பினாலும் மூர்ச்சை அடைந்திருந்தாள். அவள் அமிர்தசாகரன் செய்த உபசாரத்தால் கொஞ்சம் களை தெளிந்தவளா யிருந்தபோதிலும் நஞ்சை—பாஷாணத்தை—உட்கொண்டவளாதலால் தாகவறட்சியின் கொடுமையைச் சகியாதவளாய் அமிர்தசாகரன் முகத்தை உற்றுப்பார்த்தாள். அமிர்தசாகரனும் அவளை உற்றுப்பார்த்துத் தன் கண்களினின்றும் கண்ணீரை வடித்தான். அமிர்தவதனாவின் கண்களிலிருந்து சிற்றாறுபோல் நீர் ஓடியது. அச்சமயத்தில் அவ்விருவருடைய மனமும் பட்ட அவஸ்தையைக் கடவுளே அறிவார். கடைசியாக அமிர்தவதனா தன்னுடைய வலது கை நான்கு விரல்களையும் மூடிக்கொண்டு பெருவிரலை நிமர்த்தித் தாகத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்று ஜாடைகாட்டி விட்டு மறுபடியும் முன்போல் கண்களை மூடிக்கொண்டாள்.

"ஹா! என் அன்பே! பேசவும் சக்தியற்றாயோ? சாடை காட்டி ஜலம் கேட்கின்றாயே. உன்னை இங்குத் தனிமையாக விட்டு நான் எப்படிப் போய்த் தண்ணீர் கொண்டு

வருவேன்! நரிகள் ஊளையிடுகின்றனவே. துஷ்ட மிருகங் களும் இருக்கும்போல் தோன்றுகிறதே உன்னை விட்டுப் பிரியவும் பயமாய் இருக்கிறதே. இந்த நேரத்தில் உனக்குத் தாகவறட்சி ஏற்பட்டதற்குக் காரணம் தெரியவில்லையே. நானென்ன முழு மூடனைப்போல் உளறிக்கொண்டிருக்கின் றேனே. இப்படி நான் வீணேவார்த்தை சொல்லிக்கொண் டிருப்பதால் பயன்தானென்னே? ஜலம் கொண்டு வந்து உடனே என் காதலியின் தாகவறட்சியைத் தீர்க்காவிடில் அவள் பிராணன் போய் விடும்போல் தோன்றுகிறதே. இதோ போய் ஜலம் கொண்டு வருகிறேன்' என்று சொல் லிக்கொண்டே அமிர்தசாகரன் தன்னுடைய அங்க வஸ்தி ரத்தைச் சுருட்டி அமிர்தவதனுவின் தலைக்குயரமாக வைத்து விட்டுத் தண்ணீர் கொண்டுவரப் புறப்பட்டான். அமிர்தவதனுவைத் தனியே விட்டுப் பிரிய மனமில்லை. சிறிது தூரம் போனுன். 'என் கண்மணியை எப்படித் தனியே விட்டுப்போவேன்?' என்று கூறிக்கொண்டே திரும்பி வந்தான். என்னைப்போல் கடினசித்தமுடையவர் கள் எவரேனும் உண்டோ? என் காதலியின் தாகவறட்சி யைத் தீர்க்கத் தண்ணீர்கொண்டு வராமல் இவ்வாறு வீணே வார்த்தை சொல்லிக்கொண் டிருக்கின்றேனே' என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் கொஞ்ச தூரம் சென்றுன். 'துஷ்டமிருகம் ஏதாவது வந்து என் காதற் களஞ்சியத்தைத் துன்பப்படுத்துமோ?' என்று எண்ணித் துக்கித்தான். கானகத்தில் நித்திரை செய்துகொண்டிருந்த தன் மனைவியை விட்டுப் பிரிகையில் நளன் எவ்வளவு துயர மடைந்தானே அதைப்பார்க்கினும் பதின்மடங்கு அதிக துயரத்திலாழ்ந்தான் அமிர்தசாகரன். முடிவில் அவன் சிறிது தைரியத்துடன் அமிர்தவதனுவை அமரிக்கை



யுடன் ஒருமுறை உற்றுப் பார்த்துவிட்டுப் பெருமூச் செறிந்து கொண்டே கண்ணீர் விட்டுக் கொண்டு தண்ணீர் கொண்டுவரப் புறப்பட்டான்.

சிறிது தூரம் சாலைமார்க்கமாகச் சென்றான். 'நாம் சாலைமார்க்கமாகச் சென்றால் ஜலம் கிடைக்காது' என்று எண்ணிக்கொண்டு சாலைமார்க்கத்தை விட்டுச் சாலையின் கீழ் நோக்கிக்கொஞ்ச தூரம் போனான். பிறகு ஒரு கொடி வழியைப்பற்றி நடந்தான். எங்குப் பார்த்தாலும் மணல் வெளியாகவே யிருந்தது. நாலு, ஐந்து மரங்களும் செடிகளும் ஓரிடத்திலிருந்ததால் அங்கு ஜலம் உண்டோவென்று ஓடிப்போய்ப் பார்ப்பான். அங்கு அவன் எண்ணப்படி ஜலம் இராது. சாலைமார்க்கத்தை விட்டு வெகு தூரம் வந்து விட்டான், அவன் தேடிவந்தது கிடைக்கவில்லை. ஜலத்திற்காக அம்மணல் வெளியில் அவன்—அமிர்தசாகரன்—அலைந்த அலைச்சலுக்கு அளவில்லை. 'ஐயோ! என்ன செய்வேன்? இனி எங்கே யான் சென்று ஜலம் தேடுவேன்? ஒரு கையத்தனை ஜலங் கூடக் கிடைக்கவில்லையே' என்று சொல்லிக் கொண்டே கண்ணீரை வடியவிட்டான். இத்தருணத்தில் திடீரென்று இருள் உண்டாயது. ஆகாயத்தில் மேகம் கும்பல் கும்பலாகக் கூடின. நக்ஷத்திரங்களெல்லாம் ஒளிந்தன. இருக்கும் இடமே தெரியாதபடி சந்திரனும் மறைந்தான். அமாவாசை இரவு எப்படி இருக்குமோ அப்படி ஆயது அன்றிரவு. கண்களிலிருக்கும் விழிகள் தெறிக்கும்படி பளீர் பளீரென்று மின்னல்கள் உண்டாயின. காதங்களெல்லாம் நரிசமாகும்படி பட பட தட தட திடு திடுவென்று ஆகாயத்தில் ஒலி உண்டாயிற்று. மழையும் பட படவென்று வந்துவிட்டது. அமிர்தசாகரனுக்குத் தான் வந்த வழியாவது இனி எந்த வழியாகப்போகிற தென்று

வது ஒன்றும் தெரியவில்லை. நல்ல தனவானுக்குப் புத்திரனாகப் பிறந்தவன். அன்றியும் பிறந்தது முதல் கஷ்டமென்பதைக் கொஞ்சமும் அனுபவித்தறியாதவன் மழையின் வேகமோ சொல்லத்தரமன்று. இடையில் கட்டிக்கொண்டிருந்த வஸ்திரத்தை அவிழ்த்துத் தலை நனையாமல் முக்காடு இட்டுக்கொண்டான். என்றாலும் தேகமெங்கும் நனைந்து தலையிலிருந்த வஸ்திரம் தண்ணீர் மயமாயிற்று.

'இறைவனே, இது உன் திருவருளோ? பாவியாகிய நான் என்ன கர்மஞ்செய்து இப்பிறவி எடுத்தேனோ தெரியவில்லை. இந்நேரம் என்னிளங்கொடியாளின் கதி என்னவாயிற்றோ? இதுவரையில் ஜலம் கேட்ட என் சீமாட்டி இப்பெருமழையால் பிராணனை விட்டாளோ? என்னவோ? எனக்கொன்றும் தெரியவில்லையே! என்னுடைய தேகத்திலிருக்கும் இரத்தம் ஜலமாக இருந்திருக்குமாயின் அவள் ஜலம் வேண்டுமென்று கேட்ட அப்பொழுதே தேகத்தை அறுத்துத் தாகத்தைத் தணித்து இருப்பேனே. இனி ஜலம் எதற்கு? ஜலம் வேண்டுமானாலும் என் வஸ்திரத்திலிருக்கும் ஜலமே போதுமானது. வருணபகவானே! நீ என்பேரில் கிருபை கூர்ந்து உன்னுடைய அதிகாரத்தைக் கொஞ்சம் அடக்கிக் கொள்ளக் கூடாதா! உனக்கும் என்பேரில் கிருபை இல்லை போலும்! என் காதலி இருக்கும் இடத்திற்குப்போக வழிதெரியவில்லையே?' என்றிவ்வாறு கூறிக்கொண்டே அமிர்தசாகரன் கொஞ்சதூரம் போனான். இவ்வழியல்லவென்று மற்றொரு வழியே சென்றான். அவ்வழியும் அல்லவென்று வேறொரு வழியாகச் சென்றான். அவ்வழியும் அல்லவென்று வேறொரு புறமாகப் போனான். இவ்விதமாக அரைமணி நேரம் அலைந்தான். அவன்பட்ட அவஸ்தைக்கு அளவேயில்லை. ஈசனே அறிவார். அமிர்த

சாகரனுக்கு ஒரு விதத்திலும் பேசுவதற்கு நா எழவில்லை. முடிவில் அவன் 'இந்தப்பக்கமாகப் போகிறேன். அதுஎங்கு சென்றாலும் செல்லுக. நான் செய்வதென்ன? முழுமுதற் கடவுளே, இது உன் ஞாயமோ?' என்று சொல்லிக் கொண்டே அழுத கண்ணும் தொழுத கையுமாகக் கொஞ்ச தூரம் சென்றான். மழை கொஞ்சமும் நின்றபாடில்லை. கடவுளின் கிருபையால் சாலை மார்க்கம் தென்பட்டது. அவன் அற்ப சந்தோஷியானான். 'மூர்ச்சை யடைந்திருந்த என் கனகபூஷணி எவ்விதமானாளோ? பாழும் மழை என்னைப் படாதபாடும் படுத்துகின்றதே. கண்ணே! காதலி! எப்படி இருக்கின்றாயோ?' என்று இவ்விதம் கூறிக் கொண்டே அமிர்தசாகரன் அடையாளத்தோடு அமிர்த வதனை படுத்துக்கொண்டிருந்த ஒரு பருத்த மரத்தின்கீழ்ச் சென்று பார்த்தான். அவன் மனது பதறிற்று; அங்கு அவளை—அமிர்தவதனையை—காணோம்.

அமிர்தசாகரன் திடுக்கிட்டான். என் செய்வான் பாவம்! அவன், அமிர்தவதனை படுத்துக்கொண்டிருந்த இடம் இதுஅல்லவோ, என்று எண்ணிக்கொண்டு மற்றொரு இடத்திற் சென்று பார்த்தான். அங்கும் இல்லாமையைக் கண்டு அப்பாலொரு இடத்திற்போய்ப் பார்த்தான். அங்கு மில்லை. அந்தச் சாலையின் இரு புறங்களிலும் வெகு தூரம் வரையில் தேடினான் காணோம். 'என் கண்ணே! காமி னியே! எங்கு சென்றாய்! எவ்வாறானாய்? உன்னைத் துஷ்ட மிருகங்கள் கொண்டு சென்றனவோ! அப்படித்தானிருக்கு மென்று எண்ணுகிறேன். இல்லையானால் எங்கு சென்றிருப் பாய்? கண்ணே மோசம் செய்துவிட்டாயே! நான் என்ன செய்வேன்! என் உடல் பதறுகிறதே என் உயிர் துடிக்கின் றதே' என்றெல்லாம் புலம்பிக் கதறினான் அமிர்தசாகரன்.

அவனுடைய கால்களும் கைகளும் ஸ்வாதீன மற்றன. அவன் வேரற்ற மரம்போல் திடீரென்று தரையில் விழுந்து கடகடவென்று உருண்டு கொண்டே 'இனி யென்ன செய்வேன்? அமிர்தவதனு! அமிர்தவதனு!!' என்று சொல்லி அலறினன். கொஞ்சநேரம் வரையில் ஒருவிதமான பேச்சுமில்லை. பிறகு ஒன்றும் பேசாமல் எழுந்தான். பயங்கரமான அவ்விரவில் சிறிது தூரம் வாடின முகமும் தேடின கண்ணுமாகச் சென்ருன். 'கருணைக் கடலாகிய கடவுளே! நான் இவ்வளவு தூரம் தேடிவந்தும் என் அன்பிற் குரிய காதலியைக் காணேமே. அமிர்தவதனு! நீ என்னுடைய தந்தையின் சிங்காரத் தோட்டத்தில் என்னையன்றி மற்ருெருவரையும் மணம் செய்து கொள்ளே னென்று கூறினையன்ருே? அமிர்தவதனு! நான் அவ் வார்த்தையை நினைக்குந்தோறும் என் மனமானது அனல்பட்ட மெழுகுபோல் கரைகின்றதே' என்று சொல்லி விசனித்தான். பின்னும் அவன் ஏதோ தன்னுட் சொல்லித் துக்கித்தான். மழை முற்றிலும் நின்றுவிட்டது. ஆகாயத்தில் மேகங்களே இல்லை. சுமார் ஐந்துமணி நேரம் பிரயாணம் செய்தான். சந்திரனுடைய அதிகார காலமும் குறுகிற்று. குளிரோ அதிகம், ஈரவஸ்திரம் ஒன்றைத் தவிர அமிர்தசாகரனுக்கு வேறு வஸ்திரமில்லை. அவன் என்ன செய்வான்? 'அமிர்தவதனு! என்ன செய்வேன்? என் அருமைக் கண்மணி நீயன்ருே? உன்னை இழந்த நான் இரு கண்களையும் இழந்த குருடனைப்போலானேன். இரண்டு கண்களும் இல்லாதவனுக்கு இவ்வுலக வாழ்க்கையில் என்ன பிரயோஜனம் இருக்கிறது? ஒன்றுமில்லை; ஆகையால் என்னுடைய உயிரை விட்டுவிடட்டுமா? என்னவோ இன்னும் கொஞ்ச காலம் ஆங்காங்குத் தங்கித் திரிந்து உன்னைத் தேடிப் பார்க்கின்

றேன். அப்படியும் உன்னைக் காணுவிடில் நான் என்னுடைய உயிரை மாய்த்துக் கொள்வது உண்மை. உன்னைத் துஷ்ட மிருகங்கள் கொண்டு சென்றிருக்குமென்று கூற வழியில்லை. உன்னைத் துஷ்ட மிருகங்கள் கொண்டுபோயிருந்தால் நான் உன்னுடைய தலையின்கீழ் வைத்த என் அங்கவஸ்திர மிருக்குமன்றோ? இப்பொழுது அதைக் காணாமையால் நீ எங்கோ உன்னுடைய முயற்சியாலோ அல்லது வேறொருவருடைய முயற்சியாலோ போயிருக்கக் கூடுமென்று எண்ணுகிறேன். கண்ணே! அமிர்தவதனு! நீ இப்பொழுது நீ என் முன்பாகவந்து என்னை "என்னுருயிரே!" என்று அழைக்கமாட்டாயா?' என்று இன்னும் ஏதே சொல்லிக்கொண்டே அமிர்தசாகரன் வெகுதூரம் பிரயாணம் செய்தான். அடிவானம் குபீரென்று சிவக்க, சூரியன் புறப்பட்டு அழகிய குணதிசையை அலங்கரித்தனன்.

பக்ஷிசாதிகளெல்லாம் பட பட சட சட வென்னும் தொனியுடன் மரக்கிளைகளிலிருந்தும், கூடுகளிலிருந்தும் வெளியில் புறப்பட்டன. சில பறவைகள் பலவித இனிய கீதங்களைப் பாட ஆரம்பித்தன. ஆங்காங்கு இருக்கும் பள்ளங்களில் தங்கியிருந்த மழைத் தண்ணீரெல்லாம் சூரியனுடைய ஒளிபட்ட மாத்திரத்தில் பளிங்குபோல் பிரகாசித்தது. பசும்புற்றரை முழுவதும் பச்சை வில்வெட்டு விரித்தாற்போலப் பசுமை நிறம் வாய்ந்திருந்தது. அமிர்தசாகரன் சென்றுகொண்டிருந்த சாலை வழி முடிந்துவிட்டது. அப்புறம் போவதற்கு நல்ல வழியில்லை. தன்னைச் சுற்றிலும் திரும்பிப்பார்த்தான். அதிக ஒடுக்கமான ஒரு கொடிவழி போவதைக் கண்டான். அவ்வழியே வெகுதூரம் சென்றான். அப்பொழுது மணி ஒன்பதரை இருக்கும். அன்று சூரியன் உஷ்ணம் அதிகமாகவேயிருந்தது. அவன்

அமிர்தசாகரன்—சென்ற வழியின் இடையில் பெரிய நதி யொன்றிருந்தது. அந்த நதியைக்கடந்து போவதற்கு வழி இல்லை. நதியின் மேற்கில் படகு ஒன்று இருந்தது. அதைக் கண்டதும் அமிர்தசாகரன் 'இனிப் பயமில்லை. இந்த நதியைக் கடந்து செல்லலாம்' என்று தன்னுள் சொல்லிக் கொண்டே ஆவலுடன் அந்தப்படகின் அருகே சென்றான். நீரில் அசைந்து சுயேச்சையாகச் செல்லாவண்ணம் அப்படகு, கயிறுகொண்டு, அருகிலிருந்த ஒரு சிறிய மரத்தில் கட்டப்பட்டிருந்தது. 'இவ்வளவு விஸ்தீரணமாயிருக்கும் இந்த ஆற்றை இத்தனை பெரிய படகைக் கொண்டு எவ்விதம் நான் கடந்து செல்லுகிறது? படகு வலிக்கவும் வகையறியேனே, போகட்டும்; நான் வலித்துச் சென்றாலும் ஓடக்காரன் கண்டால் என்ன சொல்லுவானோ?' என்று அமிர்தசாகரன் தன்னுள் ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது பத்துப் பதினைந்து மனிதர்கள் அங்கு வந்து கூடினார்கள். அவர்களிற் சிலர் தங்களிட மிருக்கும் சாமான்களை ஆற்றின் அக்கரையிலிருக்கும் ஏதோ ஒரு கிராமத்திற்குக் கொண்டுபோய் விற்கப்போகிறவர்களாகவும், அவர்களிற் பலர் தங்களுக்கு வேண்டிய பொருள்களை அக்கிராமத்திலிருந்து வாங்கிவரப் போகிறவர்களாகவும் காணப்பட்டார்கள். அமிர்தசாகரன் அவர்களை நோக்கி, சிறிது ஆலோசனை செய்து 'ஐயா! நீங்கள் எல்லோரும் எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டான்.

ஒரே ஒரு வஸ்திரத்தோடிருந்த உத்தமனாகிய அமிர்தசாகரனைக் கேவலம் யாரோ ஒரு பிச்சைக்காரனென்று எண்ணிக்கொண்டு அந்த மனிதர்களிலொருவன் அமிர்தசாகரனை நோக்கி, 'ஏண்டா! உனக்கு அவசியம் சொல்லித் தீரத்தான் வேண்டுமோ?' என்று உசாவினான்.

அதற்குள் மற்ருெருவன் 'நாம் எண்ணிப்போகும் காரியமென்ன? இவன் அபசகுனம்போல், "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்பதென்ன? அடித்துத் துரத்தடா, இந்தப் பையலை' என்று கூறினான்.

உடனே வேறொருவன் அவர்களையெல்லாம் பேசவிடாமல் தடுத்து அமிர்தசாகரனை நோக்கி 'அடே! நீ யாரடா? இங்கு எதற்காக வந்தாய்?' என்று அதிகாரத்துடன் அலட்சியமாய்க் கேட்டான்.

அதற்கு அமிர்தசாகரன், 'ஐயா! நான் ஒரு ஏழை. எங்கேனும் சென்று பிழைக்கவேண்டுமென்பது என்னுடைய எண்ணம். நான் என்னுடைய சொந்த ஊரைவிட்டு வெகுதூரம் வந்தேன். இங்கு இந்த நதி குறுக்கிட்டுக் கொண்டது. என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருக்கின்றேன்,' என்று தாழ்மையுடன் பதில் கூறினான்.

அதற்கு அந்த மனிதன் அமிர்தசாகரனைப் பார்த்து, 'போ, போ பைத்தியக்காரா! உன்னைப் பார்த்தால் நன்றாகப் படித்தவனைப்போல் தோன்றுகிறாய். அன்றியும் நல்ல இலட்சணமுடையவனாகவு மிருக்கிறாய். இத்தகைய நீ, உள்ளூரில் பிழைக்க வகை அறியாமல் அயலூரில் போய்ப் பிழைக்கப் போகின்றேனென்று கூறுவது ஆச்சரியமாயிருக்கிறது. எங்களுக்கென்ன? பணம் கொடுக்கப் போகிறோமா? அதோ ஓடக்காரன் வருகிறான். நீ எங்களைப் போல் அவனிடம் ஓர் அணா கொடுப்பாயானால் அவன் உன்னை இந்தப் படகில் எங்களோடு சேர்த்துக் கொண்டு போய் அக் கரையில் சேர்ப்பான். பிறகு நீ உனக்கு இஷ்டமான இடத்திற்குப் போகலாம்' என்றான்.

அவ்வார்த்தையைக் கேட்டவுடன் அமிர்தசாகரன் அவனைப் பார்த்து 'ஐயா! தங்களுக்கு அநேக நமஸ்காரம் செய்கிறேன். படகுக்காரனுக்குக் கொடுப்பதற்கு என்கையில் அரைக்காசும் இல்லை. ஏழையாகிய என்பேரில் அன்புகூர்ந்து எனக்காகப் படகுக்காரனிடம் ஓர் அணு கொடுத்து என்னை இந்த ஆற்றின் அக்கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவீர்களானால் உங்களுக்கு அதிக புண்ணியமுண்டு' என்று கூறினான்.

அமிர்தசாகரன் இவ்விதம் கூற அம்மனிதன் 'ஏன் உனக்காக நான் ஓர் அணு செலவழிக்க வேண்டும்? முதல் முதல் காலை நேரத்தில் எனக்குச் செலவுக்கு வழி இல்லையென்று நீ வழி ஏற்படுத்திக் கொண்டு வந்தாயோ? உனக்கு வேறு வேலைகளில்லையோ? போ, போ' என்று கூறினான்.

இதற்குள் படகுக்காரனும் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டவுடன் இச்சிறு கூட்டத்தார் அவனைப் பார்த்து, அவனுக்கு அமிர்தசாகரனைச் சுட்டிக் காண்பித்து 'இவன் கையில் அரைக்காசுமில்லையாம்; தன்னை இனமாகப் படகிலேற்றிக்கொள்ளும்படி சொல்லுகின்றான்' என்று தங்கள் இஷ்டம்போல் கூறினார்கள்.

அதற்கு ஓடக்காரன் 'உங்களுக்கென்ன? நான் இந்தப் படகைச் செய்வதற்கு எவ்வளவு பணம் செலவு செலவழித்தேனோ அவ்வளவு பணம் எனக்கு இன்னும் சேரவில்லை. இதற்குள் இந்தப் படகும் பழுதாயிற்று. உங்களுக்கு வேலை இல்லைபோல் தோன்றுகிறது. போகட்டும். இவ்வளவு இரக்கமுள்ள நீங்கள் உங்கள் கையில் பணமிருந்தால் அரையணு கொடுங்கள் இவரைப் படகிலேற்றிக் கொள்ளுகிறேன்.' என்று விநயமாகக் கூறினான்.

அதற்கு அம்மனிதர்கள் ஒன்றும் பேசாமல் தங்களுக்கு மட்டும் ஒவ்வோர் அணா வீதம் படகுக்காரனிடம் கொடுத்து விட்டுப் படகிலேறிக் கொண்டார்கள். உடனே படகைத் தள்ளிக்கொண்டு போய்விட்டான்.

"என்ன இது! நல்ல விஷயத்தில் ஒருகாசு கூடச் செலவு செய்யாத பேதைகள் எத்தனைபேர் இவ்வுலகி லிருக்கின்றனர். இவர்களெல்லோரும் "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்னும் ஆன்றோர் வாக்கியத்தை அறியாதவர்கள்போலும்! அறிந்தவர்களுக்கு ஈகை, இரக்கம், பரிதாபம் முதலியன இருக்குமே! இவ்வார்த்தையின் பொருளை அறிந்தவுடனேயன்றோ பட்டினத்தடிகளும் துறவியானார். "தனக்கு மிஞ்சியன்றோ தருமம் செய்ய வேண்டும்" என்னும் வார்த்தையை லோபிகள் அடிக்கடி சொல்லுவார்கள். அது உண்மைதான். ஆனால் இவ்வார்த்தையைப் பொருளற்ற ஏழைகள் சொன்னால் ஒருவாறு பொருந்தும். இலட்ச இலட்சமாக ரூபாய்களை வைத்துக் கொண்டு 1, 2, 3, 4 வீதம் அநியாய வட்டிக்கு ரூபாய்களைக் கொடுத்து ஏழைகளை வயிறெரியச் செய்யும் தனவந்தர்களிற் சிலரும் இவ்வார்த்தையை உபயோகிப்பது தகுமா? தருமம் என்றால் என்ன? பெருமைக்குப் பல சத்திரங்களைக் கட்டி வைத்துக் கொண்டு அதில் வெளவால்களையும், ஆந்தைகளையும் வாசஞ் செய்ய விடுவதும், சோம்பேறிகளைச் சூதாட விடுவதும் தருமமா? சில இடங்களில் அன்ன சத்திரங்கள் அநேகம். 'அன்னசத்திரம்,' என்னும் பெயர்களுடன் கட்டடப்பட்டிருக்கின்றன. அக்கட்டடங்களின் உள் நுழைந்து பார்த்தால் அங்கு அன்ன சத்திரம் என்னும் பெயருக்கு விரோதமாக அன்ன தரித்திரமாயிருக்கும். சிலர் தங்களுடைய உயிர் போனாலுஞ் சரி; சமயத்தில் பிச்சைக்காரருக்

குக்கூட ஒரு பிடிச் சாதமும் கொடுப்பதில்லை. அப்படி இவர்கள் ஏதாவது தப்பித்தவறிப்பரோபகாரமாக ஒருவிஷயத்தைச் செய்யும்படி நேரிடுமாஞல் அவ்விஷயத்தைத் தங்களை அறிந்தவர்களெல்லோரும் அறியும்படி செய்வார்கள். இவ்வழிகளில் நன்மையைச் சம்பாதிக்க முடியுமா? முடியாது. பலர் தங்களுக்குப் போதுமான திரவியமிருந்தும், அவைகளை நல்லவழிகளில் உபயோகிக்காமல் பெரிதும் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு பின்னும் பொருளாசை கொண்டவர்களாய்ப் பலவிதத் துர்வழிகளினின்றுங்கூடத் திரவியங்களைச் சம்பாதிக்கின்றனர்.

இவர்களைப் பற்றித்தான் அருந்தவச் செல்வராகிய தாயுமான சுவாமிகளும், 'ஆசைக்கோர் அளவில்லை' என்றார் போலும். சிலருக்கு அவர்களுடைய பூர்வ புண்ணிய விசேஷத்திஞல் செல்வம் செழித்தோங்குவதுண்டு. அவ்விதம் செழித்தோங்கிய பொருளைக் கடவுளின் உண்மையான அடியார்களுக்கும், தங்களுக்குத் தெரியாமல் சிற்சில ஆபத்துக்களில் அகப்பட்டுழலும் பரம ஏழைகளுக்கும், கூன், குருடு, செவிடு, ஊமை முதலாயிஞேருக்கும், முக்கியமாக நமது இந்தியச் சிறுவர்களின் கல்விக்கும் கொடுத்து உதவல் வேண்டும். அதிலும் ஜாதி வித்தியாசம் பாராமல் தருமம் செய்யவேண்டும். இதையெல்லாம் இவ்வுலகத்தில் கவனிப்பவர்கள் யார்? ஒருவருமில்லை. நல்ல வழிகளில் செலவு செய்யாதவர்களுடைய திரவியங்களெல்லாம் வம்புக்கும் தும்புக்கும் என்றபடி துர்வழிகளிலேயே செலவாகுமென்பது யாவரு மறிந்ததேயாகும்.

நிற்க, எல்லோரும் போன பிறகு அமிர்தசாகரன் 'நான் இங்கு நின்றுகொண்டு இவ்வாறு ஆலோசிப்பத

ளுற் பயனென்ன? ஒன்றுமில்லை. இந்த நதியின் கரையோர மாகவேபோகின்றேன். ஏதாவது ஒரு ஊர் தென்படாதா? அப்படித் தென்படாமற் போனால்தானென்ன? நான் அதற்கு என்ன செய்யக் கூடும்? எல்லாம் வினைப் பயன் படி நடக்கும். என்ன செய்வேன்? துயர மதிகரிக்கின்ற தே! என் காதலி! என் கற்பகம்! அமிர்தவதனை எங்குச் சென்றாளோ? அவளை நினைக்குந்தோறும் என்னுடைய மனமானது நெருப்பில் விழுந்த புழுப்போல் துடிக்கின்ற தே. ஈசா! என்னை ஏன் என் அருமை அமிர்தவதனையைப் பற்றிப் பன் முறை சிந்திக்கச் செய்கின்றாய்? இளம் வயது முதற்கொண்டு பாலும் நீரும்போல் நேசமாயிருந்து, அந்த நேசம் எக்காலத்தும்—ஒருவரிடம் மற்றொருவருக்கு—நீங் காவண்ணம் நடந்துகொண்ட என் காதலி அமிர்தவதனை வை நான் சில காரணங்களினால் சில காலம் விட்டுப் பிரிந் திருந்து, மறுபடியும் தற்செயலாய் அவளைச் சந்திக்கும் போது அவள் பிராணுபாயத்திலிருக்கக் கண்டு, வருத்தப் பட்டுக் கொண்டிருக்கையில் இந்திரஜாலம்போல் திடீ ரென்று அவள் காணமல் மறைந்ததினால் என்னுடைய மனமானது கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்குகின் றதே. இன்னும் எனக்கு என்னென்ன சம்பவங்கள் நேரிடு மோ அறியேன். நான் இவ்விதக் கஷ்டங்களை அனுபவித் துக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும் 'சங்கடத்திற் சாவ தே நன்று' என்னும் முதியார் வார்த்தைக் கிணங்க என் பிராணனைப் போக்கிக் கொள்ளுவேனாயின் ஒரு துன்பமு மில்லை. ஆ! நான் அப்படிச் செய்வேனாயின் "இதுதானோ ஆண்பிள்ளையின் வீரம்!" என்று உலகம் பழி கூறுமே. அன்றியும் என் அன்பிற்குரிய அமிர்தவதனை ஒரு சமயம் எவ்விடத்திலேனும் உயிருடன் இருந்து நான் தற்கொலை

செய்துகொண்டதை அறிவாளாயின், உடனே அவளும் தன்னுடைய உயிரை விட்டுவிடுவாளென்பதற்கையமில்லை. அந்தோ! அது பெரிதும் பாவமன்றோ? போகட்டும். மனிதர்களுக்கு இன்பமும் துன்பமும் ஒரு வழி நில்லா. அவை சகடக்கால்போல் மாறிமாறி வரும் இயல்பினையுடையனவன்றோ! ஆகையால் நான் மறுபடியும்ஒருகாலத்தில் உயர் பதவியை அடைந்தாலும் அடைவேன், அரிச்சந்திரன், நளன் முதலியோர் கஷ்டமெய்திப் பிறகு சுகமனுபவிக்கவில்லையா? உலகத்தின் இயற்கை ஒருவர் எப்பொழுதும் சுகத்தையும் மற்றொருவர் துக்கத்தையும் அனுபவிப்பதல்லவே? சுகமெய்தியவர் துக்கமும் அடையவேண்டியது அவசியந்தானே? நான் பிறந்தது முதல் சுகமனுபவித்துக் கொண்டிருந்தேன். இனிக் கொஞ்சகாலம் கஷ்டமனுபவிக்க வேண்டுமானால் அனுபவித்துத்தானே தீர்க்க வேண்டும். சுகமனுபவிக்கும்போது சந்தோஷப்படுவது போல் துன்பம் வந்த காலத்தும் துயரப்படாது சந்தோஷமே காட்ட வேண்டும். அதுவே மக்களுக்கு அழகு, என்று இவ்விதம் சொல்லிக்கொண்டே அமிர்தசாகரன் வெகுதூரம் நடந்தான். மணி பன்னிரண்டிருக்கும். அமிர்தசாகரனுக்குக் களைப்பு மேலிட்டது. அவன் சென்ற வழியின் இடையில் இருகரைகளிலும் பலவித சிறுமரங்களையுடையதும், அல்லி, தாமரை முதலிய பலநீர்ப் பூண்டுகள் நிறையப் பெற்றதுமான அழகான நீரோடை ஒன்றிருந்தது. அமிர்தசாகரன் அந்த நீரோடையிலிறங்கித் தந்தசுத்திசெய்துகொண்டு இரண்டு கை ஜலம் அள்ளிக் குடித்துவிட்டுக் கரைமீது வந்து ஆங்கிருந்த ஒரு சிறிய ஆலவிருட்சத்தின்கீழ் உட்கார்ந்து மரத்தின்மேல் சாய்ந்துகொண்டு பின்வருமாறு தன்னுள் எண்ணலானான்.

'இறைவனே! யான் இனி என்ன செய்வேன்? எவ்வாறுய்வேன்? பசிப்பிணி அதிகமாயிருக்கிறதே. நான் கொண்டுவந்த சிற்றுணவும் என் பிரிவை அமிர்தவதனுவைக் கண்டு நான் கண்கலங்கிக் கொண்டிருக்கையில் என்னை அறியாமல் என்னிடமிருந்து எப்படியோ தவறிவிட்டது. என்னை—என் மனத்தை—என் மாற்றாந் தாயின் மதிகெட்ட செய்கை ஒரு புறம் வருத்த, என் காதலி அமிர்தவதனுவைப்பற்றிய சிந்தனை ஒரு புறம் புண்படுத்த நான் கவலையுற்று இருக்கும் இப்போது எங்குச் சென்று பிழைப்பேன்? யாரிடம் போவேன்? நான் பிறந்ததுமுதல் இதுவரையில் ஒருவரிடத்திலும் பயந்து பணிவுடன் அவர்களுக்கு ஊழியஞ் செய்தறியேனே. கடவுளே? இதெல்லாம் உன் திருவிளையாடலென்று நினைக்கிறேன். போகட்டும். நான் இவ்வித கஷ்டங்களை அநுபவிக்க நேரிட்டதினாலன்றோ உனக்குரிமையான பல திருப்பெயர்களில் சிலவற்றைப் பன்முறையும் சொல்லித் துதிக்கத் தகுந்த பாக்கியத்தைப் பெற்றேன். நான் சுகமுற்றிருந்த காலத்தில் உனக்குரிமையான திருப் பெயர்களில் ஒன்றையேனும் சொன்னேனில்லை. கடவுளே! இது என்மட்டுமுள்ள வழக்கமல்லவே! "செல்வம் வந்துற்றகாலை தெய்வமுஞ் சிறிதுபேணார்" என்பதற்கிணங்கவே உலகத்தில் அநேகர்—முக்கியமாகத் தனவந்தர்களிற் சிலர்—நாளதுவரையில் நடந்து வருகின்றார்கள். அவர்களுக்குத் துன்பம் வந்துற்றபோது நம்மாலாவதென்ன? எல்லாம் கடவுள்செயல். கடவுள்செயல் இவ்விதமானல் நாம் செய்வதென்ன?' என்று இவ்விதம் சொல்லிக்கொண்டு துக்கப்படுகின்றனர். இவ்விதம் துயரப்படுகிறவர்களுக்குச் செல்வம் வந்து விட்டால் அதையும் கடவுள் செயலெனச் சொல்லமறந்து தாங்கள்செய்த பல

நன்முயற்சிகளாலும், பல்வேறு தந்திரங்களாலும் செல்வம் செழித்தோங்கிற்றென்பார்கள். ஈதுன் திருவுளமறிந்தது தானே? இவ்வண்ணம் சொல்லித் திரிகின்ற அவர்களில் நான் ஒருவனென்று எண்ணி என் குற்றங்களுக்காக என்னை மன்னித்து என்னை ஆதரித்தாளும் ஐயனே!' என்றிவ்வண்ணம் தனக்குள் சம்பாஷித்துக் கொண்டிருந்த அமிர்தசாகரன் திடீரென்று எழுந்து 'நேரமாகிறது, போகவேண்டும்' என்று சொல்லிக்கொண்டே ஒரு வழியைப்பற்றி வெகுதூரம் சென்றான். வெயிலின்கொடுமையால் நாவறட்சி அதிகமாயிற்று. 'எங்கேனும் நீர் நிலை ஒன்றிராதா?' என்று தன்னுள் எண்ணிக்கொண்டு அமிர்தசாகரன் பின்னும் கொஞ்சதூரஞ் சென்றான். இறைவனுடைய கிருபையால் அவன் சென்ற வழியில் நீர் நிறைந்த அழகிய தடாகமொன்றிருந்தது. அது உன்னதமாகக் கட்டப்பட்ட படிக்கட்டுகளும், தாவள்ளியமான ஜலமுடையதாய் இருந்தது. இன்னும் அதில் அழகு வாய்ந்துள்ள அன்னப்பட்சிகளும், விதவிதமான நீர்ப் பூண்டுகளும் நிறைந்திருந்தன. அன்னப்பட்சிகள் தம் சிறகினால் வாரி இறைக்கும் தண்ணீர் தாமரை இலைகளின்மேற்பட்டு முத்துகளைப் போல் இங்குமங்குமாகத் தத்தளிப்பது எவ்விதமிருந்ததெனில், தன்னுடைய நிலைமையினின்றும் பிரிந்து எங்குச் செல்கிறதென்று எண்ணித் தத்தளித்துக் கொண்டிருக்கும் அமிர்தசாகரனுடைய மனம்போ லிருந்தது. அவ்வழகிய தடாகத்தைக் கண்ட அமிர்தசாகரன் அதில் இறங்கி ஸ்நானம் செய்து கடவுளை வணங்கிக் கரையேறித் தன் ஈர வஸ்திரத்தை உலர்த்திக் கட்டிக்கொண்டு அங்கிருந்த ஓர் அரசமரத்தின் கீழ் உட்கார்ந்தான். நிற்க.

அரைமணி நேரம் ஆயிற்று. சுமார் ஐம்பது வயதுடைய இரண்டு மனிதர்கள் வழக்கம் போல் உலாவ அங்குவந்தனர். வந்தவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு அமிர்தசாகரனைச் சுட்டிக் காட்டி, 'அதோ யாரோ ஒரு வாலிபன் ஏதோ ஆலோசனையுடன் உட்கார்ந்துகொண்டிருக்கிறான் பார்த்தீர்களா! வாருங்கள். நாம் அவன் சமீபத்திற் சென்று அவனை யாரென்று கேட்போம்' என்றார்.

அதற்கு மற்றவர் சம்மதிக்க, இருவரும் அமிர்தசாகரனிடம் சென்று அவனைப் பார்த்து, 'தம்பி! நீ யார்? உன்னைப் பார்த்தால் தனவந்தருடைய குமாரன் போலத் தெரிகிறது. ஆகையால் உன்னை இன்னாரென்று அறிந்து கொள்ள விரும்புகிறோம்' என்று கூறினார்கள்.

அதற்கு அமிர்தசாகரன், "நான் ஓர் ஏழை வழிப்போக்கி. இரவுகாலம் சமீபித்து விட்டபடியால் ஏதாவது ஊர் சமீபத்திலிருந்தால் இன்றிரவு அவ்வூரில் தங்கிப்போகலாமென்று நினைத்துக்கொண்டிருக்கின்றேன்" என்று எழுந்து பணிவுடன் கூறினான்.

இவ்விதம் அமிர்தசாகரன் சொல்லியவுடன் வந்தவர்களில் ஒருவர் மற்றொருவரிடம் இரகசியமாக 'இவ்வாலிபன் ஏதோ சில காரணங்களினால் இங்கு வந்திருக்கவேண்டும். இவன் உண்மையில் தனவந்தர் புத்திரனேஎன்று தெரிகிறது. இவனை நாம் நம்முடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய் நல் வசனங் கூறி இவனுடைய வரலாற்றை விசாரித்துக் கொள்ளலாம்' என்று கூறினார்.

அதற்கு அவரும் 'ஆம் அப்படியே செய்வோம், அது தான் நல்ல யோசனை' என்று மொழிந்தார்.

பிறகு அவர் அமிர்தசாகரனைப்பார்த்துக் 'குழந்தாய்! ஆதித்தன் அஸ்தமிக்கும் சமயமாயது. இதோ சமீபத்திலிருக்கும் எங்களுடைய வீட்டிலே தங்கியிருந்து பிறகு உனக்கு இஷ்டமான இடத்திற்குப் போகலாம் உன்னுடைய கருத்து யாது?' என்று வினவினர்.

அதற்கு அமிர்தசாகரன். இவர்கள் என்மேல் பெரிதும் அன்புடையவர்களானர்களெனத் தெரிகிறது. இவர்களால் எனக்கு ஏதாவது நன்மை ஏற்படும் என்று எண்ணுவதற்கு இடமேற்படுகிறது. ஆகையால் நான் தடையின்றி இவர்களோடு இவர்களுடைய வீட்டிற்குச் செல்லுவதே உசிதமென்று நினைக்கின்றேன்' என்று தன்னுள் எண்ணிக்கொண்டு அவர்களிருவரையும் பார்த்து, 'ஐயன்மீர்! நீங்கள் சொல்லிய வார்த்தையின்படியே நடந்துகொள்ள யாதொரு ஆக்ஷேபனையு மின்று. உங்கள் கருத்திற்கேற்ப நான் உங்களுடைய வீட்டிற்கு வந்து நாளையதினம் எனக்கு இஷ்டமான இடத்திற்குப் போகிறேன்' என்று பெருந் தன்மையுடனும் பொறுமையுடனும் பதில் கூறினன்.

உடனே இவர்களிருவரும் அமிர்தசாகரனோடு அங்கிருந்த தங்களுடைய வண்டியில் ஏறி உட்கார்ந்தனர். வண்டிக்காரன், வண்டியை மிகவும் வேகமாக நடத்தினன். அரைமணி நேரத்திற்குள் வண்டியானது லிங்கபுரியிலுள்ள ஓர் அழகிய மாடி வீட்டின் எதிரில் போய் நின்றது. வண்டியிலிருந்தவர்கள் அமிர்தசாகரனை அழைத்துக்கொண்டு அந்த மாடி வீட்டிற்குட் சென்றனர். 'இந்த மாளிகை நம்முடைய மாளிகையினும் அதிக சிறப்புள்ளதாயிருக்கிறது' என்று தன்னுள் எண்ணிக்கொண்டே அவர்களோடு சென்றான் அமிர்தசாகரன். அவ்விருவரும் அமிர்தசாகரனோடு அவ்வீட்

டின் ஹாலிலிருந்த இரண்டு சோபாக்களின் பேரில் உட்கார்ந்தனர். உடனே அவர்களிலொருவர் 'சோமநாதம்!' என்று கூப்பிட்டார்.

உடனே ஒரு வேலைக்காரன் ஓடிவந்து மரியாதையோடு எதிரில் நின்றான்.

அவர் அவனைப் பார்த்து 'ஏதாவது சிற்றுணவு தயாராய் இருக்கின்றதோ?' என்று கேட்டார்.

'வேண்டிய திருக்கின்றது. இப்பொழுதே கொண்டு வரட்டுமா? என்றுவினவினான் சோமநாதம்.

'ஆம்' என்று விடையிறுத்தார் அவர்.

உடனே சோமநாதம் அங்கிருந்து நீங்கிக் கொஞ்ச நேரத்திற்குள் அநேகவித சிற்றுணவுகள் நிரப்பப் பெற்ற இரண்டு மூன்று வெள்ளித் தட்டுகளை அங்குக் கொண்டு வந்து அவர்களுக்கு முன்னே இருந்த இரண்டு சிறு மேஜைகளின்மேல் வைத்தான். இதற்கிடையில் மற்றொருவர் அங்கிருந்த அலமாரியைத் திறந்து அதிலிருந்த புதியதும், விலை உயர்ந்ததுமான சில வஸ்திரங்களை எடுத்து அமிர்தசாகரனுக்குக்கொடுத்து உடுத்துக் கொள்ளும்படி கூறினார். அவ்வித உதவியையே அவன் எதிர்பார்த்திருந்தவனானபடியால் அவைகளை அன்புடன் பெற்று உடுத்துக்கொண்டான். இப்போது அவனைப் பார்க்கும் எவரும் அவன் ஒரு கோடீசுவரனுடைய குமாரனென்று சொல்லப் பின்வாங்கமாட்டார்கள். அவன் அவ்வளவு அழகுடன் தோன்றினான். நிற்க. பிறகு மூவரும் சிற்றுணவுகளிற் கொஞ்சம் புசித்துவிட்டுக் கைகளை அலம்பினார்கள். அதற்குள் சோமநாதம் கொத்தமல்லித் தண்ணீரில் நிறையப் பால் விட்டுக்கொண்டு

வந்து அம்மூவர்களுக்கும் கொடுத்தான். அம்மூவரும் அதைப் பருகிய பின் வேறொரு அறைக்குட் சென்று அங்கு அழகிய ஒரு மேஜையைச் சுற்றிலும் போடப்பட்டிருந்த நாற்காலிகளின்மேல் உட்கார்ந்துகொண்டு வெகு நேரம் வரையில் பலவிஷயங்களையும் பேசிக்கொண் டிருந்தனர்.

அப்பொழுது அவர்களில் ஒருவர் அமிர்தசாகரனைப் பார்த்து 'அப்பா! உன் பெயரென்ன?' என்று கேட்டார்.

அதற்கு அமிர்தசாகரன் 'ஐயா! என் பெயர் அமிர்த சாகரன் என்று விடையிறுத்தான்.

அவர் 'உன்னைப் பார்த்தால் ஒரு பிரபுவின் புத்திரனைப் போல் தோன்றுகிறாய். நீ இவ்விதம் தனிமையாக உன்னுடைய வீட்டினின்றும் வந்ததற்குக் காரணம் யாது?' என்று கேட்டார்.

அதற்கு அமிர்தசாகரன் அவரைப் பார்த்து, 'ஐயா! தாங்கள் என்மேல் பெரிதும் பட்சமுடையவர்களாயிருக்கிறீர்களென்பதை அறிந்து கொண்டேன். ஆகையால் என்னை இன்னானென்று தங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன். ஆனால் என் தந்தையின் பெயரைச் சொன்னவுடன் நான் இங்கிருப்பதாக என் தந்தைக்கு நான் தங்களை விட்டுப்போகும் வரையில் தாங்கள் தெரியப்படுத்தக் கூடாது. இதற்கு நீங்கள் சம்மதித்தீர்களானால் பிறகு நான் யார் என்பதைத் தெரிவிக்கிறேன்.' என்று சிறிது நிதானமாகக் கூறினான்.

அதற்கு அவர் 'சரி; உன்னுடைய இஷ்டப்படியே ஆகட்டும், நீ ஐயப்படாமல் சொல்' என்று கூறினார்.

உடனே அமிர்தசாகரன் அவரைப் பார்த்து, 'ஐயா! நான் பிரபல ஜமீன்தாரராகிய மங்களபுரி சதாநந்தரின் குமாரன்—'என்று கூறி இன்னும் ஏதோ சில விஷயங்களைக் கூற முயலுமுன் அம்முதியார் அவனைப் பார்த்து நீ உன்னுடைய என்னும் பதங்களை உபயோகிப்பதொழித்து மரியாதையுடன் 'கோடீசுவ்ரர்! கோடீசுவரர்! என்று ஜனங்கள் பெருமையாகப் பேசிக் கொள்ளுகிறார்களே அந்தக் கோடீசுவரருடைய புத்திரரா தாங்கள்?' என்று கேட்டார்.

'ஆம்' என்று ஒரே வார்த்தையில் முன்னையினும் அதிக மரியாதையோடு பதில் கொடுத்தான் அமிர்தசாகரன்.

வாசகர்களே! அமிர்தசாகரன் கோடீசுவரனுடைய குமாரன் என்று தெரிந்தவுடன் முன்னையினும் அதிக மரியாதையுடன் அப்பெரியவர் அவனைத் தாங்கள் என்று கூறியது ஆச்சரியமன்று. சிறிது கல்வியுடையவனும் ஆங்கிலத்தில் பல பிழைகளோடு பேசத் தெரிந்தவுடன் அவனுக்குப் பணமட்டும் போதுமான வரையில் இருந்து விட்டால்—அவன் சட்டசபை மெம்பராகவும், இன்னும் பல கௌரவ உத்தியோகஸ்தனாகவும் ஆக்கப்பெறுகிறான். தன்னைப் பலரும் மரியாதையுடன் புகழும்படியும், தனக்கு இல்லாத நற்குணங்களை இருப்பதாகக் கூறும்படியும் செய்து விடுகிறானன்றோ? நிற்க. நமது அமிர்தசாகரனோ அப்படிப்பட்டவனு மன்று. தன்னைப்பலர் புகழும்படி படாடோபம் செய்துகொள்ளுகிறவனுமல்ல. அன்றியும் பல தலைமுறைகளாகச் செல்வத்திலேயே பிறந்து இருந்து இறந்துபோன தனவந்தர்களுடைய வழித்தோன்றியவனல்லவா? இவனைத் தாங்கள் என்று மரியாதையுடன் அப்பெரியவர் கூறியது ஒரு வியப்பன்றெனவிடுக்க.

'மற்றுமுள்ள விஷயங்களைப் பற்றி விபரமாகக் கூறுங்கள்' என்று கூறினார் அப் பெரியார்.

அதற்கு அமிர்தசாகரன் 'ஐயா! என் தந்தை சில தனவந்தர்களைப்போல்—முக்கியமாய் இக்காலத்திலிருக்கும் சில ஜமீன்தாரர்கள் தங்களுடைய அருமந்த குழந்தைகளை அவர்கள் பெண்களாயினும் சரியே, ஆண்களாயினும் சரியே, அவர்களைக் காலத்துக் கேற்றவாறு கல்வி கற்க விடுக்காது மூலையில் மூடி வைப்பது போல் செய்யாமல் என்னிளமைப் பருவத்தே என்னிஷ்டப்படி கல்வி கற்க விடுத்தார். நான் நமது தாய்ப்பாஷையில் இலக்கிய இலக்கணங்களிலும், தொல்காப்பிய முதலாய பல அரும்பெருங் காப்பியங்களாம் சங்க நூல்களிலும் தேர்ச்சியுற்றதோடும் அரசபாஷையாம் ஆங்கிலத்திலும் முறைப்படி பயின்று என்னிருபதாம் வயதில் பீ. ஏ. முதல்தரப் பரீட்சையில் தேறிய மறுமாதமே எனது அன்னை இறந்தார். பிறகு நான் கற்பதொழிந்து வீட்டிலிருந்து என் தந்தைக் குதவியாகச் சில விஷயங்களைக் கவனித்துக்கொண் டிருந்தேன். என் அன்னை இறந்த சில தினங்களுக்குள் மறு விவாகம் செய்துகொண்டார் என் தந்தை. பிறகு சில மாதங்களாயின. என் தந்தையோடு வசிக்க எனக்குச் சில காரணங்களினால் இஷ்டமில்லை. அதைப்பற்றித் தாங்கள் என்னைக் கேட்காதிருக்கும்படி நான் தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பிறகு நான் "நாம் எங்கேயாவது சென்று ஒரு உத்தியோகத்திலமர்ந்து நமது வாழ் நாட்களைக் கழிப்போம்" என்று எண்ணிக் கொண்டு வீட்டினின்றும் புறப்பட்டுவரும் வழியில் சில கஷ்டங்களை அனுபவித்துக் கடைசியாக நீங்கள் என்னை முதன் முதல் கண்ட குளக்கரையில் வந்து சேர்ந்து தங்களைக் கண்டேன். அதன் பிறகு இது வரையில் நடந்த

விஷயங்கள் தாங்கள் அறியாதன வல்லவே'' என்று தான் வரும் வழியிற்கண்ட தன் காதலி அமிர்தவதனுவைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லாமலே வார்த்தையை வெகு சுருக்கமாக முடித்து விட்டான்.

அமிர்தசாகரன் இவ்விதம் கூறி முடித்தவுடன் அவர் 'ஆம். மாற்ருந்தாயானுல் கஷ்டந்தான். தன் குழந்தையைப்போலத் தன் கணவனின் முதல் மனைவியின் குழந்தைகளையும் கவனிக்கும் மாற்ருந்தாய்கள் உலகத்திலில்லாமலில்லை. இருந்தாலும் பெரும்பாலும் கஷ்டந்தான். அது போகட்டும். தங்களுடன் பிறந்த சகோதர சகோதரிகள் எவரேனும் இருக்கிருர்களா?' என்று கேட்டார்.

அதற்கு அமிர்தசாகரன் 'எனக்குச் சகோதரர்கள் இல்லை. ஆனல் ஜானகி என்னும் பெயருடைய ஒரே ஒரு சகோதரிமட்டும் உண்டு' என்று பதிலளித்தான்.

'அப்படியா! ஆனல் ஜானகிக்கு விவாகமாயிற்ருே?'' என்று உசாவினர் அப்பெரியார்.

'ஆம். என்னைப்போலவே பீ. ஏ. முதல்தரப் பரீட்சையில் தேறினவரும், என் அத்தைகுமாரரும், திரண்டசெல்வத்திற்குரியவரல்லாதவருமான ஞானசம்பந்தம் என்னும் பெயருடைய ஒருவருக்கு மணம் செய்து கொடுத்திருக்கிருேம்' என்று விடையிறுத்தான் அமிர்தசாகரன்.

'ஞானசம்பந்தம் இருப்பது எந்த ஊர்? நீங்கள் கோடீசுவரராயிருந்தும் தனவந்தரல்லாத அவருக்குத் தங்களுடைய சகோதரியை எப்படி விவாகஞ் செய்து கொடுத்தீர்கள்? என்று கேட்டார் அப்பெரியவர்.

அதற்கு 'ஐயா! ஞானசம்பந்தம் இருப்பது செஞ்சிமா நகரம். என்னைத்தவிர எங்கள் வழியிலுள்ளார் அனைவரிலும் பீ. ஏ. முதல்தரப்பரீட்சையில் தேறினவர் அவர்தான். தமிழ், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் வல்லவர். நல்ல குணவான். அதனுல்தான் என் அருமைச் சகோதரியை அவருக்கு ஐஸ்வரியத்தைக் கவனியாமல் விவாகஞ் செய்து கொடுத்தோம். அதுவும் என் சகோதரியின் விருப்பமேயன்றி எங்கள் விருப்பமன்று. கூடியவரையில் பெண்கள் பொருள் இல்லாவிட்டாலும் குணமுள்ளவனை நாடுவார்களாஞல் அவனுக்கு அவர்களை விவாகஞ்செய்து கொடுத்தல் பெரிதும் நன்மையேயாம். அப்படிச் செய்யாவிடின் அதனுலேற்படும் கேடுகளுக்களவில்லையன்றோ? குணம்பற்றி மணமேயன்றிப் பணம்பற்றி மணமன்று' என்று சாதுரியமாகப் பதில்கூறினுன் அமிர்தசாகரன்.

அப்பெரியார் அமிர்தசாகரன் கூறிய சாதுர்ய மொழியில் ஈடுபட்டவராக அவனைப்பார்த்து 'தங்களுக்கு இன்னும் விவாகம் ஆகவில்லைபோல் தோன்றுகிறது,' என்று சிறிது புன்முறுவலோடு கேளாமற் கேட்டார்.

'ஆம், ஆகவில்லை' என்று கூறினுன் அமிர்தசாகரன்.

பிறகு அவர் அமிர்தசாகரனை நோக்கி 'சரி; இனி நீங்கள் எங்கும் போகவேண்டாம். நான் தங்கள் தந்தைக்குத் தாங்கள் இங்கு இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. ஆகையால் தாங்கள் இதைத் தங்களுடைய வீட்டைப்போல் எண்ணிக் கொள்ளுங்கள். தங்களுக்கு இஷ்டமானபோது தங்களுடைய வீட்டிற்குப் போகலாம்' என்று கூறிஞர்.

அதற்கு அமிர்தசாகரன் அவரைப் பார்த்து, 'ஐய! தாங்கள் கூறியபடி வேண்டுமாஞல் இங்குத் தங்களுடைய

வீட்டிலிருக்கத் தடையில்லை. ஆயினும் நான் யாதொரு வேலையுமின்றி வீணே உண்டு உடுத்துத் திரியப் பிரியப் படேன். எனக்கு ஏதாவதொரு வேலை இருந்தாலன்றி நான் தாங்கள் என்ன சொன்னபோதிலும் சரியே, இங்குத் தங்களுடைய வீட்டிலிரேன்'' என்று கண்டிப்பாகக் கூறினன்.

இவ்வார்த்தையைக் கேட்டவுடன் அப்பெரியார் கொஞ்சநேரம் மௌனமாக எதைப்பற்றியோ ஆலோசித்து விட்டு அமிர்தசாகரனைப் பார்த்து, 'அமிர்தசாகரரே! எனக்கும் பத்து இலட்சம் ரூபாய்களிருக்கின்றன. ஆகையால் தாங்கள் என் வீட்டிலிருப்பதால் எனக்குக் கஷ்டமொன்றும் நேரிடாது. இவர் என்னுடைய ஆப்த நண்பர். இவர் பெயர் கருணாகரர். என்பெயர் குணபூஷணர். எங்கள் இருவருடைய பெயராலும் ஒருவர்த்தகசாலை கோகுலபுரியில் நடைபெறுகிறது. தாங்கள் வேலையின்றி வீணாக உண்டு உடுத்து இருக்கமாட்டேனென்று கூறுகின்றபடியால் தங்களை நான் நாளையதினம் கோகுலபுரிக்கு அழைத்துக்கொண்டு போய் அங்கு நடைபெறும் வியாபார சாலையில் தலைமை உத்தியோகஸ்தராக ஏற்படுத்துகிறேன். தாங்கள் ஒவ்வொரு வருஷத்திலும் வருகிற இலாபத்தில் கால் பங்கு எடுத்துக் கொள்ளுங்கள். வேறு தங்களுக்கு ஆகவேண்டிய நியாயமான செலவுகளுக்கு வேண்டிய ரூபாய்களைப் பொதுக் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். இவ்விஷயங்களைப்பற்றி என் நண்பர் கருணாகரருக்கும் பிரியமேயாம். உங்களுடைய அபிப்பிராயம் என்ன?' என்று வினயமாக உசாவினர்.

அதற்கு அமிர்தசாகரன் குணபூஷணரைப் பார்த்துத் 'தாங்கள் இவ்வளவு உதவி செய்ய எண்ணியதைப்பற்றித்

தங்களுக்கு நான் எப்பொழுதும் நன்றியறிதல் பாராட்டக் கடமைப்பட்டவனாய் இருக்கிறேன். இப்பொழுது தாங்கள் கூறிய விஷயங்கள் யாவும் எனக்குச் சம்மதமானவையே யாம். அதன்படி நடந்து கொள்ள எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமின்று. அதற்காக நான் தங்களுக்கும், தங்கள் நண்பருக்கும் அநேகவந்தனம் செய்கின்றேன்' என்று பணிதலோடும் வினயத்தோடும் கூறினான்.

பிறகு, 'நான்வந்து வெகுநேரமாயிற்று; என்னுடைய வீட்டிற்குப் போகவேண்டும். எனக்கு உத்திரவு கொடுங்கள். நான் போய்வருகிறேன்' என்று கூறிக் கருணாகரர் அமிர்தசாகரனிடத்திலும், குணபூஷணரிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு தம்முடைய வீடுபோய்ச் சேர்ந்தார்.

அமிர்தசாகரனுடைய வரலாறுகளையும், அவனைத் தம்முடைய வர்த்தகசாலையில் வைத்துக்கொள்ளப் போவதையும் தம்முடைய மனைவியிடம் தெரிவித்தார் நற்குணமும் சாந்தமும் வாய்ந்த குணபூஷணர்.

உத்தமியாகிய அவர் மனைவியும் நன்றெனச் சம்மதித்தாள். அன்றிரவு வேலைக்காரரைத் தடுத்துத் தானே அமிர்தசாகரனுக்கும் தன் கணவன் குணபூஷணருக்கும் பெரிதும் அன்புடன் உண்ணும்படி உபசரித்து அழகினுமினிய உணவளித்தாள்.

அன்றிரவு நீங்கிப் பொழுது விடிந்தது. குணபூஷணர் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு அமிர்தசாகரனோடு போஜனம் செய்தார். பிறகு அவனை அழைத்துக்கொண்டு பத்துமணிக்குப் புறப்பட்டு இரயிலிலேறி மாலை நான்கு மணிக்குக் கோகுலபுரியிலுள்ள தமது வர்த்தகசாலைக்குப்

Siva · Thir 1 92

போய்ச் சேர்ந்து அங்குச் சில தினங்கள்வரை தங்கி அங்கு ஆகவேண்டிய விஷயங்களை எல்லாம் அமிர்தசாகரனுக்குச் செவ்வனே தெரிவித்து அங்குள்ளவர்க ளெல்லோரையும் அமிர்தசாகரனின் உத்தரவுப்படி நடக்கக் கட்டளையிட்டுத் தாம் அமிர்தசாகரனிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு தம் முடைய ஊராகிய இலிங்கபுரிக்குப் போய்ச் சேர்ந்தார்.

அமிர்தசாகரன் அன்றுமுதல் அங்குள்ள காரியஸ்தர்க ளெல்லோரும் தன்னைப் புகழும்படியாக அவரவர்களுக்குத் தகுந்தாற்போல் நடந்து ஒவ்வொருவரையும் நயத்தாலும் பயத்தாலும் அவரவருடைய வேலைகளை அவரவர் செவ் வனே செய்யும்படி செய்து வியாபாரத்தை முன்னையினும் பதின்மடங்கு அதிகமாக வளர்பிறைபோல விருத்திசெய்து கொண்டு வந்தான். அதனால் அனைவரும் அவனைச் சமர்த்த னென்று புகழ்ந்தனர். இப்பொழுதேனும் அமிர்தசாகரன் அமிர்தவதனவை மறந்தானோ? இல்லை. அவளைப்பற்றிய சிந்தனையே அவன் மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டி ருந்தது. ஆனால் என்ன செய்கிறது? அவள் இப்பொழுது எங்கே இருக்கிறாளென்று அவனுக்காவது நமக்காவது யாதொருதகவலும் அணுவளவும் தெரியவில்லையே!

இரண்டாவது அத்தியாயம்.

மோசம்போன மோகவதி.

"தன்னுரைகோ ளாதமனை வாழ்க்கையது தன்னின்
வென்னிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா
அன்னவரொடு மேவியம ராடவர்த மக்குப்
பின்னுமொரு கூற்றுமுளதோ? பிணியுமுண்டோ"

—கந்த புராணம்.

எடுத்த கருமம் இறைவனருளின்றி யாவர்க்கும் நிறைவேறுவது அசாத்தியமன்றோ? துர்க்குணமுடையார் நற்குணமுடையாரைக் கெடுக்க முயன்றால் தெய்வந்தான் சம்மதிக்குமா? அடாத காரியங்களைச் செய்து முடிப்பதென்றால் அது எளிதில் ஆகக்கூடியதா? உத்தம குணமுடைய சத்திய சீலர்களைத் துஷ்டர்களின் துன்மார்க்க வழிகளில் பிரவேசிக்க விடார் கடவுள் என்பதற் கிணங்க, இறைவனுடைய கிருபையால் நற்குணம் வாய்ந்து விளங்கும் அமிர்தசாகரன் தன் சிற்றன்னையாகிய மோகவதியின் துர் எண்ணத்திற்குடன்படாமல் பிரிந்துபோன அன்றையதினம் பொழுது விடிந்தவுடன் அவன் தந்தையாகிய சதாநந்தர் தம்படுக்கையினின்றும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு 'நாளையோடு சரஸ்வதிபூஜை முடிவாகையால் நாளைய தினம் இரவு நம்முடைய வீட்டிற்குப் பல சங்கீத வித்வான்களை வரவழைத்து அவர்களைக்கொண்டு பலவிதமான பாட்டுக் கச்சேரி, கதை முதலியவைகளை நடத்தி நாமும் மற்றுமுள்ளவர்களும் கேட்டு ஆனந்திக்க வேண்டும்' என்று தம்முள் எண்ணிக் கொண்டு 'நமது பெரிய காரியஸ்தர் கன்னிவனநாதர் வந்தாரா?' என்று தமக்கு அருகிலிருந்த தமது வேலைக்காரனைப் பார்த்துக் கேட்டார்.

அதற்கு அவன் 'ஆம்; அவர் வந்து வெகுநேரமா யிற்று. அதோ அவருடைய ஆபீஸ் ரூமில் உட்கார்ந்து கொண் டிருக்கிறார்' என்று பதிலளித்தான்.

'அப்படியானால் உடனே போய் அவரை இங்கு அழைத்துக்கொண்டு வா,' என்று கூறினார் சதானந்த ரென்னும் கோடீசுவரர்.

உடனே அவன், 'இதோ அழைத்துக்கொண்டு வரு கிறேன்' என்று கூறிவிட்டு அவ்விடம்விட்டகன்று கொஞ்ச நேரத்திற்குப் பின் கன்னிவனநாதரோடு குறித்துள்ள இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

அப்பொழுது கோடீசுவரர் கன்னிவனநாதரைப் பார்த்துக் 'கன்னிவனநாதரே! ஒவ்வொரு வருஷத்திலும் சரஸ்வதி பூசை முடியும் தினத்தன்று நாம் நம்முடைய வீட்டிற்குப் பல சங்கீத வித்துவான்களை வரவழைப்பது வழக்கமன்றோ? இவ்வருஷம் எனக்கு ஏற்பட்ட பலவித மான வேலைத் தொந்தரவுகளால் நான் இவ்விஷயத்தை மறந்துவிட்டேன். நீங்களும் ஞாபகப்படுத்தவில்லை. போகட்டும். இப்பொழுது கடிதமெழுதி நாம் அப்பாடகர் களை நமது வீட்டிற்கு நாளையதினம் வரச்செய்வதென்றால் முடியாது. ஆகையால் போனவருஷம் நமது வீட்டிற்கு வந்த பாடகர்களெல்லோருக்கும், அவர்களை நாளையதினம் இங்கு வரச்சொல்லித், தந்தியின் மூலம் சமாச்சாரம் அனுப் புங்கள்' என்று கூறினார்.

கன்னிவனநாதருக்கு ஆங்கிலேய பாஷை தெரியா தாகையால் அவர்சதானந்தரைப் பார்த்துத்'தங்கள்குமாரர் அமிர்தசாகரர் ஆபீஸ் ரூமுக்கு வந்தவுடன் சென்ற வரு

ஷம் நமது வீட்டிற்குவந்த பாடகர்கள் எல்லோருக்கும் தந்தி அனுப்புகிறேன்' என்று கூறினர்.

இவ்வார்த்தையைக்கேட்டவுடன் சதாநந்தர் திடுக்கிட்டு 'இப்பொழுது மணி ஒன்பதிருக்கும்! இன்னுமா அமிர்த சாகரன் ஆபீசுக்கு வரவில்லை?' என்று ஒருவகை ஆச்சரியத்தோடு வினவினர்.

'இல்லை—இன்னும் வரவில்லை; என்ன காரணமோ' என்று கூறினர் கன்னிவனநாதர்.

கன்னிவனநாதர் இவ்விதம் கூறியவுடன் சதானந்தர் அவரையும் வேலைக்காரனையும் அனுப்பிவிட்டுத், தாம் அமிர்தசாகரனுடைய அறைக்குட் சென்று பார்த்தார். அங்கு அவனைக் காணவில்லை. அவன் இருந்தால்தானே காண்பதற்கு! வேலைக்காரர்களிடம் விசாரித்தார். அவர்கள் 'நாங்கள் அறியோம்' என்றனர். ஆம் அவர்களுக்கு என்ன தெரியும் பாவம்.

'எங்கேயாவது சென்றிருப்பான். தேடிப்பார்த்து அழைத்துக்கொண்டு வாருங்கள்' என்று சொல்லி வேலைக்காரர்களை அனுப்பிவைத்தார் அமிர்தசாகரனுடைய தந்தையாகிய சதானந்தர்.

அவர்கள் அநேக இடங்களிற் சென்றுதேடிப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து சதானந்தரிடம் 'அவர் ஓரிடத்திலுமில்லை' என்று கூறினர்கள்.

'எங்கேனும் போகிறதாயிருந்தால் நம்மோடு சொல்லாமற் செல்லானே அமிர்தசாகரன்' என்று சதானந்தர் தம்முள் சிந்தித்துக்கொண்டு வேலைக்காரர்களை அனுப்பிவிட்டுத் தம்முடைய மனைவி மோகவதியிடம் சென்று

'நமது குமாரன் அமிர்தசாகரன் எங்கே? உனக்குத் தெரியுமா? என்று சாதாரணமாகக் கேட்டார்.

'ஆ! என்ன! நமது குமாரனா! அமிர்தசாகரனா! எங்கே? அவன் எங்கே? எனக்குத் தெரியாதே! என்ன சமாச்சாரம்?' என்று பரபரப்புடன் பல கேள்விகளும், பதில் உத்தரங்களும் அவள் வாயினின்றும் வந்தன.

'ஒரு அவசரநிமித்தமாகக் காலை முதல் தேடுகிறேன். காணோம்; எங்குச் சென்றிருப்பான்?' என்று மீண்டும் வினவினார் சதானந்தர்.

'நேற்றுப்பகல் அமிர்தசாகரனுக்குப் போஜனமிடுகையில் அவனோடு பேசிக்கொண்டிருந்த பல வார்த்தைகளுக்கிடையில் நாம் அவனைப் பார்த்துத் "தங்கள் தந்தை எனக்கு என்ன முறையோ அம்முறையில் தாங்கள் என்னைக் கவனித்துக் கொள்ளவேண்டும்" என்றும் "தாங்கள் என்னை அம்முறையில் கவனித்துக் கொள்ளாவிடில் நான் என்னாலானதைப் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றுங் கூறினோமே! அதைக் காரணமாகக் கொண்டு அவன் எங்கேயாவது சென்றிருப்பான். அதைப்பற்றிப் பிறகு ஆலோசித்துக் கொள்ளுவோம்' என்று தன்னுள் எண்ணி ஒரு முடிவுக்கு வந்தவுடன் மோகவதி சதானந்தரைப் பார்த்துத் 'தங்கள் குமாரனுடைய நண்பர் யாரோ ஒருவர் நேற்றுதினம் பகல் தங்கள் குமாரனிடம் வந்து 'நாம் இருவரும் கற்பகபுரிக்குப் போய்வருவோம்' என்று கூறி அழைத்ததாகவும், தங்கள் குமாரன் வருகிறேனென்று சம்மதித்ததாகவும் தங்கள் குமாரன் அமிர்தசாகரனே என்னிடம் நேற்றுப் பகல் கூறினான். அதற்கு நான், சரி; எங்குச் சென்றாலும் உன் தந்தையிடம் நீ சொல்லிக்கொண்டு போக வேண்டு

மேயன்றி உன்னுடைய இஷ்டப்படி போகக்கூடாது' என்று கூறினேன். 'நல்லது' என்று கூறி வெளியிற் சென்றான். இவ்வளவுதான் அவனைப்பற்றி எனக்குத் தெரியும். நேற்று இரவுகூட அவனை நான் பார்க்கவில்லை. வேலைக்காரர்கள் அவனுக்குப் போஜனமிட் டிருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டேன்' என்று கூறினாள் மாயக்காரியான மோகவதி.

'நீ சொல்லும் வார்த்தைகளெல்லாம் உண்மைதானே? அப்படியானால் அவன் என்னிடம் சொல்லாமற் போக மாட்டானே! அவனைக் கற்பகபுரிக்கு அழைத்த அவனுடைய நண்பன் யார்? உனக்குத் தெரியுமா?' என்று வினவினார் சதானந்தர்.

'எனக்கு எப்படித் தெரியும்? அவன் நண்பனை நான் கண்டவிதம்! ஆண்மக்களைக் கவனிப்பதும், அவர்களோடு வார்த்தையாட நினைப்பதும், அவர்களை இன்னாரென்று அறியப் பிரியப்படுவதுமாகிய தூர்வழக்கம் என்னிடமில்லை' என்று கிஞ்சித்துக் கோபங் கொண்டவளைப்போல் கூறினாள் மோகவதி என்னும் மோசக்காரி.

'நல்லது; அப்படியானால் அமிர்தசாகரன் அவனுடைய நண்பனோடு கற்பகபுரிக்குப் போயிருப்பானோ? என்னவோ என்னுடைய கால் கைகளெல்லாம் நடுங்குகின்றன. மனத்திலும் திகிலேற்பட்டிருக்கிறது,' என்று பரிதாபத்துடன் கூறினார் சதானந்தர்.

'தாங்கள் என்ன இவ்விதம் பயப்படுகிறீர்கள்? அமிர்தசாகரன் என்ன குழந்தையா? அவன் கற்பகபுரிக்குத் தான் போயிருப்பான். இன்னும் இரண்டு தினங்களுள் திரும்பிவருவான் என்று நினைக்கிறேன்' என்று உண்மையை உரைப்பதுபோல் கூறினாள் மோகவதி.

'உனக்கென்ன? பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை. அவனுடைய அன்னை இருந்தால் இந்நேரம் என்ன பாடுபடுவாள் அது உனக்குத் தெரியுமா? தெரியாது,' என்று வருத்தத்தோடு கூறினார் சதானந்தர்.

'எனக்கு மட்டுமென்ன, வருத்தமில்லையா! அவன்—அமிர்தசாகரன்—தங்களிடம் சொல்லாவிடினும், என்னிடமாவது போகும்போது ஒரு வார்த்தைசொல்லாமற்போய் விட்டானே என்னும் வருத்தம் எனக்கு அதிகமே. அதைத் தாங்கள் என்னை வியந்துகொள்ளும்படி நான் தங்களிடம் கூறினால்தான் நான் தங்கள் குமாரனிடம் பட்சமுடையவளோ?' என்று இரண்டு பொருள்பட வினவினாள் மகா சாமர்த்தியவதியான மோகவதி.

'நீ அமிர்தசாகரனை உன் வயிற்றில் தோன்றிய குமாரனைப் போலவே எண்ணி வேற்றுமையின்றி அவனிடம் பெரிதும் பட்சமுடையவளாய் அவன் அன்னையின் ஞாபகம் அவனுக்கு வரா வண்ணம் அவனைப் பாதுகாத்துக் கொண்டு வருகிறாய். அவ்விஷயத்தில் எனக்குப் பெரிதும் சந்தோஷமேயாம். போகட்டும். நமது குமாரன் இன்னும் இரண்டு தினங்களுள் வரக்கூடும் என்று கூறுகின்றாயா?' என்று உசாவினார் சதானந்தர்.

'ஆ! அதற்குத் தடையென்ன? இன்னும் இரண்டு தினங்களுள் வந்துவிடுவான். வீணே ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஆமாம்! நான் தங்களைக் கவலைப்பட வேண்டாமென்று கூறுகிறேன். என்னிடம் அமிர்தசாகரன் ஒரு வார்த்தையாவது சொல்லாமற் போய்விட்டானே என்பதைப்பற்றி எனக்குமட்டும் ஒருவிதத்திலன்று; பலவிதத்திலும் கவலையாயிருக்கிறது. ஏனென்றால் எப்படியும் அவன்

கற்பகபுரியில் இரண்டு தினங்களேனும் தாமதித்திருப்பான். அதுவரையில் என்னைப்போல் அவன் அருமையறிந்து யார் அவனுக்குப் போஜனம் முதலியவைகளை அன்புடன் அளிப்பவர்கள்?' என்று விநயமாய் வினவுகிறவள் போல விளம்பினாள் மோகவதி என்னும் மோசக்காரி.

'ஆம்: ஆம், நமக்கன்றோ தெரியும் நமது குழந்தையின் அருமை' என்று கூறினார் சதாநந்தர்,

இவ்வண்ணம் மோகவதியுடன் சதாநந்தர் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் ஒரு வேலைக்காரி அங்கு வந்து அவரைப்பார்த்து 'வெந்நீர் தயாராயிருக்கிறது; ஸ்நானத்திற்குப் போகலாம்' என்று கூறினாள்.

மோகவதியும் சதானந்தரைப் பார்த்து 'ஸ்நானம் செய்து வாருங்கள்; நேரமாயிற்று' என்று கூறி அவரை அனுப்பிவிட்டுத் தன் கையிலிருந்த பின்னல் வேலையில் கவனத்தைச் செலுத்தலானாள். முக்கியமாக அவள் தன் பின்னல் வேலையில் மட்டும் கவன முடையவளாக இருந்தாள் என்பதற்கும் இல்லை.

சதாநந்தர் ஸ்நானம் செய்து பூஜை முடித்துக்கொண்டு போஜனமுண்டு தம்முடைய ஆபீஸ் அறைக்குச் சென்றார்.

இவரைக் கண்டவுடன் 'அமிர்தசாகரர் எங்கே? இவர் வருகின்றாரே' என்று வேலையாட்கள் ஒருவரோடொருவர் இரகசியமாய்ப் பேசிக்கொண்டனர். சதானந்தர் அங்கிருந்து ஆபீஸ் மேஜையின் அருகிலிருந்த நாற்காலியின் மேல் உட்கார்ந்து மேஜையின் மீது முழங்கையை ஊன்றிக் கொண்டு எதைப் பற்றியோ ஆலோசிக்கலானார். இந்தத் தருணத்தில் கன்னிவன நாதர் சதானந்தரிடம் வந்து 'சங்கீத வித்துவான்களுக்குத் தந்தி சமாசாரம் அனுப்பவேண்

டுமே! தங்கள் குமாரர் எங்கே? இன்னும் வரக்காணேமே? எங்கேயாவது தங்கள் உத்தரவின் மீது சென்றிருக்கின்ருரா?' என்று பணிவுடன் உசாவினர்.

அதற்குச் சதானந்தர் 'அவன் ஊரில் இல்லை. கற்பக புரிக்குப் போயிருக்கிருன். ஆகையால் அவன் இல்லாமல் எக்காரியத்தையும் செய்ய எனக்கு இஷ்டமில்லை. ஆனது பற்றிச் சங்கீத வித்துவான்களுக்குத் தந்தி அனுப்பி அவர்களை வரவழைக்க வேண்டாம்' என்று கூறினர்.

'நல்லது என்று கூறிக்கொண்டே கன்னிவன நாதர் தம்முடைய காரியத்தைக் கவனித்துச் சென்ருர். நிற்க.

அன்று முதல் சதானந்தர் ஒவ்வொரு தினமும் அமிர்தசாகரன் பார்த்து வந்த விஷயங்களைத் தாமே கவனித்துக் கொண்டு வந்தார். இரண்டு நாட்களாயின. 'இன்றைக்கு அவசியம் நமது புத்திரன் வருவான்' என்று சதாநந்தர் தம்முள் எண்ணிக்கொண்டு தம்முடைய மோட்டார் வண்டியை இரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பினர். பிறகு அரைமணி நேரங்கழித்து மோட்டார் வண்டி வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு நிமிஷமும் தம்முடைய புத்திரன் வருகைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்த சதானந்தருக்கு மோட்டார் வண்டியில் யாரோ வருகிறது போல் தோன்றியது. அமிர்தசாகரன் தான் வருகிருன் என்று எண்ணி மகிழ்ந்தார். இரண்டொரு நிமிஷத்திற்குள் மோட்டார் வண்டியும் சதானந்தரின் எதிரில் வந்து நின்றது. மோட்டார் வண்டியில் வந்தவனும் அதைவிட்டுக் கீழிறங்கினுன். சதானந்தர் அவனைக் கண்டவுடன் தயங்கி 'இவனைப் பார்த்தால் அமிர்தசாகரனைப் போலவே தோன்றுகிறது. ஆனல் இவன் அமிர்தசாகரன் அல்ல. இரண்டு தினங்

T. Kumaraswamy ... Karaikudi ...

களுக்குள் அடையாளம் மாறிப்போகுமா? இவன் யாரோ தெரியவில்லையே' என்று தம்முள் எண்ணிக்கொண்டு வந்தவனைப் பார்த்து 'தாங்கள் யார்?' என்று வினவினர்.

சதானந்தரின் கேள்விக்குப் பதில் கூறாமல் 'மகேந்திர புரியில் பட்டு வர்த்தகம் செய்துகொண் டிருந்து இப்போது வியாபாரத்தை நிறுத்தி இருக்கும் இராஜேஸ்வரரைத் தங்களுக்குத் தெரியுமோ கேள்வியாவது பட்டிருப்பீரோ?' என்று பொறுமையுடன் வினவினன் வந்தவன்.

'எனக்குத் தெரியாதா இராஜேஸ்வரரை? என்னுயிர் நண்பராயிருந்து என்னை மோசம் செய்தவர்தானே!' என்று கூறினர் சதானந்தர்.

இவ்வார்த்தையைக்கேட்டவுடன் வந்தவன் திடுக்கிட்டு 'அவர் தங்களை எப்படி மோசம் செய்தார்?' என்று ஒருவித அச்சத்துடன் கேட்டான்.

'எனக்கு மகேந்திரபுரியில் சில தனவந்தர்களிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வரவேண்டியதாயிருந்தது அதற்காக அவர்களிடம் நானே நேரில் போய் அந்த இரண்டு இலச்சம் ரூபாயையும் வசூல்செய்து அதை இராஜேஸ்வரரிடம் கொடுத்து வைத்திருக்கும்படி கூறிவிட்டுச் சிவகங்கை நீர் வீழ்ச்சியின் விநோதத்தைப் பார்க்கச்சென்று திரும்பிவந்து ரூபாய்களைக் கேட்டேன். அதற்கு இராஜேஸ்வரர் என்னைப் பார்த்து, 'தாங்கள் எப்பொழுது என்னிடம் ரூபாய்களைக் கொடுத்தீர்? சாட்சியார்? தாங்கள் என்னிடம் ரூபாய்கள் கொடுக்கவே இல்லை,' என்று சாதித்தார். எனக்கும் வேறு சாட்சிகள் இல்லாமையால் அவரை ஒன்றுஞ் செய்யமுடியாமல் 'கடவுளே கண்டுகொள், கலிகாலக் கூத்தை' என்று கூறி வந்துவிட்டேன். அதே வருஷத்தில்

அவருடைய வியாபாரஸ்தலத்தில் தீப் பிடித்துச் சுமார் பத்து இலட்சம் ரூபாய்கள் மதிப்புள்ள பட்டு வகையராக் கள் சாம்பலாயின. அதே சமயத்தில் (Colapur Bank) முறிந்துபோனபடியால் அதில் அவர் சேகரித்து வைத் திருந்த பணத்தொகையும் போயிற்று. அதன்பிறகு அவருக்குக் கடன் கொடுத்திருந்தவர்க ளெல்லோரும் அவருடைய நிலம், வீடு முதலியவைகளை முறைப்படி தங் கள் வயப்படுத்திக்கொண்டனர். போனதுபோக மிச்சம் ஆயிரம் ரூபாய்க்குக் கூட அவர் இப்போது ஆதரவற்றவரா னார். தற்சமயம் மகேந்திரபுரியில் அவர் எங்கிருக்கிறரென் பது கூடத் தெரியவில்லை' என்று கூறினார் சதானந்தர்.

இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் வந்தவன் திடுக் கிட்டு 'நாம் இவர் குமாரன் அமிர்தசாகரனைக் கேட்டு ஆயிரம்ரூபாயாவது வாங்கிக்கொண்டு போய் ஏதாவதொரு வியாபாரம் செய்யலாமென்று எண்ணி இங்கு வந்தோம். இப்பொழுது இவரிடம் நான்தான் இராஜேஸ்வரரின் குமாரனென்று உண்மையைக்கூறினால் இவர் நம்மை அரை நிமிஷமாவது இங்கு இருக்க விடமாட்டா ரென்று நன்கு தெரிகிறது. இவர் சொல்லியபடி நமது தந்தை இவரை மோசம் செய்திருப்பாரென்று நமக்குக் கனவிலும் இதற்கு முன் தெரியாது. போகட்டும். இப்பொழுது இவரிடம் ஏதா வது சொல்லிவிட்டு, பிறகு அமிர்தசாகரனைக் கண்டு அவ னிடம் "என் தந்தை என்னமோ யோசனையின்றி உன் தந் தையை மோசம் செய்துவிட்டார். எங்கள் வியாபார ஸ்தல மும் தீக்கிரையாயிற்று. தற்காலம் எங்களிடம் பொருளில்லை நாம் இருவரும் பால்ய முதற்கொண்டு ஒரு கலாசாலை மாணவரல்லவா? நம்மிருவருக்கும் பால்ய முதற்கொண்டு அதிக நேச முண்டன்றே? இவைகளை முன்னிட்டேனும்

இப்பொழுது ஓர் ஆயிரம் ரூபாயாவது இனமாகக் கொடு” என்று கேட்டால் அவன் இயற்கையிலேயே இரக்கமான மனதை யுடையவனாகையால் எவ்விதத்திலேனுங் கொடுப்பான்’ என்று பரபரப்புடன் தன்னுள் எண்ணிக்கொண்டு சதானந்தரைப் பார்த்து, ‘ஐயா! தங்களை மோசம் செய்தவரான இராஜேஸ்வரர் முன் வசித்துக்கொண்டிருந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டில்தான் நான் இப்போது வசித்துக் கொண் டிருக்கிறேன். இதற்காகவே நான் “இராஜேஸ்வரரைத் தெரியுமா?” என்று கேட்டேன். நான் தங்கள் குமாரன் அமிர்தசாகரனேடு ஒரு கலாசாலையில் கல்வி கற்றவன். சென்ற நான்கு வருடங்களாகச் சிற்சில காரணங்களினால் நான் அமிர்தசாகரனைக் காண முடியாமற் போயிற்று. இப்பொழுது பார்த்துவிட்டுப் போகலாமென்று எண்ணி இங்கு வந்தேன். நான் இப்பொழுதுதான் கொஞ்சநேரத்திற்கு முன் இரயிலை விட்டிறங்கியவுடன் தங்கள் குமாரன் பெயரைச் சொல்லி‘அவர் வசிக்குமிடம் எங்கே இருக்கிறது?’ என்று அங்கு மோட்டார் வண்டியுடன் வந்திருந்த தங்கள் மோட்டார்வண்டியைஒட்டுகிறவனிடம் கேட்டேன் அதற்கு அவன் ‘அவர் ஊரில் இல்லை. கற்பக புரிக்குப் போயிருக்கிறார். இந்த இரயிலில் வருவாரென்றுதான் நான் மோட்டார் வண்டியுடன் இங்கு வந்தேன். அவர் வரக்காணோம். நான் திரும்பிப் போகவேண்டியதுதான். தாங்கள் இந்த வண்டியிலேறிக் கொள்ளுங்கள். தங்கள் சிநேகிதராகிய அமிர்தசாகரரின் தகப்பனர் மிகவும் நல்லவர். அவரிடம் வந்து விஷயங்களைச் சொல்லி அவர் வீட்டிலிருங்கள். இன்று மாலை இரயிலிலாவது அமிர்தசாகரர் வருவார்” என்று கூறினன். நான் நன்றெனச் சம்மதித்து மோட்டார் வண்டியிலேறிக்கொண்டேன். மோட்டார்வண்டி இரயில்வே ஸ்டேஷ

னிலிருந்து புறப்பட்டு வருகையில் இங்கு நின்றுகொண்டிருந்த தங்களைக் கண்டவுடன் மோட்டார் "டிரைவர்" தங்களை எனக்குக் காண்பித்து 'அவர்தான் அமிர்தசாகரரின் தந்தை' என்று கூறினான். நான் இங்கு வந்திறங்கித் தங்களைக் கண்டேன். இவ்வளவுதான் என்னைப் பற்றிய விஷயம்,' என்று கூறினான் மதிவர்மன்.

வந்தவன் இவ்வாறு கூறியவுடன் சதானந்தர் அவனைப் பார்த்து 'உங்கள் பெயர் என்ன?' என்று வினவினார்.

'என் பெயர் மதிவர்மன்,' என்று கூறினான் வந்தவன்.

வந்தவனாகிய மதிவர்மன் இவ்வாறு கூறியவுடன் சதானந்தர் அவனைப் பார்த்து, 'இக்காலத்தில் உண்மையும் ஒழுங்கும் வாய்ந்த நண்பர்கள் கிடைப்பது அருமையினும் அருமை. என் குமாரனும் தாங்களும் உங்களிருவருடைய ஆயுள்பரியந்தம் ஒருவரோடொருவர் உள்ளன்புடன் நேசமாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கோரிக்கை' என்று கூறிக்கொண்டே மதிவர்மனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குட் சென்று ஒரு வேலைக்காரனிடம் சொல்லி வெந்நீர் போடச் செய்து மதிவர்மனை ஸ்நாநம் செய்யச்சொல்லி அவன் ஸ்நாநம் செய்தான பிறகு ஒரு சமயற்காரனைக் கொண்டு அவனுக்குப் போஜனம் செய்து வைத்துப் பின் அவனைப் பார்த்துத் 'தாங்கள் திரும்பவும் தங்களுடைய ஊருக்குப்போகும்வரையில் என்னுடைய குமாரன் அமிர்தசாகரனுடைய அறையில் படுக்கை முதலியவைகளை வைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறி அவனை அழைத்துக் கொண்டு போய் அவனுக்கு அமிர்தசாகரனுடைய அறையைக் காண்பித்து அதில் அவனை விடுத்துச் சென்றார்.

மதிவர்மன் அந்த அறைக்குட் சென்று அங்கிருந்த ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டு அமிர்தசாகரனுடைய மேஜையின்மேலிருந்த புத்தகங்களில் ஒன்றை ஆராய்ந்து எடுத்து வாசிக்கலானான்.

அரைமணி நேரமாயிற்று. சதானந்தர் மதிவர்மனிடம் வந்து 'நான் வெளியில் போகவேண்டியதாயிருக்கிறது. போய் இன்னும் இரண்டுமணி நேரத்திற்குள் வந்துவிடுவேன். தாங்கள் எங்கும் போகவேண்டாம். இங்குத்தான் இருங்கள்' என்று கூறி மதிவர்மனிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு வெளியிற் சென்றார்.

அவர் போனபிறகு மதிவர்மன் அமிர்தசாகரனுடைய மேஜையின் மேலிருந்த பல புத்தகங்களையும் காகிதங்களையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவன் கையில் கவர் (Envelope) ஒன்று அகப்பட்டது. அதை அவன் பிரித்து வாசிக்கலானான். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

கடிதம்.

“என் அன்புள்ள தந்தாய்!

மைந்தன் நமஸ்கரிக்கின்றேன். நான் இன்றோடு தங்களை விட்டு நீங்கக் காலம் வந்தது. இனி ஒரு முறை தங்களைப் பார்ப்பேனென்று நான் எண்ணவில்லை. நான் தங்களுக்குப் புத்திரனா யிருந்தும் இனி என்னாலான உதவியைத் தங்களுக்குச் செய்ய முடியாதவனாயினேன். என்னைப்போல் துரதிஷ்டசாலிகள் எவருமில்லை என்று சொல்லலாம். நான் தங்களைவிட்டுப் பிரிந்துபோனதற்குக் காரணம் சொல்லாவிடில் தங்கள் மனம் சமாதான மடையாது. ஆகையால் அக் காரணத்தையும் வெளியிட்டுச் சொல்லிவிடுகிறேன்.

" அதென்னவெனில், என் மாற்றுந் தாயாகிய தங்கள் இளையமனைவி மோகவதி—தந்தையே! இதற்குமேல் எழுத எனக்குக் கைவரவில்லை. எழுதாமல் இதோடு நிறுத்திவிடவும் என் மனதிற்குச் சம்மதமில்லை. கையோ நடுங்குகிறது. மனமோ எழுதும்படி தூண்டுகிறது. தந்தையே! தங்களுடைய இளைய மனைவி சென்ற சில மாதங்களாக என்னைப் பெரிதும் பட்சத்துடன் பார்த்து வந்தாள். நான் மாற்றுந் தாய் இவ்வளவு பட்சமா யிருப்பது அருமையினும் அருமை' என்று எண்ணி மகிழ்ந்திருந்தேன். தந்தையே! தங்கள் மனைவி என்பேரில் காட்டிய அன்பு வேறு விஷயத்திற்காக என்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. அவ்விஷயம் இன்னதென்று தங்களுக்குத் தெரிவிக்க எனக்கு இஷ்டமில்லை. அவ்விஷயம் யாதென்பதைப்பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்ளத் தக்க ஆற்றல் தங்களுக்கு இல்லாமலில்லை. ஆகையால் அதைப்பற்றி நான் தங்களுக்கு அறிவிக்க வேண்டியதில்லை. அவ்விஷயத்திற்காகத் தங்கள் மனைவி பல விதங்களிலும் என்னைத் தன் வசப்படுத்தப் பார்த்தாள். ஆனால் அவளுடைய துர் மந்திரோபதேசம் ஒன்றும் என்னிடம் பலிக்கவில்லை. முடிவில் அவள் என்னைப் பார்த்து, 'அடே! அமிர்தசாகரா! நீ என் இஷ்டத்திற்குடன்படாவிடில் உன்னை அபகீர்த்திக் குட்படுத்தி விடுவதோடும், உன் தந்தையிடம் உன்னைப்பற்றி மாறுபாடாகச் சில விஷயங்களைக் கூறி அவர் உன்னை மதியாதபடி செய்து விடுவேன். அன்றியும் எல்லோரும் உன்னைக் "காமுகன், துஷ்டன்' என்று கூறும்படியும் செய்துவிட என்னால் முடியுமென்பதை மறவாதே. நான் அவ்விதம் செய்யாமற் போகிறனோ பார்' என்று சபதம் செய்தாள். நான் பயந்து ஸ்திரீகள் எதை வேண்டுமானாலும் நினைத்த மாத்திரத்தில்

செய்துவிடுவார்களாதலால் இனி நாம் வீட்டிலிருப்போமானல் நமக்கு அபகீர்த்தி யுண்டாகும்' என்று எண்ணிக்கொண்டு நமது வீட்டினின்றும் போகலானேன். அதற்காக தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். மேலும் தங்கள் மனைவியைத் தாங்கள் கடிந்துகொள்ளா திருக்கும்படி தங்களைப் பெரிதும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். காலம் இவ்விதமானல் யார் என்னசெய்ய முடியும்? 'நிதியுங் கணவனும் நேர்படினுந் தத்தம் விதியின் பயனே பயனன்றோ?' என்றும், ஊழிற் பெருவலியா வுளமற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்றும் கூறியுள்ள முதியோர்களின் வாக்குகள் பொய்யாகுமா? என்னைப்பற்றித் தாங்கள் பயப்படவேண்டாம், எங்கேயாவது சென்று பிழைக்க எனக்குச் சக்தியுண்டு. ஆனல், தங்களுடைய அந்திய காலத்தில் தங்களைத் தனியேவிட்டுப் போகிறேனே என்பதை நினைக்குந்தோறும் என் மனமானது அனலிடைப்பட்ட மெழுகெனக் கரைகிறது. என் உள்ளத்தில் கவலையும் துக்கமும் சேர்ந்து உறவாடுகின்றன. என்மேல் ஏதேனும் குற்றமிருந்தால் என்னைப் பெற்றவர்களாகிய தாங்கள் மன்னிக்க வேண்டும். அஃது உங்கள் கடமை. தந்தையே! நமஸ்கரிக்கின்றேன்; பிதாவே போய்வருகிறேன்.

இங்ஙனம்,

தங்கள் துரதிர்ஷ்டசாலி

அமிர்தசாகரன்."

இவ்வண்ணம் வரையப்பெற்றிருந்த கடிதத்தை முற்றிலும் வாசித்தவுடன் மதிவர்மன் மதிமருண்டு வியப்புற்றுப் பின்வருமாறு தன்னுள் சிந்திக்கலானன்.

'நாம் அமிர்தசாகரனிடமிருந்து சுமார் ஆயிரம் ரூபா யாகிலும் வாங்கிக்கொண்டு போகலாமென்று மகேந்திரபுரி யிலிருந்து இங்கு வந்தோம். நாம் இதுவரையில் சதானந் தர் கூறியபடி அமிர்தசாகரன் கற்பகபுரிக்குப் போயிருக் கிறனென்று எண்ணிக்கொண் டிருந்தோம். இப்பொழுது இக்கடிதத்தால் அமிர்தசாகரன் கற்பகபுரிக்குப் போக வில்லை என்றும், அவன் தன்னுடைய மாற்றாந் தாயின் துர்ச் செய்கைகளுக் குடன்படாமல் வேறு எவ்வூருக்கோ—எவ் விடத்திற்கோ—போயிருக்கிற னென்றும் நன்கு விளங்கு கின்றது. உண்மையில் அவன் தற்காலம் இங்கு வரப்போ கிறதுமில்லை; நாம் அவனிடம் ரூபாய் வாங்கிக் கொண்டு நம்முடைய ஊருக்குப் போகப் போகிறதுமில்லை. ஆகை யால் வேறு ஏதாவது ஒரு தந்திரம் செய்து கொஞ்சம் ரூபாய் சேகரித்துக்கொண்டு போகவேண்டும். இக்கடிதம் அமிர்தசாகரனுடைய கருத்துப்படி அவனுடைய தந்தை யிடம் அகப்படாமல் நம்மிடம் அகப்பட்டது நமது நற்கால மேயாம்' என்று கூறி மதிவர்மன் கொஞ்ச நேரம்மௌன மாக எதைப்பற்றியோ சிந்தித்துவிட்டுப் பிறகு 'ஒரு யுக்தி தோன்றுகிறது. அதன்படி நடந்தால்தான் கொஞ் சம் பொருள்கிடைக்கும். அதற்குக்கூட இன்றைக்கே நாம் இவ்வூரைவிட்டுப் போய்விட வேண்டும். இருக்கட் டும், அமிர்தசாகரனுடைய தந்தை வந்தவுடன் "எனக்குப் பிருதிவிபுரத்தில் கொஞ்சம் வேலை இருக்கிறது. ஆதலால் நான் அங்குச் சென்று அந்த வேலையை முடித்துக்கொண்டு இன்னும் சில தினங்களுள் இங்கு வந்து அமிர்தசாகரனைக் கண்டு கொள்ளுகிறேன்" என்று கூறிவிட்டுப் போய் விடு வோம்' என்றிவ்வாறு மதிவர்மன் ஆலோசித்துக்கொண்டி ருந்தான். அரைமணி நேரமாயிற்று. வெளியில் சென்றி

ருந்த சதானந்தர் அங்கு வந்து அவனைக் கண்டார். அவனும் அவரைக் கண்டவுடன் மரியாதையுடன் எழுந்து போய் —எழுந்திருக்கும் பொழுதே தன் கையிலிருந்த அமிர்தசாகரன் எழுதிய கடிதத்தை அவர் அறியாதபடி தன் சட்டைப் பைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு--அவரைப் பார்த்து 'அமிர்தசாகரன் கற்பகபுரிக்குப் போயிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? உங்களிடம் சொல்லிக் கொண்டு தான் போனாரோ? என்று விநயமாக ஒன்றும் தெரியாதவனைப்போல் கேட்டான்.

'ஏன் இவ்விதம் கேட்கின்றீர்கள்? அவன் என்னிடம் சொல்லிக்கொண்டு போகவில்லை; அவன் தாயாரிடம் சொல்லிவிட்டுப் போனான்' என்று கூறினார் சதானந்தர்.

'அவன் தாயார்தான் இறந்து போய் விட்டார்களே!' என்று ஆச்சரியப்பட்டவன் போல் மொழிந்தான்.

'தாங்கள் கூறுவது மெய்யே, இப்பொழுது அவன் தாயார் என்றால் யார்? என்னுடைய இளைய மனைவியே' என்று விளம்பினார் சதானந்தரென்னும் கோடீசுவரர்.

'தங்களிடம் அமிர்தசாசகரன் கற்பகபுரிக்குப் போயிருப்பதாகக் கூறியவர்கள் தங்கள் இளையமனைவியார்தான் போலும்!' என்று சாதாரணமாக ஏதும் காரணமின்றிக் கூறுவதுபோல் கூறினான் மதிவர்மன்.

'ஆம்' என்று கூறினார் சதானந்தர்.

"சரிதான். இவர் கள்ளங்கபடு எள்ளளவு மில்லாதவராகக் காணப்படுகிறார். தற்கால மனிதரல்லர். "நாம் செய்த தொந்தரவினால் அமிர்தசாகரன் எவ்விடத்திற்கோ

போய்விட்டான்போல் தோன்றுகிறது. ஆகையால் நாம் தப்பித்துக்கொள்ள ஏதாவதொரு வார்த்தையைச் சொல்லி விடுவோம்'' என்று எண்ணிக்கொண்டு இவர் மனைவியாகிய மோகவதி கபடமற்ற இவரிடம் ''அமிர்தசாகரன் கற்பக புரிக்குப் போய் இருக்கிறான்'' என்று கூறி இருக்கவேண் டும். இவரும் அவளுடைய வார்த்தையை நம்பி இருக்கின் றார். யார் எப்படியானால் நமக்கென்ன? நம்முடைய காரி யத்தை நாம் பார்த்துக்கொண்டு போய் விடுவோம். நாம் செய்யப்போகும் காரியத்திற்கு இவ்வீட்டின் பின்புறமிருக் கும் பாழடைந்த மண்டபமே சாதகமாயுள்ளது' என்றிவ் வாறு மதிவர்மன் தன்னுள் ஆலோசித்துக் கொண்டிருக் கையில் சதானந்தர் அவனைப் பார்த்து, 'என்ன ஆலோசனை செய்கின்றீர்கள்?' என்று உசாவினார்.

'எனக்குப் பிருதிவிபுரத்தில் கொஞ்சம் வேலை இருக் கிறது. ,அங்குப்போய் அவ்வேலையை முடித்துக் கொண்டு வருவோமா?' என்று மீண்டும் ஆலோசிக்கின்றேன். வேறு ஒன்றும் இல்லை. அன்றியும் அமிர்தசாகரன் வரும்வரை யில் நான் வீணாக இங்குப் பொழுதைப் போக்கிக்கொண் டிருப்பானேன்?' என்று வினாவும் விடையுமாக மொழிந் தான் அமிர்தசாகரனின் நண்பன்.

'நீங்கள் சொல்வது சரியே. தங்களுக்குப் பிருதிவி புரத்தில் ஏதாவது வேலை இருந்தால் போய்ப் பார்த்துக் கொண்டு வாருங்கள் அதற்குள் அமிர்தசாகரனும் வந்து விடுவான்' என்று கள்ளங்கபடமற்ற தெள்ளிய உள்ளத்து டன் உரைத்தார் மங்களபுரியின் ஜமீன்தாரராகிய சதானந் தர் என்னும் சாந்தவானான கோடீசுவரர்.

இவ்விதம் கூறியவுடன் மதிவர்மன் அவரைப் பார்த்து 'ஐயா! இன்னும் இரண்டு தினங்களுள் நான் இங்கு வருவேன்' என்று சொல்லி அவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு அன்று சாயந்திரம் அவருடைய மோட்டார் வண்டியிலேறி இரயில்வே ஸ்டேஷன் போய்ச் சேர்ந்து மோட்டார் வண்டி ஓட்டுகிறவனிடம் ஒரு ரூபாய் இனமாகக் கொடுத்து அவனை வண்டியுடன் அனுப்பிவிட்டுத் தான் நாலணுகொடுத்து, கதிர்புரி என்னும் ஊருக்கு ஒரு டிக்கெட்டு வாங்கிக்கொண்டு பிரயாணத்திற்குத் தயாராக இருந்த புகைத் தொடரிலேறி உட்கார்ந்தான். உடனே புகைத்தொடர் மங்களபுரியினின்றும் சென்றது நிற்க.

இரண்டு தினங்களாயின. மூன்று நாட்களும் முடிந்தன. 'அமிர்தசாகரன் வரவில்லை இதற்குக் காரணம் யாதோ தெரியவில்லையே' என்னும்கிலேசத்துடன் சதானந்தர் அன்று ஸ்நானம் செய்து போஜனம் செய்யாமலும், ஒருவரோடும் ஒன்றும் பேசாமலும் வெளியில் சென்றார்.

இதை அறியாமல் "தன் எண்ணம் தன்னைச் சுடும்" என்றபடி மோகவதி "தன்மீது தான் ஏதோ சந்தேகங் கொண்டு சதானந்தர் போஜனம் செய்யாமற் போய்விட்டார்போலும் என்று எண்ணங்கொண்டு 'போனால் போகின்றான் கிழப்பயல். இவன் ஏதாவது பேசினால் மிதுனபுரி ஜமீன்தாரும், என் தாய் மாமனுமாகிய மீனாட்சிசுந்தரருக்கு இவனைப்பற்றி ஒரு கடிதம் எழுதினால் அவர் இக்கிழவனை விசாரித்துக் கொள்ளுவார் இது என் தலைவிதி. ஐம்பது வயது நிறைந்த கிழவனுக்கு வாழ்க்கைப்படத் தெய்வம் விதித்துவிட்டது. அமிர்தசாகரனை நினைக்குந்தோறும் என் ஆவல் அதிகரிக்கின்றது. என்ன அழகு! என்ன அறிவு!

என்ன கல்வி! அதில் அரைப்பங்கேனும் இக் கிழவனுக்கில்லையே. அமிர்தசாகரன் ஒரு முறையேனும் என்னிஷ்டத்திற்கு உடன்படவில்லையே. அடே அமிர்தசாகரா! என் இஷ்டத்திற்கு நீ உடன்படா திருந்தது உனக்குப் பெரிதும் கௌரவம் என்று நீ எண்ணினைபோலும். அப்படியாவது ஒருவரிடத்திலும் சொல்லிக் கொள்ளாமல் பஞ்சையைப் போல் வீட்டைவிட்டு ஓடிப்போனதைத் தவிர வேறுஎன்ன கௌரவத்தை அடைந்தாய்? ஒன்றுமில்லை கரும்பு தின்னக் கைக்கூலியாவேண்டும்? நான்தானென்ன அழகில்லாதவளா? பார்வதி லேடியைப்போலன்றோ இருக்கிறேன். என்னை நான்தான் மெச்சிக்கொள்ளவேண்டும். அமிர்தசாகரா! உண்மையில் உன்னுடைய அழகே அழகு. மற்றவர்களுடைய அழகெல்லாம் கழுகு தான். நான் என்ன செய்வேன்? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டால் அது கிட்டுமா?" என்று தன்னில் தானே உளறிக்கொண் டிருக்கையில் மங்கம்மாள் என்னும் ஒருவேலைக்காரி அங்கு வந்து மோகவதியைப் பார்த்து 'அம்மா! தபாற்காரன் இக்கடிதத்தைத் தங்களிடம் கொடுக்கும்படி கூறி என்னிடம் கொடுத்துவிட்டுப் போனான்' என்று ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்து விட்டுச் சென்றாள், கடிதத்தில் மோகவதியின் விலாசமே வரையப்பட் டிருந்தது. உடனே மோகவதி அக்கடிதத்தைப்பிரித்து வாசிக்கலானாள். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

கதிர்புரி
நண்பகல் 21-8-*-*

"என் அன்பிற்குரிய மோகவதி!

நீ என்னைப் பலவாறாக உன்னுடைய இஷ்டத்திற்கு இணங்கும்படி போதித்தும் நான் உடன்படாமையால்

எனக்கு உன் பேரில் பிரியம் இல்லை என்று எண்ணுகின்றனையோ? அவ்விதம் நீ எண்ண வேண்டாம். உண்மையாகவே நீ என்பேரில் பூரண பிரியங்கொண் டிருக்கிறையோ இல்லையோ என்று பரீட்சித்ததே யன்றி வேறன்று. இப்போது நீ என்பேரில் பெரிதும் பிரியமுற்றிருக்கிறையென்று நான் அறிந்துகொண்டேன்.

நாம் இருவரும் அந்நியோந்நியமாய் எனது தந்தையின் இருப்பிடத்தில் இருப்போமாயின் ஒரு சமயம் விஷயம் வெளியாகக்கூடும் என்று எண்ணித், தனியே நாமிருவரும் தங்கி இருப்பதற்குத் தகுந்தஇடம் தயார்செய்வதற்காகவே ஒருவரோடும் சொல்லாமல் கதிர்புரிக்கு வந்து நான் ஒரு ஆபீசில் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்ச் சம்பளம் பெற்று வேலைபார்த்து வருகிறேன். இங்குள்ளார் எவரும் எனக்கு இதற்கு முன் பழக்கமானவர்களல்லர். இப்பொழுது உன்னை இங்கு இரகசியமாய் அழைத்துவர வேண்டுமென்பது என் கருத்தாகும். தற்சமயம் என்னிடம் வந்துவிடுவாயானல் பிறகு நீ காணமற் போனதைப்பற்றி ஒருவரும் நம்மிருவர் பேரிலும்—முக்கியமாய் நான் உன்னை அழைத்துக்கொண்டு போயிருக்கக்கூடு மென்று—சந்தேகப்படமாட்டார். என்னுடைய தந்தை உன்னைக் கோபித்துக் கொள்ளும்படி நீ தற்சமயம் அவரிடம் நடந்துகொள். ஏனென்னில்? நான் உன்னை அழைத்துக்கொண்டு வந்தவுடன் 'நாம் கோபித்துக்கொண்டமையால் மோகவதி எவ்விடத்திற்கோ போய் விட்டாள்' என்று என் தந்தை எண்ணிக் கொள்வார். எனக்கு இம்மாதம் சம்பளம் வரும்வரையில் செலவுக்கு வேண்டியதற்காகக் கொஞ்சம் ரூபாய் சேகரம் செய்து கொண்டு 23-8-** அன்று இரவு சரியாகப் பன்னிரண்டு மணிக்கு உன்னை ஒருவரும் அறியாவண்ணம் நம்முடைய

வீட்டின் பின்புறமிருக்கும் பாழடைந்த மண்டபத்திற்கு வந்து சேரும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். நான் நீ வருவதற்கு முன் அங்கு வந்து உன்னுடைய வருகைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். நான் சொல்லிய வண்ணம் செய்யத்தவருதே. நான் சொல்லியவாறு சரியாகப் பன்னிரண்டு மணிக்கு நான் குறித்த இடத்திற்கு நீ தவருமல் வந்து சேருவாயென்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

நின் அன்பிற்குரிய

அமிர்தசாகரன்."

இவ்விதம் வரையப்பெற்றிருந்த விஷயங்களை முற்றிலும் வாசித்தவுடன் மோகவதி சந்தோஷத்திலாழ்ந்தாள். 'தரித்திரனுக்கு தனப்புதையற் கிடைத்தாற்போலானுள். 'உண்மையோ அல்லது நான் கனவு காண்கின்றேனே?' என்று கூறிச் சந்தேகித்தாள். மோகவதி கையில் வைத்துக் கொண்டிருந்த கடிதத்தினுல் சந்தேகம் நிவர்த்தியாயிற்று. பலமுறை அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். 'ஆயிரம் முறை படித்தாலும் ஆவல் அடங்கவில்லை. படிக்கப் படிக்கப் பசியும் எடுக்கவில்லை. இக்கடிதத்தைக் கண்டது முதல் ஒருநிமிஷம் போவது ஒரு வருஷம் செல்லுவது போலிருக்கின்றது. அடே! என் கண்ணுளா! துரையே! என் தெவிட்டாத தெள்ளமிர்தமே! தேனே! குளிர்ந்த மொழியுடைய என் கோமானே! நான் என்னுடைய மெல்லிய கரங்களால் உன்னைக் கட்டியணைவதெப்பொழுது? நீ இவ்வளவு தயை செய்தது போதுமடா. அலைகடலில் அகப்பட்டு ஆதரவின்றித் தவித்த ஒருவனுக்கு ஓர் ஓடம் கிடைக்க அவன் அதன் மீதேறிக் கரைசேர்ந்தாற்போல் இரவும் பகலும் உன்சேர்க்

கையை விரும்பி வருந்திக்கொண்டிருந்த நான் நீ வரைந்தனுப்பிய கடிதமாகிய ஓடத்தில் என் ஆசையாகிய மனிதனை ஏற்றியுள்ளேன். ஆனால் அந்த ஆசை என்னும் மனிதன் உன் சேர்க்கையாம் சிற்றின்பக்கரையை இன்னும் அடையவில்லை. என்னைத் தவறாமல் பாழ்மண்டபத்திற்கு வந்துசேரும்படி எழுதியிருக்கின்றாயே! நான் வரத்தவறுவேனோ? தவறேன். என் காமக்களஞ்சியமே! நீ மட்டும் தவறாமல் வந்து சேரடா. உன் தந்தை என்னைக் கோபித்துக்கொள்ளும்படி நான் நடந்துகொள்ள வேண்டுமென்று நீ வரைந்திருப்பதோடும், அப்படி நான் நடந்து கொண்டால்தான் உன்னோடு நான் வந்த பிறகு உன்னுடைய தந்தை உன்மேல் சந்தேகப்படமாட்டார் என்றும் எழுதியிருக்கின்றாயே! உன் அறிவே அறிவு! ஆ உன் புத்தியே புத்தி! உனக்குள்ள புத்தியிற் காற்பங்காவது உன்னுடைய தந்தைக்கில்லையே! இது ஆச்சரியமல்லவா! செலவுக்குப்பணம் கொண்டுவரும்படி எழுதியிருக்கின்றாயே. நான் நாளைய தினம் அணிந்து கொண்டு வரப்போகும் நகைகளின் மதிப்பே சுமார் இரண்டு இலட்சம் ரூபாய்களாகுமே. எல்லாம் சீமைக்கமலங்களன்றோ! நான் ஒன்றுமில்லாமலா வருவேனென்று எண்ணிக்கொண்டனை?' என்று இவ்விதம் மோகவதி தன்னுள் எண்ணிக்கொண்டே தன் அருகிலிருந்த தினசரி புத்தகத்தை (Diary) எடுத்து அதில் இன்று என்ன தேதி என்று பார்த்தாள். 'ஆ! இன்றையதினமன்றோ தேதி இருபத்துமூன்று! நான் நாளையதினமல்லவோ இருபத்துமூன்றும் தேதி என்று எண்ணிக்கொண்டிருந்தேன். என்னுடைய அதிர்ஷ்டமல்லவோ என்னை இப்பொழுது தேதியைப் பார்க்கும்படி செய்தது' என்று சொல்லிக்கொண்டே அவள்—மோகவதி—அன்றிரவு பிரயாணத்

திற்கு வேண்டியவைகளை யெல்லாம் தயார் செய்பலானுள். அநேகம் தனவந்தர்கள் தங்கள் தங்கள் பணப்பெட்டிக ளின் சாவிகளைத் தங்கள் மனைவிகளிடம் கொடுத்து வைப் பது போலவே சதாநந்தரும் தம்முடைய பணப்பெட்டியின் சாவியை எப்போதும் மோகவதி இடத்திலேயே கொடுத்து வைப்பது வழக்கம். மோகவதி தன்னிடம் இருந்த பணப் பெட்டியின் சாவியை எடுத்துப் பெட்டியைத்திறந்து அத னுள்ளிருந்த அநேகம் பவுன்களையும், கரன்சிநோட்டுகளை யும் எடுத்து ஓர் அழகிய பணப்பையினுள் வைத்துப் பையை இறுகக்கட்டி அதைப்பத்திரமாய் ஓர் இடத்தில் வைத்துவிட்டு இரும்புப்பெட்டியைப் பூட்டிக்கொண்டு ஒன் றும் அறியாதவள்போல் வீட்டிலுள்ள வேலைகளைக் கவ னித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய எண்ணமெல் லாம் அமிர்தசாகரன் மேலேயே இருந்தது. ஆனதுபற்றி அவள் ஒரு வேலையையாவது சரியாகச் செய்து முடிக்க வில்லை. திடீரென்று ஒரு வேலைக்காரி மோகவதியின் எதி ரில்வந்து நின்றாள். மோகவதி தான் செய்துகொண்டிருந்த வேலையைச் செய்யும்படி அவ் வேலைக்காரிக்குக் கட்டளை யிட்டுத் தான் மேன்மாடியிலிருக்கும் தன்னுடைய அறைக் குட் சென்று அங்கிருந்த ஒரு நாற்காலியின்மேல் உட் கார்ந்து, அருகிலிருந்த மேஜையின் மீது முழங்கையை ஊன்றி அக்கையின் மேல் தன் இடதுபக்கம் கன்னத்தை வைத்துக்கொண்டு பின்வருமாறு ஆலோசிக்கலானுள்.

'நான் இன்றிரவு இவ்வீட்டினின்றும் நீங்கியபின் இவ் வீட்டுக் கிழவனும், மற்றும் சிலரும் என் மேலும், என் அன்பனும் அமிர்தசாகரன் மேலும் சந்தேகங் கொள்ளாம லிருப்பதற்கு ஒரு யுக்தி செய்ய வேண்டும். யார் எப்படி

நினைத்தபோதிலும் சரி; என் தாய்மாமன்மட்டும் என்மேல் சந்தேகங் கொள்ளாவண்ணம்,—என் கணவ...வெட்கக் கேடு! கணவன் என்று சொல்லவும் எனக்கு வெட்கமாயிருக்கிறது.இவ்வீட்டுக் கிழவன் மேல் ஏதாவது சில வீண் பழிகளைச் சுமத்தி என் தாய்மாமனுக்கு ஒரு கடிதம் எழுதி விடுகிறேன்' என்று மோகவதி தன் ஆலோசனையை முடிவு செய்து கொண்டு அடியில்வருமாறு மிகவும் வக்கணை, வர்ணனையோடு ஒரு கடிதம் வரையலானாள்.

கடிதம்.

மங்களபுரி
பிற்பகல்.
23-9-**

"என் அன்பார்ந்த மாமா!

அதிர்ஷ்ட வீனமுள்ள தங்கள் குழந்தையாம் மோகவதி நமஸ்கரிக்கின்றேன். என்னுடைய தந்தை இறந்து போவதற்குமுன் அவர் தங்களிடம் என்னை ஒப்படைத்து எனக்குத் தகுந்த வயது வந்தவுடன் ஒரு நல்ல வரனைத் தேடி என்னை மணஞ்செய்து கொடுத்துச் சகல சீர்வரிசைகளும் செய்யும்படி தங்களிடம் சொல்லியதோடும் எனக்கு ஒருவிதக் குறைவும் வராமற் பார்த்துக் கொள்ளும்படியும் அவர் சொன்னாரன்றோ? அவர் அவ்விதம் சொல்லியபோது நான் பத்து வயதுச் சிறுமியேயானாலும், அவர் சொல்லிய விஷயங்கள் யாவும் எனக்கு நன்றாய்ப் பசுமரத் தாணி பதிந்தபடி ஞாபகத்திலிருக்கின்றன.

"அவர்—எனது தந்தை-இறந்தபிறகு தாங்கள் என்னை —கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தாற்போல்— மிகவும் அருமையாக வளர்த்து என் பதினாறாவது வயதில்

எனக்கு விவாகஞ் செய்து வைத்தீர்கள்! சுமார் ஐம்பது வயது நிறைந்தவரைப் பிரியத்துடன்மணந்துகொண்டேன். "கைந் நிறைந்த பொன்னிலும் கண்ணிறைந்த கணவனே மேல்" என்பதைக் கிஞ்சிற்றும் நான் மனதிலெண்ணுமல் தாலிகட்டிய மணுளன் நொண்டியாயினும் சரி, குருடனுயினும்சரி; செவிடனுயினும்சரி; ஊமையனுனலும்சரி; ரூபியானலும்சரி; குரூபியானலும்சரி; யோக்கியனுனலும்சரி; அயோக்கியனுனலும்சரி; குணவானுயினும்சரி; குணமற்றவனுயினும்சரி; கல்வியுடையவனுயினும்சரி; கல்வியற்றவனுயினும்சரி; இன்னும் எப்படியாயினும் சரியே? "குலமக்கள் தனக்குத்தன் கொழுநனே தெய்வம்" என்று எண்ணி நான் எவ்வளவோ பயபக்தியுடன் என் கணவரிடம் விசுவாசமாயிருக்க இப்பொழுது என் கணவர் என்னை நடத்தும் மாதிரியைப் பார்த்தால் விபரீதமாய்த் தோன்றுகிறது. அதைப்பற்றித் தங்களுக்கு எழுதவெட்கமாயிருக்கிறதென்றுலும், எழுதாமலிருக்கவும் எனக்குப்பிரியமில்லை. அதையும் எழுதுகிறேன். அதன் விஷயங்களாவன:—என் கணவர் சிற்சில சமயங்களில் அவருடைய சிநேகிதர்களுடன் சேர்ந்து லாகிரி வஸ்துக்களை உபயோகித்துக்கொண்டு அவருடைய நண்பர்களை—அவர்கள் யாராயினும் சரியே=தம் வீட்டின் உட்கட்டு வரையில் அழைத்துக்கொண்டு வருகிருர்! அதைப்பற்றி நான் ஏதாவது கேட்டால் என்னை அடிக்கிருர். சாராயப்புட்டிகளை வாங்கி வைத்துக்கொண்டு தம் நண்பர்களுடன் தம்முடைய வீட்டிலேயே குடிக்கிருர். குடிமயக்கத்தில் காரணமின்றி என்னை அடிக்கிருர். ஒருவிதக் காரணமுமில்லாமல் அவர் நண்பர்களின் முன்னிலையில் என்னை அழைத்து வாயில் வந்தபடி பேசுகிருர். இது போகட்டும். இவருடைய குமாரன் அமிர்தசாகரன் வெளியிற் செல்லும்போ தெல்லாம் அவனைக் காணும் அன்னியர்

கள் 'உன் தந்தையின் துர்நடத்தையைக்குறித்து நீ கொஞ்சமாவது அவரைக் கண்டிக்காமலிருக்கிறாயே. அவருடைய துர்நடத்தை மேன்மேலும் பெருகிக்கொண்டு வருகிறதே!' என்று தங்கள் தங்கள் வாயில்வந்தபடி குறை கூறுகின்றனர். இதையெல்லாம் சகிக்கமுடியாத அமிர்தசாகரன் ஒரு தினம் தன் தந்தையை வார்த்தையால் கண்டித்தான் அதற்கு அமிர்தசாகரனின் தந்தையாகிய என் கணவர் அவனைப் பார்த்து 'அடே அமிர்தசாகரா! என் மனைவியை எப்படி வேண்டுமானாலும் நான் நடத்திக்கொள்ளுவேன். உனக்கென்ன? உனக்கு என்னோடு வசிக்க இஷ்டமில்லாவிடில் என் ஆஸ்தியில் உனக்குச் சேரவேண்டிய பாகத்தைத் தருகிறேன். அதை எடுத்துக்கொண்டு நட' என்று கண்டிப்பாய்க் கூறினார். மரியாதைக்குட்பட்டவனான அமிர்தசாகரன் இவற்றையெல்லாம் சகிக்கமுடியாதவனாக எங்கேயோ போய்விட்டான். அவன் காணாமற்போனதைப் பற்றி என் கணவருக்குக் கொஞ்சமேனும் வருத்தமில்லை. அன்றியும் அவன் காணாமற் போனதினால் அவருக்கு என்—கணவருக்கு—மார்கழி மாதக் குளிர் விட்டாற்போலாயிற்று. மனதில் பெரும் தைரியமுமேற்பட்டு விட்டது.

நேற்றுத் தினம்—என் கணவர் வீட்டில் இல்லாத சமயம்—நான் வீட்டின் மேன்மாடியி லிருந்தேன். அப்பொழுது ஒருவன்—என் கணவனுடைய நண்பர்களில் ஒருவன்—திடீரென்று மேன்மாடியில் நான் இருந்த இடத்திற்கு வந்தான். அவனைக் கண்டவுடன்—'நீ யார்? இங்கு வரவேண்டிய காரணம் யாது? நீ இங்கு வரலாமா?' என்று கேட்டேன். அவற்கு அவன்—அந்தத் துஷ்டன்—என்னைப்பார்த்து, 'என் நண்பராகிய சதானந்தர் இவ்வீட்டிற்குள் ஒருவருடைய தடையுமின்றிப் பிரவேசிக்க எனக்கு

உத்திரவளித் திருக்கின்ருர். அன்றியும் இவ்வீட்டிலிருக்கும் அவருக்குச் சொந்தமான பொருள்கள் யாவும் எனக்குச் சொந்தமானவைகளே' என்ருன். அதற்கு நான் அவனைப்பார்த்து, 'சரி இப்பொழுது இங்கு உனக்கு வேலையில்லை உன்நண்பராகிய என் கணவர் வந்தவுடன் வேண்டுமாளுல் வா. இப்பொழு திங்குநில்லாதே'என்றேன். அதற்கு அவன் என்னைப்பார்த்து 'என் நண்பர் சதானந்தருக்குச் சொந்தமான ஓர் அரிய பொருளை அநுபவித்துப் போக இங்கு வந்தேன். அதற்கு அவருடைய-என் நண்பருடைய —அநுமதியும் பெற்றிருக்கிறேன்' என்ருன். அதற்கு நான் 'நீ நாடிவந்த பொருள் யாது?' என்று வினவினேன். 'நான் நாடிவந்த வஸ்து உயிரற்றதன்று. அந்த வஸ்து அழகிய பொற்கொடி போன்ற வஸ்து—பேசும்! சிரிக்கும்! கொஞ்சும்! குலாவும்! கன்னல் போன்ற மொழியும், அன்னம் போன்ற நடையும் வாய்க்கப்பெற்றுக் கண்டோர் காமுறத் தக்க அழகிய மேனியையுடையது. அந்த வஸ்து யாதென நீ அறிந்துகொள்ள வேண்டுமோ?' என்ருன். நான் ஒன்றும் தோன்ருதவளாக ஸ்தம்பித்து விட்டேன். பின்னும் அந்தத் துஷ்டன்—அந்தப் படுபாவி—என்னைப் பார்த்து, 'நான் எந்தப்பொருளை நாடி இங்குவந்தேனென்பதை நீ அறிந்து கொள்ளுமாறு கூறுகிறேன் கேள். நான்......நான்.......' என்று வாய் குழறிக்கொண்டே மறுபடியும் என்னைப் பார்த்து 'உன் கணவனுடைய அநுமதியிருக்கையில் எனக்குப் பயமென்ன! நான் உன்னை அநுபவித்துப் போவதற்காகவே உன் கணவனின் அநுமதிபெற்று இங்கு வந்திருக்கிறேன். காலதாமதம் செய்யாதே, என்ன சொல்லுகிருய்?' என்று கடுமையாய்க் கேட்டான். இவ்வார்த்தையைக் கேட்டவுடன் நான் மனங்கலங்கி மூர்ச்சை யடைந்தேன்.

ஐந்து நிமிடங்களுக்குப்பின் மூர்ச்சை தெளிந்தெழுந்தேன். அப்பொழுது அந்தப் பரமசண்டாளன் என் அருகில் வரக் கண்டேன். நான் பயந்த போதிலும் கிஞ்சிற்றுத் தைரிய முற்று மாடியிலிருந்து தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டு கீழிறங்கி வந்து என் வேலைக்காரர்கள் யாராவது இருக்கிறார்களாவென்று பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை. இதற்குள் அந்தத் துஷ்டனும் மாடியைவிட் டிறங்கி நான் நின்றுகொண்டிருந்த இடத்தை நோக்கி வந்தான். 'அவன் ஏதாவது இம்சிப்பானோ?' என்று நான் பயந்து என் படுக்கை அறைக்குட்சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு அழுத கண்ணும், வருந்திய சிந்தையுமாகக் கட்டிலின்மேல் படுத்துக்கொண்டிருந்தேன். மாமா! என் விதியை என்னவென்று சொல்வது? மாமா! இன்னும் வரைகிறேன்; கவனியுங்கள். அரைமணி நேரமாயிற்று. நான் படுத்துக்கொண்டிருந்த அறையின் கதவை யாரோ தட்டின சத்தம் கேட்டது. உடனே நான் என்கணவர் என்று அறிந்துகொண்டு, நடந்த விஷயங்களை அவரிடம் சொல்லுவோமென்னும் ஆவலுடன் கதவைத் திறந்தேன். உடனே என் கணவர் யானிருந்த அறைக்குள் வந்து அந்த அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு என்னைப்பார்த்து,'கூச்சலிடுவாயானால், உன்னை இந்தக் கத்தியால்குத்திக் கொன்றுவிடுவேன்' என்று பயமுறுத்தி ஒரு சிறுகத்தியையும் எனக்குக் காண்பித்தார். நான் பயந்து மௌனமுற்றேன். பிறகு அவர் ஒரு கயிற்றினால் என்னைக் கட்டில் காலோடு சேர்த்துக் கட்டிவிட்டு வெளியிற் சென்றார். அப்பொழுது அவர்மேல் சாராயநாற்றம் அதிகமாயிருந்தது. இரண்டொரு நிமிஷத்திற்குப் பின் என் கணவர், கையில் பிரம்புடன் மறுபடியும் நான் இருந்த அறைக்குள் வந்து பிரம்பினால் நைய அடித்தார். நான் எவ்வளவு பலமாய்க் கூக்குரலிட்டும் ஒரு வேலைக்காரியாது

வேலைக்காரனுவது ஏனென்று கேட்கவில்லை. பிறகு பாவி என்கணவன் சிறிதும் ஆலோசியாமல் என்னிரு கன்னங் களிலும் தன்கரத்தினுல் முழுப்பலத்துடன் ஓங்கி அறைந்து விட்டு என்னைப்பார்த்து, 'என்னடி உனக்கு இவ்வளவு கர் வம்! நான் போனுல் அவனுடைய மனைவி என்னிடம் எவ் வளவோ மரியாதையாக நடந்து கொள்ளுகிருள். நீ என் அவனிடம் அவ்விதம் நடந்து கொள்ளக்கூடாது!' என்று சொல்லி வெளியிற் போய்விட்டார். நான் கட்டிலின் கா லோடு பின்கட்டாகக் கட்டப்பட்டிருந்தமையால் கட்டை யவிழ்க்கச் சக்தியற்று அடியின் வலி பொறுக்க முடியாதவ ளாக அழுதுகொண்டிருந்தேன். பத்து நிமிடங்களாயின. மறுபடியும் என்கணவர்வந்து என்னைக் கட்டவிழ்த்துவிட்டு என்னைப் பார்த்து, 'அடிபாதகி! உன்னுலன்ரே என் நண் பன் என்னைக் கோபித்துக்கொண்டான். நாளைய மறுதினம் அவன்—என் நண்பன்—இங்கு வருவான். அப்பொழுது நீ என்னிடம் நடந்து கொள்ளுவதுபோல் அவனிடம் நடந்து கொள்ளவேண்டும். இல்லையானுல் எமனுலகத்தை அடை வாய்' என்று கூறிப் போய்விட்டார். என் வேலைக்காரிகள் அப்பொழுதுதான் நான் இருந்த இடத்திற்கு வந்து என் அலங்கோலத்தையும், கன்னங்கள் வீங்கி இருப்பதையும் கண்டு அவற்றிற்குக் காரணம் கேட்டார்கள். நான் அவர் களிடம் உள்ளதை உரைக்கவில்லை. பிறகு நான் என் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு எப்பொழுதும் போலிருந்தேன். இன்று பொழுது விடிந்தது. நாளைய தினம் எப்படியும் என் கணவர் குறிப்பிட்ட பேர்வழி வரு வான். நான் அவனுடைய இஷ்டத்திற்கு உடன்படாவிடில் என்னைக் கொன்றுவிடுவார்கள். அஃது உண்மை. அவ் விதம் நான் அவமானமடைந்து இறந்துபோவதைப் பார்க் கிலும் இன்றையதினம் விளக்கு வைத்தவுடன் என் மடியில்

கல்லைக்கட்டிக்கொண்டு ஏதாவதொரு கிணற்றில் விழுந்து என்னுடைய பிராணனை விட்டுவிடுகிறேன். நான் இவ்வாறு இறந்துபோவதைக் குறித்துத் தாங்கள் என்மேல் கோபங் கொள்ளவேண்டாம். ஏனெனில் நான் இக் கஷ்டங்களை அநுபவித்துக்கொண் டிருப்பதிலும், இறந்துபோவதே நல மென்று எனக்குப் புலப்படுகின்றது. நான் இங்கு—என் கணவரின் வீட்டில்—இருப்பேனாயின், ஒன்று மானத்தை இழக்கவேண்டும்; அல்லது என் உயிரைப் போக்கவேண் டும். நான் தங்கள் வீட்டிற்கு வேண்டுமானாலும் வந்துவிட லாம். மறுபடியும் இங்கு வருவேனாயின் அப்பொழுது நிச் சயமாய் என் கணவர் என்னைக் கொன்றுவிடுவார் என்பது திண்ணம். ஒருசமயம் நான் என் கணவரிடம் மறுபடியும் வராமல் தங்களுடைய வீட்டில்தானே இருந்துவிடுவதென் றாலும், ஊர் ஜனங்கள் பற்பல விதமான வார்த்தைகளைச் சொல்லி நகைப்பார்கள். அதனால் பல துன்பங்களுக்கும் இடஞ்சல்களுக்கும் இடமேற்படக்கூடும்.

"மாமா! இக் கடிதத்தை நீங்கள் வாசிக்கும்போது இங்கு நான் ஏதாவது குளத்திலேனும் அல்லது கிணற்றி லேனும் விழுந்து பிணமாயிருப்பேன். தாங்கள் தலை முழுகிப்போடவும். என்னைப்பற்றித் தாங்கள் வருத்தப் படவேண்டாம். என் கணவரின் தீயசெயல்களை நான் தங் களுக்கு எழுதியதைப்பற்றித் தாங்கள் என்னை மன்னிக்க வும். 'நான் அருமை பெருமையுடன் வளர்ந்து அநியாயக் காரனை மணந்து அநாதையைப் போல் ஆதரவின்றி இன் றிரவு இறந்துவிடப்போகிறேனே' என்று நினைக்கையில் என் மனமானது அனலிடைப்பட்ட புழுப்போல் துடிக்

கிறது. மாமா! இனி வேறு விசேஷமில்லை. மாமா! நமஸ் கரிக்கின்றேன். மாமா! அன்பு மறவாதீர்கள்!

இங்ஙனம்,

துர்ப்பாக்கியசாலி

மோகவதி.'

இவ்வாறு நிரபராதியாகிய சதானந்தரின்மேல் அநியா மாகப் பழிசுமத்தி எழுதிய கடிதத்தை மோகவதி தன் மா மனுடைய விலாசத்திற்குத் தபாலில் அனுப்பிவிட்டு 'இன்று முதல் நான் சுகமுற்றேன். எனக்குக் கைந் நிறைந்த பொன் னிலும், கண் நிறைந்த புருஷனே அவசியமாகையால் அழ கெல்லாம் திரண்டு ஒருருவாய்வந்த அமிர்தசாகரனை என் காதல் தீர நான் இன்றிரவு ஆலிங்கனம் செய்வேன். இன் றிரவு பதினொருமணிக்கு என்அன்பன் குறித்த இடத்திற்கு நான் போகவேண்டும். அவன் சொல்லியவிதமே செலவுக்கு வேண்டிய திரவியங்களை எடுத்துக்கொண்டு போகவும் வேண்டும்' என்று தன்னுள் எண்ணிக்கொண்டு ஸ்நாநம் செய்யச் சென்றாள். சதானந்தர் தம் ஆபீஸ் வேலை முடிந்த வுடன் அவர் நண்பராகிய கருணாகரரைக் கண்டு அவரிடம் ஏதோ சிலவிஷயங்கள் பேசுவதற்காக நினைத்து அவரு டைய வீட்டிற்குப் போய்விட்டார்.

தன்னொளியைக் கொஞ்சம் கொஞ்சமாக அடக்கிக் கொண்டே ஆதித்தன் அஸ்தமன கிரிக்குட் சென்றான். கலி தொடருங்காலத்தில் மனிதர்களின் செல்வம், கீர்த்தி முத லியவைகள் படிப்படியாய்க் குறைவதுபோல் மெல்லெலன உலகின் பிரகாசம் நீங்கி எங்குப் பார்த்தாலும் காரிருள் சூழ்ந்துகொண்டது. அன்று முன்னேரத்தில் சந்திரன் பிர காசிக்கவில்லை. ஆகாயத்தில் சிற்சில இடங்களில் மட்டும்

நக்ஷத்திரங்கள் பளிச்சுப் பளிச்சென்று மின்னிக்கொண்டிருந்தன. ஊர் முழுவதும் ஜன சந்தடி அடங்கிற்று. மணியும் பத்தாயிற்று. சதானந்தர் நம்முடைய வீட்டிற்கு வரவில்லை. அதற்குக் காரணம் தெரியவில்லை. அதைப்பற்றி மோகவதிக்கு யாதொரு சிந்தனையுமில்லை. மோகவதி வேலைக்காரர் வேலைக்காரிகளை அவரவர்களின் வீட்டுக்கு அனுப்பிவிட்டுக் கதவைத் தாளிட்டுக்கொண்டு நகைப்பெட்டி, மைச்சிமிழ், சாந்துடப்பி, தந்தச்சீப்பு, வாசனைத் தைலம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு மேஜையின்மேல் வைக்கப் பெற்றிருந்த ஒரு நிலைக்கண்ணாடியின் சமீபத்திற் சென்று கையிலிருந்த வஸ்துக்களை யெல்லாம் மேஜையின்மேல் வைத்துவிட்டுத் தைலத்தைத் தடவித் தலைமயிரை அழகாய் வாரிமுடித்து அதன்மேல் தான் முன்னமே வாங்கி வைத்திருந்த ரோஜாபுஷ்பங்களி லொன்றை வைத்துக் கொண்டாள். கண்களுக்கு மை தீட்டினாள். நெற்றிக்குச் சாந்துப் பொட்டிட்டாள். விலையுயர்ந்த சரிகைப் புடவையைக் கட்டிக்கொண்டாள். வைரக்கம்மல், வைரமூக்குத்தி, வைர வளையல், சுவர்ண ஒட்டியாணம், பாஜிஹாரம், அட்டிகை முதலிய இன்னும் பற்பல ஆபரணங்களை அணிந்துகொண்டு நிலைக்கண்ணாடியில் தோன்றும் தன் உருவத்தை நன்றாய் ஒருமுறை கவனித்து உற்றுப் பார்த்துவிட்டு 'நம்மைக்கண்டவுடன் அமிர்தசாகரன் நம் அழகுக்காக இன்னும்நம்மீது அதிகப் பிரியங்கொள்ளுவான்' என்று தன்னுள் எண்ணி அகமகிழ்ந்தவளாய்த் தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த சவரன்கள் நோட்டுகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்த சில விலையுயர்ந்த சாமான்களைச் சின்னபின்னப்படுத்திவிட்டு ஒருவரும் தன்னை அறியாவண்ணம் வீட்டினின்றும் புறப்பட்டு வீட்டிற்குப் பின்புறமிருந்த பாழ் மண்டபத்திற்குப் போனாள். "உடனே அமிர்தசாகரா!

என் கண்ணாளா! அமிர்தசாகரா!" என்று அழைத்தாள். அங்கு அமிர்தசாகரனைப்போல் வேஷம் புனைந்துகொண்டு மோகவதியின் வருகைக்கு எதிர் பார்த்துக்கொண் டிருந்த மதிவர்மன், மோகவதி 'அமிர்தசாகரா!' என்று அழைத்த வுடனே தன்னால் கூடியவரையில் தன்குரலை மாற்றி அமிர்த சாகரனின் குரலைப்போலமைத்துக் 'கண்மணீ! வருக! உன் வருகைக்கு நான் வெகுநேரமாய் எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே மோகவதியின் அருகில்வந்தான். அவன் பார்வைக்கு ஏறக்குறைய அமிர்த சாகரனைப் போலவே தோன்றினான்.

'அன்பா! தாங்கள் என்பேரில் அன்பு கூர்ந்து கடிதம் எழுதினதைப்பற்றி நான் அகமகிழ்ந்தேன். ஐந்தாறு தினங் களுக்குமுன் நம்முடைய வீட்டினின்றும் தாங்கள் புறப் படும் போது என்னிடம் ஒரு வார்த்தை சொல்லலாகாதா? தங்கள் தந்தை என்னைப்பார்த்து "என்குமாரன் எங்கே?" என்று எத்தனைமுறை கேட்டார் தெரியுமா? அவருடைய கேள்விகளுக்கெல்லாம் நான் சில பொய் வார்த்தைகளைக் கூறிவந்தேன். இன்னும் நான் அப்பொழுது என்மனத்தில் என்ன என்ன எண்ணினேன் தெரியுமா?' என்று அமிர்த சாகரனைப்போல் வேஷம் புனைந்துகொண் டிருக்கும் மதி வர்மனைப் பார்த்துக் கூறினாள் மோகவதி.

'நான் நம்முடைய வீட்டினின்றும் புறப்படும்போது உன்னிடம் சொல்லி யிருப்பேனாயின் நீயும் என்னோடு வரு கிறேனென்று கூறியிருப்பாய். அதனால்தான் நான் நம் முடைய வீட்டினின்றும் புறப்படும்போது உன்னிடம் சொல்லாமல் வரநேர்ந்தது. அப்போது நான் உன்னிடம் சொல்லி யிருப்பேனாயின் நீ எவ்விதத்திலும் என்னோடு பிரயாணமாயிருப்பாய். பிறகு நாமிருவரும் ஏககாலத்தில்

காணமற்போனதைப்பற்றி என் தந்தைமுதல் மற்றுமுள்ள எல்லோரும் நாமிருவருமே சேர்ந்து ஓடிப்போய்விட்டதாக நினைப்பார்களன்றோ?' என்றான் மதிவர்மன்.

'ஆம் நீங்கள் சொல்வது ஒருவகையில் உண்மைதான்' என்று கூறினாள் மோகவதி.

'எனக்குச் சம்பளம் வரும்வரையில் செலவுக்குச் சிறிது பணங் கொண்டுவரும்படி எழுதியிருந்தேனே?' என்று கேட்டான் மதிவர்மன்.

'ஆம் நீங்கள் எழுதியிருந்ததைப் பார்த்தேன். இதோ பாருங்கள்! நூற்றிருபது சவரன்களும், ஆயிரம் ரூபாய்க்கு நோட்டுகளுமிருக்கின்றன. இவைகள் ஏறக்குறைய நம்மிரு வருக்கும் மிகச் செட்டாகச் செலவுசெய்தால் இரண்டு வருடச் செலவுக்குப் போதாவா? நான் அணிந்துகொண் டிருக்கும் நகைகளே சுமார் இரண்டு லட்சம் ரூபாய்க்கு அதிகம் பெறுமே' என்று கூறினாள் மோகவதி.

'எதேஷ்டம் எனக்குத்தான் பிரதிமாதத்திலும் நூறு ரூபாய் சம்பளம்வருமே. நம்மோடு இன்னும் நான்குபெயர் இருந்தாலும் அவர்களையும் நாம்வைத்து இரக்ஷிப்பதோடும் இனி நாம் இருவரும் இளவரசன் இளவரசியைப்போலு மிருக்கலாம்' என்று கூறினான் மதிவர்மன்.

'ஆமாம் என் கண்ணாளா! இதோ நட்சத்திரங்கள் வெகு ஜோதியுடன் பிரகாசிக்கின்றன பாருங்கள்! உற்று நோக்கும்போது அவைகள் சந்திரனின் வருகைக்கு எதிர் பார்த்துக்கொண் டிருப்பவைபோல் தோன்றுகின்றன. மதியமும் உதயமாகும் சமயமாயிற்று குளிர்ந்த காற்றுச் சில்லென்று வீசுகிறது. இங்குள்ள புஷ்பங்களின் வாசனை எவ்விதம் இருக்கிறது பார்த்தீர்களா? என்அபேக்ஷையைத்

தாங்கள் இச்சமயம் நிறைவேற்ற வேண்டும். சந்திரன் நன்ருய் உதயமானவுடன் நாமிருவம் போகவேண்டிய இடத்திற்குப் போகலாம்' என்று கூறினுள் வெட்கமற்ற வேசையாம் மோகவதி என்கிற போகவதி.

'கண்ணே! எனக்கும் விருப்பந்தான். ஆனுல் சொல்வதற்கு வெட்க முற்றிருந்தேன். நீ சொல்லியவுடன் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போலாயிற்று இது நம்முடைய வீட்டிற்குச் சமீபமான இடம் யாரேனும் ஒருசமயம் இங்கு வந்தாலும் வருவார்கள். ஆதலால் இது தகுந்த இடமல்ல நம் பிரியப்படி இருப்பதற்கு. அதோ தெரியும் அந்த மாந்தோப்புத்தான் ஏற்றது. வா: அங்குச் செல்வோம்,' என்ருன் நிதியில் வர்மம் வைத்துள்ள மதிவர்மன்.

'ஆனுல் சரி; அப்படியே வாருங்கள்! அங்குப் போவோம். தாங்கள் என்னை நீ நான் என்று அழைக்கின்றீர்களே யன்றி ஒரு வார்த்தையாவது 'அடி' என்று சொல்லி அழைக்கவில்லையே. நான் என்ன அவ்வளவு கொடுத்து வைக்காதவளா? என்று கேட்டாள் வியபசாரியாம் பெரும் பஜாரியாகிய மோகவதி.

இவ்விதம்மோகவதி சொல்லியவுடன் அவளைப்பார்த்துக் 'கண்ணே! வாடி போகலாம்,' என்று கூறினுன் மதிவர்மன்

இவ்விதம் மதிவர்மன் சொல்லியவுடன் 'இப்பொழுதன்ருே என் மனம் சந்தோஷமுற்றது. வாருங்கள் போவோம்' என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டு அவன் குறித்த மாந்தோப்புக்குப் போய் அங்குப் பச்சைவில்வெட் விரித்தாற் போல் பசுமை நிறத்துடனிருந்த பசும்புற்றரையில் மதிவர்மனேடு உட்கார்ந்தாள். அந்தோ பரிதாபம்! என்ன மூடச் செய்கை! பிறகு கால்மணி நேரத்

திற்குள் தங்களுடைய உயிரினும் உயர்ந்த தென்றும் விலையில்லா மாணிக்கமென்றும் உத்தம ஸ்திரீகள் எண்ணுகின்ற கற்பென்னும் அரியபொருளை இழந்தாள் மோகவதி. மதிவர்மன் அமிர்தசாகரனல்லவென்று கிஞ்சித்தும் தெரியாது.

பிறகு மோகவதியும் மதிவர்மனும் அவ்விடத்தினின்றும் புறப்பட்டனர். சந்திரன் உதயமாகி வெகுஜோதியுடன் பிரகாசிக்கலானான். இருவரும் வெகுதூரம் நடந்தனர். அப்போது மோகவதி மதிவர்மனைப் பார்த்து, 'அன்பா! நாம் ஏன் நடந்து செல்லவேண்டும்? நம்மிடத்தில் போதுமான திரவிய மிருக்கையில் நாம் ஏன் இரயிலில் பிராணம் செய்யக்கூடாது?' என்று கேட்டாள்.

அதற்கு மதிவர்மன் அவளைப்பார்த்து, பெண்ணே? நீ சொல்லியபடி நான் இப்போது வசிக்கும் கதிர்புரிக்குப் போக இரயிலில் பிரயாணம் செய்தால் அப்போது நம்மை அறிந்தவர்களில் எவரேனும் நம்மைப் பார்த்துவிட்டால் விபரீதமாகும். இப்பொழுது நாம் வெகுதூரம் வந்துவிட்டோம். கதிர்புரிக்கு இன்னும் எட்டு மைல் தூரந்தானிருக்கிறது நடந்துபோய்விடலாம். அதுதான் உத்தமம்,' என்று சொல்லி 'மோகவதியை ஒரு காட்டிற்குள் கொண்டுபோய் அவளைக் கொலை செய்துவிட்டு அவளிடமிருக்கும் பொருள்களைக் கொண்டுபோகவேண்டும்' என்னும் எண்ணத்துடன் அவளை அழைத்துக் கொண்டு வெகு வேகமாயும் வெகு தூரமாயும் நடக்கலானான்.

மதிவர்மனின் நடை மோகவதிக்கு ஒட்டமாயிருந்தது. இப்பொழுது இவர்கள் சென்றுகொண் டிருக்கும் இடத்திலிருந்து சதானந்தரின் வீட்டிற்குச் சுமார் பதினைந்து மைல் தூரமிருக்கும். மோகவதிக்கு 'அமிர்தசாகரனை நாம் அடைந்துவிட்டோமே' என்னும் எண்ணத்தாலும், மதி

வர்மனுக்குப் 'பணம் பறித்துக் கொண்டுபோக வழியேற் பட்டதே' என்னும் இறுமாப்பினுலும் இருவருக்கும் ஏற் பட்ட ஆநந்தத்தினுல் இருவரும் நான்குமணி நேரத்திற் குள் இவ்வளவு தூரம் நடந்தனர் போலும்! மோகவதியும், மதிவர்மனும் பின்னும் இரண்டு மைல் தூரம் சென்றவுடன் மதிவர்மன் எண்ணப்படி காடு ஒன்றிருந்தது. அந்தக் காடு பார்வைக்குப் பயங்கரமாக வானுயர ஓங்கி வளர்ந்த மரங் களையும், முட்புதர்களையும் உடையதாயிருந்தது. காட்டின் ஒரு புறத்தில் வழியொன்றுபோவது சந்திரனின் பிரகாசத் தினுல் இவர்களுக்கு நன்கு புலப்பட்டது. அவ்வழியே இவர்களிருவரும் சென்றூர்கள். அவ்வழியில் இருமருங் கிலும் வளர்ந்திருக்கும் முட்செடிகளாலும்,வழியில் ஒடிந்து விழுந்துகிடக்கும் முட்களாலும் மதிவர்மனின் தேகத்தைப் பார்க்கிலும், மோகவதியின் பாதம் தேகம் முதலிய இடங் களில் இரத்தம் வரும்படியாய்க் கிறப்பட்டு, தேகமுழுவ தும் எரிச்சலுண்டாயிற்று. மோகவதியின் மோகம் வழி நடக்கும் கஷ்டத்தினுல் குறையலாயிற்று. அவளுக்கு அதன்பின் நடக்கவே முடியவில்லை. அவளுடைய கால்களில் சக்தி குறைந்தது, மதிவர்மனின் கையைப் பிடித்துக்கொ ண்டு மெதுவாய் நடக்கலானுள். இவர்கள் அரைமணி நேரத் திற்குள் அரணியத்தைக் கடந்து அப்புறம் சென்றூர்கள். பிறகு அடர்ந்த விருட்சங்கள் வரிசையாய் வளர்ந்துள்ள ஒரு வழியைக் கடந்து போகும்படி நேரிட்டது. அப்பொ ழுது மோகவதி அமிர்தசாகரனைப்பார்த்து, 'அன்பா! என் னுல் நடக்கமுடியவில்லை. இதோ இருக்கும் மரத்தின் கீழ்ச் சிறிது நேரம் உட்கார்ந்திருப்போம்' என்றுள். 'அவ்வித மே ஆகட்டும்' என்று சொல்லி மதிவர்மன் அவளோடு அவள் குறித்த விருட்சத்தின் கீழ் உட்கார்ந்தான்.

இவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்திலிருந்து சுமார் இரண்டு பர்லாங்கு தூரத்திற்கப்பாலிருந்த ஒரு பெரிய விருட்சத்தின்கீழ் இருள் சூழ்ந்திருந்தது. அவ்விருளின் நடுவில் இருந்தாற் போலிருந்து திடீரென்று பத்துப் பதினைந்து தீவர்த்தி வெளிச்சமுண்டாயிற்று. அவ்வெளிச்சத்தினால் அங்குக் கறுத்த நிறமும், பருத்த தேகமும் வாய்க்கப்பெற்ற மனிதர் பலர் நின்றுகொண்டிருக்கிறார்களெனத் தெரிந்தது. மோகவதியோடு மரத்தின்கீழ் உட்கார்ந்து கொண்டிருந்த மதிவர்மன் மேற் சொன்ன மரத்தின் கீழ்த் தெரியும் வெளிச்சத்தையும், மனிதர்களையும் பார்த்துவிட்டான். அம்மனிதர்கள் திருடர்கள் என்பதை அறிந்துகொண்டான். தான் கண்டவைகளைக் குறித்து அவன் மோகவதியிடம் ஒன்றும் சொல்லாமல் பின்வருமாறு தன்னுள் ஆலோசிக்கலானான்.

'நான் இம்மோகவதியின் சேர்க்கையை விரும்பி இங்கு வரவில்லை. இவளிடமிருந்து சிறிது பொருள் அபகரித்துப் போக எண்ணியே என் பெயரை மறைத்து உத்தமனும் அமிர்தசாகரனைப் போல் வேஷம் புனைந்து அமிர்தசாகரனெனப் பெயரும் வைத்துக்கொண்டு அவனைப்போல் வசனித்துப் பல விதத்திலும் இவளுடைய புத்தியைக் கெடுத்து இவளை மயக்கினேன். அமிர்தசாகரன் எழுதியது போல் கடிதமும் எழுதினேன். இம்மோகவதியும் என்னைக் கவனியாமல் தனக்குள்ள மோகத்தின் கொடுமையினால் என்னோடு வந்துவிட்டாள். இனி நான் இவளோடிருப்பேனாயின், சூரியோதய மானவுடன் நான் அமிர்தசாகரனல்லவென்பதை எவ்விதத்திலும் தெரிந்து கொள்வாள். நான் இவளிடமிருக்கும் ரூபாய்களையும், நோட்டுகளையும், நகைகளையும் எப்படியாவது தந்திரமாய் வாங்கிக்கொண்டு ஓடிப்

போய் விடவேண்டும். இன்றேல் ஒரு சமயம் அதே அந்த மரத்தின் கீழிருக்கும் திருடர்கள் இங்கு வந்தாலும் வருவார்கள். இருக்கட்டும் அநேகமாய் இங்கு நானும் இம்மோகவதியும் இருப்பது அத்திருடர்களுக்குத் தெரியாததாகையால் அவர்கள் இங்கு வரமாட்டார்கள். அவ்விதம் அவர்கள் இங்கு வருவதா யிருந்தாலும் அவ்வளவு தூரத்திலிருந்து இங்குவரக் கால்மணி நேரமாகும். அதற்குள் நான் ரூபாய்களையும் நோட்டுகளையும் அகப்பட்ட நகைகளையும் அபகரித்துக்கொண்டு போய்விடலாம்.'

இவ்விதமாகத் தன் ஆலோசனையை முடிவு செய்து கொண்டு மதிவர்மன் மோகவதியைப்பார்த்துக் ' கண்ணே போகா! நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன். அதை நீ கேட்பாயாக. அவ் விஷயம் யாதெனிலோ இப்பக்கங்களில் திருடர்களின் உபத்திரவங்கள் உண்டு. அவர்கள் நம்மைச் சந்திப்பார்களாயின் நமக்கு ஏதாவது அபாயம் நேரிடுமென்பது உண்மை. ஆகையால் நீ அணிந்துகொண்டிருக்கும் நகைகளை எல்லாம் கழற்றி என்னிடம் கொடு. அவைகளை நான் பத்திரமாய் 'வைத்துக்கொள்ளுகிறேன். திடீரென்று திருடர்கள் வருவார்களானல் அப்பொழுது நான் ஏதாவது ஒரு இடத்தில் நகைகளையும், ரூபாய்களையும் ஜாக்கிரதையாய் மறைத்துவிடுவேன். பிறகு அவர்கள் நம்மைப் பார்த்தால் நம்மிடம் ஒன்றுமில்லை என்று எண்ணி நம்மை ஒன்றும் செய்யாமல் போய்விடுவார்கள்' என்முன்.

அதற்கு மோகவதி மதிவர்மனைப் பார்த்து 'அன்பா! நல்லது; அவ்விதமே ஆகட்டும்' என்று சொல்லி ஒன்றுவது பாக்கியில்லாமல் எல்லா நகைகளையும் கழற்றி மதிவர்மனிடம் கொடுத்ததோடு, தன்னிட மிருந்த சாவரன்களையும்

நோட்டுகளையும் அவனிடம் கொடுத்துவிட்டாள். அவன் அவைகளை நகைகள் வைக்கப்பட்டிருந்த பைக்குள் வைத்துத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு 'நம்முடைய எண்ணம் கைகூடியது. ஆனாலும் இனி எவ்விதம் இவளைவிட்டு நீங்குவது?' என்று ஆலோசித்தான். அவனுக்கு முடிவிலொரு யுக்தி தோன்றிற்று. அவன் மோகவதியைப் பார்த்து 'என் பிரியத்திற்குரிய பெருமாட்டி! நாம் இங்குத் தங்கி வெகுநேரமாயிற்று. புறப்படு மெதுவாய் நடந்து போகலாம்,' என்றான். அதற்கு மோகவதி சம்மதித்து அவனோடு நடக்கலானாள். சிறிது தூரம் சென்றவுடன் மதிவர்மன் மோகவதியின் பின்னே நடக்கலானான். இருவரும் சல்லாப சம்பாஷணையுடன் சென்றுகொண்டிருக்கையில் 'இதுதான் சமயம். இவள் நம்மைப் பார்க்காமல் நமக்கு முன்னே நடந்துகொண்டிருக்கிறாள்; நாம் இப்படியே இக் காட்டுக்குள் ஓடிவிடுவோம்,' என்று எண்ணினான். ஓடவும் ஆயத்தமானான். இத்தருணத்தில் எங்கிருந்தோ சுமார் இருபதுபெயர் திருடர்கள் ஓடிவந்து மோகவதியையும்,மதிவர்மனையும் பிடித்துப்பின்கட்டாகக் கட்டிக் கூச்சலிட்டீர்களானால் உங்களை இந்தக் கத்தியினால் குத்திக் கொன்று விடுவோம்' என்று சொல்லி ஒரு கத்தியைக் காண்பித்துப் பயமுறுத்தி அவர்களைக் காட்டிற்குள் இழுத்துக் கொண்டு தமதிருப்பிடம் போனார்கள்.

மூன்றாவது அத்தியாயம்

மகிபதியும் ஜயபாலனும்

'ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்'
—ஔவை.

'ரமணீயமால்' என்பது மிகவும் உன்னதமும், உயரமும் வாய்ந்த நான்கு அடுக்கு மெத்தையுள்ளவீடு. புதுச்சேரியி லிருக்கும் உன்னத கட்டடங்க ளெல்லாவற்றிலும் சிறந்தது இதுதான். இக்கட்டடத்தின் சொந்தக்காரர்கள் கட்டடத் தின் மேன்மாடியைத் தங்களுக்கு வாஸஸ்தானமாக்கிக் கொண்டு மற்றபாகங்களி லொருபாகத்தைத் தர்மசத்திர மாக்கி ஏழை, பரதேசி முதலியவர்களுக்கு ஒவ்வொரு தினத் திலும் அன்னதானம் நடத்திவருகிறார்கள். வழிப்போக்கர் களிற் சிலர் இங்குத்தங்கி இளைப்பாறிப் போவதோடும், அநேகர் இங்கு இரவையும் கழித்துப் போவார்கள். இன் னும் இவ்வீட்டு எஜமானன் கிடைத்த பணத்தை இறுக்கி முடியும் தனவந்தர்களைப் போலின்றிப் பொது ஜனங்கள் அனைவரும் தாராளமாய் வந்து படித்து மகிழ்வதற்காக ஏராளமான பொருள் செலவிட்டு முற்காலத்திய நூல்கள் பலவற்றையும், தற்காலத்திற்கு வேண்டிய பற்பல பாஷாப் புஸ்தகங்களையும் நிரப்பி ஒரு தர்மவாசக சாலை ஏற்படுத்தி இருந்தார். பல பாஷை சமாச்சாரப் பத்திரிகைகளும் ஒவ் வொரு தினத்திலும் வந்துகொண்டிருந்தன. இங்குள்ள

புத்தகங்களெல்லாம் பொதுவாய் அனைவருக்கும் உண்மை வாய்ந்த ஒரு நல்ல சிநேகிதனைப்போலப் புத்தி புகட்டக் கூடியவையே. பெரிய உத்தியோகஸ்தர்களும், கௌரவக் கல்விப்பட்டம் பெற்றவர்களும், மாணவர்களும், பொது வில் வாசிக்க யோக்கியதையுடைய அனைவரும் ஒவ்வொரு நாளும் இங்குவந்து வாசித்துப்போவார்கள். இங்கு நங் கைப் பாட்டெனை வழங்கும் அல்லி அரசிமாலை, புலந்திரன், களவுமாலை, பவளக்கொடி மாலை முதலிய புகழேந்திப் புல வராலியற்றப்பட்ட புத்தகங்களும்.கம்பராமாயணம், வில்லி புத்தூராழ்வார் பாரதம், பெருந்தேவனார் பாரதம், அநு மந்த ராமாயணம், காளிதாஸ் ராமாயணம், வால்மீகி ராமா யணம், குறள், தூது, கோவை, கலம்பகம், பெரியபுராணம், நைடதம், அருட்பா, தேவாரம், திருவிளையாடற் புராணம், திருப்புகழ், அம்பிகாபதிக் கோவை, கந்த புராணம், விநா யக புராணம், மணிமேகலை, சிலப்பதிகாரம், தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல் முதலிய இன்னும் அநேக தமிழ் நூல்களும், சாஸ்திர சம்பந்தமான புத்தகங்களும், ஷேக்ஸ்பியர், ரெயினல்ட்ஸ், சர்வால்ட்டர், ஸ்காட். மிஸ் மேரிகாரெல்லி முதலிய ஆங்கிலேய மேதாவிகளா லியற்றப் பட்ட, கவி, கற்பனைக்கதை, நாடகம் முதலியவைகளும், நமது பூர்வீக இந்திய அரசர்களுடைய சரித்திரங்களும் இன்னும் சற்றேறக்குறைய எல்லாவிதப் புத்தகங்களும், கம்பர் கவிமணித்திரட்டும் இங்கிருந்தன.

இவ்வூரில் புதுச்சேரியில் மகிபதி, ஜயபாலன் என் னும் பெயர்களை வகித்த இரண்டு வாலிபர்களிருந்தார்கள்: அவர்கள் ஒருவருக் கொருவர் இணைபிரியாச் சிநேகிதர்கள். நல்ல பராக்கிரமசாலிகள். ஆனால் அவர்களுடைய ஆண் மைக்கேற்ற அடக்கமும் அறிவும் அவர்களிடம் குடிகொண்

டிருந்தன. ஆகையால் அவர்கள் எவர்களிடத்திலும் துஷ்டர்களென்று பெயரெடுத்தவர்களல்லர். அவர்கள் ஆங்கிலேய பாஷையில் நல்ல தேர்ச்சிபெற்றவர்கள். தவிர சுய பாஷை என்னும் நமது தாய்ப்பாஷையாகிய தமிழிலும் நல்ல தேர்ச்சியுடையவர்கள். இவர்களிருவரும் மேற்கூறிய தர்ம வாசகசாலைக்கு ஒருநாள் வாசிக்கச் சென்றார்கள். அங்குச் சென்றவுடன் மகிபதி ஒரு கண்ணாடி அலமாரியைத் திறந்து ஒரு புத்தகத்தை எடுத்து அதைத் திறந்து பார்த்தான். அப்புத்தகம் நமது பழைய அரசர்களிலொருவராகிய தேசிங்கு ராசனுடைய சரித்திரமாயிருந்தது. உடனே அப்புத்தகத்தை மகிபதி ஜயபாலனிடம்காண்பித்தான். ஜயபாலன் மகிபதியைப் பார்த்து, 'இந்தத் தேசிங்குராசனுடைய சரித்திரத்தை நான் சிறுவனா யிருக்கையில் என் பாட்டியார் எனக்குச் சொல்லியிருக்கிறார். ஆனாலும் மறுபடியும் அவ்வரசனுடைய சரித்திரத்தைக் கேட்க எனக்குப் பிரியந்தான். உன்னால் கூடுமானால் வாசித்துக் கொண்டுவா: கேட்கிறேன்' என்று ஜயபாலன் சொன்னான். உடனே மகிபதி அப்புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்து இரண்டுமணி நேரத்திற்குள் வாசித்து முடித்துவிட்டான். ஜயபாலன் இயற்கையிலேயே உத்தம அரசர்கள் வசித்த தேசங்களைப் போய்ப் பார்க்கவேண்டுமென்னும் பிரியமுடையவனாயிருந்தான். அவன் மகிபதி வாசித்துக்கொண்டு வந்த தேசிங்கு ராசனுடைய சரித்திரத்தைக் கேட்டவுடன் அவசியம் செஞ்சிக் கோட்டையைப் போய்ப் பார்க்கவேண்டுமென்னும் ஆவல்கொண்டான். 'இன்றையதினமே புறப்படவேண்டு மென்றும் தீர்மானித்தான். தீர்மானித்த விஷயத்தைப் பற்றி மகிபதியிடம் தெரிவித்தான். அதற்கு மகிபதி சிரித்துக்கொண்டு ஜயபாலனைப்பார்த்து அப்பா ஜயபாலா! 'நீ மாத்திரமோ போகப்போகிறாய்?' என்றான். அதற்கு,

ஜயபாலன்:—'என்ன மகிபதி, நீ இவ்வண்ணம் சொல்லுகின்றாய்? உன்னையன்றி எவ்விதம்—நான்மாத்திரம் போவேன்? உன்னையும் அழைத்துக் கொண்டுதான் போகவேண்டும்' என்று கூறினான்.

மகிபதி:—'என்ன ஜயபாலா! செஞ்சி யென்ன, இங்குச் சமீபத்திலிருக்கிறதென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்? போகட்டும். அஃது எவ்வளவு தூரத்திலிருந்தாலும் சரி; போவோம். எனக்குச் செஞ்சிக்குப் போக வழி தெரியுமா?' என்று பகர்ந்தான்.

ஜயபாலன்:—'வழி என்ன—தெரிகிறது? வாயிலிருக்கிறது வழி. யாரையாவது கேட்டால் சொல்லமாட்டார்களா? என்று வினவினான்.

மகிபதி:—'ஏன் சொல்லமாட்டார்கள்? அவசியம் நீ செஞ்சிக் கோட்டையைப் போய்ப் பார்க்கப் பிரியப்படுகிறாயா?' என்று வினவினான்.

ஜயபாலன்:—'அதிலும் சந்தேகமா? அவசிம் போய்ப் பார்க்கத்தான் வேண்டும். நீயும் என்னோடு வரவேண்டும். ஆனல் செஞ்சிக்குப் போகவேண்டிய மார்க்கம் இன்னதென்பதை மட்டிலும் யாரையாகிலும் முதலில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றான்.'

மகிபதி:—'உனக்கு வழிதெரியுமாவென்று நான் விளையாட்டாகக் கேட்டேன். எனக்குச் செஞ்சிக்குப்போக வழிதெரியும். ஆனல் பலர் சொல்லக் கேட்டுச் செஞ்சிக்குப்போகும் மார்க்கம் இன்னதென்று அறிந்திருக்கிறேனேயன்றி நான் இதற்குமுன் செஞ்சிக்குப்போனதில்லை. அவ்வழிகளில் முற்காலங்களில் திருடர்களுடைய பயம் அதிகமாம். காருண்யம் வாய்ந்துள்ள நமது இங்கிலீஷ் கவர்ன்

மெண்டாருடைய அரசாட்சி ஒங்கிய பின் அதாவது தற்காலம் அத் திருடர்களுடைய பயம் அநேகமாய் ஒழிந்து விட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.'

ஜயபாலன்:—'மகிபதி! நீ என்ன இவ்விதம் சொல்லுகிறாய்! 'மூடத் தைமூர்' முதலிய கொடுங்கோன் மன்னர்களைப் போன்ற அரசர்களுடைய காலமென்றோ எண்ணினாய் இக்காலத்தை? நம்முடைய இங்கிலீஷ் துரைத்தனத்தார் எவ்வளவோ தீவர்த்தித் திருடர் முதலிய பேர்போன கொள்ளைக் கூட்டத்தார்களையெல்லாம் அவர்கள் இருந்த விடம் தெரியாமல் தொலைத்துவிட்டார்களே! நம்முடைய குடிகளை இக் கவர்ன்மெண்டார் தங்களுடைய உயிர்போல் எண்ணிக் காப்பாற்றி வருகின்றார்கள். ஆகையால் நம்மைத் திருடர்கள் என்ன செய்யக் கூடும்? அவ்விதம் நாம் செஞ்சிக்குப் போகும்பொழுது திருடர்களெவரேனும் நம்மைச் சந்திப்பார்களாயின் நீ என்ன சாமர்த்தியமற்றவனா? நான் தானென்ன சக்தியற்றவனா? 'யானையின் பலம் யானைக்குத் தெரியாது' என்பதுபோல, உன்னுடைய பலம் உனக்குத் தெரியவில்லை. இருபது திருடரல்ல; நாற்பது திருடர் வந்தாலும் அவர்களை எதிர்க்க நம்மிருவராலும் முடியாதா? வீண்பேச்சு என்னத்திற்கு? உனக்குச் செஞ்சிக்குப்போகிற வழி எது என்று தெரியுமானால் அவ்வழி இன்னதென்று எனக்கும் சொன்னாயானால் நலம்!'

மகிபதி:— சொல்லுகிறேன் கேள். நாம் இந்தப் புதுவை நகரிலிருந்து ரெயில் மார்க்கமாய் விழுப்புரம் சென்று அங்கிருந்து பட்டணம்போகும் ரெயிலில் பிரயாணமானால் இடையில் 'மயிலம்' என்னும் பெயருடைய ரெயில் வேஸ்டேஷனிலிறங்கி நேராகத் தென்திசை நோக்கி இருபது மைல்தூரம் போனால் பிறகு செஞ்சியைக் காணலாம்.

செஞ்சிக்கும் மயிலத்திற்கும் நடுவே ஏழு மைல் விஸ்தீரண முள்ள பெரிய காடொன்றிருக்கிறதாம்.'

ஜயபாலன்:—ஆரணியமிருந்தால் நமக்கென்ன? இன்றிரவு நாமிருவரும் பிரயாணமாக வேண்டும். நீ உன்னுடைய வீட்டிற்குப் போய் உன் தகப்பனுரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு பிரயாணத்தோடு என்னுடைய வீட்டிற்கு வந்துவிடு. வா, நாம் நம்முடைய வீட்டிற்குப் போகலாம். நாம் இங்கு வந்து வெகுநேரமாயிற்று.

என்று சொல்லி ஜயபாலன் மகிபதியை அழைத்துக் கொண்டு தர்ம வாசகசாலையிலிருந்து புறப்பட்டுக் கொஞ்ச தூரம் போனவுடன் மகிபதியை அவனுடைய வீட்டிற்கு அனுப்பிவிட்டுச் சீக்கிரம் திரும்பு என்று கூறித் தான் தன்னுடைய வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தான்.

மகிபதி, ஜயபாலன் ஆகிய இவ்விருவரும் அவ்வளவு தனிகருமல்ல. ஏழைகளுமல்ல. இவர்களுடைய தந்தைமார்க்குப் பட்டுநூல் வியாபாரம். அதில் மாதம் ஒன்றுக்கு 200 ரூபா இலாபம் கிடைக்கும். மகிபதிக்கு வயது 22; ஜயபாலனுக்கு 21. இவர்கள் தத்தம் தந்தையர்களுக்கு ஏக புத்திரர். இவர்கள் அருமையாய் வளர்க்கப்பட்டவர்களாகையால், இவர்களை இவர்களின் பெற்றோர்கள் தனியே வெளியூர்களுக்கு அனுப்புகிற வழக்கமில்லை

ஜயபாலன் தன்னுடைய வீட்டிற்குப் போனவுடன், "நான் செஞ்சிக்கோட்டையைப் போய்ப் பார்த்துவர வேண்டும்" என்று என் தந்தையிடம் உத்திரவு கேட்டால் நிச்சயமாய் அவர் என்னை அனுப்பமாட்டார். என்ன செய்கிறது? வேறு எங்கேயாவது போய்வர வேண்டுமென்று சொல்லி உத்திரவு பெற்றுக்கொண்டு போவோமென்றாலும்

தந்தையிடம் பொய்பேசுகிறது சரியல்ல. போகட்டும். உண்மைக்கு ஒரு பழுதுமில்லை. ஆகையால் நான் என் தந்தையிடம் போய்ச் 'செஞ்சிக்கோட்டையைப் பார்க்கவேண்டுமென்று ஆவலாயிருக்கிறது' என்று சொல்லி அவரிடம் உத்திரவு கேட்கிறேன். ஒரு சமயம் செஞ்சிக்கு அனுப்பினாலும் அனுப்புவார்' என்று தனக்குள் சித்தாந்தப் படுத்திக் கொண்டு ஜயபாலன் தன் தந்தையிடம் சென்று அவரைப் பார்த்து,—'தந்தாய்! தாங்கள் எனக்கு ஓர் அனுமதி தரவேண்டும்' என்று கூறினான்.

'நீ எவ்விஷயத்திற்காக என்னிடம் அனுமதி கேட்கிறாயோ அவ்விஷயம் எனக்குத் திருப்தியைத் தரக்கூடியதாயிருந்தால் உனக்கு நான் அனுமதி கொடுக்க ஆட்சேபனை இல்லை' என்று தந்தை கூறினார்

ஜயபாலன்:—நான் செஞ்சிக்கோட்டையைப் போய்ப் பார்த்துவர விரும்புகிறேன். தாங்கள் எனக்கு அனுமதி தருவீர்களா?

'நீ ஒருவன் மாத்திரமா தனியே செஞ்சிக்குப் போக வேண்டுமென்று பிரியப்படுகிறாய்'?

ஜயபாலன்:—இல்லை. இல்லை. என் சிநேகிதன் மகிபதியும் என்னோடு வருவான்.

'செஞ்சிக்குப் போகும் வழியில் கொலைபாதகர்களாகிய திருடர்களின் பயம் அதிகம். ஆனதினால் நீயும் மகிபதியும் போகமுடியுமா? அது கஷ்டமான காரியம்; உன்னை அனுப்ப எனக்குப் பயமாயிருக்கிறது.'

ஜயபாலன்:—தந்தாய்! தாங்கள் எதற்காகப் பயப்பட வேண்டும்? ஐம்பது பேர் திருடர் வந்தாலும் என்னையும் மகிபதியையும் எதிர்க்க அவர்களால் முடியுமா?

"உன்னுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல என்னால் முடியாது. உன்னைச் செஞ்சிக்கு அனுப்புவதற்கு எனக்கு எள்ளளவேனும் பிரியமில்லை. ஆகையால் உன்னை நான் அனுப்ப முடியாது."

என்று இவ்வண்ணம் சொல்லிவிட்டு ஜயபாலனின் தந்தை தாம் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தினின்றும் எழுந்து போய்விட்டார். பார்த்தான் ஜயபாலன். என்ன செய்யலாமென்று சிந்தித்தான். திடீரென்று புறப்பட்டு மகிபதியின் வீட்டிற்குப் போனான். அப்பொழுது எவ்விடத்திற்கோ போகவேண்டிய நிமித்தம் வீட்டினின்றும் வெளியே வந்த மகிபதி ஜயபாலனைக் கண்டவுடன் 'எங்கே வந்தாய் ஜயபாலா? என்று உசாவினான்.

ஜயபாலன்:—என் தந்தையிடம் நம்முடைய பிரயாணத்தைப்பற்றிச் சொன்னேன்.

மகிபதி:—சொன்னேன் — என்று சொல்லுகிறாயே. அவர் என்ன சொன்னார்? அதை என்னிடம் சொல்லக் கூடாதா? என்று கேட்டான்.

ஜயபாலன்:—ஏன் அவர் சொன்னதை உன்னிடம் சொன்னாலென்ன? நான் அவரை நோக்கித் 'தந்தாய், நான் செஞ்சிக்கோட்டையைப் போய்ப் பார்த்துவர விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் அனுமதிதர வேண்டும்' என்று கேட்டேன். அதற்கு அவர் என்னைப் பார்த்து, 'உன்னை செஞ்சிக்கு அனுப்புவதற்கு எனக்கு எள்ளளவேனும் பிரியமில்லை' என்று சொல்லிவிட்டு வீட்டினின்றும் வெளியே போய்விட்டார். உன் தந்தை உனக்கு என்ன சொன்னார்?

மகிபதி:—சரி; சரி; என் தந்தையும் உன்னுடைய தகப்பனுர் சொல்லிய வண்ணமே சொல்லிவிட்டார். இதற்கு நாம் என்ன செய்கிறது?

ஜயபாலன்:—நான் சொல்லுகிறபடி நீ கேட்பாயானுல் நம்முடைய எண்ணம் கைகூடும்.

மகிபதி:—அதற்குத் தடை என்ன? அப்படியே நீ சொல்லுகிறபடி நான் கேட்கிறேன்.

ஜயபாலன்:—இனி நாம் நம்முடைய தாய் தந்தையரிடம் எத்தனைதரம் அனுமதி கேட்ட போதிலும் அவர்கள் நமக்குச் செஞ்சிக்குப் போக உத்திரவளிக்கமாட்டார்கள். ஆகையால் நாம் அவர்களிடம் சொல்லாமலே செஞ்சிக்குப் போய்விடுவோம். பின்னர் அவர்கள் நம்மைத் தேடாவண்ணம் 'நாங்கள் செஞ்சிக்குப் போய்விட்டோம். நீங்கள் எங்களைத் தேடவேண்டாம்,' என்று ஒரு கடிதத்தில் எழுதி அக் கடிதத்தைத் தபால்மூலமாக நம் பெற்றோர்களுக்கு அனுப்பிவிடுவோம். அதை அவர்கள் படித்துப் பார்த்தபின் நம்மைத் தேடமாட்டார்கள். இதுதான் எனக்குத் தோன்றிய புத்தி. நீ என்ன சொல்லுகிருய்?

மகிபதி:—நான் என்ன சொல்லுகிறது? நீ சொல்லியபடியே செய்துவிடுவோம். தாமதியாமல் இன்றிரவு பிரயாணப்பட வேண்டும். நான் பிரயாணத்திற்குத் தயாராய் இருக்கிறேன். நீ உன் வீட்டிற்குப்போய்ப் பிரயாணத்திற்கு வேண்டியவைகளை எடுத்துக் கொண்டு இன்றிரவு சரியாய்ப் பத்து மணிக்கு இங்கு வந்துவிடு. நீ வந்த உடனே தாமதியாமல் நாம் புறப்பட்டுப் போகலாம் என்று கூறினுன்.

என்று இவ்வண்ணம் சொல்லிவிட்டு மகிபதி ஜயபால னிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தன்னுடைய வீட்டிற் குட் சென்றான். பிறகு ஜயபாலன் அங்கிருந்து புறப்பட்டு நேரே தன் வீடுபோய்ச் சேர்ந்தான். சில மணிநேரமா யிற்று. தந்தைகளின் வார்த்தைகளைக் கேளாமல் செஞ்சிக் குப் போகும் மகிபதி, ஜயபாலன் ஆகிய இருவரையும் பார் க்கக் கூடாதென்று கோபித்துக்கொண்டு செல்லுகிறது போல் அஸ்தமனகிரிக்குட்சென்றான் ஆதித்தன். நன்மார்க் கத்தில் நடக்கும் ஒருவனுடைய மனமானது துன்மார்க்கத் தில் சென்றவுடனே அவனுடைய மனத்தில் பாவமென் னும் இருள் வந்தடைவது போல் ஆதித்தன் அஸ்தமித்த வுடன் எங்குப் பார்த்தாலும் காரிருள் சூழத் தலைப்பட் டது. பட்சிகளெல்லாம் பலவிதத் தொனியோடு தத்தம் கூடுகளிலும், மரக் கிளைகளிலும் போய் அடங்கின. சமுத் திர சப்தமோ சொல்லத் தரமன்று. அலைகள் ஒன்றின்பின் ஒன்றாய் அடித்துக்கொண்டு வருகிறதைப் பார்த்தால் தாயைக் கண்ட சேயானது தாவி விழுவதைப்போ லிருந் தது. பின்னும் இந்தக்கடலில் நாங்கள் அலை என்னும் பெயர் கொண்டு எங்களைப் பார்ப்பவர்களுடைய கண்களுக் குக் காட்சியும், மனத்திற்குச் சந்தோஷமும் உண்டாகும் வண்ணம் சிறிது நேரத்திற்குள் மேலே எழுந்து பின் கீழே விழுந்து அழிகிறதைப்போல, ஓ மனிதர்களே! நீங்களும் இச்சமுத்திரத்திற்குச் சமானமாகிய பூவுலகில் எங்களைப் போல் தோன்றி மடிகிறவர்களேயன்றிச் சாஸ்வதமாய் இவ்வுலகத்தில் இருப்பவர்களல்ல. இன்னும் சொல்லுகி றோம் கேளுங்கள்; இச் சமுத்திரத்திற் பிறந்து கரையை நாடி வரும்போதெல்லாம் ஆயிரம் ஆயிரமாகக் கிளிஞ்சல் சங்கு இன்னும் இக் கடலிலுள்ள பலவிதப்பொருள்களையும்

தரையில் கொண்டுவந்து உதவுகிறோம். அவைகளை அநேகர் பொறுக்கிக்கொண்டு போய் அவரவர்களுக்கு அநுகூல மான வழிகளில் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். எங்களைப்போல் மானிடர்களாகிய நீங்களும் இப் பூலோ கத்தில் பிறந்து இறந்து போய்விடு முன் இம்மாய உலகத் தினின்றும் உங்களுக்குக் கிடைத்த பொருள்களைக் கூடு மானவரைக்கும் ஏழைகளுக்குக் கொடுத்து உதவுங்கள். 'அறஞ்செயவிரும்பு' என்று ஔவை சொன்ன வார்த்தை யை அலட்சியம் செய்யாதீர்கள்' என்று கடலிலுண்டாகும் அலைகள் சொல்லுகிறதுபோல் அந்த அலைகளினின்றும் உண்டாகும் சப்தத்தால் விளங்கிற்று. மேலும் மானிடர் களுக்குச் சிறுமையும் பெருமையும் மாறி மாறி வருவது சகஜமே என்பது அலைகள் ஆரவாரத்துடன் கடல் நீரினின் றும் மேலெழுந்து கீழே விழுவதினால் நன்கு விளங்கியது. அன்று பௌர்ணமி. நேற்றுக் கொஞ்சம் தேக அசௌக்கி யத்துடன் வீட்டினின்றும் வெளியூருக்குச் சென்ற தன் கணவன் தேக சௌக்கியத்துடன் தன்னைப் பார்க்க வருகி றாரென்று அறிந்தவுடன் கற்புடைய மங்கையரின் முகம் எவ்விதம் மலர்ச்சியடையுமோ அவ்வித மலர்ச்சியுடன் நீரி லுள்ள ஆம்பல் புஷ்பங்களெல்லாம், 'நேற்று உருவத்தில் கொஞ்சம் குறைவுடன் சென்ற நமது சிநேகிதனாகிய சந்தி ரன் இன்று அக் குறையின்றித் தன் பூரண உருவத்துடன் வருவான் அவனை நாம் கண்டு மகிழவேண்டும்' என்று எண்ணி, சந்திரனுடைய வருகைக்கு எதிர் பார்த்துக் கொண்டிருந்தன. இவ்வளவு பெருமைவாய்ந்துள்ள நான் எதற்காக மாதாமாதம் ஒவ்வொரு முறை வளர்ந்து தேய்ந் துகொண் டிருக்கிறேனென்றால் இப் பரதகண்டத்திலுள்ள மானிடர்களெல்லோரும் சிறிதுகாலம் சகல ஐசுவரிய சம் பத்துடன் கீர்த்திபெற்று வாழ்ந்தும், அவ்விதம் வாழ்ந்த

வர்கள் வேறு சிலகாலத்தில் ஏழைகளாயும், ஏழையா யிருப்பவர்கள் ஒருகாலத்தில் தனவந்தராயும் மாறிவிடு வார்கள்' என்பதைத் தெரிவித்துக்கொண்டிருப்பதற்காக வே. மானிடர்கள் உந்நத பதவியிலிருக்கையிலும் சரி; தாழ்ந்த பதவியி லிருக்கையிலும் சரி! அவர்களுடைய மன த்தில் ஏதாவது சிறிது கவலை இருந்துகொண்டே இருக்கும் என்பதை மானிடர்களாகிய உங்களுக்கு விளக்கிக்கொண் டிருப்பதற்காகவே என்னில் சாலவும் சிறிது களங்கம் இருக்கிறது' என்று எண்ணிச் சந்தோஷத்துடன் சந்திரன் அதிக பிரகாசத்துடன் கீழ்த்திசையில் உதயமானான். அநேகம் செம்படவர்கள் பெரிய வலைகளுடன் தத்தம் சிறு படகுகளைச் செலுத்திக்கொண்டு கடலிற் சென்றனர். அநேகர் நிலவு வெளிச்சத்தில் தத்தம் சிநேகிதர்களோடு கடற்கரையில் உல்லாசச் சம்பாஷணையுடன் உலாவிக் கொண்டிருந்தார்கள். சந்திரனுடைய ஜோதியால் கடல் நீர் தங்கத்தை உருக்கி வார்த்தாற்போல் பளபளப்புடன் ஜொலித்தது. குளிர்ந்த காற்றின் சுகம் இம்மட்டன்று: ஆகாயத்தில் மேகமே இல்லை. நக்ஷத்திரங்களெல்லாம் வைரக் கற்களைப்போ லிருந்தன. புதுவை நகரம் அப் போது முற்றிலும் வெகு அழகாயிருந்தது.

ஜயபாலன் பிரயாணத்திற்கு வேண்டியவைகளை எடுத் துக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் தன் வீட்டினின் றும் புறப்பட்டு மகிபதியின் வீட்டிற்குச் சென்று வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தான். பத்து நிமிஷமாயின. மகிபதி வீட்டினின்றும் வெளியே வந்தான். அவன் வெளி யே நின்று கொண்டிருந்த ஜயபாலனைக் கண்டான். ஜயபா லனை நிற்கச்சொல்லிவிட்டுத் தான் வீட்டிற்குட் சென்று தன்னை உடைகளால் அலங்கரித்துக்கொண்டு நூறு ரூபாயு

டன் வீட்டினின்றும் வெளியே வந்து ஜயபாலனை அழைத்துக்கொண்டு இரயில்வே ஸ்டேஷனுக்குப் போனான். விழுப்புரத்திற்குப்போகும் புகைத் தொடரும் பிரயாணத்திற்குத் தயாராயிருந்தது. செஞ்சிக்குப் போகும் விஷயத்தைப்பற்றித் தெரிவிக்கும் பொருட்டு முன்னமே தன்னுடைய தந்தையின் விலாசத்திற்கும் ஜயபாலனுடைய தந்தையின் விலாசத்திற்கும் எழுதிவைத்திருந்த இரண்டு கடிதங்களையும் இரயில்வே ஸ்டேஷனிலிருந்த ஒரு தபால் பெட்டியில் போட்டுவிட்டு, புக்கிங் ஆபீஸில் சென்று மயிலத்திற்கு இரண்டு டிக்கட்டுகளைப் பெற்றுக்கொண்டு ஜயபாலனோடு புகைத்தொடரில் போய் உட்கார்ந்தான். உடனே புகைத் தொடரும் பிரயாணப்பட்டு விழுப்புரம் போய்ச் சேர்ந்தது. ஜயபாலனும் மகிபதியும் புகைத்தொடரினின்றும் இறங்கி அப்பொழுதுதான் வந்த பட்டணம் போகும் புகைத்தொடரில்போய் உட்கார்ந்தார்கள். அப் புகைத் தொடர் கால் மணி நேரத்திற்குப் பின் பிராயணப்பட்டு இரவு இரண்டரை மணிக்கு மயிலம்போய்ச் சேர்ந்தது. உடனே மகிபதியும் ஜயபாலனும் புகைத் தொடரினின்று இறங்கி டிக்கட்டை டிக்கட் கலக்ட்டரிடம் கொடுத்துவிட்டு ஸ்டேஷனுக்கு வெளியே சிறிது தூரம்சென்று அங்கிருந்த ஒரு சத்திரத்தில் இரவு பொழுதைப் போக்கினார்கள்.

சூரியன் உதயமாயிற்று. கற்பின் திறமையால் ஸ்திரீகளின் முகம் பொலிவுறுவது போலச் சூரியனால் உலகமெல்லாம் ஒளிபெற்றது. ஜயபாலன் மகிபதியைப்பார்த்து 'மகிபதீ! வா: நாம் இதோ இருக்கும் குளத்தில் ஸ்நாநம் செய்து பின்பு காலைப் போஜனம் புசித்துவிட்டுப் பிரயாணமாகலாம். மேலும் இன்று ஆதவன் கொடுமை அதிகமாயில்லை' என்று சொல்லி மகிபதியை அழைத்துக்கொண்டு

அருகிலிருந்த குளத்திற்குப்போய் அதில் ஸ்நாநம் செய்து விட்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சிறிதுதூரத்தி லிருந்த சாப்பாட்டு விடுதிக்குச் சென்று போஜனம்செய்து பிறகு போகும்வழியில் ஆகாரம் வேண்டியதற்காகச் சாப் பாட்டு விடுதியில்கொஞ்சம் கட்டுச்சாதம் வாங்கிக்கொண்டு அவனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டு அங்கிருந்த ஒருவரிடம் செஞ்சிக்குப் போகும் வழி யைக் கேட்டுத் தெரிந்துகொண்டு பிரயாணமானான்.

இரண்டுமைல் தூரம் சென்றவுடன் இவர்கள் போகும் சாலை மார்க்கம் மூன்று பிரிவாய்ப் பிரிந்து போவதைக் கண்டார்கள்; அம் மூன்று பிரிவுகளுக்கும் நடுவில் ஒரு இரும்புக் கம்பத்தில் மேற்சொன்ன மூன்று சாலைமார்க்கங் களையும் சுட்டிக் காட்டிக்கொண்டு மூன்றுஇரும்புப்பட்டை களிருந்தன. அந்த இரும்புப் பட்டைகளிலொன்றில்திண்டி வனம் என்றும்,மற்றொன்றில் விழுப்புரம்என்றும்,வேறொன் றில் செஞ்சி என்றும் எழுதப்பட்டிருந்தது. அதன் மூலமாய் இவர்கள் செஞ்சிக்குப் போகும்வழி இன்னதென்று அறிந்துகொண்டு அவ்வழியே வெகுதூரம் சென்றார்கள். சூரியனும் நடுவானத்தில் வந்துவிட்டான். அன்று இவர் களின் அதிர்ஷ்டம் ஆகாயம் மேகங்களினால் சூழப்பட் டிருந்தபடியினால் வெயிலின் கொடுமை குறைவாயிருந்தது. இவர்கள் போகும் வழியில் குளம் ஒன்று அநேகம் விருட் சங்களால் சூழப்பட்டுக் குளிர்ச்சி பொருந்திய நிழலுடன் இருந்தது. இவ்விருவரும் அக்குளத்தைக் கண்டவுடன் அதிலிறங்கி ஸ்நானம் செய்துவிட்டுக் கட்டுச் சாதத்தை ஆளுக்குப் பாதியாகப் புசித்துவிட்டுக் கைகால்களை அலம் பிக்கொண்டு கரையில்வந்து 'சிறிதுநேரம் நித்திரை செய்து போவோம்' என்று அங்கு அடர்ந்து வளர்ந்துள்ள ஒரு

விருட்சத்தின்கீழ்ப் படுத்து நித்திரைசெய்தார்கள். வெகு தூரம் நடந்துவந்த இளைப்பினால் சுமார் மூன்றுமணி நேரம் நித்திரையிலிருந்தார்கள். மாலைக் காலம் சமீபத்துவிட்டது. மணி மூன்றாயிற்று. மகிபதி நித்திரை நீங்கி எழுந்து பார்த்தான். எந்நிறப் பொருளையும் தன்னிறமாக்கும் மாலைக் காலம் சமீபித்துவிட்டதைக் கண்டு திடுக்கிட்டு ஜயபாலனைத்தட்டி 'ஜயபாலா! பொழுதெல்லாம் போய்விட்டது. எழுந்திரு. சிறிதுதூரம் போவோம்; ஏதாவதொரு சிற்றூர் தென்பட்டால் அங்குத் தங்கிவிடுவோம்' என்றுசொன்னான்.

உடனே ஜயபாலன் நித்திரை நீங்கி எழுந்தான். இருவரும் வெகுதூரம் நடந்தார்கள். மாலை மணி ஆறு ஆயிற்று இப்பொழுது இவர்கள் மயிலத்திலிருந்து சுமார் பதின் மூன்று மைல்தூரம் வந்துவிட்டார்கள். இதற்கு இடையில் ஒரு சிற்றூரேனும் தென்படவில்லை. இவர்கள் இருவரும் கொஞ்சம் மனக்கவலையுடன் நடந்து கொண்டிருக்கையில் இவர்கள் போய்க்கொண்டிருக்கும் வழியின்மேற்புறம் அரை பர்லாங்கு தூரத்திலிருந்து இவர்களை யாரோ கூப்பிடுகிறது போல் சப்தம் கேட்டது. உடனே மகிபதியும், ஜயபாலனும் சப்தம்வந்த பக்கமாய்த் திரும்பிப் பார்த்தார்கள். யாரோ ஒரு மனிதன் தன்கையிலுள்ள வஸ்திரத்தினால் இவர்களை 'இங்கே வாருங்கள்' என்று கூப்பிட்டான். இவர்கள் இருவரும் அவன் அருகிற் சென்றார்கள். அவன் இவர்களைப் பார்த்து—'ஐயா நீங்கள் யார்?' என்று கேட்டான்.

மகிபதியும், ஜயபாலனும் தங்களுக்குள் 'இவன் யாரோ தெரியவில்லையே! இவனைப் பார்த்தால் சந்தேகமாய் இருக்கிறது. இருக்கட்டும்' என்று எண்ணிக்கொண்டு அவனைப் பார்த்து 'நாங்கள் யாரானாலும் ஆகுக. அதைப்பற்றிஉனக் கென்னகாரியம் ஆகவேண்டும் என்றார்கள்.

அதற்கு அந்த மனிதன், 'ஐயா! நீங்கள் உலக நடை இன்னதென்று அறியாத வாலிபர்களாதலால் கொடூரமாய் வசனிக்கின்றீர்கள். நானும் உங்களைப்போல் வீரமுடைய வனாகத்தா னிருந்தேன். இப்பொழுது அதையெல்லாம் அடக்கிக்கொண்டு நான் இருக்கும் இடமே தெரியாம லடங்கி இருக்கின்றேன்,' என்றான்.

இவ்வார்த்தையைக்கேட்டவுடன் மகிபதியும் ஜயபால னும் 'நாம் வந்த விஷயத்தைப்பற்றி இவனிடம் சொல்லு வோமே. இவன் நம்மை என்ன செய்யக்கூடும்,' என்று தங்களுக்குள் எண்ணிக்கொண்டு அந்த மனிதனைப் பார்த்து "ஐயா! உம்மைப் பார்த்தால் நல்ல மனிதனைப்போல் தோன் றுகிறது. ஆகையால் உம்மிடம் நாங்கள் இன்னாரென்று சொல்லாமலிருப்பது சரியல்ல. நாங்கள் இருவரும் இருப் பது புதுச்சேரி. செஞ்சிக்கோட்டையைப் பார்க்கவேண்டு மென்று எண்ணி வந்தோம். இவ்வளவுதான் விஷயம். இன்னும் இங்கிருந்து செஞ்சிக்கோட்டைக்கு எத்தனை மைல் தூரம் இருக்கும்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த மனிதன், 'ஐயா இவ்வளவுதானே உங் கள் விஷயம்? செஞ்சி இங்கிருந்து ஒன்பது மைல் தூரத்தி லிருக்கிறது. இதற்கிடையில் நீங்கள் ஐந்து மைல் தூரம் திருடர் வசிக்கும் இடத்தைக்கடந்து போகவேண்டும். அஃது அசாத்தியமான காரியம். ஆகையால் நான் சொல் லுகிறதைக் கேளுங்கள். இப்பொழுது இரவு காலம் சமீ பித்துவிட்டது. அதோ என்னுடைய வீடு இருக்கிறது. அங்கு வந்திருந்து நீங்கள் நாளைய தினம் காலையில் புறப் பட்டுப் போகலாம்' என்றான்.

அதற்கு இவர்கள் 'இவன் சொன்ன வார்த்தையினால் திருடர்கள் இவ்விடத்திலிருப்பார்கள் போல் தோன்றுகி

றது. ஆகையால் நாம் இவனுடைய இஷ்டப்படி இவன் வீட்டில தங்குவோமானால் நமக்கு ஏதாவது ஆபத்து நேரிடக்கூடும். மேலும் இவனும் திருடரில் ஒருவனாயிருப்பானாயின் அப்பொழுது நாம் என்ன செய்கிறது? நாம் இங்குத்தங்கக்கூடாது' என்று தங்களுக்குள் எண்ணிக்கொண்டு அம் மனிதனைப்பார்த்து, 'நாங்கள் ஓர் அவசர நிமித்தமாகப் போகவேண்டியவர்களா யிருப்பதோடும், செஞ்சிக்கோட்டையையும் பார்க்கவேண்டும். ஆனபடியினால் நாங்கள் போகிறோம். கடவுள் செயல்படி ஆகுக. நீ இக்காட்டில் ஒண்டியாக ஒரே ஒரு குச்சுவீட்டில் இருக்கிறாயே; உனக்குத் தொழில் என்ன ?' என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த மனிதன் 'ஐயா! நீங்கள் கேட்கிறதைப் பார்த்தால் என்னையும் திருடர்களுடன் சேர்ந்த ஒரு திருடனென்று எண்ணி விட்டீர்கள் போலும். அவ்விதம் நீங்கள் எண்ணியது உண்மையே. ஒரு புண்ணியவான் திருட்டுத் தொழிலைச் செய்யாதிருக்கும்படி எனக்குப் புத்தி கற்பித்து விட்டான். அஃதெவ்விதமெனில், நானும் இன்னும் சிலருமாகக் கூடிக்கொண்டு அதோ இருக்கும் அந்தச் சாலையின் வழியே வருவார் போவார்களை யெல்லாம் கொஞ்சமாவது இரக்கமின்றி அடித்து அவர்களிடமிருக்கும் பொருள்களை அபகரித்துக் கொள்வது வழக்கம். இவ்வண்ணம் நாங்கள் செய்துகொண்டு வரும் நாட்களில் ஒருநாள் நள்ளிரவில் சுமார் 15 வண்டிகளில் சில வியாபாரிகள் செஞ்சியிலிருந்து மயிலத்திற்கு அந்தச் சாலையின் வழியே போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் நாங்கள்சுமார் ஐம்பதுபேர் ஒன்று கூடி ஆயுதங்களுடன் அந்த வண்டிகளின் முன்னே சென்று வண்டிகளைப் போகவொட்டாமல் மறித்தோம். உடனே எல்லா வண்டிகளும் நின்று விட்டன. நாங்

கள் வண்டியில் இருந்தவர்களிடமுள்ள ரூபாய்களைக் கேட்டோம். அவர்கள் 'கொடுக்க மாட்டோம்' என்றார்கள். அதனால் நாங்கள் அவர்களோடு சண்டைசெய்ய நேர்ந்தது. அவர்களும் சுமார் முப்பது பேர்களுக்கு அதிகமிருந்தார்கள். இரண்டு கட்சியாருக்கும் பலமான சண்டை நடந்தது. நாங்கள் சண்டையில் தேறினவர்களாதலால் வீராவேசத்துடன் சண்டை செய்யவே வியாபாரிகள் பின்னடைய ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஒரு மகம்மதிய வண்டிக்காரன் தன்னுடைய கையில் வைத்திருந்த ஒரு கத்தியால் என்னுடைய வலது பக்கம் விலாப்புறத்தில் குத்தி விட்டான். அப்பொழுதே எனக்கு ஒரு எலும்பு முறிந்து போயிற்று. நான் தரையின் மீது விழுந்து விட்டேன். உடனே மற்றத் திருடர்கள் ஒன்றுகூடி அம்மகம்மதியனைக் கொன்றுவிட்டார்கள். சண்டையின் முடிவில் என்னைச் சார்ந்தவர்களே ஜயமடைந்தார்கள். வியாபாரிகளிற் சிலர் கொல்லப்பட்டார்கள்; சிலர் ஓடிப்போய் விட்டார்கள். என்னைச் சார்ந்தவர்களெல்லோரும் அகப்பட்ட ரூபாய்களை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். என்னைக் கவனிக்கவே இல்லை. குத்துப்பட்டு நடப்பதற்குச் சக்தியற்று இருந்ததை எவ்விதமோ என்னுடைய மகன் அறிந்து ஓடிவந்து என்னை அவன் தன் முதுகின் மீது எடுத்துக்கொண்டு போய் வீட்டில் சேர்த்தான். என் குமாரன் கொஞ்சம் வைத்தியம்தெரிந்தவன். அவன் ஏதேதோ பலவித மூலிகைகளைக் கொண்டுவந்து அவற்றின் சாற்றை என்னுடைய உடம்பிலிருந்த இரணத்தில் பிழிந்து எலும்பைப் பொருத்த வைத்துக் கட்டுக்கட்டினான். ஒவ்வொரு தினமும் எனக்குச் சிகிச்சை செய்துகொண்டு வந்தான். பிறகு மூன்று மாதத்திற்குள் எனக்கு முற்றிலும் சௌகரியமாயிற்று.

அது முதல் நான் திருட்டுத் தொழிலை முற்றிலும் ஒழித்து விட்டு இவ்விடத்திலுள்ள சில நல்லிடங்களைச் சீர்திருத்தம் பண்ணி, பலவிதமான சாகுபடிகளைச் செய்து அவற்றினின்றும் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு வயிற்றை வளர்த்து வருகிறேன். இப்பொழுது எனக்கு முன்னிலும் வெகு சௌகர்யமாயிருக்கிறது' என்றுகூறி, அவன் மறுபடியும் அவர்களைப் பார்த்து, 'ஐயா! நீங்கள் என்மீது சந்தேகப் படாமல் என்னுடைய வீட்டில் வந்திருந்து நாளைக்காலையில் போகலாம். அது தான் நலம். ஏதோ சொன்னேன், பிறகு உங்கள் இஷ்டம்' என்றான்.

அம்மனிதன் இவ்வண்ணம் சொன்னவுடன் மகிபதி, ஜயபாலன் ஆகிய இருவருக்கும் அம்மனிதன் மீது முன்னிலும் பதின்மடங்கு அதிக சந்தேகமுண்டாயிற்று. 'இனி நாம் இங்குத் தங்கக்கூடாது!' என்று தங்களுக்குள் எண்ணிக் கொண்டு அம் மனிதனைப் பார்த்து, 'ஐயா! உங்கள் பேரில் எங்களுக்கு யாதொரு சந்தேகமுமில்லை; போகும் வழியில் அந்நியர்களால் ஏதேனும் ஆபத்து நேரிடுமோ வென்னும் பயமுமில்லை. ஆகையால் நாங்கள் போய்வருகிறோம். உத்திரவு கொடுங்கள்' என்று சொல்லி அம்மனிதனிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு இவர்களிருவரும் வெகு தூரம் சென்றார்கள். சூரியன் அஸ்தமித்து ஒரு நாழிகை ஆயிற்று. எல்லாவிடங்களிலும் கொஞ்சம் வெளிச்சமும், அதிக இருளும் கலந்திருந்தது. இவர்கள் போகும் வழியின் குறுக்கே பெரிய காடு ஒன்றிருந்தது. இவர்கள் இந்தக் காட்டைக் கடந்து கொஞ்ச தூரம் சென்றவுடன் சந்திரன் உதயமாயிற்று. இவர்கள் தங்களுக்கு எதிரே சில திருடர்கள் வருவதைக் கண்டார்கள். அவர்களைக் கண்டவுடன் ஜயபாலன் கொஞ்சம் பயந்தபோதிலும் மனத்தைத் தைரி

யப்படுத்திக் கொண்டான். மகிபதியோ கொஞ்சமும் அஞ்சா நெஞ்சனாய் ஜயபாலனோடு, வருகிற திருடர்களின் எதிரே சென்றான். இவர்களிருவரையும் கண்டவுடன் திருடர்கள் இவர்கள் சமீபத்தில் வந்து இவர்களைப் பார்த்து,—'நீங்கள் யார்? நீங்களிருவரும் என்ன காரணத்திற்காக இங்கு வந்தீர்கள்?' என்று கேட்டார்கள்.

ஜயபாலன் அவர்களைப் பார்த்து,—'நாங்களிருவரும் செஞ்சிக்கோட்டையைப் போய்ப்பார்க்க வேண்டுமென்று ஆவல் கொண்டு இவ்வழியே போகிறோம். இன்னும் இங்கிருந்து செஞ்சிக் கோட்டைக்கு எத்தனை மைல் தூரமிருக்கும்?' என்று கேட்டான்.

அதற்குத் திருடர்கள், 'இன்னும் இங்கிருந்து இருபது மைல் தூரமிருக்கும்' என்றார்கள்.

இவ்வண்ணம் திருடர்கள் சொன்னவுடன் ஜயபாலனுக்குக் கோபம் உண்டாயிற்று. அவன் திருடர்களைப் பார்த்து,—'என்ன! உங்களுடைய வார்த்தை நம்பக்கூடியதாக இல்லையே. இன்னும் சுமார் நாலு, ஐந்துமைல் தூரத்திலிருக்கும் செஞ்சியை இருபது மைல் தூரத்திலிருக்கிறதென்று சொல்லுகிறீர்களே. எதற்காக அவ்விதம் சொன்னீர்கள்?' என்று கேட்டான்.

இதற்குள் திருடர்களுக்கு இவர்களிடம் ரூபாய் இருப்பது எவ்விதமோ தெரிந்து விட்டது. அவர்களுக்குள் ஜாடையாகப்பேசிக்கொண்டு அவர்கள் இவர்களைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு இவர்களோடு மெதுவாய் வார்த்தையாடிக்கொண்டே இவர்கள் சமீபத்தில் வந்து விட்டார்கள். இவர்களிருவரும் திருடர்களைப்பார்த்து, 'நீங்கள் எங்களைச் சுற்றி நெருங்குவதைப் பார்த்தால் விபரீதமாய்த் தோன்றுகிறது. காரணம் என்ன?' என்று கேட்டார்கள்.

அதற்குத் திருடர்கள் 'உங்களிடமுள்ள ரூபாய்களை யெல்லாம் கொடுத்தாலன்றி நாங்கள் உங்களிருவரையும் உயிருடன் விடோம்'; என்றார்கள்.

இவ்வார்த்தையைக் கேட்டவுடன் மகிபதியின் கண்கள் சிவந்தன. அவன் ஜயபாலனைப் பார்த்து, 'அண்ணா! தாங்கள் ஒன்றும் செய்யாமல் சிறிது நேரம் மௌனமா யிருங்கள், என்று சொல்லிவிட்டு அவனிடமிருந்த வெங்கலப் பூண்கட்டின தடியை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு திருடர்களைப் பார்த்து, 'அடே திருட்டுப் பயல்களா! உங்களால் என்னை எதிர்க்க முடியுமானால் இப்பொழுதே வாருங்களடா பார்க்கிறேன் உங்களுடைய சமர்த்தை' என்றான்.

இவன் இவ்வண்ணம் சொன்னவுடன் திருடர்களுக்குக் கோபம் உண்டாயிற்று. அவர்கள் மகிபதியையும் ஜயபாலனையும் எதிர்த்தார்கள். திருடர்களைப் பார்க்கிலும் மகிபதியும் ஜயபாலனும் சண்டையில் தேர்ச்சியுடையவர்களாதலால் திருடர்களெல்லோரும் இவர்களால் கொல்லப் பட்டார்கள். இனி இவர்களை எதிர்க்க அங்கு வேறொருவருமில்லை. மகிபதியும் ஜயபாலனும் 'இனி நாம் இவ்விடமிருக்கலாகா தென்று எண்ணி அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் செஞ்சியை நோக்கி நடக்கலானார்கள். இவர்கள் ஒரு மைல் தூரம் போவதற்குள் திருடர்கள் இவர்களால் கொல்லப்பட்டதை எவ்விதத்திலோ கேள்விப்பட்டு வேறு எங்கிருந்தோ சுமார் நூறுபேர் திருடர்கள் இவர்களைத் தேடிக்கொண்டு இவர்களின் பின்னே ஓடிவந்தார்கள். தங்கள் பின்னே கொஞ்சம் தூரத்தில் வருகிற திருடர்களைக் கண்டவுடன் மகிபதியும் ஜயபாலனும் திடுக்கிட்டு, 'ஏதேது மோசமா யிருக்கிறது. அதோ வருகிறவர்கள் பெருங்கூட்

டமா யிருக்கிறார்கள். அவர்கள் திருடர்களாய்த்தானிருக்கவேண்டும். நாமோ களைப்படைந்திருக்கிறோம். இனி அவர்களை எதிர்க்க நம்மால் முடியாது. நாம் எப்படியாவது அவர்களிடம் அகப்படாமல் போய்விட வேண்டும்' என்று தங்களுக்குள் எண்ணிக் கொண்டு இவ்விருவரும் ஓட்டமும் நடையுமாய்ச் செல்லலானார்கள்.

திருடர்களும் இவர்களின் பின்னே வந்துகொண்டேயிருந்தார்கள். மகிபதியும் ஜயபாலனும் திருடர்களிடம் அகப்படவில்லை யென்றாலும், இவர்களின் சமீபத்தில் கற்கள் படபட வென்று வந்து விழுந்துகொண்டே யிருந்தன. இவற்கள் கற்கள் தங்கள்மீது விழாவண்ணம் சாலையின் ஓரத்திலுள்ள மரங்களின் கீழே வெகு வேகமாய்ச் சென்றார்கள். சிறிது தூரம் சென்றவுடன் இவர்கள் போகும் வழியானது இரண்டு பிரிவாய்ப் பிரிந்து போகிறதைக் கண்டார்கள். எவ்வழியாகப் போகிறதென்று எண்ணினார்கள். 'நாம் இவ்வண்ணம் இவ்விடத்தில் ஆலோசித்துக்கொண்டிருந்தால் திருடர்கள் சமீபத்தில் வந்துவிடுவார்களே. நாம் என்ன செய்கிறது' 'என்று அவர்கள் தங்களுக்குள் எண்ணிக் கொண்டு அவ்விரு வழிகளிலோர் வழியைப் பற்றி நடந்தார்கள்: திருடர்களும் இவர்களைப் பின்பற்றி வராமல் நின்றுவிட்டார்கள். மகிபதி, ஜயபாலன் ஆகிய இவர்களிருவரும் செல்லும் வழியானது போகப்போக அதிக ஒடுக்கமாகி முடிவில் ஒரு கொடிவழியாயிற்று. இவர்களிருவரும் அக்கொடிவழியைப்பற்றிச் சிறிது தூரம் சென்றவுடன் இவர்கள் போகும் வழியானது இதற்குமுன் இவர்கள் கடந்துவந்த ஆரணியத்தைப் பார்க்கிலும் அதிக மரம், செடி, முட்புதர்கள் ஆகிய இவைகள் நெருங்கி ஆகாயம

ளாவி வளர்ந்து படர்ந்துள்ள மரங்கள் அடர்ந்துள்ள ஒரு பெரிய ஆரணியத்தின் நடுவே சென்றது.

அப்பொழுது மணி பத்து. பசும் புல் அவ்வரணியம் முற்றிலும் மிகுதியாய் வளர்ந்திருந்த படியினால் தரையில் தேய்வு சிறிதும் தெரியவில்லை. ஆகையால் இவர்களுக்கு வழி கண்டு பிடித்துப் போகிறதற்குக் கஷ்டமாயிற்று. சிறிது தூரம் நிதானத்தோடு சென்றார்கள். செல்லச்செல்ல மறுபடியும் இவர்களுக்குச் சிறிய கொடிவழி ஒன்று தென் பட்டது. மனத்தில் திகிலுடன் அவ் வழியாகக் கொஞ்ச தூரம் போனார்கள். இவர்கள் போகும் வழியின் எதிரே ஒரு சிறிய வீடு இருந்தது. அந்த வீட்டைக் கண்டவுடன் மகிபதியும், ஜயபாலனும் பயந்து 'இந்த வீடானது இக் காட்டின் நடுவில் இருக்க வேண்டிய காரணம் யாது? அநேகமாய் இது திருடர்களின் வீடாய்த்தானிருக்கும். இதைப் போல் இன்னும் அநேகம் வீடுகள் இந்தக் காட்டில் இருக் கும்போல் தோன்றுகிறது. போகட்டும். இதோ இருக்கும் வீடு திருடர்களின் வீடா? அல்லது வேறு என்ன? அங்கு போய்ப் பார்ப்போம்,' என்று எண்ணிக் கொண்டு இவர்க ளிருவரும் மனத்திலிருந்த பயத்தை எல்லாம் அறஒழித்து விட்டு அந்த வீட்டின் சமீபத்தில் சென்றார்கள். அந்த வீடு சுமார் இருபதுஅடி அகலமும் முப்பதுஅடி நீளமும் வாய்ந் திருந்தது. கருங்கற்களால் கட்டப்பட்டிருந்த அவ்வீட்டின் சுவர்களின் மேற்புறம் கருங்கற் பலகைகளால் மூடப்பட்டி ருந்தது. அந்த வீட்டிற்கு இரண்டு பலகணியும், உள்ளே போகிறதற்குப் பலமான இரண்டு கதவுகளுடன் கூடிய ஒரு சிறிய வாயிலும் இருந்தது. மகிபதியும், ஜயபாலனும் அவ் வீட்டை ஒரு முறை சுற்றிப்பார்த்தார்கள். வாயிற் கதவு பூட்டப்பட்டிருந்தது. ஆனால் வீட்டிற்குள் யாரோ இருவர்

பேசும் சப்தம் கேட்டது. இவ்விருவர்களும் பலகணிவழியாய் வீட்டிற்குள் பார்த்தார்கள். உள்ளே சிறிய விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. அந்த விளக்கின் அருகில் ஒரு யௌவனஸ்திரீயும், ஒரு யௌவனபுருஷனும் உட்கார்ந்து கொண்டிருந்தனர். பார்வைக்கு அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதிகளெனத் தோன்றிற்று. அவர்கள் இன்னாரென்று வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் தான் மோகவதியும், அமிர்தசாகரனைப்போல் வேஷம் புனைந்த மதிவர்மனும் என்று அறிந்துகொள்ளுங்கள். மதிவர்மன் மெதுவாய் மோகவதியோடு பேச ஆரம்பித்தான். மகிபதியும், ஜயபாலனும் அவர்கள் பேசும் விஷயங்களை அவர்களுக்குத் தெரியாமல் பலகணியின் வழியாக ஊன்றிநின்று உற்றுக் கவனிக்கலானார்கள்.

மதிவர்மன்:—மோகா! உனக்கு என்மீது கோபமா? என்னமோ நீயும் மதிபிசகி இவ்விதமானாய். என் விதியும் இவ்வண்ணமாயிற்று.

மோகவதி:—அடே பாவி! நீதானா எனக்குச் சமாதானம் சொல்லுகிறவன்? மங்களபுரியில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துகொண்டிருந்த எனக்கு அமிர்தசாகரன் எழுதுவதைப்போல் கடிதம் எழுதி யனுப்பி உன்னோடு என்னை நள்ளிரவில் அழைத்துக் கொண்டு வந்து திருடர்களின் வசம் ஒப்பிவித்து விட்டதுமன்றி, நீயும் திருடர்களின் வசத்தில் சிக்கிக்கொண்டாய். திருடர்களோ நம்மிருவரையும் நம் நாட்டின் சமீபத்திலிருந்து இங்குக் கொண்டுவந்து விட்டனர். உன் பவிஷுக்கு நீ என்னோடு பேசவருகிறாயே. அயோக்கியப்பயலே! உனக்கு வெட்கமில்லையா?

மதிவர்மன்:—என்னடி சொன்னாய்? உனக்கு இவ்வளவு கர்வமா? நீ பிறந்த இடத்திலும் நன்றாய்த் தின்று

கொழுத்து, வாழ்க்கைப்பட்ட இடத்திலும் யாதொரு குறைவின்றி நன்ருய்த் தின்று கொழுப்பேறிக் காமமென்னும் மதம்பிடித்து மைந்தனென்றும் எண்ணுமல் அமிர்தசாகரனை இச்சித்த மடைச்சியன்ரு? உன்னுல் தானே உத்தமனுகிய அமிர்தசாகரன் தன் தந்தையின் கிருகத்திலிருந்து எங்கயோ போய்விட்டான்! 'நீ அமிர்தசாகரனைப் பார்த்து அடே அமிர்தசாகரா! நீ என்னிஷ்டத்தை நிறைவேற்ருவிடில் உன்னை அபகீர்த்திக் குட்படுத்தி விடுவேன். அன்றியும் உன்னைப்பற்றி உன் தந்தையிடம் அமிர்தசாகரன் என்னை இச்சிக்கிருனென்று சொல்லுவதோடும், உன்னை அனைவரும் காமி, துஷ்டன் என்று சொல்லும்படி செய்துவிடுகிறேன் பார்' என்று சபதம் செய்தாயே, அது எனக்குத் தெரியாதன்ரு எண்ணினுய்? ஐயோ பாவம்! அமிர்தசாகரன் பாவத்திற்குப் பயப்பட்டான். கற்பழிந்த உனக்குக் கர்வம் ஒரு கேடா. பாவம் சதானந்தர் இந்நேரம் மங்களபுரியில் எவ்விதமா யிருக்கிருரோ? விஷப்பாம்புக்கு ஒப்பான உன்னை எப்படியோ அவர் விவாகம்செய்து கொண்டாரே. அது உன்னுடைய அதிர்ஷ்டமே.

மோகவதி:—அடே! பாதகா! மதிவர்மா! என்ன சொன்னுய்? நான்தான் அமிர்தசாகரனை இச்சித்தேன். அது போகட்டும். நீ என்னை இச்சித்துவந்தாயே அதற்கு என்ன சொல்லுகிருய்? நீ மிக யோக்கியனே?

மதிவர்மன்:—அடி போடி பைத்தியக்காரி. உன்னுடைய ரூபத்திற்கு உன்மீது ஆசைகொண்டேனே? அமிர்தசாகரன் எழுதிவைத்திருந்த ஒரு கடிதத்தால் உன் துர்நடத்தையைத் தெரிந்து கொண்டேன். பிறகு எப்படியாவது உன்னிடமிருந்து கொஞ்சம் ரூபாய் சேகரித்துக் கொண்டு போக வேண்டுமென்று எண்ணி உனக்கு நான் அமிர்தசா

ரன் எழுதுவதுபோல் கடிதம் எழுதினேன். அதை நீ அறியாமல் உனக்கிருந்த காமவெறியினால் பாதி இரவில் கொஞ்சமாவது மனத்தில் அச்சம் என்பதின்றி அமிர்தசாகரன் வீட்டிற்குப் பின்புறமிருக்கும் பாழ் மண்டபத்திற்கு வந்து என்னையும் அழைத்துக்கொண்டு மங்களபுரியை விட்டுப் புறப்பட்டு வந்து, சும்மாவிராமல் அவசரப்பட்டு உன்னுடைய கற்புக்கு அழிவு தேடிக் கொண்டதோடும், என்னையும் பாவத்திற்கு உட்படுத்திவிட்டாய். உன்னிடம் அதிகப் பேச்சு என்னத்திற்கு? திருடர்கள் என்னை ஒன்றும் செய்ய மாட்டார்கள். அஃது எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஓ! ஒரு விஷயம் உன்னிடம் சொல்ல மறந்துவிட்டேன். திருடர்களின் தலைவனுக்கு நீ மனைவியாக வேண்டுமென்று உன்னிடம் சொல்லும்படி திருடர்களும், அவர்களின் தலைவனும் என்னிடம் சொன்னார்கள். நான் பலமுறை அவ் விஷயத்தை உன்னிடம் சொன்னேன். நீ சம்மதிக்கவில்லை. இப்பொழுது நான் சொல்லுகிறபடி செய். என்ன செய்கிறது. நீ அவர்கள் இஷ்டப்படி நடந்துகொள்வாயானால் நலம். இல்லாவிடில் நிச்சயமாய் உன்னை அவர்கள் கொன்றுவிடுவார்கள். ஒரு சமயம் என்னையும் உன்னோடு சேர்த்துக் கொன்றுவிடுவார்களென்று நினைக்கிறாயோ? அவ்விதம் உன்னோடு சேர்த்து என்னைக் கொன்றுவிட மாட்டார்கள் என்பதை நீ நன்றாய் அறிந்துகொள். திருடர்கள் இன்னும் இரண்டு மாதம் வரைக்கும் கெடுவிட்டிருக்கின்றார்கள். அதற்குள் நீ உன் மனத்தைத் தேற்றிக்கொண்டு உன் அபிப்பிராயத்தைச் சொல்லிவிடு' என்றான்.

இவ்வண்ணம் மோகவதியோடு மதிவர்மன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் திடுதிடு வென சிலர் ஓடிவருகிறது போல் சப்தம் கேட்டது. அத்தொனியைக் கேட்டவுடன்

மகிபதியும் ஜயபாலனும் திடுக்கிட்டு எங்கு மறைவோ மென்று எண்ணினார்கள். ஒரு யுக்தி தோன்றிற்று. உடனே அவர்கள் அருகிலிருந்த ஒரு பெரிய விருக்ஷத்தின்மீது பரபரப்புடன் ஏறி ஒளித்துக் கொண்டார்கள்.

உடனே சுமார் இருபது பெயர் அடங்கிய ஒரு சிறிய கூட்டத்தார் அவ்விடம் வந்தார்கள். அவர்களிடம் கொள்ளைப் பொருள்கள் அதிகமாயிருந்தன. அவர்களில் ஒருவன் சுமார் ஆறு அடி உயரமும், பருத்த தேகமும், கறுத்த நிறமும், கம்பீர நடையும் உடையவனாயிருந்தான். அவனே அச் சோரர் கூட்டத்திற்குத் தலைவன். அவன் தன்னுடைய வேலைக்காரர்களாகிய திருடர்களைப் பார்த்து 'ஏன் நிற்கின்றீர்கள் சுரங்கவாயிலைத் திறந்து நாம் கொண்டு வந்த பொருள்களை உள்ளே கொண்டுபோய்ப் பத்திரப் படுத்தி வையுங்கள். உங்களுக்கு இஷ்டமானால் நீங்கள் நித்திரை செய்யலாம்; இப்பொழுது உங்களுக்கும் நித்திரை மயக்கம் அதிகமா யிருக்கும்' என்றான். அவன் இவ்வண்ணம் சொன்னவுடன் மற்ற திருடர்கள் ஒன்று கூடி ஆங்கிருந்த ஒரு பெரிய கருங்கல்லைப் புரட்டினார்கள். உடனே பளீரென்று உள்ளே எரிந்துகொண் டிருக்கும் விளக்கின் பிரகாசம் தோன்றிற்று. விளக்கின் பிரகாசம் எவ்வழியாக வெளியே தெரிந்ததோ அவ்வழிதான் சுரங்கவாயிலென்று வாசகர்கள் அறிந்துகொள்ளுங்கள். திருடர்களின் தலைவன் தவிர மற்ற திருடர்களெல்லோரும் கொள்ளைப் பொருள்களை எடுத்துக்கொண்டு சுரங்கத்திற்குட் சென்று அவைகளைப் பதனப் படுத்திவிட்டு மதுபானம் செய்தார்கள். சந்தோஷத்தினால் ஓடிப் பாடிக் கூத்தாடினார்கள். பிறகு சிறிது நேரத்திற்குள் மயக்கத்தினால் ஒன்றும் தோன்றாமல் படுத்து நித்திரையோடு உறவாடலானார்கள்.

சுரங்கத்திற்கு வெளியிலிருந்த திருடர்களின் தலைவன் ஐந்து நிமிஷங்களுக் கொருமுறை தன் தலையை அசைத்து எந்த விஷயத்தைப் பற்றியோ தனக்குள் ஆலோசித்துக் கொண்டிருந்தான். அரைமணி நேரம் ஆயிற்று. திடீரென்று எழுந்து வேகமாய்ச் சென்று மோகவதியும், மதிவர்மனு மிருக்கும் கல் வீட்டின் கதவைத் திறந்து மதிவர்மனைமட்டுமே வெளியே அழைத்துக்கொண்டு கதவைப் பூட்டிவிட்டு மதிவர்மனோடு சிறிது தூரம் சென்று அவனோடு பின்வருமாறு சம்பாஷிக்கலானான்.

திருடன்:—ஏ! மதி வருமா! அந்தக் குட்டி மோகவதியோ, மோகவிதியோ? அவ—என்னை அவளுக்கு புருசனு வைச்சிக்க என்ன சொன்னு?

மதிவர்மன்:—என்ன போங்க; எவ்வளவு கஷ்டம் தெரியுமா? நான் செய்த உபதேசத்திற்கு ஒரு கல்லாயிருந்தாலும் கரைந்துவிடும். அவள் மனம் கொஞ்சமாவது உங்கள் பேரில் திரும்பவில்லை. என்ன செய்கிறது.

திருடன்:—என்னு—நான் செய்யர திண்ணு என்ன கேக்கற? புருசன் வீட்டில் ரொம்ப கட்டு காவலிலே யிருந்தவளை மந்தரம் பண்ணி அழைச்சுக்கிட்டு வந்த பயல் நீ இப்ப அவளை எனக்கு வசப்படுத்த உன்னால் முடியில்ல இண்ணு நீ சொன்னு நான் நம்புவனு! சரி! சரி! உன் தந்திரத்தில் கொஞ்சம் எனக்கும் தெரியும். அப்படியா சமாச்சாரம். இப்படி பொழுதை வீணு கழிச்சிக்கினு இருந்தா நான் உங்கரெண்டு பேரையும் விட்டு விடுவேனிண்ணு எண்ணிக்கினு இருக்கிறியா என்ன? விட்டுவிடுகிற பேச்சில்ல. இந்தக் கத்தியாலியே குத்திப்புடுவேன். எமன் கையில் போன உசுரும், நெருப்பில் காஞ்ச இரும்பில்

போன தண்ணியும் திரும்பி வந்தாலும் வரும். என்னுண்டே அகப்பட்ட நீங்க தப்பமுடியாது போடா போ. இனிமே நீ அந்தக் குட்டியை எனக்கு வசப்படுத்த வாணும், எனத்கு அவளை வசப்படுத்திக்கத்தெரியும். இவ்வளவுகால மாநாளை வீணுகளிச்சுக்கினு இருந்தியல்ல. அதுக்காக உன்னே சும்மா வைக்கக்கூடாது. வாடா, இங்கே வா!'

என்று சொல்லித் திருடர்களின் தலைவன் மதிவர்மனைச் சுரங்கத்திற்குள் கொண்டுபோய் அவனை அங்கிருந்து ஓர் இருப்புக்கூண்டில் அடைத்துவிட்டுச் சுரங்கத்திற்கு வெளியே வந்தான்.

வாசகர்கள் 'திருடன் ஒருவன் தானே. அவனை மதிவர்மன் ஒருகை பார்த்து விட்டு ஒடிப்போய் விடலாகாதா' என்று நினைக்கலாம். அதற்குத் திருடன் சாமான்யனல்ல. அன்றியும் அவனிடம் கைத்துப்பாக்கி ஒன்றிருந்தது. அது மதிவர்மனுக்குத் தெரியும். அதனுல் தான் மதிவர்மன் ஒன்றும் செய்யாமலிருந்துவிட்டான். நிற்க,

சுரங்கத்திற்கு வெளியே வந்த திருடர்களின் தலைவன் மோகவதி இருக்கும் கல் வீட்டிற்கு வேகமாய்ச் சென்று அவ்வீட்டின் கதவைத் திறந்து உள்ளே சென்றுன். இவனைக் கண்டவுடன் மோகவதி பயந்து நடுங்கினுள். 'மணவாளனைத் தூஷித்த மாபாவியாகிய எனக்கு மரணகாலம் சமீபித்து விட்டதோ' என்று எண்ணி வருந்தினுள். அவள் கண்களில் நின்று நீர் பெருகிற்று. அவள் அருகில் சென்றுன் கள்வர் தலைவன். 'கண்ணே! மோகவதி என்னைக் கண்டவுடன் என் இவ்விதம் நடுங்குகிறுய்? பயப்படாதே' தைரியமாயிரு. நான் உன்னை ஒன்றுஞ்செய்யேன்என்றுன்.

'ஐயா கள்வர் தலைவரே! என்னை இம்சிப்பீர்களென்று எண்ணிப் பயப்படுகிறேன். என்னை ஒன்றும் செய்யாதீர்

கள். தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ளக் காத்துக் கொண்டிருக்கிறேன்' என்றாள் மோகவதி.

'ஆகா இப்பொ தான் எனக்குத் திருப்தியாச்சு. நீ என் இஷ்டப்படி நடக்கக் காத்துக்கொண் டிருக்கிறபடி யால் இனி நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன். என் பொண்டாட்டி எறந்து ஆறுமாசமாச்சு. சொரங்கத்திலே யிருக்கும் என்னுடைய ஊட்டிலே இப்பொ திருடர்களைத் தவிர வேறு ஸ்திரீகள் யாரும் இல்லை. நீ அங்கே வந்தி ருந்து கொண்டு எனக்கு ஆவ வேண்டிய காரியங்களை செய்ஞ்சி கொண்டிரு வரையா ஒன்ரோசனை யென்னு சும் மாசொல்லு' என்று கேட்டான் திருடன்.

அவன் சொன்ன வார்த்தைக்குச் சம்மதித்தாள் மோக வதி. பிறகு திருடன் மோகவதியை அழைத்துக்கொண்டு கல் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சிறிதுதூரம் கடந்து சென்று ஆங்குள்ள சுரங்கத்திற்குட் போய்விட்டான்.

நான்காவது அத்தியாயம்.

இரகசியத்தை வெளியிடுதல்.

"தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்-திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே னின்று"—

சிவப்பிரகாச சுவாமிகள்.

'நான் இவ்வளவு நேரம் ஆலோசித்தும் முடிவு ஏற்படவில்லை. என்ன செய்யலாம். பாவ புண்ணியங்களுக்குத் தகுந்தபடி நன்மைதீமைகள் உண்டாகின்றன. இவைமட்டுமல்ல. இன்னும் எத்தனையோ குடும்பங்கள் துஷ்ட ஸ்திரீகளினால் இருந்த விடமே தெரியாமற்போயின. ஸ்திரீகளிற் சிலர் எதை வேண்டுமானாலும் செய்துவிடுகிறார்கள். புருஷர்களிலும் சிலர் அப்படியே. ஒரு ஸ்திரீ துர் நடத்தைக்குட்பட்டவளா யிருந்தால் அவளுடைய கணவன் நற்குணம் வாய்ந்தவனா யிருப்பினும் அவன் தன்னை நன்றாய் அறிந்தவர்களின் முன்னிலையிற் செல்ல வெட்கப்படுகிறான். ஓடுகிற ஜலத்திலிட்ட இலையானது ஓரிடத்திலும் நில்லாமல் அந்நீரோடு ஓடிக்கொண்டிருப்பதுபோலப் பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கவாறு மனிதர்களுடைய நிலைமையானது நன்மை தீமை யென்னும் ஜலத்தில் ஓய்வின்றி மாறிமாறி ஓடிக்கொண்டிருக்கிறது. நான் அமிர்தசாகரனை உத்தமனென்று எண்ணிக்கொண்டிருந்தேன். இப்பொழுதுதானென்ன? அவனே மோகவதியை அழைத்துக்கொண்டு போயிருப்பானென்று எப்படிச் சொல்லக்கூடும், ஒருவர்பின்னொருவராகக் காணு

மற்போகக் காரணம்? அதுதான் எனக்குச் சந்தேகம். உலகத்தில் துஷ்டன் பார்வைக்கு உத்தமனைப்போலும், உத்தமன் இரகசியத்தில் துஷ்டனாயு மிருப்பது இயற்கையே. நான் எங்குச் சென்று காணமற் போனவர்களைத் தேடுவேன்! தேடுவோமென்றாலும் இரகசியத்தில் ஓடிப்போனவர்கள் தங்களைப் பிறர் காணமுடியாவண்ணம் சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருப்பார்களன்றோ? எல்லாவற்றிற்கும் மங்களபுரிக்குச் சென்றுதான் ஆலோசனை செய்ய வேண்டும். நல்லவர்களுடைய எண்ணம் நிறைவேறாமற் போகாது' என்று இவ்விதமாக வீட்டின்வெளிப்புறமிருந்த நாற்காலியின்மீது உட்கார்ந்துகொண்டு ஆலோசனை புரிந்துகொண்டிருந்தான் ஞானசம்பந்தன். ஜானகியின் கணவன் இவனே. இவனிடம் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து 'யாரோ இருவர் தங்களைப்பார்க்க வந்திருக்கிறார்கள்' என்று பணிவுடன்சொன்னான்.

'என்னையா பார்க்கவந்திருக்கிறார்கள்? அவர்களை அழைத்துக்கொண்டு வா' என்றான் ஞானசம்பந்தன். உடனே வெளியே நின்றுகொண்டிருந்த மகிபதி ஜயபாலன் ஆகிய இருவரையும் அழைத்துக்கொண்டு வந்தான் வேலைக்காரன். வந்தவர்கள் இருவரையும் ஞானசம்பந்தன் மரியாதையுடன் வரவேற்று அங்கிருந்த நாற்காலிகளின் மீது உட்காரச் செய்து அவர்கள் தாக வரட்சியுட னிருப்பதை அறிந்து மோர் கொண்டுவரச் சொல்லி இருவருக்கும் கொடுத்தான். அதை இருவரும் பருகித் தாகம் தணிந்தபின், 'உஸ்—என்ன வெயில்: இப்படிக் கொளுத்துகிறது' என்று சொல்லிக்கொண்டு தத்தம் அங்கவஸ்திரங்களினால் விசிறிக்கொண்டார்கள். அவர்களோடு ஞானசம்பந்தன் பின்வருமாறு சம்பாஷிக்கலாயினான்.

ஞானசம்பந்தன்:—நீங்கள் யார்? இங்கு என்ன விஷயத்திற்காக என்னைப் பார்க்க வேண்டுமென வந்தீர்கள்?

மகிபதி:—நாங்கள் இருப்பது புதுவை நகரம். இவ்வூரிலுள்ள கோட்டையைப்பார்க்க ஆவல்கொண்டு வெகுநாள் எண்ணியிருந்து இப்போது இங்கு வந்தோம்.

ஞானசம்பந்தன்:—அப்படியா! ஆனால் நீங்கள் எப்பொழுது இவ்வூருக்கு வந்தீர்கள்?

மகிபதி:—நேற்று.

ஞானசம்பந்தன்:—இவ்வூரில் உங்களுக்கு உறவினர்களெவரேனும் இருக்கிறார்களா?

ஜயபாலன்:—இல்லை.

ஞானசம்பந்தன்:—அப்படியானால் நேற்று இரவு எங்குத் தங்கியிருந்தீர்கள்?

ஜயபாலன்:—நாங்கள் இவ்வூருக்கு வருகையில், வழியில் சில பலசரக்கு வண்டிக்காரர்களைச் சந்தித்து அவர்களோடு வந்தோம். அவர்கள் இவ்வூர் டவுன் போலீஸ் ஸ்டேஷன் சமீபத்திலுள்ள பல ஆலவிருட்சங்களின் கீழ்த் தங்கினார்கள். நாங்களும் அவர்களோடு அங்குத் தங்கினோம். பொழுது விடிந்தது. இவ்வூர் பெரிய குளத்திற்குச் சென்றோம். அங்கொரு சமாச்சாரம் கேள்விப்பட்டோம். அச்சமாச்சாரத்திற்குரிய சில விஷயங்களைத் தங்களிடத்தில் தெரிவிக்க இப்பொழுது இங்கு வந்தோம். தங்கள் முகத்தைப் பார்த்தால் ஏதோ கவலையுடனிருக்கிறீர்களெனத் தெரிகிறது. தங்கள் கவலைக்குக் காரணம் என்ன?

ஞானசம்பந்தன்:—என் கவலைக்குக் காரணமான விஷயம் சொல்லக்கூடியதன்று. நீங்கள் குளக் கரையில் அறிந்த சமாச்சாரம் என்ன? அச்சமாச்சாரத்திற்குரிய என்ன விஷயத்தை என்னிடம் தெரிவிக்க வேண்டி வந்தீர்கள்?

ஜயபாலன்:—தங்கள் மனத்திலுள்ள கவலைக்குக் காரணமாயிருக்கும் விஷயத்திற்குரிய சில விஷயங்களைச் சொல்லத்தான் நாங்கள் தங்களிடம் வந்தோம்.

ஞானசம்பந்தன்.—(மனத்திற்குள்) என்ன இவர்கள் இவ்விதம் பேசுகிறார்கள்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இவர்கள் என் மனத்திலுள்ள விஷயங்களில் எதை அறிந்தார்கள்? இவர்களையும் நான் இதற்குமுன் பார்த்ததில்லை. (மகிபதியையும், ஜயபாலனையும் பார்த்து) நீங்கள் என் மனத்திலுள்ள கவலைக்குக் காரணமாயிருக்கும் விஷயங்களை என்னிடம் சொல்லவந்தவர்களானால் எனக்கு மிகவும் சந்தோஷமே! ஆனால் என் மனத்திலுள்ள கவலைக்குக் காரணமாயிருக்கும் விஷயம் இன்னதென்று நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? நான் எவ்விஷயத்தைக் குறித்துக் கவலை கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஜயபாலன்:—தங்கள் மனதிலுள்ள கவலைக்குக் காரணமாயிருக்கும் விஷயங்களை நாங்கள் எவ்விதத்தில் அறிந்துகொண்டோமென்பதைப்பற்றிச் சொல்ல முடியாது. ஆனால் தாங்கள் எவ்விஷயத்தைப்பற்றிக் கவலை கொண்டிருக்கிறீர்கள் என்பதை மாத்திரம் எங்களால் இது சமயம் சொல்ல முடியும்.

ஞானசம்பந்தன்:—சரி; நான் எந்த விஷயத்தைக் குறித்துக் கவலைகொண்டிருக்கிறேன்? அதைமட்டும் தங்களுக்குத் தெரிந்தவரைக்கும் சொல்லுங்கள் பார்ப்போம்.

ஜயபாலன்:—ஐயா! நீங்கள் எங்களுக்குப் பழக்கமில்லாத ஒருவராயிருந்த போதிலும் நான் சொல்லிக்கொண்டு வருவதைக் கவனமாய்க் கேளுங்கள். தங்களு

டைய கவலைக்குக் காரணமா யிருக்கும் விஷயமாவது, நீங்கள் மங்களபுரியிலிருக்கும் சதானந்தரின் மருமகன் சதானந்தரின் குமாரன் அமிர்தசாகரனைச் சில மாதங்களாகக் காணோமென்றும், அவன் காணமற்போன நான்கு தினங்களுக்குப் பின் அவர் மனைவி மோகவதியும் காணமற் போய்விட்டதாகவும், ஆகையால் மோகவதி, அமிர்தசாகரன் ஆகிய இருவரும் சேர்ந்து ஓடிப்போ யிருப்பார்களென்றும், அவர்கள் இருக்கும் இடத்தை எவ்விதத்திலாவது கண்டுபிடிக்க வேண்டுமென்றும் சதானந்தரிடத்திலிருந்து தங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அக் கடிதத்தைப் படித்தவுடன் தங்களுக்குக் கவலை யுண்டாயிற்று. மோகவதியை அழைத்துக்கொண்டு போனவன் அமிர்தசாகரனென்று சொல்லுவோமானால் பாவமுண்டாகும். அமிர்தசாகரனை நாங்கள் பார்க்கவேயில்லை. மோகவதி தனக்கிஷ்டமாகிய துர்வழிக் குட்படும்படி அமிர்தசாகரனிடம் பலமுறை சொன்னதாகவும், உத்தமனாகிய அமிர்தசாகரன் மோகவதியைப் பார்த்து, 'நான் உன்னிஷ்டத்திற்கு உடன்படமாட்டேன்' என்று கூறியதாகவும், 'என் இஷ்டப்படி நடந்துகொள்ளாவிட்டால், உன்னை அபகீர்த்திக் குட்படுத்தி விடுவேன்' என்று மோகவதி உரைத்ததாகவும், அதனால் அமிர்தசாகரன் பயந்து, இனி நாம் இவ் வீட்டிலிருந்தால் நமக்குக் கெடுதல் உண்டாகுமென்று எண்ணி எவ்விடத்திற்கோ போய்விட்டா னென்றும் எங்களுக்குத் தெரிகிறது. பிறகு மோகவதிக்கும் அமிர்தசாகரனுக்கும் நடந்த சம்பாஷணையை எவ்விதத்திலோ அறிந்துகொண்ட எவனோ அன்னியனொருவன் அமிர்தசாகரன் எழுதுவதுபோல் மோகவதிக்குக் கடிதமெழுதினான். கடிதத்தைப் படித்த மோகவதி அக்கடிதத்தில் எழுதியிருந்த

வண்ணம் அன்றிரவு பிரயாணமாகச் சதானந்தர் வீட்டின் பின்புறமுள்ள பாழ்மண்டபத்திற்குச்சென்றாள்.முன்னமே அங்கு வந்திருந்த அன்னியன் மோகவதியை அழைத்துக் கொண்டு சென்றான். அவர்கள் இருவரும் ஊருக்குச் சமீபத்திலுள்ள காட்டின் வழியாய்ப் போகையில் திருடர்கள் அவர்கள் இருவரையும் பிடித்துக்கொண்டுபோய் இவ்வூரில் உள்ளகாட்டில் தங்கள் வசத்தில் வைத்திருக்கிறார்கள்.

ஞானசம்பந்தன்:—ஐயா! உங்களுக்கு நான் அநேக வந்தனம் செய்கிறேன். அத் துன்மார்க்கி மோகவதியை அழைத்துக்கொண்டு போனவன் எவனோ அன்னியனென்று சொன்னீர்களே—அவன் அன்னியனென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? மோகவதியை நீங்கள் இதற்கு முன் பார்த்ததில்லையே. அதனால் நீங்கள் பார்த்த ஸ்திரீ மோகவதி தானென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?

ஜயபாலன்:—ஐயா! நாங்கள் இவ்வூரிலுள்ள கோட்டையைப் பார்க்க வேண்டுமென்று ஆவல்கொண்டு புதுவையிலிருந்து ரெயில் மார்க்கமாக மயிலம் வந்து சேர்ந்து அங்கிருந்து நடந்து வருகையில் இவ்வூருக்குச் சமீபத்திலுள்ள காட்டில் வழிதெரியாமல் எதையோ ஒரு வழியைப்பற்றி மரங்கள் அடர்த்தியாய் வளர்ந்துள்ள ஓரிடத்திற்குச் சென்றுவிட்டோம். அப்பொழுது இரவுகாலம். அங்குக் கற்களால் கட்டப்பட்டவீடொன் றிருந்தது. நாங்கள் அந்த வீட்டின் சமீபத்தில் சென்றோம். வீடு பூட்டப்பட் டிருந்தமையால் பலகணியின் வழியாய் உள்ளே பார்த்தோம். உள்ளே ஒரு ஸ்திரீயும், புருஷனும் இருந்தார்கள். அவர்களில் புருஷன் ஸ்திரீயைப்பார்த்து, "மோகவதி! என்ன மோ மதி பிசகி நீயும் இவ்விதமானாய்; என் விதியும் இப்படி

ஆயிற்று" என்முன். அதற்கு மோகவதி அவனைப் பார்த்து, "அடே பாவி! மதிவர்மா! நீ அமிர்தசாகரனைப்போல் கடிதம் எழுதி மங்களபுரியிலிருந்த என்னைப்பாதி இரவில் அழைத்துக் கொண்டு வந்து திருடர்களிடம் அகப்படச் செய்ததுமன்றி நீயும் அகப்பட்டுக் கொண்டாயே—அந்தப் பவிஷுக்கு உனக்குப் பேச்சு ஒரு கேடா?" என்முள். அதற்கு மதிவர்மன் மோகவதியைப் பார்த்து "என்னடி சொன்னுய்? மானமாய் வாழ்ந்துகொண் டிருந்த உன்னை நான் அழைத்துக் கொண்டுவந்து கெடுத்து விட்டேனே? மைந்தனென்றும் எண்ணுமல் அமிர்தசாகரனை இச்சித்த மடைச்சி நீயன்ருே? அன்றியும் நீ அமிர்தசாகரனைப் பார்த்து "அடே அமிர்தசாகரா! நீ என்னிஷ்டத்தை நிறைவேற்ருவிடில் உன்னை அபகீர்த்திக்குட்படுத்திவிடுவேன். அன்றியும் உன்னைப் பற்றி உன் தந்தையிடம் அமிர்தசாகரன் என்னை இச்சிக்கிருனென்று சொல்லுவதோடும், உன்னை அனைவரும் காமி, துஷ்டன் என்று சொல்லும்படி செய்துவிடுகிறேன் பார்" என்று சபதம் செய்தாயே—அது எனக்குத் தெரியாதென்ருே எண்ணிணுய்? கற்பழிந்த உனக்குக் கர்வம் ஒரு கேடா? பாவத்துக்குப் பயப்பட்டான் அமிர்தசாகரன். பாவம்! மங்களபுரியில் சதாநந்தர் எவ்விதமாயிருக்கிருரோ' என்றும் இன்னும் பலவிதமாக மதிவர்மன் மோகவதியையும், மோகவதி மதிவர்மனையும் தூஷித்துக்கொண்டிருக்கையில் திருடர்கள் வருகிற சப்தம் கேட்டது. உடனே நாங்கள் இருவரும் எங்களைத் திருடர்கள் பார்க்காவண்ணம் அருகிலிருந்த ஒரு மரத்திலேறி ஒளித்துக்கொண்டோம். வந்த திருடர்கள் ஒரு பெரிய கல்லைப் புரட்டினுர்கள். அக் கல்லின் கீழ், சுரங்க வாயிலொன்று இருந்தது. அந்த வாயிலின்வழியாய்த் தலைமைத்திருடன் தவிர மற்றைத் திருடர்

ளெல்லோரும்சுரங்கத்திற்குள் போய்விட்டார்கள். தலைமைத் திருடன் மேற்சொன்ன ஸ்திரீ புருஷர்களிருக்கும் வீட்டின் கதவைத்திறந்து அந்தஸ்திரீ புருஷர்களிருவரையும் ஒருவர் பின் ஒருவராய் மேற்படி சுரங்கத்திற்குள் அழைத்துக் கொண்டு போய் விட்டான். இவ்வளவுதான் நாங்கள் அறிந்த விஷயம். இதனால்தான் நாங்கள் கண்ட ஸ்திரீ மோகவதிதானென்றும், புருஷன் எவனோ அன்னியனென்றும் சொன்னோம். தலைமைத்திருடன் சுரங்கத்திற்குள் போய் விட்டபின், நாங்கள் திருடர்களிடம் அகப்படாமல் தப்பியதே போதுமென்று எண்ணிக்கொண்டு மரத்தை விட்டிறங்கி அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சிறிது தூரம் வந்தவுடன் கடவுளின் கிருபையால் இவ்வூருக்கு வரும்வழியை அறிந்து அவ்வழியே வந்த சில வண்டிக் காரர்களோடு சேர்ந்து இவ்வூருக்கு வந்தோம். இன்று காலை ஒரு விதமாய், தாங்கள் சதானந்தரின் மருமகனென்று அறிந்துகொண்டோம். நாங்கள் காட்டில் கண்டவர்களைப்பற்றித் தங்களிடம் சொல்லி அதற்கு ஆகவேண்டிய உதவியைச் செய்யாமற் போவது சரியல்லவென்று எண்ணிக்கொண்டு அவர்களைப் பற்றித் தங்களிடத்தில் சொல்ல வந்தோம். நான் மேற் சொன்ன விஷயங்கள் தாம் தங்கள் கவலைக்குக் காரணமாயிருக்கலாம் என்பது சொல்லவேண்டுவதில்லையே?

ஞானசம்பந்தன்:—"உண்மையே. ஐயா! நீங்கள் இவ்வளவு தூரம் மோகவதியைப் பற்றி என்னிடத்தில் சொன்னதனால் எனக்கு மிகச் சந்தோஷமாயிற்று. நீங்கள் இருவரும் தயை செய்து இன்று என் வீட்டில் தங்கி இருங்கள். இவ்வூர் "டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டர்" எனக்கு அதிக பழக்கமானவர். அவரோடு சொல்லி அவரையும் அவருடன் சில கான்ஸ்டேபிள்களையும் அழைத்துக்கொண்டு நீங்

கள் சொன்ன, மோகவதி இருக்குமிடத்திற்கு வருகிறேன். நீங்கள் திருடர் இருக்குமிடத்தை மட்டும் காட்டவேண்டும். அதற்கான உதவிகளையும் செய்யவேண்டும்'' என்றான்.

மகிபதியும், ஜயபாலனும் தங்களால் ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் செய்கிறோமென்று ஒப்புக்கொண்டார்கள். பகல் போஜனமானவுடன் ஞானசம்பந்தன் மகிபதிக்கும், ஜயபாலனுக்கும் வீட்டின் வெளிப்பக்கத்திலுள்ள அறையில் படுக்கைக்கு ஏற்பாடுசெய்தான். நேற்றுதினம் முற்றிலும் அதிக அலைச்சல் பட்டவர்களாகையால் மகிபதியும் ஜயபாலனும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள். மோகவதியைப்பற்றிய விஷயங்களை ஞானசம்பந்தனால் அவன் மனைவி முதல் அவ்வீட்டிலிருந்த அனைவரும் அவ்வூரிலுள்ள சிலரும் அறிந்துகொண்டார்கள்.

ஐந்தாவது அத்தியாம்

மதிவர்மனின் கொலை.

"தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடக்கின்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை—தன்னைக்
குடிகெடுத்த நெஞ்சிற்றுக் குற்றேவல் செய்யின்
பிடிபடுக்கப் பட்ட களிறு" —முனைப்பாடியார்.

சுமார் இருபதுமைல் நீளமும், ஏழுமைல் அகலமும் வாய்ந்த ஒரு பெரிய காட்டில், பார்ப்பதற்குப் பயங்கரமாக மரங்களெல்லாம் ஒன்றாயினும் சிறியதன்றி ஆகாயமளாவி வளர்ந்திருந்தன. சிறு செடிகளும் இல்லாமற் போகவில்லை.

ஆனால், அவைகளெல்லாம் முட் புதர்கள். சந்திரன் ஆகாயத்தி லிருக்கும் மேகங்களால் மறைக்கப்பட்டிருந்தபடியால், எங்குப் பார்த்தாலும் இருள் மயமாயிருந்தது. காற்று வெகு வேகமாய் வீசிற்று. மரங்களெல்லாம் கிர் கிர்ரென்று ஒலித்தன. செழித்தோங்கி வளர்ந்திருந்த மூங்கில்களெல்லாம் ஒன்றோடொன்று உராய்ந்து தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தன. தீயின் கொடுமையால் அம்மூங்கில் மரங்களிலிருந்த தேன் கூட்டினுள்ளிருக்கும் தேனெல்லாம் கசிந்து சொட்டிக்கொண் டிருந்தது அநேகம் பாம்புகள் தீயில் அகப்பட்டுக் கொண்டு பிராணனை இழந்தன. இவ்வரணியத்தின் ஒவ்வோரிடத்திலும் இம்மாதிரியாக அநேக மூங்கில்கள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தன, இவ்விதச் சம்பவம் அடிக்கடி மூங்கில்கள் விசேஷமாயுள்ள இடங்களில் உண்டாவது வழக்கம். இவ்வரணியத்தில் இருந்தாற் போலிருந்து, படபட, திடுதிடு வென்ற ஓசை உண்டாயிற்று. அந்த ஓசையோடு மனிதர்களின் பயங்கரமான கூரலோசையும் ஒலித்தது. காரணம்; இவ்வரணியத்திலுள்ள திருடர்கள் அவர்களின் குல தெய்வமாகிய துர்க்கை அம்மனுக்குத் திருவிழா நடத்துகிறார்கள். திருடர்களின் கோவிலாயிருந்தும், பார்வைக்கு மிக உந்நதமாயிருந்தது. ஆனால், விக்கிரகம் மட்டும் பயங்கரமான ரூபத்துடன் சோபித்தது. விக்கிரகத்தின் எதிரில் அநேகம் தலைவாழை இலைகளில் பல (தேவதைகளுக்கு இடும் நிவேதனப் பொருள்) போடப்பட்டது. அநேகம் இள நீர்க் காய்கள் வெட்டி வைக்கப்பட்டிருந்தன. திருடர்கள் அநேகம் தேங்காய்களை உடைத்து வைத்தார்கள். கட் குடம் ஐந்தாறு இருந்தன. சில திருடர்கள் அநேகம் ஆடுகளை விக்கிரகத்துக்குப் பலி கொடுத்தார்கள். பந்தல் திருடர்களின் நாகரிகத்திற்கு ஏற்றவா

ிருந்தது. திருடர்களெல்லோரும் அவரவர்களுக்கு இஷ்டமான வழியில் தூர்க்கையை வர்ணித்தார்கள். சாம்பிராணியின் வாசனை அதிகமாயிருந்தது.

நெற்றியில் உள்ளங்கை அகலமுள்ள சந்தனப் பொட்டுடன் ஒருவன் சுவாமி ஆடிக்கொண்டிருந்தான். உருவத்தில் அவனை ஒரு யானைக்குட்டிக்கு ஒப்பிடலாம். அவன் தலைமயிர் சுருட்டை. நாவற்பழ நிறம் தேகம். தலையில் பதினைந்து கெஜம் நீளமுள்ள ஒரு காவி வஸ்திரத்தைச் சுற்றியிருந்தான். கையில் ஒரு நீண்ட பிரம்பு வைத்துக்கொண்டிருந்தான். அவன் இடுப்பில் கட்டிக்கொண்டிருந்தது மஞ்சள் நீரில் நனைத்த ஒரு முரட்டுத்துணி. சுவாமி ஆடிக்கொண்டிருந்த இவனைச் சுற்றிலும் அநேக திருடர்கள் உடுக்கை அடித்துக்கொண் டிருந்தார்கள். சிலர் சுவாமியை ஸ்தோத்திரம் செய்து கொண்டார்கள். சிலர் சுவாமி ஆடுகிறவன் காலில் விழுந்து நமஸ்கரித்து நின்றூர்கள். ஆனல் ஆடுகிற சுவாமிக்குக் கோபம் அதிகமாயிருந்தது. சுவாமி ஆடுகிற திருடனுக்கும், திருடர்களுக்கும் பின் வருமாறு சில சம்பாஷணைகள் நடந்தன.

திருடர்கள்:—சாமி! கோவபண்ணு நாங்க ஏளெ எளியவங்க எப்படி பொழைப்போம். எங்கள நீங்கதான் காப்பாத்தணும். ஆண்டவனே! நாங்க எல்லாம் உங்க குஞ்சு கொழந்தைங்க—ஏங்கள நீங்கதான். சாமீ! நாங்கள் போட்ட பூஜை உங்களுக்கு ஏர்வைதாணு?—ஒண்ணும் சொல்லாத இப்படி சும்மா இருந்தாக்கா ஏளெ எளியவங்க என்ணு பண்ரதுங்க?

சுவாமி:—உஸ்—உஸ்—அடே! நான் உங்கள இவ்வளவு நாளா காப்பாத்திக்கிணு இருந்தேனே ஏண்டா?

திருடர்கள்:—ஆமாம்! காப்பாத்திக்கினுதான் இருந்தீங்க, அதலேதான் என்னு தடைக.

சுவாமி :—உஸ்—காப்பாத்திக்கினு இருந்தேண்ணு தெரியுமே—ஏண்டா! எனக்குப் படையல் போட்டிருக்கிறீங்களே—எல்லாம் சரியாய் படையல் போட்டிங்களா? உம்—(கடகடவென்று பல்லைக் கடிக்கிறான்,)

திருடர்கள்:—அம்மனே! இப்படி இந்த ஒடம்பை முறுக்காதீங்க. நாங்க ஏழைங்க நாங்க சரியாதா படையல் போட்டிருக்கிறோம். குறே இருந்தா சொல்லுங்க!

சுவாமி :—உஸ்—குறே இருந்தா சொல்லவா! அடே! எனக்கு வெத்தலை வைச்சிங்களாடா?

திருடர்கள் :—வைச்சித்தாங்கிது. நீங்க சாமியாச்சே நாங்க வெத்தலை வைச்சிக்கிறது ஒங்களுக்குத் தொரியாதா?

சுவாமி:-தெரிஞ்சுக்கினுதாண்டா கேட்டேன். ஆமாம்! வெத்தலை வைச்சிங்களே—ஏண்டா பாக்கு வைக்கல?

திருடர்கள்:— என்னுங்கசாமி — எவ்வளோ பாக்கு கொட்டி வைச்சிக்கிறோம். அதோ பாருங்க.

சுவாமி:—அடே! நான்தான் உங்க கொலதெய்வம் ஆச்சே—எனக்குத் தெரியாதாடா மக்களா? நீங்க எனக்குப்போட்ட படையலில் வைச்சதெல்லாம் உங்களுக்கு உஸ்—உஸ்=நெனப்பு இருக்குதான்னு பார்த்தேன். எண்டா! எல்லாம் வைச்சிங்களே—சுண்ணும்பு வைக்கிலியே அதுவும் வைச்சிக்கிறோம் இண்ணு சொல்ல முடியுமாடா? ஏண்டா பயல்களா — உஸ்—உஸ் —பார்த்துக்றேண்டா!

திருடர்கள் :—சாமீ! கோவிச்சிக்காதிங்க; சுண்ணும்பு வைக்கிற வளக்கம் இல்லவே இல்லிங்க.

சுவாமி:—ஏண்டா வளக்கமாயில்லை? நீங்கள்ளாம் சுண்ணும்பு இல்லாதையா வெத்தல போட்டுகிறீங்கோ? அது போனுபோவட்டும்; நான், ரொம்ப ஆசையா போனவருசம் கேட்டேனே. அதை மறந்துதானே சும்மா இருந்திட்டிங்க-ஏண்டா? நான் உங்களெ காப்பாத்திக்கினு வரலையாடா பயகலா! ஏன் மறந்தீங்கடா?

திருடர்கள்:—நீங்க எங்கள காப்பாத்தாம வேறே யார் எங்கள காப்பாத்துறுங்க. எல்லாம் உங்கள் தயவுதான். நேத்து சாப்புட்டது என்னுண்ணு இண்ணைக்கு ஞாவகம் இல்லிங்களே--நீங்க போனவருசம் சொன்னேண்ணிங்களே அந்த சேதி இப்ப நீங்க சொன்னிங்கண்ணு எங்களுக்குத் தெரியும். மனசுலே வச்சுகினு தெரியுமா!

சுவாமி:—அடே! உங்களுக்கு எம்மேலே பிரியம் இருந்தா—நான் போன வருசம் சொன்ன சேதி இப்ப உங்களுக்கு நெனப்பு இருக்காதாடா பயகலா!

திருடர்கள்:—அப்படியா சொல்லதுங்க; யாருக்கும் ஞாவக மறதியாவது வயக்கந்தானே—அதுக்காக நீங்க, எங்களுக்கு உங்கமேலே பிரியம் இல்லேண்ணு சொல்லலாமா?

சுவாமி:—'சரி! அந்த சேதியை நான் இப்ப சொன்னு சொன்னபடி செய்விங்களாடா?'

திருடர்கள்:—'என்ன ஆத்தா அப்படி சொன்னிங்களே—நீங்க சொன்னு சொன்னபடி செய்ய தடையில்ல. எங்க உயிரை கேட்டாலும் தர தயாராகிறோம்.'

சுவாமி:—சந்தோசண்டா மக்களா. என் இச்சப்படி நடக்கிறிங்கோண்ணு தானே உங்கள ஆர்கையிலும் அகப்படாம இருக்கும்படி காப்பத்திக்கிணுவாரேன். நான் ஒரு நரபலி வேணுமுண்ணு கேட்டேனே!

திருடர்கள்:—ஆமாம் சாமி. ஆமாம் சாமி; எங்களுக்கு இப்பதான் நெனப்புவந்திச்சி. இப்ப-உங்களுக்கு நாங்க யாரை பலிகுடுப்போம்? நாங்க மறந்துட்டோம். நாலஞ்சி நாளைக்கி மின்னே ஞாவகம் இருந்திருந்தா திருடப்போனமே, அப்போ யாரையாச்சும் புடிச்சாந்திருப்போம்.

சுவாமி:—அடே மக்களா! கவலைப் படாதிங்கடா ஒரு ஆசாமி இருக்குதடா; இருக்குதடா; இருக்குது.

திருடர்கள்:—எங்கே எங்கே சொல்லுங்க, இப்பவே அந்த ஆசாமியை புடிச்சாந்துடுறோம்.

சுவாமி:—உங்களுக்கு சோறுக்க ஆளு இல்லண்ணு ஒரு மனுசியையும் மனுஷனையும் கொஞ்ச நாளைக்கி முன்னே உங்ககிட்ட கொண்டாந்து சேர்த்தேனே—அந்த மனுசியை ஒண்ணும் செய்யவாணும். அவளாலே உங்களுக்கு ஒண்ணும் கெடுதல் இல்ல. அவளோடு ஒரு மனுசன் வந்தானே—அவன் சமயம் பாத்துக்கிணு இருக்கிறான். அவன் ஒரு வேளை வெளியே தப்பிச்சிக்கிணு போய் உங்களப்பத்தி ஆரிடத்திலேண்ணு சொல்லிபுடுவான். அதுக்கு நீங்க, அவனை பத்திரமாக சுரங்கத்திலே—வைச்சிக்கிணு இருந்தாலும், விட்டுட்டாலும் அவன் உங்களக் கொல்ல எண்ணிக்கிணு இருக்கிறான். அதேதொட்டு,நீங்க அவனை புடிச்சாந்து எனக்குப் பலி குடுத்துடுங்கடா.

திருடர்கள்:—ஆமாம் சாமி—அவன் இருந்தா—நம்பளுக்கு எப்பவும் பயந்தாங்க. நீங்க, எங்கள காப்பாத்தர சாமியிண்ணதினலே நல்ல புத்தி சொன்னீங்க. இதோ அந்தப் பயல புடிச்சாந்து உங்களுக்குப் பலி குடுத்துடுறோம். நீங்க சந்தோஷமா ஏற்று கொள்ளுங்க சாமீ.

என்று இவ்வண்ணம் திருடர்கள் சொன்னவுடன் திருடர்களிலொருவன் சுரங்கத்திற்குட் சென்று அங்கு எதைப் பற்றியோ ஆலோசனை செய்துகொண்டிருந்த மதிவர்மனைப் பார்த்து,—'உன்னை எங்கள் எஜமான் அழைத்துவரச் சொன்னார்' என்று சொல்லி அவனை அழைத்துக் கொண்டு வந்து தன் எஜமானாகிய திருடர் தலைவன் முன்னிலையில் நிறுத்தினான். உடனே திருடர்களெல்லோரும் மதிவர்மனுடைய காலில் விழுந்து நமஸ்கரித்தார்கள். திருடர் தலைவனும் மதிவர்மனுடைய காலில் விழுந்து நமஸ்கரித்தான். காரணம்? இந்தத் திருடர்கள் தங்கள் குலதெய்வமாகிய துர்க்கை அம்மனுக்குப் பலியாகும் எந்தப் பிராணிகளுக்கும் நமஸ்காரம் செய்வது வழக்கம். ஏனென்றால், துர்க்கை அம்மனுக்குப் பலியாகும் பிராணிகள் மிகவும் புண்ணியம் செய்தவைகளென்றும், அதனால்தான் அவைகளுக்குத் துர்க்கை அம்மனுக்குப் பலியாகும் பிராப்தம் கிடைத்ததென்றும் இவர்கள் எண்ணினார்கள். அதனால், பிராணிகளைத் தாங்கள் வெட்டிப் பலியிடுமுன் அந்தப் பிராணிகளின் காலில்விழுந்து அவைகளுக்கு நமஸ்காரம் செய்தால் அவைகளின் புண்ணியத்தில் கொஞ்சம் இவர்களுக்கும் கிடைக்கும் என்பது இவர்களுடைய எண்ணம்.

திருடர்கள் தன்னுடைய காலில் விழுந்து நமஸ்கரித்தவுடன் மதிவர்மனுக்கு அதிக சந்தோஷம் உண்டாயிற்று. 'திருடர்களுக்கு நம்மிடம் ஏதோ ஒருவித மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் இத்திருடர்கள் நம்மை நமஸ்கரித்தார்கள். அல்லது, இதோ சாமி ஆடுகிறதே; இந்தச் சாமிதான் நம்மை விடுதலை செய்யும்படி சொல்லிற்றோ? அல்லது, இத்திருடர்களுக்குத் திருவிழாவின் கொண்டாட்டத்தினால் அதிக சந்தோஷமேற்பட்டு நம்மை விட்டுவிட எண்

ணம் கொண்டார்களோ? அப்படியானல் இவர்கள் என்னுடைய காலில் விழவேண்டிய காரணம்? (சுவாமி ஆடுகிறவனைச்சுட்டி) ஒரு சமயம் இத்தெய்வந்தான் என்னுடைய கால்களில் இவர்களை விழும்படியாகவும், என்னை இவர்களுக்குத் தலைவனுக ஏற்றுக்கொள்ளும்படியாகவும் இவர்களிடம் சொல்லிற்ருே? என்னவோ தெரியவில்லை. போகட்டும், எப்படியானுலும் என்ன? என்னை இவர்கள் கௌரவிக்கின்றார்கள். என்னுடைய நல்ல காலத்தின் அநுகூலத்தால் இன்னும் சில காலத்திற்குள் என் மனைவி மக்களைப் பார்க்கக்கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்கும்போலிருக்கிறது' என்று இவ்வண்ணம் பலவாருக எண்ணி எண்ணி, தன் மனத்திற்குள் மகிழ்ந்துகொண்டிருந்தான் மதிவர்மன். திருடர்களிலொருவன் மஞ்சள்நீரில் நனைத்த ஒரு துணியை மதிவர்மனிடத்தில் கொடுத்து அதை இடுப்பில் கட்டிக்கொள்ளச் சொன்னுன். அதற்கு மதிவர்மன் அவனைப் பார்த்து:—'என்? எதற்காக நீங்கள் என்னை இந்தத் துணியைக் கட்டிக்கொள்ளச் சொல்லுகிறீர்கள்?' என்ருன்.

'எல, மதிவருமா! அங்கால அந்த மஞ்ச துணியே வாங்கி கட்டிக்கோண்ணு சொன்ஞ என்னென்னமோ கேக்கிறீயே' என்ருன் திருடர் தலைவன்.

மதிவர்மன்:—கள்வர் தலைவா! இங்கு நான் வந்தவுடன் எல்லோரும் என் காலில் விழுந்து நமஸ்கரித்தீர்கள். பிறகு மஞ்சள் நீரில் நனைத்த இந்த வஸ்திரத்தைக் கட்டிக்கொள்ளச் சொல்லுகிறீர்கள். இதன் காரணம் என்ன? சொன்னுல் நான் இந்த வஸ்திரத்தைக் கட்டிக்கொள்ளுகிறேன்.

Mr Siva

திருடர்தலைவன்:—சொல்லாட்டி கட்டிக்கமாட்டியடா? சரி! சொல்லுகிறேன் கேளு. எங்க சாமி இதோ ஆடுதே இது எங்கள ஒரு நரபலி வேணுண்ணு கேட்டுது. நாங்க, எங்கே நரபலிக்கு ஆசாமி ஆப்புடப் போவுதுண்ணோம். 'உங்ககிட்ட இருக்கிறனே ஒருமனுஷன், அவனை எனக்குப் பலி குடுத்துடுங்கோ. இல்லாட்டி அவன் உங்கள யாருக் கிட்டண்ணாலும் காட்டிக் கொடுத்திடுவா'ண்ணிச்சி இந்த சாமி. சாமி எங்க ஆத்தா இப்படி சொல்லிப் புட்டாள். உன்ன நாங்க சாமிக்குப் பலிகொடுக்கப் போகிறோம். ஒரு பிராணியெப் பெலி குடுக்கு முன்னே நாங்க அந்தப் பிராணியுட காலில் உழுவது வழக்கம். அதுக்காக நாங்க எல்லாரும் உன் காலில் உழுந்தோம். மஞ்சத் துணியை உனக்குக் கட்டி உன்னே குளுப்பாட்டி வெட்டணும். மஞ்ச தண்ணியை நாங்க உம்மேல ஊத்துறோம்; நீ ஒன்றும் யோசிக்காமே முதல்ல மஞ்ச துணியெ கட்டிக்கோ.

என்று இவ்வண்ணம் திருடர் தலைவன் சொன்னவுடன் மதிவர்மனின் மனம் எவ்விதமா யிருந்திருக்கும் என்பதை வாசகர்களே அறிந்து சொல்லுங்கள்.

மதிவர்மன்:—ஐயோ! கள்வர்தலைவா! நான் யாதொரு அபசாரமும் செய்யவில்லையே—அவ்விதமிருக்க, என்னை எதற்காக வெட்டப்போகிறீர்கள்! கள்வர் தலைவா! உமக்கு அநேக வந்தனம். இருந்திருந்தும் என்னைத்தானா வெட்ட வேண்டும்? எப்பொழுதாவது என்மீது உங்களுக்குத் தயை ஏற்பட்டு என் மனைவி மக்களிடம் என்னை அனுப்புவீர்களென்று எண்ணிக்கொண்டிருந்தேனே-என்னைக் கொன்று விடவோ கங்கணம் கட்டிக்கொண் டிருக்கிறீர்கள்? கள்வர் தலைவா! உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நான் என்ன

சொல்லப்போகிறேன். என்னை வெட்டினால் உங்களுக்கு என்ன பிரயோஜனம் உண்டாகும்? என் மனைவி மக்கள் எவ்வாறிருக்கிறார்களோ? என் வருகைக்குச் சாலவும் எதிர் பார்த்துக்கொண்டல்லவோ இருப்பார்கள்? நான் சிறிது பணத்திற்கு ஆசைப்பட்டு மோகவதியோடு வந்து உங்க ளிடம் அகப்பட்டுக் கொண்டதின் பயனோ இது? என் உயிரை மாய்த்து நீங்கள் வாழவேண்டு மென்று எண்ணு வது சரியா? கள்வர் தலைவா! உனக்கும் உன்னைச் சார்ந் தவர்களுக்கும் அநேக வந்தனம் செய்கிறேன். உங்களுக் குப் பெருமபுண்ணியம்; என்னை விட்டு விடுங்கள்.

திருடர் தலைவன்:—ஒன் வந்தெனமும் வாணும் தந் தெனமும் வாணும். நாங்க உன்னை வெட்டணுண்ணு இதுக்கு முன்னே எண்ணயில்ல. எங்க சாமி உன்னே உயிரோட உடக்கூடாதிண்ணு சொல்லுது. நாங்க உன்ன வெட்டத் தான் போறோம். வீணுபேச்சுவாணும். உன்ன வெட்டா போட்டால் எங்க தெய்வம் எங்கள எங்க குடும்பத்தோட அழிச்சுப்புடும். அதுக்கு நாங்க என்ன செய்யிறது?

மதிவர்மன்:—அப்படியானால் உண்மையில் நீங்கள் என்னை வெட்டிவிடப் போகிறீர்களோ?

திருடர் தலைவன்:-தட என்ன வெட்டத்தாம் போறோம். நேரமாவுது (திருடர்களைப் பார்த்து) அடே! நீங்க ஏண்டா சும்மா இருக்கிறீங்க? (மதிவர்மனைச் சுட்டி) இவன் இப் படித்தான் பேசிக்கினு இருப்பான். நமக்கு நேரமாவுது. இவன் சம்மதிக்க மாட்டாண்ணு தெரியுது. நீங்க இவனப் புடிச்சி வெட்டி புடுங்க. (தலைவன் சொன்னபடி திருடர்கள் மதிவர்மனைப் பிடித்துக் கட்டப் போகிறார்கள்.)

மதிவர்மன்:—திருடர்களே! கொஞ்சம் தயை செய்யுங்கள். நான் என்னுடைய இஷ்ட தெய்வங்களை ஸ்தோத்திரம் செய்யவேண்டும். பிறகு என்னை நீங்கள் வெட்டி விடுங்கள்.

திருடர்தலைவன்:—சரி: சீக்கிரமா ஆவட்டும்.

மதிவர்மன்:—கடவுளே! இன்றோடு என் ஆயுள் முடிவாயிற்றோ? இச்சமயத்தில் என்னைக் காப்பாற்றுகிறவர்கள் இல்லையோ? பாவியாகிய நான் உத்தமர் சதானந்தரின் மனைவியை அழைத்துக்கொண்டு வந்து அவள் கற்பைக் கெடுத்ததற்குப் பிரதி பலன் உடனே கிடைத்து விட்டதே. ஐயோ! அது கூட என் பிடிவாதத்தினால் நடக்கவில்லையே. துஷ்டை மோகவதியின் பிடிவாதத்தினாலன்றோ அவள் கற்பழிந்தது. உண்மையாய் நான் மோகவதியின் சேர்க்கையை விரும்பியா வந்தேன்? இல்லையே—என் குடும்ப சம்ரக்ஷணைக்காகச் சிறிது பணம் மோகவதியிடமிருந்து கொண்டு போக வந்தேன். அதன் பலன் என்னை இக்கதிக்குள்ளாக்கிற்று. சில ஸ்திரீகள் துர்நடத்தையைக் கைக்கொண்டவர்களா யிருந்தபோதிலும், புருஷர்கள் அத்துர்நடத்தையிற் புகாவண்ணமிருக்க வேண்டியவர்களாயிருக்க, நான் மோகவதியைச் சதானந்தருடைய வீட்டிலிருந்து தந்திரமாய் அழைத்துக்கொண்டு வந்ததினால் உண்டான பயனேஇது! உத்தமஸ்திரீயை நான் கெடுத்துவிடவில்லையே! எப்படியானாலும் என்ன? என்னால் தானே அவள் முதன் முதல் கற்பழிந்தாள். அந்தப் பாவம் என்னைச் சூழ்ந்து கொண்டு என் உயிருக்கு உலைவைத்து விட்டதுபோலும். மோகவதி சுரங்கத்திற்குள் சுகமாயிருக்கிறாள். அவள் இத்திருடர்களில் எவனையேனும் தன் வசப்படுத்திக் கொண்டாள் போல் தோன்றுகிறது. இல்லாவிடில் என்னை வெட்டத் துணிந்துள்ள இக்கள்வர்கள் அவளையும் வெட்டத்

துணிவார்களன்றோ? போகட்டும்; நான் சாகப்போகிறது நிச்சயம். கருணாகரா! நான் இந்த ஜன்மம் எடுத்தபின் மோகவதியை அழைத்துக்கொண்டு வந்த குற்றம் தவிர வேறு யாதொரு பிழையும் செய்தவனல்ல. கடவுளே! ஈதுன் திருவுளத்திற்குத் தெரியும். நான் இறந்தபின் என்னை ஆட்கொள்ள வேண்டியது உன்னுடைய கடமை. அணுவிற்குள் அணுவாகவும், மகத்திற்குள் மகத்தாகவும் இருக்கும் என் ஆண்டவனே! அடியேன் செய்த பாவத்திற்குத் தங்களிடம் மன்னிப்புக் கேட்க வெட்கமாயிருக்கிறது. அணுவினும் சிறியவராயும், மகத்தினும் பெரியவராயும், ஒருவருமறியா வொருதனிச் சித்தாகியுமுள்ள கடவுளே! "சுட்டுக்கடங்காச் சோதி யடியார் மட்டுக் கடங்கும் வான் பெருங்கருணையே!" பட்டினத்திறைவரை யென்று மழிவிலா லிங்கமாக்கிய ஏகநாதனே! கல்யாண கரும்பைக் கவர்ந்திடச் செய்தசித்தே! உனக்கு அநேகம் கோடி நமஸ்காரம் செய்கிறேன். நான் செய்தபாவங்களை யெல்லாம் பொறுத்தருள வேண்டும். ருக்மணியின் பிரிய நாயகனும், பீதாம்பரதாரியாயுமுள்ள கண்ணனே! நீ கருணை செய்யவேண்டும்! பண்டரிநாதா! பரமதயாளா!! பாவியாகிய என்னைக் காக்க வேண்டியது உன் கடமையன்றோ? இப்பொழுது நான் இத்திருடர்களின் கையினால் மடியப் போகிறேனே—சிவனுக்கொரு சமயத்தில் அம்பாயுதவிய என் கமலக்கண்ணா! என்னுடைய மரணத்தைப்பற்றி நான் விசனிக்கவில்லை. என் மனைவி மக்கள் இனி எவ்வாறு ஜீவிப்பார்கள் என்ற கவலையே—என்னை மிகவும் வருந்தச் செய்கிறது. பாவிகளாகிய இத்திருடர்கள் என்னைக் கண்டிக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்களே, என்ன செய்வேன்? இம்மானிட ஜன்மத்தை அரியபெரிய பிறவியை எனக்கு அளித்த என் தெய்வமே—

"கருணையே புரிந்து நீ யெனக் களித்த
கதிபெரு மானிடப் பிறவி
யருமையென் றறியும் அறிவிலேன் அந்தோ!
ஆணவத் தால்இறு மாந்து
கருவிலே திருவில்லாதவன் கள்வன்
கசடனேன் என்பிழை பொறுத்துப்
பொருவிலா நின்றுட் கடிமைகொண் டருள்வாய்
புயங்கபூ பதியணே யானே.
யான்செய்த வினையெல்லாம் எண்ணி யெண்ணி
யடங்கி நிற்பவன் ஓர்காலத் தடவிவாழும்
மான்செய்த கண்ணாரை மருவ வெண்ணி
மகிழ்ந்துநிற்பன் ஓர்காலத் தோர்கா லத்தில்
ஊன்செய்த உடலுக்கே யுண்டி தேடி
யுழன் றுநிற்பன் இங்ஙனமென் னொழித்தேன்
தேன்செய்த திருத்துளவத் தெரிய லாய்நின்
திருவுள்ளக் கருத்தெவனே தெரிகிலேனே.

கடவுளே! உன் திருவடிகளுக்கு அநேகங் கோடி நமஸ்காரம் செய்கிறேன். நான் செய்த பிழைகளைப் பொறுத்து என்னை ஆட்கொள்ள வேண்டும். நான் முன் சன்மத்திற் செய்த தீவினைகள் என்னைச் சூழ்ந்துகொண்டு என்னை இச்சன்மத்தில் இக்கதிக்குள்ளாக்கி விட்டனபோலும். நான் தான் வேறு யார் தான் என்ன செய்கிறது? வரும்வினை வந்தேதீரும். விதிப்படி யாவும் நடக்கும். அதுபற்றியன்றோ ஆசிரியர் திருவள்ளுவ நாயனாரும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்."

எனக் கூறியுள்ளார்.

திருடர் தலைவன்:—(மதிவர்மனைப் பார்த்து) என்ன அப்பா! இவ்வளவு நேரமா? என்னென்னமோ சொல்லிக்கினுஇருக்கிறியே. நேரம்ஆகுதுக்கா எங்கசாமி கோவிச்சுக்கும்

மதிவர்மன்.—கள்வர் தலைவனே! என்னை நீங்கள் கொன்றுவிடப் போகிறதில் தடையில்லை. கொஞ்சநேரம் நீங்கள் பொறுத்துக்கொண்டிருக்கக் கூடாதா?

இவ்வண்ணம் மதிவர்மன் சொன்னவுடனே திருடர் தலைவனுக்கு மிகக் கோபமுண்டாயிற்று. அவன் மற்ற திருடர்களைப் பார்த்து, 'இந்த மதிவர்மன் இப்பிடித்தான் வீணு நேரத்தைப் போக்கிக்கினு இருப்பான். இவனப் புடிச்சி கட்டுங்க' என்றான். அவ்வண்ணமே திருடர்கள் மதிவர்மனைப் பிடித்துக் கைகளையும் கால்களையும் கட்டிவிட்டார்கள். பிறகு மஞ்சள் நீரை அவன்மேல் ஊற்றி அவன் கதறக் கதற ஆலோசனையின்றி மூடர்களாகிய திருடர்கள் மதிவர்மனை இருதுண்டாக வெட்டி விட்டார்கள். அந்தோ! மிகப் பரிதாபம்! உடனே சுவாமி ஆடிக்கொண்டிருந்தவன் திருடர்களைப் பார்த்து, 'அடே மக்களா! இப்பொதான் எனக்கு ரொம்ப திருப்தி உண்டாச்சி. இனிமே நீங்க சொகமா வாழ்வீங்க. நான் வந்து ரொம்ப நேரமாச்சி, நான் போய் வறேன்' என்று சொல்லிவிட்டு திடீரென்று கீழே விழுந்து விட்டான். ஐந்து நிமிஷமாயிற்று. ஒன்றும் அறியாதவனைப்போல் எழுந்து அவன் மற்ற திருடர்களைப் பார்த்து, 'என்ன நடந்திச்சி?' என்று கேட்டான். அதற்கு அவர்கள் இவனைப் பார்த்து,—'அடே! சாமி உன்மேல வந்திச்சி. அது நரபலிஒண்ணு ஒணுமுண்ணு கேட்டிச்சி. நாங்க மதிவர்மன பலி கொடுத்துட்டோம்' என்றார்கள். பிறகு திருடர்க ளெல்லோரும் பந்தி பந்தியாய் உட்கார்ந்து

கொண்டு படையல்போட்ட பண்டங்களை யெல்லாம் பங்கு போட்டுக் கொண்டு தின்றுவிட்டு, மனமகிழ மதுவையும் குடித்துவிட்டுச் சிறிதுநேரம் ஒருவரோடொருவர் கர்ன கடூரமாய் வசனித்துக்கொண் டிருந்து, பின் மது மயக்கத் துடன் அனைவரும் ஒன்றாய்க்கூடிச் சுரங்கத்திற்குட்சென்று ஒவ்வொருவரும் ஒரோர் இடத்தில் படுத்து ஆழ்ந்த நித் திரையோடு உறவாடலானார்கள்.

திருடர்களெல்லோரும் நன்றாய் நித்திரை செய்து கொண்டிருக்கையில், சுவாமி ஆடின திருடன்மட்டும் மெது வாய்ப் படுக்கையைவிட் டெழுந்து சந்தடிபண்ணாமல் அச் சுரங்கத்திற் குள்ளிருந்த ஓர் அறையின் கதவைமெதுவாய்த் தட்டினான். 'அழகா! நான் சொன்ன காரியம் முடிந்ததா?' என்று கேட்டாள் ஒரு ஸ்திரீ. அதற்கு 'மோகவதி! நீ தான் சொன்னியே! நான் அந்த காரியத்தை நெறவேத்தாம இருப்பனா? கட்டாயம் நிறவேத்துவேன்' என்றான் சுவாமி ஆடிக்கொண் டிருந்தவனாகிய அழகன்.

மோகவதி:—நீ எவ்விதமாய் நான் சொன்ன விஷயத் தை நிறைவேற்றினாய்?

அழகன்:—நாங்க எங்க கொல தெய்வத்துக்கு வருசா வருசம் பூசை போடற வயக்கம். பூசை போடற சமயத்திலே நான்தான் சாமி ஆடுறது. என்மேல சாமியும் வராது, ஒண்ணும் வராது. ஆனா சாமி மேல வந்துட்டாப்பல நான் நான் அஸ்—உஸ்—இன்னுவேன். இதோ படுத்துகினு இருக்கிறாங்களே இவுங்கள்ளா என் காலிலே உயுவாங்க. நான் எப்பவும் இவுங்களோடவே இருக்கிறனே இவுங்க ரகஸியமெல்லாம் எனக்குத் தெரியும். அதனாலே இவுங்க என்னை எதைப் பத்தியாச்சும் கேட்டா, இவுங்க கேக்கிறது

இன்னதிண்ணு நான் அறிஞ்சிகிட்டு நான், சாமி சொல்ல ருப்பல இவுங்க கேக்றதுக்கு தகுந்தாப்ல பதில் சொல்லிப் புடுவேன். நான் சொல்லிப்புட்டா இவுங்க, சாமிக்கு எல் லாம் தெரியுதிண்ணு சந்தோசப்படுவாங்க. அந்தச் சமயத் தில நானு எனக்கு எதாச்சும் ஆகவேண்டிய காரியமிருந்தா சாமிகேக்ருப்பல கேட்டு அந்த காரியத்தைமுடிச்சிக்குவேன்.

மோகவதி:—அப்படியானல் நான் சொல்லிய விஷயத் தையும் சுவாமிஆடுகிற பொழுதுதான் நிறைவேற்றினயோ?

அழகன்:—ஆமாம். நான் சாமி ஆடிக்கினு இருக்கையி லேதான் நீ சொன்ன காரியத்தை செய்து முடிச்சேன். இல்லாபுட்டா வேறே சமயத்திலே முடியுமா?

மோகவதி:—சுவாமி ஆடிக்கொண் டிருக்கையில் எப் படி நான் சொல்லிய காரியத்தைச் செய்து முடித்தாய்?

அழகன்:—எப்படியா! நான் சாமிஆடிக்கினு இருக்கும் போது இந்த திருடரெல்லாம் என்னைப் பார்த்து சாமீ— நாங்க, போட்ட படையல் இஷ்டமாண்ணு கேட்டாங்க. அதுக்கு நான், போன வருசம் சொன்னனே அந்த சேதி ஞாபகம் இல்லையாண்ணு கேட்டேன். அதுக்க இவுங்க ஞாபகம் இல்லையிண்ணு சொன்னுங்க. நான் நரபலி கேட் டேனேண்ணு சொன்னேன். அதுக்கு இவுங்க 'ஆமாம் இப் பதான் எங்களுக்கு நெனப்பு வந்திச்சி. இப்ப நாங்க யாரே பலி கொடுக்றது இன்னு' கேட்டாங்க! அதுக்கு நான் இவுங்கள பாத்து மதிவர்மன உயிரோடே விட்டுட்டாலும் அவன வைச்சிருந்தாலும் உங்களுக்கு அவனல் கெடுதலு உண்டாவும்; அவனே எனக்குப் பலி கொடுத்துடுங்கண்ணு சொன்னேன். உடனே இவுங்க சாமி சொல்ற பேச்சு தள்

ளக்கூடாதின்னு மதிவர்மன முன்கட்டு பின்கட்டாகக் கட்டி புடிச்சாந்து எனக்குப் பலி குடுத்துட்டாங்க.

மோகவதி:—(மனதிற்குள்) ஒழிந்தானு மடையன். அமிர்தசாகரனைப்போல் வேஷம் பூண்டு என்னை அழைத் கொண்டு வந்த பாவி. (அழகனைப்பார்த்து) அழகா! நல்ல காரியம் செய்தாய் நாம் சொல்லிய விஷயம் எவ்விதம் முடிவுபெறப் போகிறதென்று நான் எண்ணிக்கொண் டிருந்தேன். நீ நல்லவேலை செய்தாய். போய் நித்திரை செய். எனக்கு என்னவோ இன்றைக்கு இருந்தாப்போ லிருந்து உடம்பு கொஞ்சம் அசௌகரியமா யிருக்கிறது.

அழகன்:—ஏன் ஒடம்புக்கு என்னு?

மோகவதி:—ஒன்னுமில்லை—தலைவலிதான்.

அழகன்:—சீ—இதானே? இது ஒரு வலியா? சரி உன் இஷ்டப்படி ஒரு சீவனை கொல்ல வழிசெய்ஞ்சி கொலை செஞ்சாச்சி. அப்பறம் நம்ப சங்கதி என்னு?

மோகவதி:—ஆகட்டுமே-என்ன அவ்வளவு அவசரம்?

அழகன்:—இப்ப என்னுண்ணுதாஞ் சொல்லுவே. சொல்லுவாயா; சொல்லமாட்டியா! சரிதான்.

மோகவதி:—அழகா! என்ன இவ்விதம் சொல்லுகிறாய்? உண்மையாய் நாளைக்கு ஆகட்டும்.

அழகன்:—பிறவு ஒன் பிரியம். நான் என்னு சொல் வேன்; நான் ஏன் தூங்கப் போறேன்.

என்று இவ்வண்ணம் சொல்லிவிட்டுத் திருடனாகிய அழகன் அவனுடைய படுக்கையில் போய்ப்படுத்து மூத் தாளோடு (சித்திரா தேவியோடு) விளையாடலானான்.

ஆருவது அத்தியாயம்.

பயங்கரமான பல விஷயங்கள்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" —பொய்யாமொழியார்.

'கஷ்டம். கஷ்டம். இந்த மாதிரியாக நாங்கள் ஒரு நாளும் கஷ்டப்படவில்லை பெருங்கஷ்டம்' என்று சொன்னார்கள் போலீஸ்காரர்கள்.

'குறித்த இடம் சமீபத்திலிருக்கிறது. சப்தம் செய்யாமல் மெதுவாக எங்களுடனே வாருங்கள்' என்று கூறினார்கள் மகிபதியும், ஜயபாலனும்.

ஞானசம்பந்தனிடத்திலும், போலீஸ் இன்ஸ்பெக்டரிடத்திலும் சிறிய கைத்துப்பாக்கிகளிரண்டு இருக்கின்றன. இருபது பெயர் போலீஸ்காரர்கள். அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு துப்பாக்கி இருக்கிறது. அனைவரும் கொஞ்சமேனும் சத்தமென்பதின்றி மகிபதியும், ஜயபாலனும் வழிகாட்ட மோகவதி இருக்கும் திருடர்களுடைய சுரங்கத்தின் சமீபத்தில் வந்து விட்டார்கள்.

மது மயக்கத்தால் திருடர்களிலொருவரேனும் சுரங்க வாயிலை மூடாமல் சுரங்கத்திற்குள்ளே போய்விட்டபடியால் சுரங்கத்திற்குள் எரிந்துகொண்டிருக்கும் விளக்கின் வெளிச்சம் சுரங்கவாயிலின் வழியாய் வெளியே தெரிய, அதனால் போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலிய அனைவரும் எளிதாய்ச் சுரங்கவாயிலை அறிந்து கொண்டார்கள். உடனே இன்ஸ்பெக்டர் போலீஸ்காரர்களை யெல்லாம் ஒரிடத்தில் மறைவாக இருக்கச்செய்து மகிபதி, ஜயபாலன், ஞானசம்பந்தன்

ஆகிய இவர்களைத் தம்மோடு அழைத்துக்கொண்டு சுரங்க வாயிலின் சமீபத்திற் போய் மேற்சொன்ன மூவருடன் சுரங்கத்திற்குள் எட்டிப்பார்த்தார்.

யாரோ ஒரு ஸ்திரீ சுரங்கத்திற்குள்ளிருந்து வெளியே வருகிறதுபோல் தோன்றியது. உடனே மகிபதியும், ஜய பாலனும் போலீஸ் இன்ஸ்பெக்டரையும், ஞானசம்பந்தனை யும் பார்த்து, 'நாங்கள் அன்றைக்கு இங்குக் கண்டதாகச் சொன்ன ஸ்திரீ இதோ வருகிற இவள்தான்' என்றார்கள்.

ஞானசம்பந்தனும் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து 'ஐயா! இதோவருகிற இந்த ஸ்திரீதான் மங்களபுரி சதானந்தரின் மனைவி மோகவதி என்பதில் யாதொரு சந் தேகமுமில்லை' என்றான்.

'நாம் இங்கு நின்றுகொண்டிருக்கக்கூடாது யாவரும் மறைந்திருப்போம். இந்த ஸ்திரீ வெளியே வந்தவுடன் என்னசெய்கிறாளென்று பார்த்துக்கொண்டிருந்து பிறகு பிடித்துக்கொள்வோம்' என்று சொல்லி எல்லோரையும் தம்முடன் அழைத்துக்கொண்டுபோய் ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுத் தாமும் ஒரு நல்ல இடம் பார்த்து மறைந்து கொண்டார் இன்ஸ்பெக்டர்.

சிறிது நேரத்திற்குள் சுரங்கத்திலிருந்து வெளியே வந் தாள் மோகவதி. எதையோ அங்குமிங்குமாகத் தேடினாள். அவள் தேடுகிறது என்னவெனில் கொஞ்ச நேரத்திற்கு முன் வெட்டுண்டுபோன மதிவர்மனின் பிரேதமேயாம். மதிவர்மனின் பிரேதம் இருக்குமிடத்தைத் தெரிந்துகொண் டாள் மோகவதி. பிறகு அப்பிரேதத்தின் அருகிற் சென்று அதைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவள் தனக்குள் ஏதேதோ எண்ணிக் கொண்டு தலையை ஒரு

முறை அசைத்து, 'துலைந்தாயா படுபாவி! அமிர்தசாகர ளைப் போல் வேஷம் புனைந்து என்னை அழைத்துக்கொண்டு வந்தவன் நீயன்றோ? போகட்டும். இனிமேல் நான் எங்கு வேண்டுமானாலும் போகலாம். மதிவர்மனை எப்படியாவது திருடர்களைக்கொண்டு கொலைசெய்துவிட வேண்டுமென்று எண்ணியே நான் இவ்வளவு காலமாக இத்திருடர்கள் வசமிருந்தேன். இன்றேல், திருடர்கள் என்னை என் இஷ்டப்படி இச் சுரங்கத்தின் வெளியே வரப்போக அநுமதி கொடுத்திருந்தார்களே. அப்பொழுது வேண்டுமானால் எங்கேயாவது ஓடிப்போயிருக்கமாட்டேனா? இனி இக் கள்வர்களிடத்தில் நான் இருப்பது சரியன்று. எங்கேயாவது செல்லவேண்டும். ஏதாவது ஒரூரை யடைந்தவுடன் எவரேனும் என்னைப் பார்த்து, 'நீ யார்?' என்று கேட்டால் அதற்கு நான் என்ன சொல்லுவேன்? இருக்கட்டும். போகப் போகப் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று இவ் வண்ணம் வெளிப்படையாய்ச் சொல்லிக்கொண்டு நடக்கலானாள். உடனே, மறைந்துகொண்டிருந்த இன்ஸ்பெக்டர் இனி நாம் தாமதித்துக் கொண்டிருக்கலாகாதென்று எண்ணி இரண்டு போலீஸ்காரர்களை விடுத்து மோகவதியைப் பிடிக்கச் சொன்னார். அவ்விதமே அவர்கள் சென்று மோகவதியைப் பிடித்துக் கொண்டார்கள். மோகவதி சப்தம் செய்ய ஆரம்பித்தாள். போலீஸ் இன்ஸ்பெக்டர் மட்டும் அவள் அருகிற் சென்று அவளைப் பார்த்து, 'சீ வாயை மூடு. சப்தம செய்வாயானால் அடிவிழும். நீ மங்களபுரியிலிருந்து மதிவர்மனோடு மதியின்றி வந்ததுமன்றி அவனையும் மூடர்களாகிய திருடர்களைக்கொண்டு பிணமாக்கி விட்டாய். அவன் பிரேதமும் அதோ இருக்கின்றது. என்ன தைரியம் உனக்கு! நான் யார் தெரியுமா? செஞ்சிப்போலீஸ்

இன்ஸ்பெக்டர். என்னோடு அநேகம் போலீஸ்காரர்களும் வந்திருக்கிறார்கள்' என்று இவ்விதம் மோகவதியைப்பார்த்துச் சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு போலீஸ்காரன் அவரிடம் வந்து மோகவதிக்குக் கேட்காவண்ணம் இரகசியமாய் 'ஞானசம்பந்தம் கூப்பிடுகிறார்' என்று சொன்னான். உடனே இன்ஸ்பெக்டர் ஞானசம்பந்தன் இருக்குமிடத்திற்குச் சென்றார். இன்ஸ்பெக்டரை ஞானசம்பந்தன் பார்த்துக் 'கங்காதரா! மோகவதிக்கு நான் வந்திருப்பதாகச் சொல்லாதே' என்று கூறினான்.

அதற்கு இன்ஸ்பெக்டராகிய கங்காதரம் ஞானசம்பந்தனைப்பார்த்து, 'நீ வந்திருப்பதாய் நான் அந்த ஸ்திரீயிடத்தில் சொல்லவில்லை. ஆனால், நாம் அனைவரும் சேர்ந்து செஞ்சிக்குப் போகும் பொழுது உன்னை இன்னானென்று அந்த ஸ்திரீ அறிந்து கொள்ளுவாளே' என்றார்.

'நாம் யாவரும் செஞ்சிக்குப்போகும்பொழுது என்னை இன்னானென்று மோகவதி அறிந்துகொள்ளா வண்ணம் நான் உங்கள் பின்னால் கொஞ்சம் தூரத்தில் வருவேன்' எனக் கூறினான் ஞானசம்பந்தன்.

'சரி, இனித் திருடர்களைப் பிடிக்க வேண்டும். ஆனால், திருடர்களைப்பிடித்தவுடன் வழக்கை எப்படி நடத்துகிறது?' என்று வினவினார் இன்ஸ்பெக்டர்.

'எப்படி நடத்தவேண்டுமென்பது உனக்குத் தெரியாதா?' என்று கேட்டான் ஞானசம்பந்தன்.

'தெரியாமலென்ன! மோகவதியைத் திருடர்களோடு சேர்த்துக் கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து விடுகிறதா? அல்லது உன்னோடு உன்னுடைய வீட்டிற்கு அனுப்பிவிடுகிறதா? அவ்விதம் மோகவதியை

மட்டும் நான் குற்றத்தினின்றும் மறைத்துவிடுவேனாயின், பிறகு அவ்விஷயம் எவ்விதத்திலேனும் வெளியாகி விட்டால் அப்பொழுது நம் எல்லோருக்கும் கெடுதலேற்படும்' உன் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'இதற்கு என் ஆலோசனை ஏன்? வேறு அந்நிய ஸ்திரீ எவளேனும் இவ்விதக் கொலை பாதகத்திற் குட்பட்டிருப்பாளாயின் அவளை என்ன செய்வாயோ அவ்விதமாகவே நீ இந்த மோகவதியையும் உன் இஷ்டப்படி தண்டிக்கலாம். அந்நியனோடு வந்து அவனால் தன் கற்புக்கு அழிவு தேடிக் கொண்ட இம் மோகவதிக்காக நான் என்ன சொல்லுகிறது? ஆனால், அவளைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகும் வரைக்கும் நீங்கள் கொஞ்சம் மரியாதையாகவே அழைத்துக்கொண்டு போகவேண்டும். அவளிடம் நான் வந்திருக்கிறேனென்று சொல்லாம லிருப்பதோடும், செஞ்சிக்குப் போனவுடன் ஒருவரிடத்திலும் நான் உன்னோடு இங்கு வந்தேனென்றும் சொல்லாதே. உன்னை எவரேனும் 'திருடர்களை எப்படிப்பிடித்தீர்கள்?' என்று கேட்டால் அப்பொழுது நீ அதற்குத் தகுந்த பதில் சொல்லிவிடு. மகிபதியும் ஜயபாலனும் திருடர்களிருந்த இடத்திற்குப் போக வழிகாட்ட அவ்வழியே சென்று திருடர்களைப் பிடித்தபின் மோகவதியைக் கண்டேனென்றும், அவ்விடத்தில் கொலை செய்யப்பட்ட ஒரு பிரேத மிருந்ததென்றும், மோகவதியின் போதனையினால்தான் திருடர்கள் எவனையோ ஒருவனைக் கொலை செய்திருக்கிறார்களென்றும் நீ வழக்கைத் தயார்செய். நான் மிதுனபுரி ஜமீன் மீனாட்சிசுந்தரரிடத்திலும், மங்களபுரி சதானந்தரிடத்திலும் சென்று மோகவதி செஞ்சிப் போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கப்பட் டிருக்கிறாளென்றும், அவ்விதம் அவளை அடைக்கப்பட் டிருப்பதற்

குக் காரணம் இன்னதென்றும் சொல்லிவிட்டு வருகிறேன். நீ இனி ஆகவேண்டிய காரியங்களைத் தாமதியாமற் செய்' என்று பகர்ந்தான் ஞானசம்பந்தன்.

'நல்லது வேறு விஷயம் ஏதாவது இருந்தால் இப்பொழுதே சொல்லிவிடு' என்றார் இன்ஸ்பெக்டர்.

'வேறு விஷயம் ஒன்றுமில்லை. திருடர்களைத் தான் ஜாக்கிரதையாய்ப் பிடிக்கவேண்டும். திருடர்களிருக்குமிடத்தை நமக்குத் தெரிவித்த மகிபதி, ஜயபாலன் ஆகிய இருவர்களுக்கும் கவர்ன்மெண்டாரிடமிருந்து ஏதாவது வெகுமதி வாங்கிக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்' என மொழிந்தான் ஞானசம்பந்தன்.

'வெகுமதிக்குத்தானா அவசரம்! கவர்ன்மெண்டாரே கொடுப்பார்கள். நீ இவ்விடத்திலிரு. மோகவதியை கான்ஸ்டேபிள்கள் காத்துக்கொண்டிருப்பார்கள். வேறு சில சில கான்ஸ்டேபிள்களையும், மகிபதி ஜயபாலன் ஆகிய இருவரையும் என்னோடு அழைத்துக் கொண்டு சுரங்கத்திற்குட் சென்று பார்க்கிறேன். கூடுமானால் உடனே திருடர்களெல்லோருக்கும் விலங்கு பூட்டி அவர்களெல்லோரையும் இங்குக் கொண்டு வருகிறேன்' என்று போலீஸ் இன்ஸ்பெக்டர் ஞானசம்பந்தனிடம் சொல்லிவிட்டு, மோகவதியைக் காத்துக் கொண்டிருந்த இரண்டு கான்ஸ்டேபிள்களையும், ஞானசம்பந்தனையும் தவிர மற்றெல்லாரையும் தம்மோடு அழைத்துக்கொண்டு சப்தம் செய்யாமல் சுரங்கத்திற்குட் போனார். உள்ளே பார்த்தார். திருடர்களெல்லோரும் பிரக்ஞையின்றி நித்திரை செய்துகொண்டிருப்பதைக் கண்டார். உடனே கஷ்டமின்றி ஒவ்வொரு திருடனுக்கும் விலங்கு பூட்டிவிட்டார். பிறகு கான்ஸ்டேபிள்களைத் திரு

டர்களின் அருகில் நிற்கச் செய்து அச்சுரங்கத்தைப் பரி சோதனை செய்தார். ஓர் அறையில் அநேகம் வைர நகை கள் இருந்தன. மற்றொரு அறையில் சாவரன்களும், ரூபாய் களுமிருந்தன. அவைகளை யெல்லாம் சுரங்கத்திற்கு வெளி யே கொண்டு வந்து சேர்த்தார். இதற்குள் திருடர்களெல் லோருக்கும் மதுமயக்கம் தெளிந்தது. அவர்கள் தத்தம் கண்களை விழித்துப்பார்த்துத் தங்கள் கைகளில் விலங்கு பூட்டப்பட்டிருப்பதையும், போலீஸ்காரர்கள் தங்களுக் கெதிரில் துப்பாக்கியும் கையுமாய் நின்றுகொண் டிருப்ப தையும் கண்டு பயங் கொண்டார்கள்.

போலீஸ்காரர்கள் இன்ஸ்பெக்டரின் உத்திரவுப்படி திருடர்களுக்குப் பூட்டியிருந்த தளைகளைக் கழற்றாமல் வேறு தளைகளைக்கொண்டு திருடர்களை ஒருவரோ டொருவராய்ச் சேர்த்துப் பிணைத்து விட்டார்கள். திருடர்களுக் குண் டான பயத்தைப்பற்றி இவ்வளவென்று சொல்லமுடியாது. அவர்கள் தத்தம் மனத்திற்குள் ஏதேதோ எண்ணினார்கள். எவ்வளவு ஆலோசனை செய்தும் பிரயோஜனமில்லை. அத் திருடர்களில், முன் நமது மகிபதி, ஜயபாலனோடு சண்டை புரிந்த திருடர்கள் இருவரிருந்தார்கள். அவர்களைப் பற் றிய சில விஷயங்களை மகிபதி இன்ஸ்பெக்டரிடம் சொன் னான். அதற்கு இன்ஸ்பெக்டர் 'இவர்களை ஸ்டேஸனுக்குக் கொண்டுபோய்ப் பிறகு விசாரித்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டுப் பின்பு திருடர்களெல்லோரையும் சுரங்கத்தினின்றும் வெளியேற்றி, மோகவதியையும் அழைத் துக்கொண்டு, வெகு பந்தோபஸ்துடன் மகிபதி, ஜயபாலன், சேவகர்களாகிய இவர்களெல்லோரும் ஜாக்கிரதையோடு திருடர்களைச் சூழ்ந்துக்கொண்டுவர, விடியற்காலம் ஆறு மணிக்குச் செஞ்சிப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு

போய்த் திருடர்களைத் தனித்தனியாக ஒவ்வொரு அறையிலும், மோகவதியை ஓர் அறையிலும் அடைத்துவிட்டார். மோகவதி தன்னைப் பார்க்காவண்ணம் போலீஸ்காரர்களின் பின்னே சென்ற ஞானசம்பந்தன் திருடர்களெல்லோரையும் சிறையிலடைத்த பின் தன் சிநேகிதர்களாகிய மகிபதியையும், ஜயபாலனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு இன்ஸ்பெக்டரிடம் உத்திரவு பெற்றுத் தன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

மறுநாட்காலையில் ஞானசம்பந்தன் மகிபதியையும், ஜயபாலனையும் தன்னோடு அழைத்துக்கொண்டு மங்களபுரிக்குப் போய்ச் சதானந்தரைக் கண்டு அவரிடம் மோகவதியைப்பற்றிய எல்லா விஷயங்களையும் சொல்லிவிட்டுக் 'கோர்ட்டு விசாரணைகள் செஞ்சியில்தான் நடக்கும்; ஆகையால் நீங்கள் செஞ்சியிலுள்ள நமது வீட்டிற் போயிருங்கள். இச்சமயத்தில் நமது பழைய வருத்தத்தை நினையாதீர்கள். நான் மிதுனபுரிக்குப் போய் மீனாட்சிசுந்தரருக்கு விஷயங்களைச் சொல்லி அவரை அழைத்துக்கொண்டு செஞ்சிக்கு வருகிறேன்' என்று சொல்லிவிட்டு அன்று அங்குத் தங்கியிருந்து மறுநாட் காலையில் மகிபதியையும், ஜயபாலனையும் தன்னோடு அழைத்துக் கொண்டு பிரயாணமாகிச் சிறிது தூரம் நடந்து பிறகு இரயிலேறி மிதுனபுரி இரயில்வேஸ்டேஷன் போய்ச் சேர்ந்து, பிறகு வாடகை வண்டி ஒன்றில் அவர்களுடன் ஏறி உட்கார்ந்து கொண்டான். வண்டிக்காரன் 'வண்டி எங்கே போகவேண்டும்' என்று கேட்டான். 'வண்டியை ஜமீன்தார் மீனாட்சிசுந்தரர் வீட்டிற்கு ஓட்டு' என்றான் ஞானசம்பந்தன். உடனே வண்டிக்காரன் குதிரையைத் தட்ட வண்டி புறப்பட்டு மனோவேகமாக மீனாட்சிசுந்தரரின் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

வண்டிக்குள்ளிருந்த மூவரும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் கூட்டம் கூட்டமாய் அநேகர் 'ஐயோ பாவம்! ஐயோ பாவம்! அவரையா கடித்து விட்டது? அவரையா கடித்துவிட்டது? நல்ல புண்ணியவா னாயிற்றே. இந்த மிதுனபுரிக்கு அவர் ஒரு சிற்றரசனைப் போலன்றோ இருந்தார்?' என்று சொல்லிக்கொண்டே ஓடி னார்கள். அவ்விதம் ஓடுகிறவர்களில் ஒருவனைப் பார்த்து 'எங்கே ஓடுகிறாய்?' என்று கேட்டான் ஞானசம்பந்தன். அதற்கு அம்மனிதன் 'ஐயோ! அதை ஏனையா கேட்கிறீர் கள். இவ்வூருக்கு ஒரு மகாராஜனைப்போலவும், நல்ல புண் ணியவானாயுமிருந்த ஜமீன்தார், மீனாட்சிசுந்தரரை நல்ல பாம்பு கடித்துவிட்டதாம். அவரைப் பார்க்கப்போகிறேன்' என்று சொல்லிக்கொண்டே ஓடினான். அவன் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடன் ஞானசம்பந்தன் பைத்தியம் பிடித்தவனைப்போலானான். ஐயோ! இந்த மிதுனபுரி ஜமீ னுடைய குடும்பம் சிதறிப்போகும் காலம் நெருங்கிற்றா? சதானந்தரின் குடும்பத்தைப்பற்றியும், மோகவதியின் துர் நடத்தையைப் பற்றியும், இப்பொழுது மீனாட்சிசுந்தரர்க்கு ஏற்பட்டுள்ள பிராணாபாயத்தைப் பற்றியும் சிந்திக்கச் சிந் திக்க என் மனம் புண்ணாகின்றதே' என்று சொல்லி விச னப்பட்டான் ஞானசம்பந்தன். அவனுக்கு மகிபதியும், ஜயபாலனும் தேறுதல் சொன்னார்கள். இதற்குள் வண்டி மீனாட்சிசுந்தரரின் வீட்டின் சமீபத்தில் போய் நின்றது. உடனே வண்டியிலிருந்தவர்கள் கீழே இறங்கி வண்டிக்கார னுக்குக் கொடுக்கவேண்டிய கூலியைக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு மீனாட்சிசுந்தரருடைய வீட்டினுள் சென் றார்கள். அங்குக் கூட்டம் அதிகமாய் இருந்தது. மீனாட்சி சுந்தரரைக் கண்டார்கள். அவருக்குப் பிரக்ஞை இல்லை.

அவருடைய கண்கள் பஞ்சுநிற மாயிற்று. எத்தனையோ பெயர் வைத்தியர்கள் ஏதேதோ மருந்துகளை அவருக்குக் கொடுத்தார்கள். எமனுக்கு மருந்தேது? ஒன்றும் சரிப் படவில்லை. கால் மணி நேரமாயிற்று! ஜமீன்தார் பூலோக வாழ்க்கையை வெறுத்துப் பரலோக வாழ்க்கையை நாடிச் சென்றார். கேவலம் ஒரு விஷயத்திற்கும் பிரயோசனமின் றிப் பூமிக்குப் பாரமாய் வளர்ந்து திரியும் ஒருவன் இறந்து விடுவானாயின், அவனுக்காக எத்தனையோ பெயர் வருத்தப் படுவார்கள். அநேகம் கிராமங்களுக்கு அதிகாரியும், பெரிய தனவந்தராயும், நற்குண நற்செய்கை உடையவராயும், பரோபகாரியாயும், பசித்தோர் முகத்தைப் பார்த்துச் சகிக் காமல் அவர்களுக்கு உதவி புரிபவராயும், இன்னும் நற்காரி யங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் செய்து நற் பெயரெடுத்தவராயு மிருந்த புண்ணியன் மீனாட்சி சுந்தரர் மரணமடைந்துவிட்டாரென்ற செய்தியைக் கேட்டவுடன் துக்கப் படாதவர்களு முண்டோ? இல்லை. ஜமீன்தாரின் வீட்டை அரண்மனை என்றாலும் தகும். அவ்வரண்மனை முற்றும் துக்கமயமா யிருந்தது. ஜமீன்தாரின் மரணத் தைக் குறித்து அநேகம் தந்திகள் வெளியூர்களுக்குச் சென் றன. அநேகம் பெரிய மனிதர்கள் கூட்டங் கூட்டமாய் வந்து சேர்ந்தார்கள். செய்ய வேண்டிய சடங்குகளை யெல் லாம் சரிவரச் செய்து பிரேதத்தைத் தகனம் செய்துவிட் டார்கள். சதானந்தருக்கு இவ்விஷயம் தெரியும். ஆனால், அவர் வரவில்லை. ஞானசம்பந்தன் மீனாசிசுந்தரரின் தாயா திகளிடத்தில் மோகவதியைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் 'ஊருக்குபபோய் வருகிறேன்' என்று சொல்லி அவர்களி டம் உத்திரவு பெற்றுக் கொண்டு தன்னுடன் வந்தவர்க ளோடு பிரயாணமாகித் தன்ஊருக்குப்போய்ச் சேர்ந்தான்.

அன்றுதான் சதானந்தரும் மங்களபுரியிலிருந்து செஞ்சிக்கு வந்தார். மிதுனபுரியில் மீனுட்சிசுந்தரர் இறந்தபின் ஒருவரும் மோகவதியைப்பற்றிக் கவனிக்கவில்லை. மீனுட்சிசுந்தரருக்குச்சகோதரர்களாவது குழந்தைகளாவது இல்லை. அவருடைய மனைவி தன் கணவருடைய சொத்துக்களை எல்லாம் தன் பெயருக்கு ஸ்வாதினப்படுத்திக் கொண்டாள். செஞ்சிப் போலீஸ் இன்ஸ்பெக்டராகிய கங்காதரன் திருடர்களை மட்டும் கொண்டுபோய்க் கோர்ட்டார் சமுகத்தில் நிறுத்தினர். கோர்ட்டாரவர்கள் முறையே ஒவ்வொருவராகத் திருடர்களெல்லோரையும் விசாரிக்க அதற்குத் திருடர்கள் கோர்ட்டாரவர்களைப் பார்த்து-மோகவதியும், மதிவர்மனும் தங்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டதுமுதல் தாங்கள் மதிவர்மனைக் கொலைசெய்த வரைக்கும் நடந்த எல்லா விஷயங்களையும் சொன்னர்கள். கோர்ட்டார் திருடர்களெல்லோரையும் ஒரு புறம் நிற்கச்செய்து பின் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, மோகவதியை அழைத்துக்கொண்டு வரும்படி சொன்னர். உடனே இன்ஸ்பெக்டரும், போலீஸ் சேவகர்களும் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று மோகவதியை அடைக்கப்பட்டிருந்த அறைக்குட் சென்று பார்க்க, அவள் பிரேதமா யிருக்கக் கண்டார்கள். அப்பொழுதே இவ்விஷயத்தை இன்ஸ்பெக்டர் கோர்ட்டாருக்கு அறிவிக்க அவர்கள் ஒரு டாக்டரைக் கொண்டு அப்பிரேதத்தைப் பரிசோதனை செய்து பார்த்ததில் எவ்விதத்திலோ குடல் அறுபட்டு இறந்துபோய் இருப்பதாகத் தெரிந்தது. உடனே அப்பிரேதத்தைப் புதைத்துவிடும்படி உத்திரவாயிற்று. தோட்டிகளைக் கொண்டு பிரேதத்தைப் புதைத்துவிட்டார்கள். கோர்ட்டாரவர்கள் சதானந்தரை அழைத்து, 'உம்மால் ஏதாவது மோகவதிக்குக் கெடுதலுண்டாயிற்றே?'

என்று விசாரித்தார்கள். அதற்கு அவர் 'இல்லை' என்றார். அநேகர் சதானந்தர் உத்தமரென்று தகுந்த சில முகாந்திரங்களைச் சொல்லிக் கோர்ட்டாரிடம் வாதித்தார்கள்.

கோர்ட்டாரவர்கள் சதானந்தரை அனுப்பிவிட்டுத் திருடர்களைக் குற்றவாளிகள் என்று தீர்மானித்து, தண்டனை விதிப்பதற்காக ஜில்லாகோர்ட்டுக்கு அனுப்பிவிட்டார். மகிபதியும், ஜயபாலனும் தங்களுக்குக் கோர்ட்டாரவர்கள் கொடுத்த வெகுமதிகளை எல்லாம் பெற்றுக் கொண்டார்கள். கோர்ட்டும் கலைந்தது. அவரவர்கள் தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். மகிபதியும், ஜயபாலனும் ஞானசம்பந்தனோடு செஞ்சிப்பட்டினம் முற்றிலும் பார்த்து விட்டு அன்று அவன் வீட்டில் தங்கியிருந்து மறுதினம் அவனிடத்திலும், சதானந்தரிடத்திலும், போலீஸ் இன்ஸ்பெக்டரிடத்திலும் உத்திரவு பெற்றுக்கொண்டு துப்பாக்கிகளுடன் இரண்டு போலீஸ் சேவகர்களைத் தங்களுக்குத் துணையாக அழைத்துக் கொண்டு வாட்டை வண்டியிலேறி மயிலம் போய்ச் சேர்ந்தார்கள்.

பிறகு அனைவரும் ஒரு ஹோட்டலிற்போய்ப் போஜனம் செய்தபின் மகிபதி போலீஸ்காரர்களுக்குப் பத்து ரூபாய் கொடுத்து அவர்களைச் செஞ்சிக்கு அனுப்பிவிட்டுத் தன்னோடு ஜயபாலனை அழைத்துக்கொண்டு அன்று காலையில் இரயிலில் பிரயாணமாகிப் புதுச்சேரிக்குப்போய்ச் சேர்ந்தான். இவர்களின் வருகைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்த இவர்களுடைய தாய் தந்தையர்களுக்கு இவர்களைக் கண்டவுடன் மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. மறுநாள் இவர்களுடைய தாய் தந்தையரிடம் தாங்கள் வீட்டினின்றும் செஞ்சிக்குப் போகப் புறப்பட்டது முதல் மறுபடியும்

வீட்டிற்குத் திரும்பிவந்த வரைக்கும் நடந்த எல்லா விஷயங்களையும் விபரமாய்ச் சொன்னார்கள். மைந்தர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்ட தாய் தந்தையர்கள் மிக்க மனமகிழ்ச்சிகொண்டு ஆச்சரியப்பட்டார்கள். இனி மகிபதியும், ஜயபாலனும் இக்கதைக்கு வேண்டியதில்லை.

செஞ்சியிலிருந்த சதானந்தர் தம்முடைய மருமகன் ஞானசம்பந்தனை அவன் குடும்பத்தோடு மங்களபுரிக்கு அழைத்துக் கொண்டு போய்த் தம்முடைய ஆஸ்திகளை எல்லாம் அவனிடம் ஒப்பித்துவிட்டுத் தாம் யாதொரு அபேக்ஷையுமின்றி அமிர்தசாகரன் எங்குச் சென்றானோ வென்னும் கவலையோடு இரண்டு மாதமிருந்து அதே கவலையால் ராமனைப் பிரிந்த தசரதன் இறந்ததுபோல் 'அப்பா! கண்மணீ! அமிர்தசாகரா! உன்னை நான் எப்பொழுது காணப்போகிறேனடா? குழந்தாய்! உத்தமா, நீ எங்கே எவ்வாறிருக்கின்றாயோ! உன் மாற்றாந்தாய் உனக்கு விரோதியாயும், எனக்கு எமனாயுமிருந்தாளடா. என்ன செய்வேன்? என்னைக் காலன் கூப்பிடுகிறான். போகிறேன். நான் என்னுடைய வாழ்நாட்களை யெல்லாம் வீணில் கழித்தேன். இப்பொழுதுதான் இவ்வுலகத்திலுள்ள யாவும் மாயமென்று தெரிகிறது. அமிர்தசாகரா, மாயமாய் மறைந்த அமிர்தசாகரா! நான் போய்வருகிறேன். எனக்கு விடைகொடு' என்று இவ்வண்ணம் சொல்லிக் கொண்டே ஒருநாட் காலையில் சுமார் எட்டுமணிக்கு அவர் மரணமடைந்தார்.

ஏழாவது அத்தியாயம்.

அமிர்தசாகரனுக்கு நேர்ந்த எதிர்பாராத ஆபத்து.

“ முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவரு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலியின ராயினும்
விதியினை யாவரோ வெல்லும் நீர்மையார்?”—

[கச்சியப்ப சிவாச்சாரியார்.

‘அடே அண்ணு! அதோ பாருடா; ஏ தம்பி இங்கே ஓடியாடா. வாங்கடா எல்லாரும். ஐயோ! அதோ பாருங் கடா. பாவம்! பாவம்! யாரோ ஒருத்தனை ஆற்று வெள்ளம் அடிச்சிக்கிட்டுப்போவுது. வாங்கடா, நாம்பபோயி அந்த மனிதனை நம்பபடவுல தூக்கிபோட்டுக்கினு வரலாம்’ என்று அலறினுன் ஒரு செம்படவன்.

‘எங்கடா, எங்கடா! அந்த மனிசன்? எங்கடா அவனை அடிச்சிக்கிட்டுப் போவுது? ஏண்டா பொய் சொல்றயா!’ என்று கேட்டான் மற்ருெரு செம்படவன்.

‘அதோ பாருடா—மரம் ஒண்ணு தண்ணியில் மெதந் துகினு போவுதே-அதும் பக்கத்திலே பாரடா கண்ணுத் தெரியலையா’ என்ருன் வேருெரு செம்படவன்.

‘ஆமாம்! ஆமாம்! தெரியுது. வாங்கடா போவோம்? இனிச் சும்மாயிருக்கக் கூடாது; ஐயோ பாவம் ஆமாடா’ என்று கூறினுன் நான்காவது செம்படவன்.

பிறகு செம்படவர்களெல்லோரும் ஒன்று கூடி ஒரு படகை ஆற்றின் நடுவில் கொண்டுபோய் ஜலப்பிரவாகத் தில் அடித்துக் கொண்டுபோகும் மனிதனைப் படகிலேற்றிக்

கரையிற் கொண்டுவந்து சேர்த்தார்கள். அம்மனிதனுக்குப் பிரக்ஞை இல்லை. அவனுடைய சரீரம் சில்லென்றிருந்தது. பற்கள் கிட்டிப்போயிற்று. இதை அறிந்த செம்படவர்கள் உடனே அவனை அவ்வூரில் வைத்தியத்தில் நிபுணரென்று பெயர் பெற்றிருந்த ராம்தாஸ் என்பவரிடம் கொண்டு போய், அவரைப்பார்த்து, 'ஐயா! நீங்கள் இந்த மனுஷனுக்கு வைத்தியம் செய்யுங்கோ, அதுக்கு வேண்டிய ரூபா தாரோம்' என்று மொழிந்தார்கள். 'நீங்கள் போகலாம்; நான் இம் மனிதனுக்கு மருந்து கொடுத்துக் குணப்படுத்தி விடுகிறேன்' என்று சொல்லி வைத்தியர் செம்படவர்களை அனுப்பிவிட்டுப் பிரக்ஞையற்றிருக்கும் மனிதனுடைய கையைப் பிடித்து நாடியைப் பரீட்சித்துப் பார்த்தார்.

நாடி சற்றுச் சரியாயிருந்தது. அதிக குளிர்ச்சியினால் அவனுடைய தேகத்திற்கு அசௌகரிய முண்டாயிற்றென்று அறிந்துகொண்ட வைத்தியர் அதற்குத் தகுந்த ஔடதங்களைக் கொடுத்துக் குணப்படுத்தினார். அவனுக்குப் பிரக்ஞை உண்டாயிற்று. வைத்தியர் அவனுக்கு ஏதோ கொஞ்சம் ஆகாரம் கொடுத்தார். அம்மனிதனுக்கு நன்றாய்ப் பேசக்கூடிய சக்தி யுண்டாயிற்று. ஆனால், வைத்தியர் அன்று அவ் வாலிபனோடு ஒன்றும் பேசாமல் பின்னும் அவனுக்கு நல்ல மருந்துகளைக் கொடுத்து மறுதினத்திற்குள் முற்றிலும் குணப்படுத்தி விட்டார். வாலிபனுக்கு நடக்கக்கூடிய சக்தி யுண்டாயிற்று. வீண் வார்த்தை என்னத்திற்கு? இரண்டு தினத்திற்குள் நல்ல தைரியமும், பலமு முடையவனாயினான். சற்புத்திரனென்றும், கல்வியைக் கசடறக் கற்றவனென்றும் அவன் முகத்தை ஒரு முறை நன்றாய் உற்றுப் பார்ப்பவர்களுக்கே தெரியும். டாக்டர் சர். ராமதாஸ் ஒரு தினம் அவ் வாலிபனைப் பார்த்துத் 'தம்பி! உன் பெயரென்ன?' என்று கேட்டார்.

அதற்கு அவ் வாலிபன் 'ஐயா! என் பெயர் அமிர்தசாகரன் என்பார்கள்' என்று சொன்னான்.

ராமதாஸ்:—'நல்லது உன்னுடைய வரலாறுகளைக் கேட்கப் பிரியப்படுகிறேன். உனக்கு இஷ்டமிருந்தால் சொல்வாயா?' என்று கேட்டார்.

அமிர்தசாகரன்:—'ஐயா! நான் என்னுடைய வரலாறுகளைத் தங்களிடத்தில் சொல்லாமல் மறைப்பதனால் பயன் என்ன! இதோ சொல்லுகிறேன் கேளுங்கள். நான் மங்களபுரியி லிருக்கும் ஜமீன்தார் சதானந்தருடைய குமாரன். ஒரு விஷயத்தை முன்னிட்டு நான் அவரை விட்டுப் பிரிந்து இலிங்கபுரத்திற்குப் போய் இப்பொழுது அவ்வூரிலிருக்கும் குணபூஷணர் வீட்டில் சிலகால மிருந்தேன். பிறகு குணபூஷணர் கோகுலபுரியிலுள்ள தம்முடைய வியாபார ஸ்தலத்திற்கு என்னை மானேஜராக்கினார். இப்பொழுது நான்தான் அவருடைய வியாபாரங்களை யெல்லாம் கவனித்துக் கொண்டு வருகிறேன். நான் ஒரு மாதத்திற்குமுன் கோபாலபுரத்திற்கு வியாபார விஷயமாய்ச் சென்றிருந்தவன் அவ்வூரினின்றும் புறப்பட்டு ஒரு விஷயத்தைப்பற்றி ஆனந்தபுரிக்கு இரயில் தொடரில் பிரயாணமாகி வருகிறபொழுது நடு நிசியில் வழியில் இருந்த ஜெயசீலம் நதியின் வாராவதியின் மீது இரயில் தொடர் ஓடிக்கொண்டிருக்கையில் நதியில் ஜலப்பிரவாகம் அதிகமாய் வந்து வாராவதியை நாசமாக்கிற்று. வாராவதி நாசமாகவே வாராவதியின்மீது ஓடிக்கொண்டிருந்த புகைவண்டி வாராவதியோடு ஆற்றில் விழுந்துவிட்டது. புகைவண்டியிலிருந்தவர்களில் எத்தனை பெயர் மரணமடைந்தார்களென்றும், எத்தனை பெயர் தப்பிப் பிழைத்தார்களென்றும் எனக்குத் தெரியாது. புகைவண்டி நதியில் விழுந்தவுடன் எனக்குச் சரீரச்சேத மொன்

றும் உண்டாகவில்லை. ஆனால், நதியின் பிரவாகம் வெகு வேகமாய் என்னை அடித்துக்கொண்டு வந்தது. அப்பொழுது ஜலத்தில் எனக்கு ஆதாரம் ஒன்றையும் காணோம். அரைமணி நேரம் ஜலத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தேன். பிறகு மரமொன்று ஜலத்தில் மிதந்துகொண்டு என் அருகில்வர அதைப்பற்றி அதன்மீது ஏறிக்கொண்டேன். அம்மரமானது நதியின் இருகரைகளில் ஒரு கரையிலேனும் ஒதுங்காமல் நடுநதியிலேயே வெகு வேகமாய் மிதந்துகொண்டு வந்தது. மழை அதிகமா யிருந்தபடியால் குளிரும் அதிகமா யிருந்தது. நதியின் ஜலம் பனிக்கட்டியைப்போல் சில்லென்றிருந்தபடியினால் எனக்கு அதிக கஷ்டமுண்டாயிற்று. இரவு முழுவதும் நதியில் அவஸ்தைப் பட்டுக்கொண்டு வந்தேன். பொழுது விடியும் சமயமாயிற்று. பிறகு அரை மணி நேரத்திற்குள் என் நிலைமை எனக்குத் தெரியாமல் ஒருவித மயக்கம் உண்டாயிற்று. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அதன் பிறகு என்னை நான் தங்கள் வீட்டிலிருக்கக் கண்டேன். ஐயா! எனக்குத் தெரிந்தவரையில் என்னுடைய வரலாறு இவ்வளவுதான். நதியில் பிரக்ஞைபற்ற நான் தங்களுடைய வீட்டிற்கு எப்படி வந்தேன் என்பதை அறிய ஆவலுறுகிறேன்.

என்று சில விஷயங்களைக்கூறி முடிவில் ஒரு கேள்வியை அமிர்தசாகரன் கேட்டவுடன், நதியினின்றும் அமிர்தசாகரனைச் செம்படவர்கள் எடுத்ததுமுதல் இதுவரையில் அமிர்தசாகரனுக்குத் தெரியாமல் நடந்துள்ள—அவனைப் பற்றிய எல்லா விஷயங்களையும் ஒன்றும் விடாது வரிசைக் கிரமமாக அவனிடம் சொன்னார் ராமதாஸர்.

அமிர்தசாகரன்:—அப்படியானால் என்னைக் காப்பாற்றிய அந்தச் செம்படவர்களை நான் பார்க்கவேண்டும். இனி அவர்கள் எப்பொழுது இங்கு வருவார்கள்?

ராமதாஸ்:—இன்றைக்கேனும் அல்லது நாளைக்கேனும் அவர்கள் கட்டாயம் இங்கு வருவார்கள்.

ராமதாஸ் வைத்தியரும், அமிர்தசாகரனும் இவ்வண்ணம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுது அமிர்தசாகரனைக் காப்பாற்றிய செம்படவர்கள் அங்கு வந்தார்கள். ராமதாஸ் செம்படவர்களைச் சுட்டி 'இவர்கள் தாம் உன்னை நதியினின்றும் கரையிற் சேர்த்துக் காப்பாற்றியவர்கள்' என்று அமிர்தசாகரனிடம் சொன்னார். தன்னைக் காப்பாற்றியதற்காக அமிர்தசாகரன் செம்படவர்களைப் பலவாறாகப் புகழ்ந்தான். செம்படவர்கள் அமிர்தசாகரனுடைய வரலாறுகளை ராமதாஸ் மூலமாகத் தெரிந்து கொண்டார்கள். வைத்தியரிடத்திலும் அமிர்தசாகரனிடத்திலும் உத்தரவு பெற்றுக்கொண்டு தத்தம் வீடுகளுக்குப் போகப்புறப்பட்ட செம்படவர்கள் ராமதாஸரைத் தனிமையிலழைத்து அவரிடம் ஐம்பது ரூபாய் கொடுக்கப் போனார்கள். ராமதாஸ் அதை வாங்காமல் அவர்களைப்பார்த்து, 'நான் உங்களிடமிருந்து இந்த ரூபாய்களை வாங்கமாட்டேன். உங்களைப் போல் நானும் அமிர்தசாகரனுக்கு உதவி செய்தவனாவேன்,' என்று கூறினார். பிறகு செம்படவர்கள், கூடுமானா நாளைக்கி நாங்க இங்கே வாரோம்' என்று சொல்லிப் போய்விட்டார்கள். அமிர்தசாகரன் 'இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குப்பின் கோகுலபுரிக்குப் போகலாம்' என்று எண்ணி, ராமதாஸ் வீட்டின் வெளிப்புறத்திலிருந்த ஒரு தனி அறையில் தங்கியிருந்தான்.

எட்டாவது அத்தியாயம்.

கன்னிகையைக் கண்டு காதல் கொள்ளுதல்.

"தெய்வமென்பதோர் சித்த முண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

மாணிக்கவாசகர்.

மறுதினம் மாலை நாலுமணிக்கு, அமிர்தசாகரன் வைத்தியரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, வெளியில் உலாவச் சென்றான். ஊரிலுள்ள விநோதமான சில விஷயங்களைச் சுற்றிப்பார்த்தான். விநோதங்களைப் பார்த்துக்கொண்டே வெகு தூரம் சென்றான். வழி தெரியாமல் மற்றொரு வழியைப்பற்றி அவ்வழியில் கால்மணி நேரம் நடந்தான். 'நாம் வந்தவழி இது வல்லவே' என்று எண்ணித் தயங்கினான். ஆலோசனையோடு பின்னும் சிறிது தூரம் சென்றான். அவன் செல்லும் வழியானது போகப் போகக் குறுகி ஒரு பெரிய பங்களாத் தோட்டத்திற்குட் சென்றது. தோட்டவாயிலின் கதவு திறக்கப்பட்டிருந்தது. அமிர்தசாகரன் உள்ளே சென்று தோட்டத்தின் வளப்பத்தைக் கண்டு பிரமித்தான். 'ஆ! இஃதென்ன விந்தை! இந்தத் தோட்டமானது சுமார் இரண்டு மைல் சுற்றளவுள்ளதா யிருக்கும்போல் தோன்றுகிறது. இதற்கு முன் யான் பார்த்திராத விதவிதமான விருக்ஷங்களும், புஷ்பச்செடிகளும், பலவிதப் பக்ஷிகளும் இங்கிருக்கின்றன. தரை முற்றிலும் பசும்புற்களால் மூடப்பட்டுப் பச்சைநிறப் பட்டைப் போன்றிருக்கிறது. நட்சத்

திரங்கள் ஆகாயத்தினின்றும் உதிர்ந்தாலெவ்வித மிருக்கு மோ அவ்விதம், புஷ்பங்கள் மரங்களிலிருந்தும், செடிகளி லிருந்தும், பூமிதேவிக்கு அர்ச்சனைசெய்வது போல் சலசல வென்று உதிர்கின்றன. காற்றானது புஷ்பங்களின் நறு மணத்துடன் சேர்ந்து எவ்வளவு மேன்மையாய் வீசுகிறது! கிள்ளைகளின் மொழி சிறு குழந்தைகளின் மழலை வார்த்தை களைப்போலிருக்கின்றது. 'நடனத்தில் தேர்ச்சி பெற்ற எந்த ஸ்திரீயும் எங்களுடைய நடனத்திற்கிணையாக நடனம் செய்யமுடியாது' என்று சொல்லுவனபோல் மயில்கள் ஆடு கின்றன. தடாகத்திலுள்ள ஜலமுற்றிலும் உருக்கி வார்த்த வெள்ளியைப் போலிருக்கிறது. அந்த ஜலத்தின் மீதிருக் கும் தாமரைப் புஷ்பங்கள் கண்ணனுடைய கண்களைப் போல் சோபிக்கின்றன. தத்தம் வெள்ளிய சிறகுகளால் அன்னப் பறவைகள் அள்ளித் தெளிக்கும் நீர்த்துளிகள் முத்தைப்போல் தாமரை இலைகளில் பட்டவுடன் அந்நீர்த் துளிகள் முத்துகளைப்போல் பிரகாசிக்கின்றன. பனி போன்ற வெண்ணிறம் வாய்ந்துள்ள சலவைக் கற்களால் கட்டப்பட்டிருக்கும் இத் தடாகத்தின் படிக்கட்டுகளைக் காண்போர் யார்தான் அதிசயப்படமாட்டார்கள்! இப் படிக்கட்டுகளில் செதுக்கப்பட்டுள்ள சித்திரங்களைப்பார்த்த வுடன் எனக்கு யமுனாநதிக் கரையிலுள்ள 'தாஜ் மஹா லின்'' ஞாபகம் வருகிறது. அநேகம் நீரூற்றுகள் தாமே உற்பத்தியாகி, நீரெல்லாம் இங்குள்ள மரம், செடிகளுக்குப் பாய்ந்து கொண்டிருக்கிறது. நீரோட்டமானது பருவ மங்கையர்களின் நடையைப்போலும், அந்நீரின் கீழ்ப்பாகத் தில் தோன்றுகிற கருமை நிறமணலானது அம்மங்கையர்க ளின் கரியகூந்தலைப்போலு மிருக்கிறது. ஆ! விதவிதமான விருக்ஷங்கள் எத்தனை! சாமந்தி, ரோஜா, அல்லி, தாமரை,

அடுக்கு மல்லிகை, முல்லை, வாடா மல்லிகை, சண்பகம், அரளி, செந்தாமரை, சூர்யகாந்தி, என்னும் பலவிதப் புஷ்பச் செடிகொடிகள் எத்தனை! மா, பலா, கொய்யா, மாதுளை, கிச்சிலி, எலுமிச்சை, அசோகு, சந்தனம், தேக்கு, தென்னை, பாக்கு முதலிய இன்னும் அநேகவித விருக்ஷங்களையும், படர் கொடிகளையும் பார்க்கப் பார்க்க மனத்திற்கு இன்பமாயிருக்கிறது. இந்தத் தோட்டம் ஒரு தனவானுடையதாயிருக்கும். மேலே அண்ணாந்து பார்த்தால் சூரியன் இருக்குமிடம் தெரியாதபடி மரங்களிலுள்ள இலைகள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. அன்றியும், மேலே எங்குப் பார்த்தாலும் மரகதநிறமாகவு மிருக்கிறது. குளிர்ச்சி பொருந்திய இத்தடாகத்தின் வளப்பங்களைப் பார்க்கப்பார்க்க மட்டற்றமகிழ்ச்சியுண்டாகிறது. ஆ! அநேகம் மான்கள் கூட்டம் கூட்டமாய்ப் புல் மேய்ந்துகொண்டிருக்கின்றன. இவ்வளவு அழகாயுள்ள இத்தோட்டற்திற்கு மான்களில்லாவிடில் அழகாயிராதன்றோ? என்ன அற்புதம்! அதோ சலவைக் கற்களால் கட்டப்பட்ட சந்திரகாந்த மண்டபமொன்று தெரிகின்றது. அங்குச் சென்று அம்மண்டபத்தின் விநோதங்களைப் பார்ப்போம்' என்று இவ்வண்ணம் தனக்குள் நினைத்துக்கொண்டு அமிர்தசாகரன் சந்திரகாந்த மண்டபத்திற்குச் சென்று அங்கிருந்த ஒரு சோபாவின்மீது உட்கார்ந்தான். வெட்டிவேரால் செய்த விசிறியினால் உண்டாகும் காற்று எவ்வளவு மணமுள்ளதா யிருக்குமோ அவ்வளவு புஷ்பங்களின் சத்தால் சந்திரகாந்த மண்டபத்தின் மீது வீசிய காற்று நறுமணமுடையதா யிருந்தது. அதனால் மாலைக்காலமா யிருந்தும் அமிர்தசாகரன் அயர்ந்து நித்திராதேவியோடு உறவாடலானான். பாஷாபிமானிகளாகிய வாசகர்களே! இவ்விஷயம் இவ்விதமிருக்கட்டும்.

அமிர்தசாகரன் நித்திரை செய்துகொண்டிருக்கும் சந்திரகாந்த மண்டபத்தின் வடபாரிசத்தில் ஒரு அழகிய அரண்மனை இருந்தது. அந்த அரண்மனையைச் சுற்றிலும் மா, பலா, தேக்கு, தேவதாரு, தென்னை முதலிய பல விருக்ஷங்கள் சூழ்ந்து அதைமறைத்துக்கொண் டிருந்தபடியால் அவ்வரண்மனை அமிர்தசாகரனுக்குத் தென்படவில்லை. அவ்வரண்மனையி னின்றும் சுமார் இருபது வயதுள்ள ஒரு யௌவன ஸ்திரீ வெளியே வந்தாள். அம்மம்மா!

அவளுடைய அழகைப்பற்றி வர்ணிப்பதென்றால் எளிதல்ல, ஆகிலும் எம்மால் இயன்றமட்டும் எண்டுக்கூறுவோம். அவளுடைய கூந்தலோ கரிய மேகம். அக்கூந்தலின் நுனி முடியப்பட்டு ஒரு ரோஜா புஷ்பத்துடன் விளங்கியது. கூந்தலின் நுனியில் காணப்படும் ரோஜா புஷ்பமானது கரிய மேகங்களுக் கிடையே தோன்றும் நட்சத்திரம் போன்றிருந்தது. பளபளப்புடன் கூடிய முகத்தைக் கண்ணாடிக்கு ஒப்பிடலாம். நெற்றியோ சிறு வெண்ணிலா. புருவமோ விண்ணில் தோன்றும் வில்லெனலாம். நாசியோ குமிழம். கண்களோ செங்கமலப் புஷபம். கருவிழிகளோ கருவண்டு. பற்களோ முத்து. உதடுகளோ இரு பவளத்துண்டுகள். காதுகளோ வள்ளைத்தண்டு. கன்னமிரண்டும் சற்றுக் கதுப்புற்றிருந்தன. கழுத்தோ கமுகு. அங்கையோ காந்தட் புஷ்பம். நெடும் உடலைத்தாங்கி நிற்குமிடையோ ஒரு கைப்பிடியில் அடங்கக் கூடிய உடுக்கையின் இடை. முழங்கால்களின் வட்டமோ முத்துச்சிப்பி. கணைக்கால்களோ துள்ளும் வரால். பஞ்சுபோன்ற சிறிய பாதங்களோ செந்தாமரை. இவ்வளவு இயற்கை அழகு வாய்ந்துள்ள மங்கையின் செயற்கை அழகைச் சற்றுக் கவனிப்போம். மாசுமருவற்ற அம்மாதின் மதியம்போன்ற நெற்றியிலுள்ள

கஸ்தூரிப் பொட்டானது சந்திரகளங்கம் போலிருந்தது. அவள் வைரக்கற்கள் பதித்த மெல்லிய நீலநிறப் பட்டுப் புடவையை உடுத்தியிருந்தாள். அப்புடவையானது அவளுடைய பாதங்களை முத்தமிடுவதுபோல் பாதம் வரையில் புரண்டுகொண் டிருந்தது. சதங்கை பாதஸரம் ஆகிய இவைகள் இருபாதங்களிலும், இடையில் சதங்கை கட்டிய பசும்பொன் ஒட்டியாணமும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. கைகளில் வைரக் கற்கள் பதித்தமெல்லிய பசும்பொன் வளையல்களும், புஜத்தில் பாஜியும் கழுத்தில் மெல்லிய வைர அட்டிகையும், விலை மதிக்க முடியாத பல முத்துமாலைகளும் விளங்கின. அந்த மாலைகளை எடுத்துக் காட்டுவனபோல் இருதன பாரங்களும் ஏந்தி நின்றன. காதுகளில் சிறிய வைரக் சம்மல்கள் ஒளி வீசின, இவை போன்ற இன்னும் சில செயற்கை அழகுடன் விளங்கிய அந்தப் பெண்மணியின் சிரசில் இரத்தின கிரீடமொன்று ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அக்கிரீடத்தினின்றும் சிரசின் பின்புறம் ஜரிகை புட்டர்போடப்பட்டதும், மிகவிரிவும் சுமார் பத்து கெஜ நீளமுள்ளதுமான ஒரு ரோஜா நிற வஸ்திரம்தொங்க அதை ஒரு தோழி தரையில் விழாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டும், வேறு இரு தோழிகள் இருபுறமும் விசிறிக் கொண்டும், மிக நன்றியறிதலுள்ள மற்றொரு தோழி அப் பெண்மணியோடு சம்பாஷித்துக்கொண்டும் வர அழகிய பூங்கொத்து ஒன்றைக் கையிற் பிடித்துக்கொண்டு அசைந்தாடும் பசுங்கொடிபோல் அன்ன நடையுடன் பஞ்சுபோன்ற மிருதுவான பசும்புல் தரையில் அந்தத் தோட்டத்தின்மத்தியிலுள்ள சந்திரகாந்த மண்டபத்தை நாடி நடந்தாள். அந்தப் பெண்மணி புறப்பட்ட அரண்மனைக்கும், சந்திரகாந்த மண்டபத்திற்கும் இடையில் கால்வைத்தால் முழங்

கால் வரையில் மறைந்து போகுமளவு பசும்புல் அபரிமிதமாய் வளர்ந்து பஞ்சு மெத்தையைப்போல் மிருதுவாய்க் காண்போர் மனத்தைக் கவரக் கூடியதாயிருந்தது. புஷ்பச் செடிகளினின்றும், காற்றினல் உதிர்க்கப்பட்ட பற்பல விதமான புஷ்பங்கள் அந்தப் புற்களின் மீது சிந்திக்கிடந்தன. அதைக்கண்டவுடன் அவ்விளங்குமரி தன் தோழிகளைப்பார்த்து,—"என் அன்பார்ந்த தோழிகாள்! மிருதுவான இப்பசும் புற்களின் வளப்பத்தைப் பாருங்கள். என்ன நேர்த்தி! நீல நிறமான ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்தால் எப்படியிருக்குமோ அப்படி, இப்புற்களின்மீது சிந்திக்கிடக்கும் புஷ்பங்களெல்லாம் விளங்குகின்றன. மிருதுவான இப்புற்களின்மீது சிறிது நேரம் வீற்றிருக்க விரும்புகிறேன். உங்கள் விருப்பம் யாது?' என்று கேட்டாள். அதற்குத் தோழிகள் அவளைப்பார்த்து, 'அம்மணீ! தங்களிஷ்டப்படியே இங்கு வீற்றிருக்கலாம்' என்று கூறினர்கள். பிறகு ஐந்துபேரும் அம்மெல்லிய புற்களின்மீது உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தவுடன் அப்பெண்மணி தன் தோழிகளைப்பார்த்துத் 'தோழிகாள்! நீங்கள் நால்வரும் இத்தோட்டத்தின் பல பாகங்களுக்கும் சென்று பலவிதமான வாடாத புஷ்பங்களிற் கொஞ்சம் கொண்டு வாருங்கள். நாம் அதை மாலை கட்டி விளையாடுவோம்' என்றாள். அதற்குத் தோழிகள் அம்மாதைப்பார்த்து 'அம்மணீ! நாங்கள் நால்வரும் புஷ்பங்களைக் கொய்யப்போய்விட்டால் தாங்கள் தனியே இருப்பீர்களோ? இருக்க முடியுமா?' என்று கேட்டார்கள். அதற்கு அந்த யுவதி தோழிகளைப்பார்த்து—'ஏன்? நான் இங்குத் தனியே இருந்தால் என்ன? பயமா? எதற்காக அவ்விதம் கேட்டீர்கள்? என்னுடைய குணம் உங்களுக்குத் தெரியாதா? நறுமலர்களை விரைவுடன் சென்று கொய்து

வாருங்கள்' என்றாள். அவ்வார்த்தையைக் கேட்டவுடன் தோழிகள் அப்பெண்மணியின் சௌந்தர்யத்திற்கும், வீரத் தன்மைக்கும் வியந்து புஷ்பங்களை நாடித் தோட்டத்தின் பல பாகங்களுக்கும் பிரிந்து சென்றார்கள்.

அவர்கள் சென்றவுடன் தனியேயிருந்த பெண்மணி பின்வருமாறு பேச ஆரம்பித்தாள்.

'திங்கள் சடையோன் திருவருளால் நான் ஸ்திரீயாக ஜன்மமெடுத்தது முதல் இது வரையில் சுகத்தையே அநுபவித்துக்கொண் டிருக்கிறேன்; 'ஜயகுமாரி' என்னும் பெயருடன் இந்தச் சேதுபுரி ஜமீனை நீதியுடன் ஆட்சிபுரிந்து வருகிறேன்; காருண்யம் வாய்ந்துள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரவர்களுக்குச் செலுத்த வேண்டிய பகுதித் தொகையைத் தடையின்றிச் செலுத்தி விடுகிறேன். அவர்களும் என் விஷயத்தில் அருமை பாராட்டி வருகிறார்கள். அதைப்பற்றிய குறை ஒன்றுமில்லை. ஆண் மகனுக்குள்ள ஆண்மையும், கல்வியும் கடவுளின் கிருபையால் எனக்கமைந்திருக்கின்றன. அழகில்லாமற் பிறந்தேனா? அதிஷ்டமில்லாமல் பிறந்தேனா? அழகு, அதிஷ்டம் ஆகிய இவைகளிருந்தென்ன பிரயோஜனம்? 'உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்' என்னும் ஆன்றோர் வாக்கியமொன் றிருக்கிறபடியால் ஒரு சகோதரியாவது அல்லது சகோதரனாவது என்னோடு பிறக்கப் புண்ணியம் செய்தேனில்லை. என் தாய் தந்தையர்களாவது உயிரோடு இன்னும் சிலகாலம் இப்பூமியிலிருந்தார்களா? அவர்களுமில்லை. அந்தோ! அவர்கள் மரணத்திற்குள் ளானதைப் பற்றித் துயரப்படாதவர்கள் யார்? என்னுடைய உறவினர்களோ உண்மையுடையவர்களாயில்லை. என் தாயாரின் சகோதரன் என்னைப்போல ஓர் ஊருக்கு ஜமீன்தாரரா யிருந்தான். என் தாய் தந்தை

அவனுக்கொரு ஜமீன் புத்திரியை மண முடித்தனர். மண மான மறுமாதம் மணமகள் மாண்டாள். மறுபடியும் என் தந்தை அவனுக்கு மற்றொரு ஜமீன்தாரருடைய மகளை மண முடித்து வைத்தார். இரண்டாவது மணமகளின் பெயர் குணவதி. குணவதி என்னும் பெயர் அப்பெண்மணிக்கே தகும். என் தாய் தந்தையர் மரணமடைந்த மறுவருஷம் அக்குணவதியும் அகால மரணத்திற் குள்ளானாள். என் தாயாரின் சகோதரனுக்கு அப்பொழுது வயது நாற்பது. கல்விப் பொருள் அவனிடம் அதிகமில்லை. நற்குணமுமில்லை. ரூபமோ அதற்குமேல். என்னவோ அதிர்ஷ்டவசத்தினால் உயர்ந்தாரின் குடும்பத்தில் அவதரித்துவிட்டான். அவன் தன்னை விவாகம் செய்து கொள்ளும்படியாய் என்னிடம் கடிதவாயிலாயும், தோழிகள் மூலமாகவும் கேட்டுக்கொண் டான். நான் கொஞ்சமும் சம்மதிக்காமல் மறுத்துவிட் டேன். அவன் என் மீது கோபமுற்று, புத்திரிகளையுடைய அநேக தனவந்தர்களிடம் தனக்கு விவாகத்திற்குப் பெண் கேட்டான். அதற்கு அந்தத் தனவந்தர்கள் சம்மதிக்கி னும் அவர்களுடைய புத்திரிகள் ஒவ்வொருவரும் அவனு டைய புகைப்படத்தை வரவழைத்து, அப்படத்திலுள்ள அவனுடைய ரூபத்தைக் கண்டு, கொஞ்சமும் அவனை மணந்துகொள்ள இசையவில்லை. முடிவில் என் தாயாரின் சகோதரனுடைய விவாகத்திற்கு வழி ஏற்படவில்லை. அப் போது அவனுக்குண்டான கோபத்திற்கு, நான் என்ன கெட்டிக்காரியும், மனிதபல முள்ளவளாயினுமென்ன? எப் படியும் ஸ்திரீதானே! தற்காலமுள்ள பிரிட்டிஷ் கவர்ன் மெண்டே அப்பொழுது இல்லாமலிருந்திருந்தால், அந்த மூர்க்கன் என்மீது படையெடுத்து வந்து என்னுடைய ஊரைப்பிடித்துக்கொள்ளுவதோடும், என்னையும் கைபிடித்

திருப்பான். சென்ற வருஷம் அவனும் காலஞ் சென்றான். இப்பொழுது என் வம்சத்தில் என்னை ஒருத்தியைத்தான் கடவுள் உயர்ந்த பதவியில் வைத்திருக்கிறார். மங்களபுரி என்னுமூரில் என் பந்துக்கள் ஜமீன்தாரர்களாய் வாழ்வ தாகக் கேள்வி. நான் அவர்களைப் பார்த்ததேயில்லை. என்னுடைய வாழ்நாட்களுக்குப் பின் என் வம்சத்தின் பெயர் சிறிதுமில்லாமற் போய்விடும்போல் தோன்றுகிறது. என் தந்தை இருப்பாராஞல் எனக்குத் தகுந்த வரனைத்தேடி மணமுடித்திருப்பார். அவருமில்லை. நான் எத்தனையோ புத்தகங்களை வாசித்திருக்கிறேன். அப்புத்தகங்களெல்லாம் பெண்களுக்குத் தம்புருஷர்களே தெய்வமென்றும், கன்னிகைகள் கணவனோடு வாழவேண்டுமென்றும், மணமின்றி மங்கையர்கள் முற்றுந்துறந்த ஞானிகளைப்போல் தத்தம் மனம்போன போக்கெல்லாம் போகலாகாதென்றும். இல்லத்திலிருப்பவள் உத்தமகுணம் வாய்ந்துள்ள ஒரு புருஷனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவன் மனமகிழும் வண்ணம் இல்லறத்தை இனிமைபெற நடத்தவேண்டுமென்றும் அவ்விதம் நடத்துகின்றவளே உத்தமஸ்திரீ என்றும் கூறுகின்றன. ஆகையால் நான் விவாகம் செய்துகொள்ளாமலிருப்பது சரியன்று. விவாகத்தை வெறுத்துத் துறவரத்தைக்கைக்கொள்ளுவேனென்றாலும், என் தந்தைக்குச் சொல்லிய வாக்கியத்தை நிறைவேற்றுதவளாவேன். அவரோ இறக்கும் தருணத்தில் என்னைப் பார்த்துக் 'கண்மணீ! ஜயகுமாரி! குழந்தாய்! உன்னுடைய அதிர்ஷ்டம் இவ்வளவுதான். நீ தைரியத்தைக் கைவிடாதே. நீயோ நன்றாய்ப்படித்தவள். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நீ உன்னுடைய அன்பிற்கிசைந்த ஒருவனை மணந்துகொள். என்று சொல்லிவிட்டு மரணமடைந்தார். யானும் அவரு

டைய வேண்டுகோளுக் கிணங்கினேன். இப்பொழுது எனக்கு யானே வரனைத் தேடுவதென்றால் வெட்கமாயிருக் கிறது. உண்மையில் எத்தனையோ அரச புத்திரர்கள் கூட என்னை மணந்துகொள்ள விரும்புகிறார்கள். பிரயோசன மென்ன? அவர்களுக்கு அங்க அழகிருந்தால் கல்வி அழ கில்லை; கல்வி அழகிருந்தால் அங்க அழகில்லை. சிலர் குண பேதகர்களா யிருக்கிறார்கள். குணம், கல்வி, அழகு ஆகிய இவைகள் வாய்ந்துள்ள ஜமீன்தாரர்களின் குமாரர்கள் ஒரு வராவது இருக்கிறதாகத் தோன்றவில்லை. போகட்டும். எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும கடவுளின் தயவி ருந்தாலன்றி என்னுடைய எண்ணம் நிறைவேறுவது கஷ் டம். எல்லாவற்றிற்கும் கடவுளே! நான் உன்னையே நம்பி இருக்கிறேன்' என்று இவ்வண்ணம் தன்னுள் எண்ணிக் கொண்டிருந்த ஜயகுமாரி திடீரென்று எழுந்து, 'என்ன! இன்னும் ஏன் என் தோழிகள் வரவில்லை? யானும் அவர்க ளிருக்கு மிடத்திற்குச் செல்லுகிறேன்' என்று சொல்லிக் கொண்டே சந்திரகாந்த மண்டபத்தின் பக்கமாகப்போய்க் கொண்டிருக்கையில் அங்கொரு புஷ்பச்செடியில் அருமை யான புஷ்பங்கள் அபரிதமாயிருக்கக் கண்டு மகிழ்ச்சி கொண்டு அவைகளைப் பறிக்க ஆரம்பித்தாள்.

வாசகர்களே! நித்திராதேவியோடு உறவாடிக் கொண் டிருந்த அமிர்தசாகரன் திடுக்கிட்டெழுந்து சூரியன் அஸ்த மனகிரிக்குள் சென்றும், செல்லாமலு மிருப்பதைக் கண்டு 'ஆ! என்ன காரியம் செய்துவிட்டேன். சூரியன் அஸ்த மித்து விட்டான். இருள் சூழ ஆரம்பித்து விட்டதானாலும் பௌர்ணமி யாதலால் வெளிச்சமிருக்கிறது. இங்கு நான் வந்து வெகுநேரமாயிற்று. வைத்தியர் தேடுவார்' என்று சொல்லிக்கொண்டே சந்திரகாந்த மண்டபத்தினின்றும்

வைத்தியர் வீட்டிற்குப் போகப் புறப்பட்டான். சிறிது தூரத்தில் புஷ்பம் பறித்துக்கொண்டிருந்த ஜமீன்தாரி குமாரியைப் பார்த்து விட்டான். திடுக்கிட்டு நின்றான்; பிறகு தனக்குள் அடியில் வருமாறு சிந்திக்கலானான்.

'ஆ! என்ன புதுமை! நான் எண்ணிய வண்ணம் இந்தத் தோட்டம் ஒரு கனவானுடையதே. அதோ கண்டோர் மனத்தைத் தன்னிடம் கவரத்தக்க காட்சியுடன் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டிருக்கும் புண்ணியவதி அக்கனவானுடைய திருக்குமாரியா யிருக்கலாம். அவளுக்கு இன்னும் விவாகமில்லை எனத்தோன்றுகிறது. அன்றியும் அவளைப் பார்த்தால் என்னுடைய காதலி அமிர்தலதைனைப்போலிருக்கிறாள். ஆனால், அவள் ஏனைய ஸ்திரீகளைப்போலின்றி வீரத்தன்மை வாய்ந்தவளெனத் தெரிகிறது. என்ன ஆச்சரியம்! என்னுடைய மனத்தை அரைக்ஷண நேரத்திற்குள் தன்னிடம் கவர்ந்து கொண்ட அவளுடைய முகவசீகரந்தானென்னே? அவளை அரசகுமாரி என்று சொல்வதற்குத் தகுந்த அடையாளங்கள் கூட அவளிடமிருக்கின்றன. என்ன சௌந்தர்யம்! பிரமன் தன்னுடைய கைபடிய இரதியைப் படைத்துப் பிறகு இவளைப் படைத்தான் போலும்! ஈதென்னவிந்தை! அதோ வேறு யாரோ நாலு பெண்கள் அப்பெண்மணியிடம் வருகிறார்கள். அவர்களைப் பார்த்தால் அவ்வழகிய மாதின் தோழிகளெனத் தோன்றுகிறது. அத்தோழிகள் அவ்வழகிய மாதைப் பார்த்து,- "அம்மணி! அரண்மனைக்குப் போகலாம் வாருங்கள்" என்று அழைக்கிறார்கள். அதற்கு அவ்வழகிய மாது "இன்னுமுள்ள மற்ற புஷ்பங்களையும் பறித்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லுகிறாள். ஆ! இவளுடைய குரலோசையானது என்னுடைய செவிக்கு வீணை நாதம்போலிருக்கிறது. ஆலம்

விழுதைப்போல் வளர்ந்து, படிப்படியாச் சரிந்து, நாகப் பழ நிறம் வாய்ந்து விளங்கும் அவளுடைய கூந்தல் கரிய மேகங்களை வெட்கச் செய்கின்றது. அவளுடைய அழகிய சிறுநெற்றியென்ன இளம்பிறையோ? அல்லது பல நிறம் வாய்ந்த வானவில்லோ? மான்களின் கண்களை நிகர்த்து மையிட்டு மருண்ட பார்வையுடன் விளங்கும் அவளுடைய கண்களென்ன குளிர்ச்சி பொருந்திய நீரையுடைய தடாகத்திலுள்ள சேலோ! அல்லது என் மனத்தைச் சூறைகொள்ளும் வேலோ? புன் சிரிப்பு வாய்ந்துள்ள அவளுடைய வாய்தானென்ன செவ்வலரியோ? அவள் பற்களென்ன முத்தோ? அல்லது நெருக்கித் தொடுத்த மல்லிகை மொக்கோ? தன் தோழிகளோடு ஏதேதோ பேசிக்கொண்டு புஷ்பங்களைக் கொய்துகொண் டிருக்கும் அவளுடைய வார்த்தைகளென்ன கிள்ளை மொழியோ? அல்லது குழறிப் பேசும் மதலைகளின் வார்த்தையோ? பசுங் கொடி போன்ற அவளுடைய தேககாந்தி என்ன மின்னலோ? நிமிஷத்திற்கு நிமிஷம் வெவ்வேறுவிதமாய்த் தோன்றுகிறாள். அந்தோ! அவள் தன்னுடைய தோழிகளோடு பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் கேட்கக் கேட்கத் தெவிட்டவில்லையே! ஆ! அவளுடைய தோழிகள் அவளை அழைத்துக்கொண்டு போகிறார்கள். இவ்வளவுதானோ நான் அவளைப் பார்க்கப் புண்ணியம் செய்தேன்? அப் பெண்மணியும் அதோ இருக்கும் அந்த மாந்தோப்புக்குள் தன்னுடைய தோழிகளோடு போய்விட்டாள். இன்னும் சிறிது நேரம் அவளுடைய தோழிகள் அவளிடம் வராம லிருந்திருப்பார்களானால் நான் அவளிடம் சென்று ஏதாவது இரண்டொருவார்த்தை பேசியிருப்பேன். அவளாவது அவளுடைய தோழிகளாவது என்னைப்பார்க்கவில்லை. அவளுடைய நடை, நொடி, பாவனை

களால் அவள் என் கண்மணி அமிர்தவதனவைப்போ லிருக்கிறாள். அவள் தான் அமிர்தவதனவோ?—அல்ல' என்று இவ்வண்ணம் தனக்குள் வசனித்துக் கொண்டிருந்த அமிர்தசாகரன் 'சரி; இனி நான் இங்கு நின்றுகொண்டிருப் பதில் பிரயோஜனமில்லை' என்று சொல்லிக்கொண்டே தோட்டத்தினின்றும் புறப்பட்டு வைத்தியரின் வீட்டை நாடிச் சென்றான். அவருடைய வீட்டிற்குப் போக வழி தெரியவில்லை. பொழுது போய் விட்டது. மேகங்களினால் சந்திரன் மறைக்கப் பட்டிருந்தமையால் எங்குப் பார்த்தா லும் இருள் மயமாயிருந்தது. மணி ஒன்பதாயிற்று. பார்த் தான் அமிர்தசாகரன். 'என்ன செய்வேன்? நான் அநேக ரைக் கேட்டேன். அவர்களெல்லோரும் என்னைப் பார்த்து, எங்களுக்கு வைத்தியரின் பெயர் மாத்திரம் தெரியுமே யல் லாமல் அவருடைய வீடு எங்கிருக்கிறதென்று 'எங்களுக் குத் தெரியாது' என்று பதிலளித்து விட்டார்கள். சிலர் 'நீ யார்? ஏன் வைத்தியரைத் தேடுகிறாய்?' என்று இம்மா திரியான சில அசம்பாவிதமான கேள்விகளைக் கேட்கின் றார்கள். அவர்களெல்லோருக்கும் பதிலளிப்பதென்றால் பெருஞ் சங்கடமாயிருக்கிறது. எனக்கு எப்பொழுதும் சுகமும், துக்கமும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. போகட்டும். இனி இந்த இரவில் நான் வைத்தியருடைய வீட்டைத் தேடிப் போவதென்றால் முடியாது. பொழுது விடிந்தபின் அவருடைய வீட்டிற்குப் போகலாம். இப்பொ ழுது யார் வீட்டின் தெருத் திண்ணையிலாவது படுத்து உறங்குவோம்' என்று இவ்வண்ணம் அமிர்தசாகரன் தனக் குள் பேசிக்கொண்டு படுப்பதற்கு வசதியா யிருந்த ஒரு வீட்டின் தெருத் திண்ணையின்மீது தன்னுடைய அங்கவஸ் திரத்தை விரித்து அதன்மீது படுத்துக்கொண்டு, 'என்ன

விநோதம்! இறைவனின் திருக்கூத்து? ஆதியில் நான் மங்களபுரியில் மகிழ்ச்சியுட னிருந்தேன். பிறகு குணபூஷணரின் கம்பெனியில் சுகமுற்றிருந்தேன் பிறகு, இரயில் பிரயாணஞ்செய்கையில் ஆற்றில் விழுந்து அவஸ்தைப்பட்டேன். பிறகு வைத்தியரால் சுகமுற்றேன். அதன் பிறகு, இன்று யான் சென்றிருந்த பங்களாத் தோட்டத்திலொரு கன்னிகையைக்கண்டு களிப்புற்றேன். இப்பொழுது திக்கற்றவனைப்போல் இத் தெருத் திண்ணையின்மீது படுத்துக்கொண் டிருக்கிறேன். நாளைக்கென்ன நேரிடுமோ? அறியேன். ஆகையால் மனிதர்களுடைய உயர்வையும், தாழ்வையும் உற்று நோக்கினுல் அவைகளெல்லாம் கடவுளுடைய கருணையால் உண்டாகின்றனவேயன்றி வேறல்ல. அதுபற்றி யன்றே தாயுமானவரும் "அவனன்றி யோரணுவு மசையாது" எனக் கூறியுள்ளார்? என்று இவ்வண்ணம் நித்திரை செய்யாமல் விழித்துக்கொண்டு தனக்குள் விசனித்துக்கொண் டிருந்தான் அமிர்தசாகரன்.

ஒன்பதாவது அத்தியாயம்.

அமிர்தவதனுவின் எதிர்பாராத சந்திப்பு.

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ்சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு"—இளங்கோவடிகள்.

"சோமசேகரா! என் கதி இவ்விதமாயிற்றே? ஸ்திரீ ஜன்மமெடுத்த அபலையாகிய நான் இவ்வளவு கஷ்டப்பட முடியுமா? சாவித்திரி, திரௌபதை, ஜானகி, நளாயினி முதலியவர்கள் கஷ்டப்பட்ட பிறகாவது சுக மனுபவித்தார்களன்றோ? அப்படி ஒரு சுகத்தையும் அனுபவிக்க நான் கொடுத்து வைக்கவில்லையே. நான் கொஞ்சம் கல்வியைக் கற்றிருந்தமையால் மானமாய்க் காலத்தைக் கழிக்க வழி ஏற்பட்டது. நான் கல்வியற்றவளாயிருந்தால் என்னுடைய கதி எவ்விதமா யிருக்கும்? இப்பொழுது உன் கிருபையால் ஜீவனத்திற்கு ஒரு வழி ஏற்பட்டிருக்கிறது. நான் வயிறு வளர்க்கவோ கல்வியைக்கற்றேன்? அவருடைய இஷ்டத்தைப் பெறவன்றோ கல்வியைக்கற்றேன்! அவர் என்னை மெட்ரிக்குலேஷன் வரையில் கல்வி பயிலச்சொன்னார். யானும் அவ்விதமே அவர் மனமகிழும்படி மெட்ரிக்குலேஷன்வரையில் கற்றேன். அவரையே விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்று எண்ணினேன்; எண்ணிய விஷயத்தை அவரிடத்திலும் அறிவித்தேன். அவரும் என்னையன்றி மற்றொருத்தியை விவாகம் செய்து கொள்வதில்லை என்று கூறினார். பிறகு அவர் என்னை விட்டுப் பிரிந்தார். என் கதியும் இவ்விதமாயிற்று. நான் என்ன செய்வேன்? என்றைக்கு அவரைக் காணப்போகிறேன். கல்வியைக் கற்

றதனல் எனக்குண்டான புத்தியின் திறத்தை நான் அவருக்குக் குற்றேவல் செய்வதிலன்ரு செலுத்தவேண்டும்! அவ்விதமின்றி வீணே வயிற்றை வளர்த்துக்கொண்டு ஒதி போலிருப்பதனல் வரும் பயனென்ன? சுமார் நான்கு வருஷங்களுக்குமுன், நான் அவரைப் பார்த்தேன். அதன் பிறகு நான் அவரைப் பார்க்கவில்லை. அவருடைய ஊர் மங்களபுரி என்று என்னிடம் சொல்லியிருக்கிருர். ஆனல், அவ்வூரில் தற்காலம் அவர் இல்லையென்பது எனக்கு நன்ருய்த் தெரியும். சில தினங்களுக்கு முன் நான் சமாச்சாரப் பத்திரிகையில் அவர் தம்முடைய தந்தையின் வீட்டிலிருந்து மறைந்தார் என்று வரையப்பட்டிருந்ததைக் கண்டேன். அவர் மறைந்தவிடம் தெரியவில்லை, பாதகி, என்னுடைய அத்தை எனக்கு விரோதியா யிருந்தாள். அவளுடைய விட்டிலிருந்து புறப்பட்டபின், நான் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தேன். அவைகளைப்பற்றி எனக்கு யாதொரு கவலையுமில்லை. என் அன்பிற்கிசைந்த அமிர்தசாகரரை நான் அடைந்தால் போதும். அன்பா! தற்காலம் தாங்கள் எவ்வூரில் எவ்விதமாயிருக்கிறீர்களோ? என்னைத் தேடிச் சென்னைக்கு வந்து என்னைக் காணுததினல், வருந்தும் என்னை நினைத்து, வேறுவிவாகம் செய்துகொண்டீர்களோ? அல்லது என்னை நினைத்து ஏக்கம் பிடித்திருக்கிறீர்களோ? தாங்கள் என்னை மறக்க மாட்டீர்களென்பது என்னுடைய எண்ணம். பிறகு எப்படியோ? நான் தங்களையே பதியென்று எண்ணி விட்டேன். இனி நான் தங்களைக் காணுவிட்டாலும் இப்பொழுதிருக்கும் நிலைமையிலேயே என்னுடைய காலத்தைக் கழிப்பேன். பதிவிரதைகளுக்குப் பதியே கதி. காதலரே! இனி நான் எப்போது உம்முடைய கமலமுகக் காட்சியைக் கண்டுகளிப்பேன்? ஆ! என் அன்பார்ந்த காதலரே! ஒரு

நிமிஷ நேரமாவது தங்களை மறந்திருக்க முடியவில்லையே! எப்படி முடியும்? காதல்! நேசரே! கமலமுகக் காதலரே! இனி ஒரு காலத்தில் நான் தங்களுடைய திருப் பெயரையாவது ஒருவர் சொல்லக் கேட்கமாட்டேனோ?'' என்று இவ்வண்ணம் அமிர்தசாகரன் படுத்துக்கொண்டிருந்த திண்ணையின் பக்கத்திலுள்ள ஓர் அறையில் ஒரு பெண்மணி பேசிக்கொண்டிருந்தாள், இடையிலிருந்த பலகணியின் வழியாய் அவள் பேசும் வார்த்தைகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த அமிர்தசாகரன் 'இந்த அறைக்குள் பேசிக்கொண்டிருக்கும் பெண்மணியின் குரலோசையைக் கவனித்தால் என் பிரியத்திற்குரிய கண்மணியாகிய அமிர்தவதனையின் குரலோசையைப் போலிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே படுக்கையை விட்டெழுந்து அவ்வீட்டின் கதவைத் தட்டினான். வீட்டிற்குள்ளிருந்த ஸ்திரீ தன் வீட்டு வேலைக்காரியாகிய கிழவியைப் பார்த்தாள் அக்கிழவி நல்ல நித்திரை செய்துகொண் டிருப்பதைக் கண்டாள். 'என்ன செய்வேன்? கிழவியோ உறங்குகின்றாள். யாரோ இந்த நள்ளிரவில் கதவைத் தட்டுகிறார்களே' என்று சொல்லிக்கொண்டே சிறிது பயத்துடன் அந்த ஸ்திரீ தெருக்கதவின் சமீபத்தில் வந்து நின்றுகொண்டு 'இங்கிருந்தபடியே விசாரிப்போம்' என்றெண்ணியவளாகக் 'கதவைத் தட்டினவர்கள் யார்?' என்று கேட்டாள்.

அமிர்தசாகரன்:—கதவைத் திறந்தால் தெரியும்.

'கதவைத் திறக்காவிடில் தாங்கள் தங்களை இன்னாரென்று சொல்லமாட்டீர்களோ?' என்று வினவினாள் ஸ்திரீ.

அமிர்தசாகரன்:—இவ்வூரில் என்னை நீயாவது உன்னை நானாவது பார்த்ததில்லை. ஆகையால் நீ என்னை இன்னா

ரென்று அறிந்துகொள்ளும்படி நான் உனக்கு என்ன அடையாளத்தைச் சொல்லுகிறது?

'ஆகா அப்படியா! ஆனால் முன் பின் நேசமில்லாதவர்களிடத்தில் பேச்சென்ன?' என்றாள் மங்கை.

அமிர்தசாகரன்:—கதவைத் திறந்தால் நாமிருவரும் நேசமாவோம். இன்னும் நீ என்னை இன்னானென்று அறிந்துகொள்ள வில்லையா?

'என்ன ஆச்சர்யம்! வெளியில் நின்று பேசுகிறவருடைய குரலோசையைக் கவனித்தால் பழக்கப்பட்ட ஒருவருடைய குரலோசையைப்போ லிருக்கிறது. ஆனால், அவரை இன்னாரென்று அறிந்துகொள்ள முடியவில்லை. பழக்கப்பட்ட குரலாயிருப்பதனால், அவர் நமக்குக் கேடு நினைப்பவரா யிருக்கமாட்டார்' என்று இவ்வண்ணம் அப்பெண்மணி தன்மனத்திற்குள் எண்ணிக்கொண்டு தைரியத்துடன் கதவைத் திறந்தாள். திறந்தவுடன் அவளுக்கு வீட்டிற்குள் எரிந்துகொண் டிருந்த விளக்கின் வெளிச்சத்தினால் அமிர்தசாகரனுடைய முகம் நன்றாய்த் தெரிந்தது. அவளுடைய கண்களை அவள் நம்பவில்லை. 'நான் சாலவும் அமிர்தசாகரரின்மீது ஞாபகமா யிருந்தபடியால் கடவுள் தான் இவ்விதம் அமிர்தசாகரரின் உருக்கொண்டு வந்தாரோ? அல்லது நான் கனவு காண்கிறேனோ? உண்மையாய் நான் காதலித்த அமிர்தசாகரர் இவரானால், என்னைக் கண்டும் இவ்விதம் மௌனமா யிருப்பாரா?' என்று இவ்வண்ணம் தனக்குள் ஆலோசித்துக் கொண்டிருந்தாள் மாதரசி.

கதவைத் திறந்து காதலனைப்பார்த்து மௌனமுற்ற மங்கையின் மதிமுகத்தை உற்றுப்பார்த்த அமிர்தசாகரன் 'என்னுடைய காதலி அமிர்தவதனா இவளாயிருந்தால்

என்னைப்பார்த்ததும் இவ்வண்ணம் மௌனமா யிருப்பாளா? உலகத்தில் ஒருவரைப்போல் மற்றொருவருக்குக் குரலொலியும், ரூபமும் அமைந்திருப்பது இயற்கைதான். அவ்விதமிருக்க, சித்தப்பிரமை கொண்டவனைப்போல் இந்த ஸ்திரீயை அமிர்தவதனையென்று நினைத்தேனே' என்று இவ்வண்ணம் தன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு தன்னெதிரில் நின்றுகொண் டிருக்கும் ஸ்திரீயின் முகத்தை நோக்க வெட்கமுற்று நிலத்தை நோக்கலானான்.

தன்னைப் பார்த்தவுடன் தலைகுனிந்துகொண்ட அமிர்தசாகரனை உற்றுப்பார்த்த பெண்மணி 'ஆ! இவரும் மௌனமுற்று என்னுடைய முகத்தைப்பார்க்க வெட்கப்படுகிறார். இவர் என்னுடைய கா—தலர் தானா? சீ! ஈதென்ன என் மடமை! வெகு நன்றாய் இருக்கிறது. இவர் என்னுடைய காதலர் அமிர்தசாகரர்—அமிர்த சாகரரே—அமிர்த சாகரரே—என்னுடைய அன்பர் இவர் தான்—இவர் தான்—சந்தேகமில்லை' என்று இவ்வண்ணம் தன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு அமிர்தசாரனைப் பார்த்துத் 'தங்களுடைய கரத்திலிருக்கும் மோதிரத்தைக் கொடுங்கள் பார்ப்போம்' என்று கேட்டாள்.

உடனே அமிர்தசாகரன் தன்னுடைய கைவிரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி மங்கையிடம் கொடுத்தான். அவள் அதைப் பெற்றுக்கொண்டு வெளிச்சத்தின் சமீபத்திற் சென்று அதை உற்றுப்பார்த்தாள். பார்த்தவுடன் 'ஆ! என்னுடைய சந்தேகம் நீங்கிற்று. இஃது என்னுடைய மோதிரமென்பதற்கு இதில் அமிர்தவதனையென்று வெட்டப்பட்டிருக்கும் என்னுடைய பெயரே போதுமான சாட்சி. என்னை மறந்துவிடாம லிருப்பதற்காக என்னுடைய தந்தையின் சிங்காரத் தோட்டத்தில் இவரும் நானும் விநோத

மாய்ச் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் நான் இவருடைய விரலிலிட்ட மோதிரமன்றோ இது? இதோ வசீகர முகத்துடனிருக்கும் இவர்தாம்—இவர்தாம்—என்னுடைய—என்னுடைய—ஆசை நேசன்' என்று இவ்வண்ணம் மங்கை தன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு அமிர்தசாகரனை நோக்கி, 'அன்பீர்! ஏன் இப்படித் தலை குனிந்து கொண்டு நிற்கிறீர்கள்?' என்று கேட்டாள்.

இவ் வார்த்தையைக் கேட்டவுடன் அமிர்தசாகரன் 'இவள் என் அன்பிற்கிசைந்த அமிர்தவதனுவே—அமிர்தவதனுவே—சந்தேகமில்லை' என்று இவ்வண்ணம் தன்னுடைய மனத்திற்குள் எண்ணிக்கொண்டு தன் எதிரில் நிற்கும் மங்கையைப் பார்த்து, நீ யார்?' என்று கேட்டான்.

நான் யாரென்று இன்னும் தங்களுக்குத் தெரியவில்லை? சாலவும் தங்கள் நன்மையைக் கோரும் பிரியை அமிர்தவதனுவன்றோ?' என்று கூறினாள் ஸ்திரீ.

அமிர்தசாகரன்:—'நீ என்னுடைய காதலி அமிர்தவதனுவானால் என்னுடைய மோதிரமொன்று உன்னிடத்திலிருக்குமே?' என்று கேட்டான் அமிர்தசாகரன்.

'ஆம் தங்களுடைய மோதிரம் இதோ என்னிடத்திலிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே தன்னுடைய விரலிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அமிர்தசாகரனிடத்தில் கொடுத்தாள் பெண்மணி. விளக்கின் வெளிச்சத்தில் அதை உற்றுப்பார்த்தான் அமிர்தசாகரன். அதில் தன்னுடைய பெயர் இருப்பதைக்கண்டு 'இது என்னுடைய மோதிரமே அதிற் சந்தேகமில்லை, என்னுடைய ஞாபகார்த்தத்திற்காக நான் அமிர்தவதனுவின் சிறு விரலிலிட்ட மோதிரமன்றோ இது' என்று இவ்வண்ணம் தன் மனத்திற்குள் எண்

ணிக்கொண்டு அமிர்தசாகரன் அமிர்தவதனுவைப்பார்த்துக் 'கண்ணே! நம்மிருவரையும் வெகுகாலம் வரைக்கும் பிரித்து வைத்த கடவுளே இப்பொழுது நம்மிருவரையும் ஒருவரை யொருவர் எதிர்பாராதபடி சேர்த்துவைத்தார். உன்னைக் காணமுடியாதென்று நான் எண்ணிவிட்டேன். அமிர்தவதனு! உன்னை நான் பார்த்து எத்தனை வருஷங்களாயின' என்று சொல்லிக் கொண்டே அமிர்தவதனுவின் கரத்தைப் பற்றித் தன்னிடமிருந்த தன்னுடைய மோதிரத்தை அவளுடைய கரத்திலிட்டு அவளிடமிருந்த அவள் மோதிரத்தை வாங்கித் தன் விரலிலிட்டுக்கொண்டு அமிர்தவதனுவைப் பார்த்துச் சிறிது புன்னகை பூண்டு காதலி! என்ன ஆலோசனை செய்கிறாய்?' என்று கேட்டான்.

அமிர்தவதனு:—'ஆலோசனை ஒன்றுமில்லை. அன்பரே! தங்களுடைய கரம் என்மீது பட்டவுடன் எனக்கு ஒருவித உணர்ச்சி உண்டாயிற்று. அவ்வித உணர்ச்சி தங்களுக்கும் உண்டாயிருக்கு மென்று நினைக்கிறேன். "தங்களுடைய கரம் என்மீது படும்; நான் சந்தோஷமுறுவேன்" என்று நான் எண்ணவே யில்லை. நெடுங்காலம் நம்மிருவரையும் பிரித்து வைத்திருந்து திடீரென்று இப்பொழுது எதிர்பாராத வண்ணம் நம்மிருவரையும் சந்திக்கச் செய்த கடவுளுடைய வல்லமை என்னே! என்று அதைப்பற்றித் தான் நான் எண்ணி எண்ணி மகிழ்கின்றேன்.

அமிர்தசாகரன்:—கடவுளுடைய வல்லமையைக் குறித்துப்பேச யாரால் முடியும்? கடல் நீரை அளவு படியிட்டு அளந்து இத்தனை படி தண்ணீர் இக் கடலில் இருக்கிறதென்று ஒருக்கால் சொல்லக்கூடும். கடவுளுடைய வல்லமையை அளவிட ஒருவராலும் முடியாதுதான்.

அமிர்தவதனு:—'என் ஆசை நேசரே! தங்களைக் கண்டது முதல் எனக்கு ஒருவிதக் குதூகலமா யிருக்கிறது. என் துயரமெல்லாம் அனலிலிட்ட பஞ்சுபோல் மாயமாயின. தங்களைக் கண்டவுடன் எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்தினால் தங்களோடு எதைப்பற்றிப் பேசுகிறதென்றே எனக்குத் தெரியவில்லை. நண்பரே! தங்களுடைய ஞாபகமே எப்பொழுதும் என்னுடைய மனத்தில் குடிகொண்டிருந்தது. கடவுளின் கிருபையால் மறுபடியும் தங்களைப் பார்த்தேன். அதைப்பற்றி அதிகம் சொன்னால் தற்புகழ்ச்சியாகும். வாருங்கள் உள்ளே போவோம்'

என்று சொல்லிக்கொண்டே அமிர்தவதனு அமிர்தசாகரனை அழைத்துக் கொண்டு வீட்டிற்குட் சென்று அவனை அங்கிருந்த ஒரு நாற்காலியின்மீது உட்காரச்செய்து வேறு சமையல்செய்து அமிர்தசாகரனை உண்பித்துப் பிறகு அமிர்தசாகரனுக்குத் தன்னுடைய கட்டிலில் படுக்கையிட்டுத் தான் உறங்குவதற்கு அங்கிருந்த மற்றொரு கட்டிலில் படுக்கை ஏற்படுத்திக்கொண்டு அமிர்தசாகரனிடம் சென்று அவனை அழைத்துக் கொண்டு போய் அவனுக்காக ஏற்படுத்தி வைத்திருந்த கட்டிலில் அமர்வித்துத் தான் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அமிர்தசாகரனைப் பார்த்து 'நேசரே! தாங்கள் என்னைச் சென்னையில் விட்டுப் பிரிந்து தங்களுடைய ஊருக்குச்சென்றபின் மறுபடியும் ஏன் சென்னைக்கு வந்து என்னைக் காணவில்லை? நீங்கள் இவ்வூருக்கு இவ்வண்ணம் தனியே வரவேண்டிய காரணம் என்ன? இவ்வீட்டில் நான் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று பல கேள்விகளை ஆவலோடு கேட்டாள்.

அதற்கு அமிர்தசாகரன் அமிர்தவதனுவைப் பார்த்துத் தன்னுடைய மாற்றாந் தாயின் துர்நடத்தையால் தான் மங்

களபுரியை விட்டுப் புறப்பட்டதுமுதல் அமிர்தவதனுவைக் கண்டவரையில் நடந்த எல்லா விஷயங்களையும் சொன்னான். ஆனால், பங்களாத் தோட்டத்தில் தான் கண்ட பெண்மணியைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

பிறகு அமிர்தவதனு அமிர்தசாகரனைப்பார்த்து, 'அன்பரே! தாங்கள் புகைவண்டியிலிருந்து ஆற்றில் விழுந்தீர்களே, அப்பொழுது தங்களுக்கு ஏதாவது காயமுண்டாயிற்றோ?' என்று கேட்டாள்.

அதற்கு அமிர்தசாகரன் 'எனக்கு அப்பொழுது ஒரு காயமுமுண்டாகவில்லை. சென்னையிலிருந்த நீ இவ்வூருக்கு வந்து இவ்விதம் இவ் வீட்டிலிருக்க வேண்டிய காரணமென்ன? உன்னை நான் சென்னையில் விட்டுப் பிரிந்து மங்களபுரிக்குச் சென்றபின் நடந்த உன்னைப்பற்றிய விஷயங்கள் ஏதாவதிருந்தால் கூறு' என்றான்.

அதற்கு அமிர்தவதனு அவனைப்பார்த்து, 'அன்பீர்! அதை என் கேட்கிறீர்கள். நினைத்தாலும் துக்கம் வருகிறது. தங்களிடத்தில் நான்பட்ட கஷ்டங்களைச் சொல்லாமல் வேறு யாரிடத்தில் சொல்லப்போகிறேன். கவனமாய்க் கேளுங்கள். தாங்கள் என்னைச் சென்னையில் விட்டுப் பிரிந்தபின் அந்த நிமிஷந்தொட்டு இந்த நிமிஷம் வரை நான் பட்ட கஷ்டங்களை யெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறேன்' என்று பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தாள்.

'அன்பரே! நான் சென்னையில் மெட்ரிக்குலேஷன் வகுப்பில் வாசித்துக்கொண்டிருக்கையில் தாங்கள் பீ. ஏ. பரீக்ஷையில் தேறினபின், ஒரு நாள் தாங்கள் தங்கள் தாயார் இறந்துபோய்விட்டார்களென்று தந்திவந்திருக்கிறதென்றும், அதனால் தாங்கள் தங்கள் ஊராகிய மங்களபுரிக்

குப் போகவேண்டுமென்றும் என் தந்தையின் சிங்காரத் தோட்டத்தில் என்னிடம் சொன்னீர்களே! அப்பொழுது நான் தங்களைப் பார்த்து, ஊருக்குப் போனவுடன் என்னை மறந்து விடாதீர்கள். நான் தங்களையன்றி வேறொருவரையும் மணந்துகொள்ளேன்' என்று சொன்னேன். அதற்குத் தாங்கள் என்னை நோக்கி "உன்னை நான் மறக்கமாட்டேன். அன்றியும், உன்னையன்றி நான் வேறொருத்தியையும் விவாகம்செய்து கொள்ளேன்" என்று சொல்லி அன்பின் அறிகுறியுடன் என்னிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு தாங்கள் மங்களபுரிக்குப் போய்விட்டீர்கள் அல்லவா? அதன் பிறகு நான் தங்களுடைய ஞாபகத்தை என்னுடைய மனத்தில் ஒருபுறம் வைத்துக்கொண்டு கல்வியைக் கவலையுடன் கற்றுக்கொண்டிருக்கையில் என்னுடைய அன்னையினும் அதிக அன்புடையவளாய் என்னை ஆதரித்துக் கொண்டு வந்த என் மாற்றுந்தாய்க்கு வைசூரி வந்து அதனால் அவள் இறந்தாள். அவள் இறந்ததைப்பற்றி எனக்குச் சகிக்கமுடியாத துக்கமுண்டாயிற்று. கல்வி கற்பதை நான் அப்பொழுதே நிறுத்திவிட எண்ணினேன். ஆனால், நான் தங்களிடத்தில் மெட்ரிக்குலேஷன் வரையில் வாசிக்கிறேனென்று சொல்லிய வார்த்தை வீணாகுமேயென்று மாத்திரம் பயந்தேன். என் தந்தையும் 'என்னைக் கல்வியை மேலும் கற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினர்.

"இக்காலத்தில் சிலர் முதல் மனைவி இறந்துவிட்டால் மறுவிவாகம் செய்துகொள்வது இயற்கைதான். ஆனால் ஒன்றுபோலொன்று ஒழுங்குள்ளதாய் வாய்ப்பது துர்லபம். எனக்கு வாய்த்த மனைவிகளிரண்டுபேரும் உத்தமிகள்தாம். நான்தான் கொடுத்து வைக்காதவனானேன்" என்று இவ்விதம் அடிக்கடி என் தந்தை சொல்லிக்கொண்டு வருத்

தப்படுவார். அதற்கெல்லாம் சமாதானம் சொல்கிறதே என்னுடையவேலையாயிருந்தது. நான் வீட்டிலேயே இருப்பவளானல் ஒரு வேலைக்காரியை என்னோடு வைத்துக் கொண்டு வீட்டிலேற்படும் வேலைகளை யெல்லாம் செய்துவிடுவேன். நான் கல்வி கற்றுக் கொள்ளக் கலாசாலைக்குப் போகவேண்டியவளாதலால் வீட்டில் ஏற்படும் வேலைகளைச் செய்ய வேறு மனிதர்களில்லை. இதை அறிந்த என்னுடைய தந்தை திருவண்ணுமலையிலிருந்த அவருடைய விதவா சகோதரியாகிய என்னுடைய அத்தையைச் சென்னைக்கு வரும்படி அவளுக்குக் கடிதம் எழுதினர். அதற்கு அவள் "என் மகன் இப்பொழுது மெட்ரிக்குலேஷன்வகுப்பில் வாசிக்கிறன். பரீட்சைக்கு இன்னும் ஒரு மாதந்தானிருக்கிறது. பரீட்சை முடிந்தவுடன் சென்னைக்கு வந்துவிடுகிறேன்" என்று பதிலெழுதினள். அவள் வருகிறவரைக்கும் நான் கலாசாலைக்குப் போகும் வேளை தவிர மற்ற நேரங்களில் இரண்டொரு வேலைக்காரிகளை என்னோடு வைத்துக் கொண்டு வீட்டிலேற்படும் வேலைகளைச் செய்து கொண்டு வந்தேன். எனக்கும் பரீட்சைக்காலம் நெருங்கிற்று. நான் மெட்ரிக்குலேஷனில் முதலாவதாகத் தேறினேன். அதற்கு மேல் கல்வி கற்க நான் விரும்பவில்லை. நான் மெட்ரிக்குலேஷனில் முதலாவதாகத்தேறினதற்காக நற்சாக்ஷிப்பத்திரம் பெற்றுக்கொண்டு வீட்டிலிருந்துவிட்டேன். என்னுடைய அத்தை அவளுக்கிருந்த நிலங்களை ஒருவரிடத்தில் குத்தகைக்கு விடுத்துப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு அவளுடைய மகனோடு சென்னைக்கு வந்து எங்கள் வீடு சேர்ந்தாள்.

கொஞ்சம் குறைய இரண்டுமாதங்களாயின. விடுமுறைநாட்கள் கழிந்தவுடன் சென்னையிலுள்ள காலேஜுக

ளெல்லாம் திறக்கப்பட்டன. என்னுடைய அத்தை மகன் இரங்கநாதன் பச்சையப்பன் கலாசாலேயில் எப். ஏ. (F.A.) வகுப்பில் சேர்ந்து வாசிக்கலானுன். சில மாதங்கள் சென்றன. நான், வீட்டில் ஏதாவதொரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தால் இரங்கநாதன் என் அருகில்வரப் பிரியப்பட்டு, நான் வாசித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தைப் பார்க்கப் பிரியமுடையவனைப்போல், என் அருகில் வருவான். நான் அவனைக் கவனிக்கிறதே இல்லை. எனக்குத் தெரியாத வார்த்தைகளுக்கு அருத்தம் நான் அகராதிகளில் தேடினுல் "என்ன வார்த்தைக்கு அருத்தம் தேடுகிருய் சொல், நான் சொல்லுகிறேன்" என்று இரங்கநாதன் வலுவிலேயே வந்து எனக்குத் தெரியாத வார்த்தைகளுக்கு அருத்தம் சொல்லுவான். சில சமயங்களில் அவன் என்னைப் பார்த்து "நீயும் இன்னும் வாசித்தால் நலமாயிருக்குமே, நாமிருவரும் கல்வியில் சரிசமானர்களா யிருப்போமே" என்று சொல்வான். அன்றியும் அவன் காலேஜூக்குப் போகும் வேளைகளில் வலிய என்னிடம் வந்து "நான் கலாசாலைக்குப் போய்வருகிறேன்" என்று புன்சிரிப்புடன் சொல்லிவிட்டுப்போவான். மாலையில் வீட்டிற்கு வந்தவுடன் கலாசாலையில் தான் வாசித்தறிந்த விஷயங்களைப்பற்றி மிகப் பெருமையாய் என்னிடம் சொல்லுவான். அவன் என்னிடம் சொல்லும் விஷயங்களுக்கு நான் "சரி" என்று தலையைக்கூட அசைப்பதில்லை. அவன் என்னைப் பார்க்கும்போ தெல்லாம் புன்சிரிப்புக் கொள்ளுவான். நான் தலைகுனிந்துகொண்டு என்னுடைய காரியத்தில் கருத்துடையவளா யிருப்பேன். சில சமயங்களில் அவன் என்னேடு எதைப்பற்றியாவது பேச ஆரம்பித்தால் நான் பதில் பேசுகிறதே இல்லை.' பேசாதிருப்பதே நலமென எண்ணி,

என்னோடு பேசாமலிருக்கின்றாயோ? என்பான். நண்பரே! நான் விஷயங்களை வளர்த்திக் கொண்டு போவதினால் பிரயோஜன மென்ன? சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். இரங்கநாதனுடைய கருத்து என்னை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்பதே. அக்கருத்தை அவன் அவனுடைய தாயாரிடத்தில் வெளியிட்டான். அன்று முதல் என் அத்தை எனக்கு மிகப் பிரியத்துடன் உணவு முதலியன கொடுத்துக்கொண்டு வந்தாள். ஏற்ற சமயங்களில் அவளுடைய மகன் இரங்கநாதனைப்பற்றி என்னிடம் புகழ்ந்து பேசுவாள். "எனக்கென்ன குறைவு! ஒரே ஒரு பிள்ளைதானிருக்கிறான். என் வீட்டுக்காரர் இரங்கநாதனுக்கு 50000 ரூபாய்க்குமேல் ஆஸ்தி சேர்த்து வைத்துப்போனார். என் மகன் வேலை செய்து சாப்பிடவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது அவனுக்கென்ன குறைச்சல்! ஏதோ இரண்டெழுத்தைத் தெரிந்துகொண்டான். அது போதும். குழந்தாய்! அமிர்தவதனா! நீ அவனையே கலியாணம் செய்து கொள். அமோகமாய் வாழலாம். வேறிடத்தில் வாழ்க்கைப் பட்டாயானால் எப்படி யிருக்குமோ! ஏதாயிருக்குமோ!!" என்று இவ்வண்ணம் என்னுடைய அத்தை எனக்குச் சில சமயங்களில் உபதேசம் செய்வாள். அவளுடைய உபதேச வார்த்தைகளொன்றும் என்னிடம் பலிக்கிறதில்லை. என் தந்தையிடம் "உன்னுடைய பெண்ணை என் பிள்ளைக்குக் கொடுத்துவிடு. வேறு எங்கே நல்ல வரனாகக் கிடைக்கப் போகிறான்? கிடைத்தாலும் எப்படி இருக்குமோ? ஒன்றுக்குள் ஒன்றாயிருந்தால் உத்தமம்" என்று என்னுடைய அத்தை அடிக்கடி சொன்னாள். "கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்" அன்றோ? என் தந்தை என்னைப் பார்த்து "அம்மா உன்னுடைய அபிப்பிராயம்யாது"

என்றார்! அதற்கு நான் "எனக்கு விவாகம் அவசியமாயிருந்தால் செய்துகொள்ளுவேன். அதைப்பற்றி இப்பொழுது பேசவேண்டாம்" என்று சொன்னேன். அது சரிதான் என்று பிறகு என்னுடைய தந்தை கலியாண விஷயத்தைப்பற்றி ஒன்றும் என்னிடம் பேசுகிறதில்லை.

இரங்கநாதனை நான் விவாகம் செய்து கொள்ளுவேனென்று எண்ணிக்கொண்டு அவன் ஏதேதோ ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் செய்தான். ஒன்றும் சரிப்படவில்லை. கடைசியாய் அவன் அவனுடைய தாயாரிடத்தில் எனக்கு அமிர்தவதனுவைக் கலியாணம்செய்து வைத்தாலன்றி நான் தேசாந்திரம் போய்விடுவே னென்று சொன்னான். இவ் வார்த்தையைக் கேட்டவுடன் அவனுடைய தாயார் மிகவும் பயந்து என் தந்தையிடம் "உன்னுடைய மகளை என் மகனுக்கு விவாகம் செய்து கொடுக்காவிட்டால் நான் உன்னுடைய முகத்தில் விழிக்காமல் என்னுடைய ஊருக்குப் போய்விடுவேன்" என்றாள். என்ன செய்வார் என் தந்தை! இரங்கநாதனை விவாகம்செய்துகொள்ளும்படி எத்தனையோ தரம் என்னிடம் அழாத குறையுடன் சொன்னார். நான் சம்மதிக்கவில்லை. என்ன செய்வார்! இருதலைக் கொள்ளியிலகப்பட்ட எறும்பு போலானார் என் தந்தை.

'கடைசியாய் நான் இரங்கநாதனை விவாகம்செய்து கொள்ள மாட்டேனென்று என் தந்தையிடத்திலும் என் அத்தையிடத்திலும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன். இரங்கநாதனுக்கு இவ்விஷயம் தெரிந்தது. நான் ஒருதினம் வீட்டில் தனியே இருக்கையில் அவன் என் சமீபத்தில் வந்து என்னைப்பார்த்து,"அமிர்தவதனு! எனக்குச் சிலநாட்களாய் உன்மீது பிரியமுண்டாயிருக்க நீ என்னை விவாகம்

செய்துகொள்ளக்கூடாதா? என்னை விவாகம் செய்துகொண்டாலென்ன? நான் என்ன அழகில்லாதவனா? ஆஸ்தி இல்லாதவனா? படிப்பில்லாதவனா? உன்மீது எனக்குப் பிரியம் உண்டானது முதல் எனக்குப் படிப்பில் புத்திசெல்லவில்லை நீ என்னை விவாகம் செய்து கொள்ளுவதற்கு என்ன தடை? என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டான். அதற்கு நான், அவனைப்பார்த்து "உனக்கு என்மேல் பிரியம் உண்டானது போல் எனக்கும் உன் மீது பிரியமேற்பட்டாலல்லவோ விவாகம் நிறைவேறும்? நீ அழகில்லாதவனல்ல; ஆஸ்தியில்லாதவனல்ல; அறிவில்லாதவன். ஆகையால், நான் உன்னை விவாகம் செய்துகொள்ளேன்'' என்று சொன்னேன். அதற்கவன், "என் அறிவில் என்ன குறைவாயிருக்கிறது? அதைத் தெரிவித்தால் அதையும் திருத்திக்கொள்ளுகிறேன்; அப்போதாவது என்னை நீ விவாகம் செய்துகொள்ளுவாயா?'' என்று கேட்டான். அதற்கு நான் அவனைப்பார்த்து, "உனக்குள்ள அறிவில் என்ன குறைவாயிருக்கிறதென்பதை நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. நீ புத்தியில் பிரகஸ்பதியைப் போலானாலும் உன்னை நான் விவாகம் செய்துகொள்ளமாட்டேன். இனிமேல் வேறு வார்த்தைகளை என்னிடம் பேசாதே'' என்று கூறினேன். அதற்கு அவன் என்னைப் பார்த்து, "நான் உன்னை விவாகம் செய்துகொள்ளாவிடில் என் பெயர் இரங்கநாதனா? பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்று சொல்லிப் போய்விட்டான். இவ்விதம் அவன் என்னிடம் சொன்ன விஷயங்களை நான் என்னுடைய தந்தையிடம் சொன்னேன், அவர் கவனிக்கவில்லை. மூன்று மாதங்களாயின. என்னுடைய தந்தை மலேரியா ஜுரத்தால் பீடிக்கப்பட்டார். எத்தனையோ டாக்டர்கள் வந்து வைத்தியம் செய்து

பார்த்து, 'எங்களால் சௌக்கியப்படுத்த முடியாது' என்று, சொல்லிப் போய்விட்டார்கள். முடிவில் என் தந்தை என்னைப்பார்த்து "உனக்குப் பிரியமிருந்தால் நீ இரங்கநாதனை விவாகம் செய்துகொள். பிறகு உன்னுடைய இஷ்டம். இருக்கிற ஆஸ்திகளை வைத்துக்கொண்டு சுகமாயிரு. உனக்குத் தெரியாத விஷயம் ஒன்றுமில்லை" என்றிவ்விதம் மெல்லிய குரலிற் சொல்லிக்கொண்டே மரணமடைந்தார்.

'அவர் இறந்து இரண்டு மாதங்களானவுடன் என் அத்தையும் அவளுடைய மகனும் விவாக விஷயத்தைப் பற்றி என்னோடு வற்புறுத்திப் பேச ஆரம்பித்தார்கள். அவ்விஷயம் எனக்குப் பிடிக்காததால் அவர்களை என்னுடைய வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டேன். அவர்கள் நான் வசித்துக்கொண்டிருந்த தெருவிலுள்ள ஒரு மாடி வீட்டில் வாடகைக்கு வசிக்கலானார்கள். நான் என் வீட்டு வேலைகளைச்செய்ய ஒழுங்கான இரண்டு வேலைக்காரிகளை ஏற்படுத்திக்கொண்டு என்னுடைய குடும்பத்தைக் கவனிக்கலானேன். அன்பா! அப்பொழுதெல்லாம் அல்லும் பகலும் தங்களுடைய ஞாபகமே என்னுடைய மனத்தில் இருப்பிடமாகக் குடிகொண்டிருந்தது.

'என்னுடைய ஓய்வுநேரங்களில் நான் லோகோபகாரமாக இரண்டு நவீனகதைகளை எழுதிவெளியிட வைத்திருந்தேன். அச்சமயத்தில் ஒரு பெரிய ஆபத்து எனக்குச் சம்பவித்தது. அதாவது ஒருதினம் காலையில் நான் என்னுடைய பங்களாத் தோட்டத்தில் உலாவிக்கொண் டிருக்கையில் தபால்காரன் எனக்கு வழக்கமாய் வரும் ஒரு தமிழ்த் தினசரிப் பத்திரிகையை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தான். நான் அந்தப் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தேன். அதன் இரண்டாவது பக்கத்தில் விளம்பரம் என்று

பெரிய எழுத்துக்களினுல் வரையப்பட்டிருந்தது. அவ் விளம்பரத்தை வாசித்துப் பார்த்தவுடன் என் மனம்பட்ட அவஸ்தையைக் கடவுளே அறிவார். அவ்விஷயம் இன்ன தென்று பிறகு சொல்லுகிறேன். நான் பத்திரிகையில் வரையப்பட்டிருந்த விஷயத்தை வாசித்தறிந்து வருத்தப் பட்டுக்கொண்டிருக்கையில் என்னுடைய பங்களாத் தோட் டத்தின் பக்கத்திலுள்ள சாலையின் 'வழியாக அநேக மனி தர்கள் 'என் பணம் போயிற்றே, என் பணம்போயிற்றே' என்று சொல்லிக்கொண்டே ஓடினுர்கள். அவர்கள் அவ் விதம் சொல்லிக்கொண்டு ஓடுவதற்குக்காரணம் இன்ன தென்று அறிந்துகொண்டு வரும்படி நான் என்னுடைய வேலைக்காரிகளி லொருத்தியை அனுப்பினேன். அவள் திரும்பிவந்து என்னைப் பார்த்து "அம்மா! கலிபாங்க் (Kali Bank) மூடப்பட்டிருக்கிறதாம். இனி அந்தப் பாங்க் சொந்தக்காரர்களால் வியாபார மொன்றும் நடத்தமுடியா தாம். அதில் எவரெவர்கள் பணஞ் சேர்த்துவைத்திருந்தார் களோ அவர்களெல்லோரும் திரும்பவும் அதைப் பெறுவ தரிதாம். அதனுல் அந்தப் பாங்கில் பணத்தைச் சேர்த்து வைத்திருந்தவர்கள் எல்லோரும் இவ்விதம் அலறிக் கொண்டு ஓடுகிறுர்கள்" என்று கூறினுள்.

"இவ்விதம் அவள் சொன்ன வார்த்தையைக் கேட்ட வுடன் எனக்கு ஒருவிதத் திகில்உண்டாயிற்று. 'வந்தாலும் எனக்கு இப்படியா ஆபத்துவரவேண்டும்" என்ற கவலை யோடு நான் அங்கிருந்த ஒரு சோபாவின்மீது படுத்தேன். கால்மணி நேரமாயிற்று. என் மனத்தை நான் தைரியப் படுத்திக்கொண்டு ஒரு வண்டியிலேறிப்போய் மூடப்பட் டிருந்த கலிபாங்கைப் பார்த்தேன். பாங்கின் முதலாளிகள் வியாபாரத்தில் அதிக நஷ்டமடைந்து போய்விட்டபடியால்

பாங்கு வியாபாரத்தை நிறுத்திவிட்டார்களென்றும், இனி அவர்கள் கடன்காரர்களுக்குக் கடனைக் கொடுக்க முடியாதென்றும் அறிந்துகொண்டேன். உடனே திரும்பி வீடுவந்து சேர்ந்தேன். நான் வசித்துக்கொண்டிருந்த வீட்டைத் தவிர வேறு எங்களுக்கிருந்த நிலங்களையும், வீடுகளையும் விற்று அந்த ரூபாய்களை யெல்லாம் அதிக வட்டி கிடைக்குமென்று ஆசைப்பட்டு என் தந்தை கலிபாங்கில் சேர்த்துவைத்தார். அந்த ரூபாய்களெல்லாம் அடியோடு போயின. எனக்கிருந்த ஆஸ்திகளில் நான் வசித்துக்கொண்டிருந்த வீடும், பங்களாத்தோட்டமுமே மிச்சம். எண்பதினுயிரம் ரூபாய் கலிபாங்கில் அநியாயமாய்ப் போயிற்று. எஞ்சி நின்ற பங்களாத் தோட்டமும், வீடும் எண்ணுயிரம் ரூபாய் மதிப்புடையது. என் தந்தை தேவகோட்டையிலுள்ள பழ. மாக ரூம. பழ. பழனியப்பன் செட்டியாரிடத்தில் பதினுயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார். கலிபாங்கிலிருந்த என்னுடைய ரூபாய்கள் போய்விட்டதை அறிந்தவுடன் அந்தச் செட்டியார் என்னுடைய வீட்டையும், பங்களாத் தோட்டத்தையும் கோர்ட்டு வாயிலாகக் கைப்பற்றிக்கொண்டார். அப்பொழுது என்னிடத்தில் சுமார் ஆயிரம் ரூபா மதிப்புள்ள இரண்டு நகைகளிருந்தன. மேற்படி செட்டியாருக்குத் தெரிந்தால் பாக்கித் தொகைக்காக அந்த நகைகளையும் கோர்ட்டுவாயிலாகப் பெற்றுக்கொண்டால் என்ன செய்கிறதென்று பயந்து அவைகளை அணிந்து கொள்ளாமல் பத்திரப்படுத்திக் கொண்டேன். பிறகு நான் வசித்துக்கொண்டிருந்த தெருவிலுள்ள ஒரு சிறிய வீட்டில் வாடகை கொடுத்து வசிக்கலானேன் நான் ஏழையாகிவிட்ட விஷயத்தைப் பற்றி என் அத்தைக்கும் அவளுடைய மகனுக்கும் அதிக திருப்தியுண்டாயிற்று. கொடியவனுகிய

அந்தத்துஷ்டன், இரங்கநாதன், எனக்கு ஏதாவதொரு கெடுதல் செய்யவேண்டுமென்று சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். என்னிடமிருந்த நகைகளை விற்றுக் கையில் ஆயிரம் ரூபா வைத்திருந்தேன். அதில் ஐந்நூறு ரூபாய்க்கு அதிகம் செலவாயிற்று. என்ன செய்வேன்? நான் ஐந்து, ஆறு மாதங்களுக்குமுன் எழுதிவைத்திருந்த இரண்டு நவீன கதைகளையும் சென்னையிலுள்ள சில புத்தக வியாபாரிகளிடம் விற்பனைக்கு எடுத்துச் சென்றேன். அவர்களெல்லோரும் என்னுடைய கையெழுத்துப் பிரதிகள் இரண்டையும் முற்றிலும் வாசித்துவிட்டு, என்னைப்பார்த்து "இக்கதைகளில் பேரின்ப விஷயங்களைப்பற்றி அதிகமாய் எழுதி இருக்கிறபடியால் இவைகள் எங்களுக்கு விற்பனையாகா. ஆகையால் இக்கதைகளை நாங்கள் வாங்கிக்கொள்ளோம்" என்று கூறினார்கள். உண்மையாய் நான்வரைந்த அவ்விரு கதைகளிலும் புத்தியைப் புகட்டக்கூடிய விஷயங்களைத்தான் அதிகமாய் எழுதி யிருந்தேன். சிற்றின்ப விஷயங்களை நிரம்ப வரையப்பட்டுள்ள புஸ்தகங்களே இக்காலத்தில் அதிகமாய் விற்பனையாகின்றனவென்று எனக்குத் தெரியுமானாலும், அவ்விதம் சிற்றின்ப விஷயங்களைக் கற்பனைக் கதைகளில் கலந்து எழுதிப் பணம் சம்பாதிக்க வேண்டுமென்பது எனக்குப் பிரியமில்லை.

'கிரந்த கர்த்தர்களிற் சிலரும், புத்தக வியாபாரிகளிற் பலரும் எவ்விதத்திலேனும் தங்களுக்குப் பணம் வந்தால் போதும்; புத்தகங்கள் விற்பனையானால் போதுமென்று எண்ணிக்கொண்டு தாங்கள் வெளியிடும் புத்தகங்களில் சிற்றின்பவிஷயங்களை அளவுக்கு மீறி அமைத்துப் பிரசுரம் செய்கிறார்கள். ஆனால் அவ்விதம் வரையப்பெற்றுள்ள புத்தகங்கள்தான் அதிகமாய் விற்பனையாகின்றன. முடிவில் என்னு

டைய இரண்டு கற்பனைக் கதைகளையும் சென்னையிலுள்ள ஒரு புத்தக வியாபாரி ரூபா 200கொடுத்து வாங்கிக்கொண்டார். அப்பொழுது என்கையில் அறுநூறு ரூபாய்க்குமேல் ஒரு பைசாவேனுமில்லை. 'இந்த ரூபா அறுநூறும் செலவழிந்துவிட்டால் பிறகு என்ன செய்கிறது?' என்னும் ஆலோசனையோடு சில தினங்களைக் கழித்தேன்.

ஒரு தினம் 'மித்திரன்' என்னும் தலைப்பெயர் பூண்டுள்ள தமிழ்ச் சஞ்சிகையில் விளம்பரமொன்று வரையப்பட்டிருந்ததைக் கண்டேன். அவ்விளம்பரத்தில் அடங்கியிருந்த விஷயமாவது, "சேதுபுரி டவுன் பெண் பாடசாலையிலுள்ள நான்காம் வகுப்புக்கு மெட்ரிக்குலேஷன் பரீட்சையில்தேறிய ஓர் உபாத்தியாயினி தேவை. பிரியமுள்ளவர்கள் நேரில்வந்து தலைமை உபாத்தியாயினி இடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு வேலையை ஒப்புக்கொள்ளலாம். இங்ஙனம், தலைமை உபாத்தியாயினி, டவுன் பெண் பாடசாலை, சேதுபுரி" என்பது. 'அவ் விளம்பரத்தை நான் வாசித்தறிந்தவுடன் எனக்குக் கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று. அன்றயதினமே நான் வசித்துவந்த வீட்டின் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய வாடகைத் தொகையைக் கொடுத்துவிட்டு என் அத்தையின் வீட்டிற்கு எப்பொழுதும் போகாத நான் அன்றையதினம் போய்ச் சேதுபுரிக்குப்போகிற விஷயத்தைப்பற்றி அவளிடத்தில் சொன்னேன். அந்தப்பாவி வெள்ளிக்கு என்மீது பக்ஷமுடையவளைப்போல் நடித்து விஷம்கலந்து பக்ஷணங்களைச் செய்து கொடுத்தாள். அதை நான் அறியாமல் வழிப்பிரயாணத்திற்கு உதவுமென்றெண்ணி அந்தப் பக்ஷணங்களைப் பிரயாணப் பெட்டியில் (Travelling Box) வைத்துப் பூட்டிக்கொண்டு அவளிடத்தில்உத்தரவுபெற்று அன்று மாலை

இரயிலில் சென்னையிலிருந்து பிரயாணமாகி மறுதினம் இரவு மங்களபுரி வந்து சேர்ந்தேன். அப்பொழுது மணி ஒன்பதரை. ஆகாயத்தில் சந்திரன் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அநேகர் வாடகை வண்டிகளிலேறிச் சேதுபுரிக்குவர ஆயத்த மானார்கள். நான் என்னிடமிருந்த பக்ஷணங்களில் கொஞ்சம் புசித்து விட்டு இரண்டொரு புருஷர்களும் பல ஸ்திரீகளுமிருந்த இரண்டு மாடுகள் பூட்டிய ஒருவாடகை வண்டியிலேறிச் சேதுபுரி என்னும் பெயர் கொண்ட இவ்வூருக்கு வரப் பிரயாண மானேன்.

'கால்மணி நேரமாயிற்று. நல்ல மாடுகளாயிருந்தமையால் வண்டி பதினைந்துநிமிஷத்தில் மங்களபுரியிலிருந்து இவ்வூரைநோக்கி இரண்டுமைல் தூரம் வந்து விட்டது. அதற்குள் எனக்கு மயக்கமுண்டாயிற்று! அப்படியே வண்டியில் படுத்தேன். வாந்தி எடுத்தேன். அப்பொழுது எனக்குக் கொஞ்சம் பிரக்ஞைமட்டும் இருந்ததே யன்றிப் பேசுவற்குச் சக்தி இல்லாமற் போயிற்று. என் அத்தை கொடுத்த பக்ஷணங்களில் பாஷாணம் கலந்திருக்கிறதென்று அப்பொழுது நான் ஊகித்து அறிந்து கொண்டேன். என்னோடு வண்டியிலிருந்த ஸ்திரீ புருஷர்களெல்லோரும் என்னைப்பார்த்து "உன்னுடைய உடம்புக்கென்ன? என்ன செய்கிறது?" என்று கேட்டார்கள். நான் பேசச் சக்தியற்றிருந்தமையால் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. மறுபடியும் அதிகமாய் வாந்தியெடுத்தேன். அப்பொழுது அவ்வூர்ப் பக்கங்களில் வாந்தி பேதி அதிகமாயிருந்தபடியால் வண்டியிலிருந்தவர்கள் என்னையும் வாந்தி பேதியில் சம்பந்தப்பட்டவளென்று எண்ணி அவர்கள் எங்கே தங்களுக்கும் அந்த வாந்தி பேதி என்னும் தொத்து வியாதி வந்து விடுகிறதோ வென்று பயந்தவர்

களாய் வண்டியிலிருந்த என்னைத் தூக்கிப் பாதையின் ஓரத்திலிருந்த ஒரு மரத்தின் கீழ் ஒரு நல்ல இடம் பார்த்து வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

'இவ்விஷயம் எனக்குத் தெரிந்தபோதிலும் பேசச் சக்தியில்லை. பிறகு கால்மணி நேரத்திற்குள் எனக்குப் புத்தி சுயாதீன மில்லாமற்போயிற்று. காதலரே! நீங்கள் என்னைப் பாதையின் ஓரத்தில் பேச்சு மூச்சற்றுக் கிடக்கக் கண்டேனென்று கூறினீர்களே— இச்சமயத்தில் தான் தாங்கள் என்னைக்கண்டது. அன்பரே! அப்பொழுது தாங்கள் எனக்குச் செய்த உபசரிப்பால் நான் கொஞ்சம் புத்தி சுயாதீன முள்ளவளாயினேன். தங்களிடம் குறிப்புக்காட்டி ஜலம் கேட்டேன். நீங்களும் ஜலம் கொண்டுவரப் போய் விட்டீர்கள். அரைமணி நேரமாயிற்று. அதற்குள் இரண்டு தரம் வாந்தி யெடுத்தேன். நான் இறந்துவிடுவே னென்றும் எண்ணினேன். இவ்வண்ணம் நான் கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கையில் அவ்வழியே ஒரு கனவான் தம்மனைவியோடு மங்களபுரியிலிருந்து சேதுபுரிக்கு மோட்டார் வண்டியில் வருகையில் வழியில் என்னுடைய சப்தத்தைக்கேட்டு வண் டியிலிருந்து கீழிறங்கி வந்து என்னைப்பார்த்துப் பரிதாபப் பட்டு அவரும் அவருடைய மனைவியும் என்னைத்தூக்கி அவர்களுடைய மோட்டார் வண்டியில் வைத்து அவர்க ளும் அந்த வண்டியிலேறிக் கொண்டு வண்டி செலுத்துகிற வனை நோக்கி வண்டியைத் தீவிரமாய் நடத்தும்படி எச்ச ரித்தார்கள். பிறகு, சுமார் இரண்டரைமணி நேரத்திற்குள் எழுபது மைல் தூரத்தைக்கடந்து சேதுபுரியாகிய இவ்வூ ருக்குவந்து அவர்கள் தங்களுடையவீட்டையடைந்தார்கள். உடனே அவர்கள் தங்களுக்குச் சிகிச்சை செய்த ராம்தாஸ் வைத்தியரை அப்பொழுது வரவழைத்து எனக்குச் சிகிச்

சை செய்யும்படி சொன்னார்கள். வைத்தியர் தகுந்த மருந்துகளை எனக்குக் கொடுத்துச் சௌக்கியப்படுத்திவிட்டார். பாதையின் ஓரத்திலிருந்த என்னைக் கொண்டுவந்து சிகிச்சை செய்யச்சொல்லி என் உயிரைக்காப்பாற்றிய அக் கனவானுக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். அவருடைய மனைவி நற்குணம் வாய்ந்த உத்தமி. ஒரு தினம் அவரும், அவருடைய மனைவியும் என்னுடைய வரலாற்றைப்பற்றி விசாரித்தார்கள். அவர்களிடம் என் வரலாறுகளைச் சொல்லியபின் சேதுபுரிக்கு இன்ன விஷயத்திற்காக வரநேர்ந்ததென்றும் சொன்னேன். மறுதினம் அக்கனவான் என்னை மேற்படிப் பெண்பாடசாலைத் தலைமை உபாத்தியாயினியிடம் அழைத்துச் சென்றார். அங்கு நான் அம்முதல் உபாத்தியாயினியின் சிநேகத்தைப் பெற்று நான்காம வகுப்பு உபாத்தியாயினியாக அமர்ந்தேன். பாடசாலை நேரம் போக மற்ற நேரங்களில் முதல் உபாத்தியாயினியோடு சற்றுநேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்துவிட்டு அக் கனவானுடைய வீட்டிற்கு வந்துவிடுவேன். நான் ஒவ்வொரு மாதத்திலும் வாங்கும் சம்பளத்தை அவரிடம் கொடுத்துவிடுவது வழக்கம். அவர் நான் கொடுக்கும் ரூபாய்களோடு வேறு கொஞ்சம் ரூபாய்களைச் சேர்த்து அவர் உத்தியோகம் செய்துகொண்டிருந்த இவ்வூர்த் தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கில் என் பெயரில் சேர்த்துக் கொண்டு வந்தார். இவ்விதமாக ஆறுமாதகால மாயிற்று.

தபாலாபீசுகளின் பெரிய அதிகாரிகள் அவரைச் சேலம் ஜில்லா போஸ்ட்மாஸ்டராகச் சேலத்திற்கு மாற்றி விட்டார்கள். அவர் சேலத்திற்குப் போகுமுன் சேவிங்ஸ் பாங்குப் புஸ்தகத்தை என்னிடம் கொடுத்து என்னைப் பார்த்து, "அம்மா! உனக்கு ஒவ்வொரு மாதத்திலும் இரு

பது ரூபாய் அனுப்புகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனார். அவருடைய மனைவிமட்டிலும் மூன்று மாதங்களுக்கொருமுறை வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போகிறார்கள். ஒவ்வொரு மாதத்திலும் தாம் சொல்லியவண்ணம் அக்கனவான் ரூபாய் இருபது அனுப்பிக்கொண்டிருக்கிறார். அவர் வசித்துக்கொண்டிருந்த வீடுதான் இது. அன்பரே! நான் தங்கள்மீது ஞாபகத்தோடு காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தேன். தங்களைக்காண விரும்பி நான் எத்தனையோவித யோசனைகளைச் செய்தேன். ஒன்றும் அனுகூலமாகவில்லை. முடிவில் என்னைத் தங்களோடு சேர்க்க வேண்டுமென்று எல்லாம் செய்யவல்ல இறைவனை நோக்கிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் அருளால் இப்பொழுது நான் தங்களைக் கண்டேன். இனி எனக்கு ஒரு குறைவுமில்லை. என் பிரியநேசரே! தாங்கள் என்னைச் சென்னையில் விட்டுப் பிரிந்தபின் நடந்த விஷயம் இவ்வளவு தான்' என்று இவ்வண்ணம் அமிர்தவதனா சொன்னாள். இந்த விஷயங்களை யெல்லாம் கவனித்துக்கொண் டிருந்த அமிர்தசாகரன் 'அமிர்தவதனா! நீ இரங்கநாதனையே விவாஹம் செய்து கொண்டிருந்தாயானால் எவ்விதக்கஷ்டங்களையும் அநுபவிக்காமல் சுகமுற்றிருக்கலாமே' என்றான்.

அதற்கு அமிர்தவதனா அவனைப் பார்த்து, 'அன்பரே! நீங்கள் இவ்வித வார்த்தையைச் சொல்வீர்களென்று நான் இதற்கு முன் எண்ணவேவில்லை. உத்தம ஸ்திரீகள் முதலில் காதலித்த ஒருவரை விட்டுப் பிறகு தங்களுடைய கண்களிற்கண்டவர்களை யெல்லாம் காதலிப்பது உண்டோ? இது தங்களுக்குத் தெரியாத விஷய மன்றே? தமயந்தி, துரோபதை, ஜானகி, அருந்ததி ஆகிய இவர்கள் போன்ற பதிவிரதைகள் ஒவ்வொருவரும் தத்தம் நாயகர்களையன்றி

வேருெருவனை இச்சித்தது உண்டோ? இது போகட்டும்; மாம்பழம் புசிக்க ஆவல் கொண்டவனுக்கு அதினும் உயர்ந்த வேறு அதிக ருசிகரமுள்ள சில கனிவர்க்கங்களைக் கொடுத்தால் அவைகளைப் புசித்து அவன் மாம்பழத்தைப் புசிக்கவெண்ணிய ஆவலை மறக்க முடியுமா? அன்பரே! இந் நிலைமையல்ல; வேறு உந்நத பதவியை நான் அடைந்திருப்பினும், இனி அடைய நேர்ந்தாலும் தங்களை யன்றிச் செல்வத்தில் மிக்க சீமாளுயினும் சரி; அவர்களை நான் மணந்து கொள்ளப் பிரியப்படுவேனே? தாங்கள் ஓர் ஏழையாயிருந்து நான் ஒரு சீமாட்டியா யிருந்திருப்பினும் தங்களை நான் மறந்துவிடுவேனே? தங்கள்மீது எனக்கு ஏற்பட்ட பிரியத்தின் பெயர் காதல். அக்காதல் தங்களிடம் எனக்கு உண்டானதற்குக் காரணம் கல்வியன்று; செல்வமன்று; அழகன்று. காதல் தெய்வீக சக்தியாலுண்டாகிக் காதலனும் காதலியும் ஒருவர்மீ தொருவர் அழியா அன்புடைவர்களா யிருக்கும்படி அன்பை மேன்மேலும் பெருக்கக்கூடியது. 'காதல், காதல்' என்று பலர் வாயினுல் கூறிக்கொள்ளுவார்க ளென்றும், அவர்கள் காதலின் தன்மை இன்னதென்று அறியார்களென்றும், தாங்களே காதல் இத் தன்மையான தென்று ஐயமின்றி நன்ருய் அறிந்தவர்களென்றும், மற்ற நூலாசிரியர்களும் வேறு பலரும் காதல் இத் தன்மையானதென்று அறியாமலே 'காதல், காதல்' என்று சொல்லிக்கொண்டும், வரைந்துகொண்டும் வருகிருர்களென்றும் பிறரைத் தூஷித்துத் தாங்கள் அரிய பெயரிட்டுச் சிறிய விஷயங்களை வரையும் நாவல்களினிடையே காதலின் தன்மை இன்ன தென்று உணராத தற்கால "நாவல்" நூலாசிரியர்களிற் சிலர் மனத்தில் பயமற்றுக் கையில் கூச்சமின்றிக் கடின சித்தத்தோடு எழுதிவிடுகிருர்

கள். என்னே இவர்களின் மதியின்மை! தம்மைத்தாமே புகழ்ந்துகூறும் பசுமுகப் புலிகளாகிய இவர்களோ தாங்கள் எழுதும் நாவல்களின் வாயிலாய் நல்விஷயங்களைக்கூறி உலகத்தை உத்தரிக்க வந்தவர்கள்? தன்னைத்தானே புகழ்ந்துரைப்பவன் பதரென்பதை இவர்கள் அறியார்களோ? அல்லது அறிந்தும் மறந்தார்களோ? என்பதைப்பற்றி ஒன்றும் தோன்றவில்லை. தாங்கள் பிறரைத் தூஷிப்பது போல் தங்களையும் பிறர் தூஷித்தாலென்செய்வது என்று எண்ணிப் பயந்து பிறர் தங்களைத் தூஷிக்காவண்ணம் அவர்களுடைய கால்களைப்பற்றிக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது போல் தாங்கள் எழுதும் நூல்களின் முகப்பில் சில விஷயங்களை வரைந்துவிடுகிறார்கள். என் இவ்விதம் செய்யவேண்டுமோ தெரியவில்லை! அன்றியும் உண்மையான காதலர்கள் இவ்வுலகத்தி லிருக்கிறார்களோ வென்று எண்ணி இவர்கள் ஐயப்படுகிறார்கள். உண்மையான காதலர்கள் இல்லாவிடில் இவ்வுலகம் எப்படி நிலைத்திருக்குமோ தெரியவில்லை. 'காதல்' என்னும் பதத்திற்கு இவர்கள் என்ன அருத்தம் பண்ணிக்கொண்டார்களோ அதுவும் தெரியவில்லை. என்னுருயிர் நேசரே! கல்வி,செல்வம், அழகு இவைகளைப்பற்றி ஸ்திரீபுருஷர்கள் ஒருவரை ஒருவர் காதலிப்பது காதலாகுமோ? அவ்விதம் காதலிக்கும் காதலானது கல்வி, செல்வம், அழகு முதலியவைகள் குறைந்தவுடன் பிரியமும் குறைந்துவிடும். தெய்வசக்தியால் ஒரு புருஷன்மீது ஒரு ஸ்திரீக்கும், ஒரு ஸ்திரீயின்மீது ஒரு புருஷனுக்கும் ஏற்படும் உண்மையான காதல் குறையும் இயல்பினை உடையதன்று. ஒருத்தி ஒருவனை உண்மையாகக் காதலித்துவிடுவாளாயின் பிறகு, தன்னால் காதலிக்கப்பட்டவன் எவ்வளவு துஷ்டனாய் விட்டபோதிலும், ஏழையாய்விட்டபோதிலும், அவன்மீது

அவளுக்கு ஏற்பட்ட பிரியம் மாறவே மாருது. அன்பரே! இவ்விஷயம் தாங்கள் அறியாதது தன்றே!' எனக் கூறினுள்.

இதற்கு அமிர்தசாகரன் அமிர்தவதனுவைப் பார்த்து, 'என் கண்மணி! நீ இப்பொழுது சொல்லிக் கொண்டுவந்த வார்த்தைகளெல்லாம் சரியே. "இரங்கநாதனை விவாகம் செய்துகொண் டிருப்பாயானல் சுகமுற்றிருப்பாயே!" என்று நான் விளையாட்டாகக் கூறினேனன்றி வேறன்று. இது போகட்டும், நீ சென்னையில் உன்னுடைய பங்களாத் தோட்டத்தி லிருக்கும்போது உனக்கு வந்த சமாச்சாரப் பத்திரிகையில் ஏதோ விளம்பரம் வரையப்பட்டிருந்ததென்றும், அவ்விளம்பரத்தைப் பார்த்தவுடன் துயர மதிகமாயிற் றென்றும், அவ்விளம்பரத்தில் அடங்கியிருந்த விஷயத்தைப் பிறகு சொல்லுகிறேனென்றும் கூறினையே, அவ்விஷயம் என்ன?' என்றுகேட்டான்.

அதற்கு அமிர்தவதனு 'அன்பரே! அவ்விஷயம் இன்னதென்று பொழுதுவிடிந்தவுடன் சொல்லுகிறேன். இப்பொழுது எனக்கு நித்திரை மயக்கம் அதிகமாயிருக்கிறது. நீங்களும் நித்திரை செய்யுங்கள்' என்று கூறினுள்.

அதற்கு அமிர்தசாகரன் சம்மதித்தான். பிறகு, அவரவர்களுடைய படுக்கையில் படுத்து நித்திராதேவியோடு உறவாடிக்கொண்டிருந்தார்கள். பொழுது விடியும் சமயமாயிற்று. அமிர்தவதனு படுக்கையை விட்டெழுந்துவேலைக்காரியைக்கொண்டு, வீட்டு வேலைகளை எல்லாம் செய்து முடித்து வெந்நீர் போட்டு வைத்துவிட்டு அமிர்தசாகரன் படுத்துக்கொண்டிருக்கு மிடத்திற்குச் சென்றுள். அப்போது விழித்துக்கொண்டிருந்த அமிர்தசாகரன், அமிர்தவதனுவைக் கண்டவுடன் படுக்கையை விட்டெழுந்து அமிர்

தவதனாவை நோக்கி 'அமிர்தவதனா! பேப்பரில் கண்ட விஷயத்தைப் பொழுது விடிந்தவுடன் சொல்லுகிறே னென்று கூறினாயன்றோ? அதென்ன விஷயம்?, என்று அறிந்துகொள்ளுதற்குப் பிரியப்படுகிறேன்' என்றான்.

'அன்பரே! அவ்விஷயத்தைத் தாங்களறிவீர்களானால் துக்கப்படுவீர்கள். ஆனால், அவ்விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்காமலிருப்பதும் சரியன்று. ஆகையால் சொல்லு கிறேன்-சொல்லட்டுமா?' என்று கேட்டாள் அமிர்தவதனா.

'அதென்ன விஷயம்? என்னிடம் சொல்லக்கூடாதா? சொல்லட்டுமா?' என்று கேட்கின்றாயே. சொன்னால் என்ன? என்று வினவினான் அமிர்தசாகரன்.

'சொன்னால் ஒன்றுமில்லை. நீங்கள் துயரப்படுவீர் களோ—என்றுதான் யோசிக்கின்றேன்; வேறொன்றுமில்லை' என்று கூறினாள் மங்கை.

'துயரப்படவேண்டிய விஷயத்திற்குத் துயரப்பட்டுத் தானே தீரவேண்டும்' என்றான் அமிர்தசாகரன்.

'சரி; நான் பேப்பரில் கண்ட விஷயமாவது, "மங்கள புரி ஜமீன் சதானந்தருடைய குமாரரைச் சென்ற சில மாதங்களாகக் காணோம்: சதானந்தர் தமக்குச் சம்பவித்த பற்பல கொடிய விஷயங்களைச் சகிக்கமுடியாதவராய் மரண மடைந்தார். அவருடைய ஆஸ்திகளெல்லாம் என் வசத்தி லிருக்கின்றன. அமிர்தசாகரரை அநேகம் தனவந்தர்களுக் குத் தெரியும். அவரை எவ்விதத்திலேனும், எவ்வித நிலைமை யிலேனும் இருக்கக்கண்டாலும் சரி; அல்லது கேள்விப்பட் டாலும் சரி, அவர் இருக்குமிடத்தை மட்டும் எனக்குத் தெரிவிப்பவர்களுக்குத் தகுந்த வெகுமதி அளிக்கப்படும். இங்ஙனம், ஞானசம்பந்தன், சதானந்தக் கற்பகத் தோட்

டம், மங்களபுரி'' என்பதேயாம். இவ்விதம் வரையப்பட்டிருந்ததைக் கண்டு நான் திடுக்கிட்டவளாய்த் தங்கள் தந்தையை விட்டுப் பிரிந்தபின் தாங்கள் எவ்வூரில் எவ்வாறு கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறீர்களோ வென்று எண்ணிக் கிலேசப்பட்டுக்கொண்டிருந்தேன்' என்று மொழிந்தாள்.

மங்கையின் வாயிலிருந்துவரும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக் கொண்டிருந்த அமிர்தசாகரன், 'ஐயோ! என் தந்தையா மாண்டார்? நான் அவருக்குப் புத்திரனாகப் பிறந்தும் என்னால் அவருக்கொரு சுகமுமில்லை. போகட்டும். அவருடைய மரணகாலத்திலேனும் அவர் சமீபத்திலிருந்து உதவினேனே? பாவி என் மாற்றான் தாயாலன்றோ எங்கள் குடும்பம் இவ்விதமாயிற்று?' என்று இவ்விதம் தசரதர் மரணத்தைப் பரதன் கூறக் கேட்டு ஸ்ரீராமர் துக்கித்ததுபோல் துக்கித்தான்.

அமிர்தவதனை தேறுதல் சொல்லி அவனுடைய துக்கத்தைப் போக்கி வெந்நீரைப் பதத்துடன் இறக்கி அமிர்தசாகரனை ஸ்நானம் செய்யும்படி சொல்லிவிட்டுத் தான் சமையல் அறைக்குட் சென்று போஜனம் தயார் செய்துகொண்டிருந்தாள். அமிர்தசாகரன் ஸ்நாநம் செய்து வேறு உடைகளை அணிந்துகொண்டபின் அமிர்தவதனை ஸ்நாநம் செய்து நல்ல உடைகளை அணிந்துகொண்டு அமிர்தசாகரனுக்குப் போஜனமிட்டாள். அமிர்தசாகரன் போஜனம் செய்தபின் அமிர்தவதனை அவனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துவிட்டுத் தானும் போஜனமருந்தியபின் அவனோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் அவனைப்பார்த்து "என் ஆருயிரே! நான் கலாசாலைக்குப் போகவேண்டிய நேரமாயிற்று. நீங்கள் இருங்கள். நான் சென்று சீக்கிரம் திரும்பிவருகி

றேன்'' என்றாள். அமிர்தசாகரன் நல்லதென்று சம்மதித்தான். உடனே அமிர்தவதனா ஒரு வாடகை வண்டியிலேறிக் கொண்டு கலாசாலைக்குப் போய்விட்டாள்.

அரைமணி நேரம் அமிர்தசாகரன் வீட்டிலிருந்தான். பிறகு அவன் வெளியிற் சென்றுவர வேண்டுமென்று தன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு வீட்டிலிருந்த வேலைக்காரியைப் பார்த்து, 'நான் வெளியிற் சென்று வருகிறேன். நீ வீட்டில் பத்திரமாயிரு' என்று சொல்லிவிட்டு ஜயகுமாரியின் பங்களாத் தோட்டத்திற்குப் போனான்.

அவன் அந்தத் தோட்டத்தை உற்றுநோக்கி 'என்ன ஆச்சரியம்! இந்தத் தோட்டம் நேற்றையதினம் இருந்ததற்குமேல் இன்றயதினம் அதிவிநோதமா யிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்த சந்திரகாந்த மண்டபத்திற்குப்போய் ஒரு சோபாவின்மீது உட்கார்ந்தான். 'நாம் நேற்றுப்பார்த்த பெண்மணி இன்றும் வருவாளோ?' என்று எண்ணினான். கால்மணி நேரமாயிற்று. குளிர்ந்த காற்று வீசிற்று. புஷ்பங்களெல்லாம் கமகமவென்று பரிமளித்தன. அப்படியே சோபாவின்மீது படுத்து நித்திரையிலாழ்ந்தான் அமிர்தசாகரன்.

வழக்கம்போல் ஜயகுமாரி தன்னை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு, தோழி ஒருத்தியை அழைத்துக்கொண்டு சந்திரகாந்த மண்டபத்தை நோக்கிச்சென்றாள். சென்றவள், திடீரென்று திரும்பித் தன் தோழியைப்பார்த்துப் 'படுக்கை அறையில் என்னுடைய பிடில் இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டுவா' என்று சொல்லி அவளை அனுப்பிவிட்டு அவள் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண் டிருந்தாள். தோழி பிடிலைக்கொண்டுவந்து ஜயகுமாரியிடம் கொடுத்துவிட்டு

அவளைப் பார்த்து, 'அம்மணி! எனக்கு அரண்மனையில் கொஞ்சம் வேலையிருக்கிறது. நான்போகிறேன்' என்று கூறினாள். அதற்கு ஜயகுமாரி 'நல்லது, நீ போகலாம். நான் சந்திரகாந்த மண்டபத்திற்குச் சென்று அங்கு அரை மணி நேரம் பிடில் வாசித்துக்கொண் டிருந்துவிட்டு வரு கிறேன்' என்று சொல்லித் தோழியை அனுப்பிவிட்டுச் சந்திரகாந்த மண்டபத்திற்குச் சென்றாள்.

அவள் சோபாவின்மீது நித்திரை செய்துகொண் டிருக்கும் அமிர்தசாகரனைப் பார்த்துவிட்டாள். அமிர்த சாகரனுடைய யௌவனமும், அழகும் ஜயகுமாரியின் மனத்தைக் கவர்ந்தன. அவள் மெதுவாய் அமிர்தசாகரன் சமீபத்திற்சென்று அவனை உற்றுப்பார்த்துத் தலையை அசைத்துக்கொண்டு ஆச்சரியத்துடன் 'பேஷ், இவர் யாரா யிருக்கலாம்? என் மனக்குறையை மாற்றவந்த மாதவரோ? அல்லது மன்மதரோ? கந்தர்வ புருஷர்களி லொருவரோ? இவர் அவர்களி லொருவரானால் சில அடையாளங்கள் வேண்டுமே! சரி; இவர் என்னைப்போல் மானிடப்பிறவியே யன்றி வேறன்று. பிரமன் தன் கைபடிய மன்மதனைப் படைத்துப் பிறகு இவரைப் படைத்தான் போலும்! இவரைக் காணமல் வாடுகின்ற தேசத்தின் பெயர்யாதோ? தாய் தந்தையர் யாரோ? உற்றார்களெவரோ? என்ன அழகு! என்னைப்போல் மணமாகாத கன்னிகைகளுள் எவளேனும் ஒருத்தி இவரைக் காண்பாளாயின் இவர்மீது அவள் காதல் கொள்ளாமலிருப்பாளா? தாமரை மலர்போல் பொலிந்த முகத்தில் புன்சிரிப்புக் குடிகொண்டிருப்பது பார்ப்பதற்கு எவ்வளவு மனோகரமாயிருக்கிறது! இவருடைய அகன்ற மார்பின் அழகும், நீண்ட கைகளின் நேர்த்தியும் என் னுடைய மனத்தைக் கவர்கின்றன. இவரை மெள்ள என்

கையினுல் தட்டி எழுப்பட்டுமா! அவ்விதம் தட்டி எழுப்புவதும் சரியன்று. இவர் நித்திரை தெளியும்படி நான் ஒரு தந்திரம் செய்கிறேன். அப்போதாவது இவர் விழித்துக் கொள்ளமாட்டாரா?' என்று இவ்வண்ணம் ஜயகுமாரி தன் மனத்திற்குள் சொல்லிக்கொண்டு பத்துஅடி தூரம் சென்று சந்திரகாந்த மண்டபத்தின் வெளிப்புறத்துப் படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு பிடிலில், "சகானு" இராகத்தை வெகு இனிமையாய் மீட்டிக்கொண்டிருந்தாள். பிடிலினின்றும் உண்டாகும் தொனியினுல் அமிர்தசாகரன் விழித்துக் கொண்டான். இவ்வித இனிமைவாய்ந்த ஓசை எங்கிருந்து உண்டாகிறதென்று கவனித்தான். சப்தம் உண்டாகுமிடத்தை அறிந்துகொண்டான். 'இதை வாசிப்பவர் யார் பார்ப்போம்' என்று சொல்லிக்கொண்டே அமிர்தசாகரன் சோபாவினின்றும் எழுந்து வெளியில் வந்து அங்குக் கையில் பிடிலுடனிருந்த ஜயகுமாரியைக் கண்டு திகைத்துநின்ருன்.

'நேற்று, நான் இந்தப் பெண்மணியைக் கண்டேன். நேற்றினும் இன்றைக்கு மிக்க அழகு வாய்ந்தவளாயிருக்கின்ருள். எனக்கு இவளோடு பேசவேண்டுமென்னும் ஆவல் உண்டாகிறது இவளோ என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. என்னை இவள் பார்த்துவிட்டால் நான் இங்கு வந்ததைப்பற்றி என்ன சொல்லுவாளோ? சொல்லுகிறதிருக்கட்டும். நான் இவளோடு வலியப்பேசினுலும் இவள் என்னேடு பேசுவாளோ என்னமோ ஒன்றும் தெரியவில்லை. இருக்கட்டும். இவள் என்னைப் பார்க்கும்படி நான் இவள் முன்னே போகிறேன். என்ன சொல்லுகிருளோ பார்க்கிறேன்' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு அமிர்தசாகரன் ஜயகுமாரியின் முன்னே மந்த நடையுடன் சென்ருன் இப்போதுதான் அமிர்தசாகரனைக் கண்டவளைப்போல்

திகைத்து ஜயகுமாரி தான் பிடில் மீட்டுவதை நிறுத்தினாள். இதுதான் சமயமென்றெண்ணி அமிர்தசாகரன் ஜயகுமாரியைப் பார்த்து, 'ஏன் பிடிலை மீட்டாமல் நிறுத்திவிட்டீர்கள்? இப்பொழுது வாசித்துக்கொண்டிருந்த சகானாராகம் செவிக்கு வெகு இனிமையா யிருந்தது. மறுபடியும் அந்த இராகத்தைக்கேட்க நான் பிரியப்படுகிறேன். தாங்கள் இன்னொருதரம் சகானா இராகத்தை வாசிக்கக் கூடுமா?' என்று வினவினான்.

ஜயகுமாரி:—(வெட்கத்துடன்) நான் பிடில் வாசிப்பதில் அவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்தவளல்லவே. தங்களுக்குப் பிடிலில் பழக்கமுண்டோ?

அமிர்தசாகரன்:—எனக்குப் பிடிலில் கிஞ்சிற்றேனும் பழக்கமில்லை.

ஜயகுமாரி:—அப்படியானால் கொஞ்சம் நேரத்திற்கு முன் நான் பிடிலில் வாசித்துக்கொண்டிருந்தது சகானா ராகமென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?

அமிர்தசாகரன்.—எனக்குப் பிடில் வாசிக்கத் தெரியாவிட்டால் என்ன? இராகப் பரிட்சை சற்று உண்டு.

ஜயகுமாரி:—சரி; இராகப் பரிட்சையில் தேறினவர்களுக்குச் சங்கீதத்திற்குரிய கருவிகளில் எவைகளிலேனும் ஒன்றில் அப்பியாசமிருக்கலாமே?

அமிர்தசாகரன்:—அப்பியாசமில்லாமலென்ன? எனக்கு ஆர்மோனியம் வாசிக்கத்தெரியும்.

அமிர்தசாகரனோடு பேசப்பேச ஜயகுமாரிக்கு அவன் மீது ஏற்பட்ட பிரியம் அதிகரித்துக்கொண்டே வந்தது.

ஜயகுமாரி:—வெகு நலமாயிற்று எனக்கு ஆர்மோனியம் வாசிக்கக் கற்றுக்கொள்ள ஆவல் அதிகமாயிருக்கிறது. ஆகையால் தாங்கள் எனக்குக் கற்றுக் கொடுக்கிறீர்களா?

அமிர்தசாகரன்.—உங்களுக்கு இஷ்டமானால் நாளை முதல் கற்றுக்கொடுக்கிறேன்.

ஜயகுமாரி:—நீங்கள் எனக்கு ஆர்மோனியம் வாசிக்க நன்றாய்க் கற்றுக்கொடுத்துவிட்டால் அதற்குப்பிரதிபலனாக எனக்குச் சொந்தமான இவ்வூருக்குத் தங்களையே நான் ஜமீன்தாரராக்கி விடுவேன்.

அமிர்தசாகரன்:—என்னை ஜமீன்தாரனாக்கிவிட்டு நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஜயகுமாரி:—நான் தங்களை ஜமீன்தாராக்கிவிட்டு ஜமீன்தாரணியாகத்தா னிருப்பேன்.

அமிர்தசாகரன்:—நான் ஜமீன்தாரனாகிய பின், நீங்கள் ஜமீன்தாரணியாய் இருப்பதெப்படி?

ஜயகுமாரி:—ஜமீன்தார் அரசாட்சி செய்யும் ஒரு நாட்டை அதேகாலத்தில் ஒரு ஸ்திரீயும் அரசாட்சி செய்தாலன்றி அந்த ஸ்திரீக்கு ஒப்புக்காவது ஜமீன்தாரணி என்னும்பெயர் கிடைக்க வேறு வழியில்லையோ?

அமிர்தசாகரன்:—என் வேறு வழி இல்லை? ஜமீன்தாரரின் மனைவியானால் அந்த ஸ்திரீக்கு ஜமீன்தாரணி என்னும் பட்டம் கிடைக்கிறது.

ஜயகுமாரி:—உண்மை. அவ்விதமே தாங்கள் ஜமீன்தாரரானால் எனக்கு ஜமீன்தாரணி என்னும் பட்டம் கிடைக்கட்டுமே! கிடைக்காமற் போகுமா?

அமிர்தசாகரன்:—(மனத்திற்குள்) நான் இவள் மீது காதல் கொண்டிருப்பதைப்போல இவளும் என்மீது காதல் கொண்டிருக்கிறளென இவள் பேசும் வார்த்தைகளின் குறிப்பால் தெரிகிறது ஆகையால் யான் இவளுடைய பிரியத்திற்குச் சார்பாகவே பேசவேண்டும். (ஜயகுமாரியைப் பார்த்து) நீங்கள் இவ்வூரின் ஜமீன்தாரணியோ?

ஜயகுமாரி:—ஆம். நான் இவ்வூரின் ஜமீன்தாரணியே.

அமிர்தசாகரன்:—தங்களுடைய தாய் தந்தையர் இருக்கின்றார்களா? தங்களுக்கு உடன்பிறந்த சகோதர சகோதரிகள் இருக்கின்றார்களா?

ஜயகுமாரி:—என்னுடைய தாயும் தந்தையும் இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்துபோய்விட்டார்கள். எனக்குச் சகோதர சகோதரிகளில்லை. நான் என்னுடைய தாய் தந்தையருக்கு ஏகபுத்திரி

அமிர்தசாகரன்:—ஒரு பெரிய ஜமீன்தாராயிருந்த தங்கள் தந்தை தங்களுக்கு விவாகம் செய்து வைக்காம லிருந்ததற் குக் காரணம் என்ன?

ஜயகுமாரி:—தகுந்தவான் கிடைக்காமையே காரணம்.

அமிர்தசாகரன்:—என்ன ஆச்சரியம்! எத்தனையோ ஜமீன்தாரர்களின் குமாரர்கள் கல்வி, செல்வம், அழகு முதலியன வாய்ந்தவர்களாய் அநேக ஊர்களிலுமிருக்கத் தாங்கள் தகுந்த வரன் கிடைக்கவில்லை யென்று சொல்லுகிறீர்களே! இதனை நம்ப முடியுமா?

ஜயகுமாரி:—எல்லாம் இருந்துமென்ன? அவர்கள் நற்குணம், நற்செய்கை, பரோபகாரம் முதலிய நல்லொழுக்கங்கள் வாய்ந்தவர்களா யிருக்கவேண்டுமே!

அமிர்தசாகரன்:—அப்படியானுல் நீங்கள் விவாகமே இல்லாமலிருக்க வேண்டுமென எண்ணிவிட்டீர்களோ?

ஜயகுமாரி:—நான் விவாகம் செய்து கொள்ளாமலிருக்க வேண்டுமென்று எண்ணவில்லை. இதற்கு முன் தகுந்த வரன் கிடைக்காமலிருந்ததனுல் நான் விவாகம் செய்து கொள்ளாமலிருந்தேன். (சிறிது நாணத்தோடு) இப்பொழுது ஒரு வரன் கிடைத்திருக்கிறுர். விவாகமும் சீக்கிரத்தில் நிறைவேறிவிடுமென்று நினைக்கின்றேன்.

அமிர்தசாகரன்:—(மனத்திற்குள்) சீ! நான் இப்பெண் மீது பிரியப்படுவது முற்றிலும் பிசகு. யாரோ ஒரு வரன் கிடைத்திருக்கிறுனென்றும், விவாகமும் கூடிய சீக்கிரம் நிறைவேறிவிடுமென்றும் இவள் சொல்லுகிறுள். இவள் மீது ஆசைகொள்வது சரியன்று. (ஜயகுமாரியைப் பார்த்து) தாங்கள் விவாகம்செய்து கொள்ளுகிறது உத்தமம். யாரோ ஒரு வரன் கிடைத்திருக்கிறுரென்று கூறினீர்களே, அந்த வரன் யார்? ஒரு ஜமீன்தாரர்தானே?

ஜயகுமாரி:—என்னவோ அவருடைய வார்த்தைகளால் அவர் உயர் குலத்திற் பிறந்தவரென்றும், கல்வி, நற்குணம், நற்செய்கை, பரோபகார சிந்தை முதலியன வாய்ந்துள்ளவரென்றும் தெரிகிறது. அன்றியும் அவர் ஒரு கோடீஸ்வரருடைய குமாரர்போல் அழகு வாய்ந்தவராயிருக்கின்றுர். ஆனுல் அவரைப் பார்த்தால் தற்சமயம் ஒரு சாமானிய தனவந்தருடைய பிள்ளைபோல் தோன்றுகிறுர்.

அமிர்தசாகரன்:—நீங்கள் பேசுகிறதெல்லாம் வெகு வேடிக்கையாயிருக்கிறது. யாரோ ஒரு வரன் கிடைத்திருக்கிறுரென்று கூறினீர்கள். அந்த வரன் யார் என்றுல் கல்வி,

நற்குணம், நற்செய்கை, பரோபகாரச் சிந்தை முதலியன வாய்ந்துள்ளவரெனத் தெரிகிறதென்றும், அவரைப் பார்த்தால் ஒரு கோடீஸ்வரருடைய புத்திரரைப்போல் தோன்றுகிறதென்றும் சந்தேகத்தோடு சொல்லுகிறீர்களே? அந்த வரனுடைய ஊர் பேர் குணம், முதலியவைகளைத் தெரிந்து கொள்ளாமலா அவரை விவாகம் செய்து கொள்ளப் போகின்றோம் என்று நினைத்து விட்டீர்கள்?

ஜயகுமாரி:—அவர் நற்குணம் வாய்ந்துள்ளவ ரென்று நான் முதலிலேயே சொல்லவில்லையா? அவருடைய வரலாறுகளை இப்பொழுதே அவரிடம் கேட்டுச் சொல்லுகிறேன்.

அமிர்தசாகரன்:—இப்பொழுதே அவரிடம் கேட்டுச் சொல்வதற்கு அந்த வரன் எங்கே இருக்கின்றார்?

ஜயகுமாரி:—இந்தப் பங்களாத் தோட்டத்தில்தானிருக்கிறார். மேலும் நீங்கள் என்னோடு பேசும் விஷயங்களையெல்லாம் ஒன்றையும் விடாமல் அவருடைய மனம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

அமிர்தசாகரன்:—(கொஞ்சம் பயந்தவனாக) அப்படியானால் அவர் தாங்கள் என்னோடு பேசிக்கொண் டிருந்ததைப் பற்றிக் கோபித்துக்கொள்ளுவாரன்றோ? ஆகையால் நான் இவ்விடத்திலிருந்து போய்விடுகிறேன். இந்நேரம் நான் தங்களோடு பேசிக்கொண்டிருந்தது தவறு. ஒரு சமயம் நான் இவ்வூரில் இன்னும் சிலகாலம் இருக்க நேரிடுமாயின் தங்களுக்கு விவாகமானவுடன் தங்களுடைய காதலர் இப்போது நான் தங்களோடு பேசிக்கொண் டிருந்ததற்காகக் கோபங்கொண்டு அப்போது எனக்கு ஏதேனுமொரு கெடுதலைச் செய்வார். ஆகையால் இனி நான் இங்கு இருக்கக் கூடாது. இதுவரையில் நான் தங்களோடு சம்பாஷித்துக்

கொண்டிருந்த விஷயங்களில் ஏதேனும் தவறு இருக்குமாயின் மன்னிக்க வேண்டியது தங்களுடைய கடமை. நான் போய்வருகிறேன். எனக்கு விடை கொடுங்கள்.

ஜயகுமாரி:—நீங்கள் அவருக்காக ஏன் இவ்விதம் பயப்படுகிறீர்கள்! எனக்கு மணமானவுடன் என்னுடைய பிரியர் தனக்குத்தானே கெடுதலைச் செய்துகொள்ளுவாரா? தாங்கள் என்னோடு சம்பாஷித்துக்கொண் டிருப்பதைப்பற்றி அவர் தன்னைத்தானே கோபித்துக்கொள்ள மாட்டார்.

என்று இவ்வண்ணம் ஜயகுமாரி சொல்லிக் கொண்டிருக்கையில் கொஞ்சம் தூரத்தில் ஜயகுமாரியின் தோழி ஒருத்தி வந்துகொண்டிருப்பதைக் கண்ட அமிர்தசாகரன் ஜயகுமாரியைப் பார்த்து, 'அதோ பாருங்கள்! யாரோ ஒரு ஸ்திரீ வருகிறாள். நான் உங்களோடு பேசிக்கொண்டிருப்பதை அவள் பார்த்துவிட்டால் ஏதேனும் நினைத்துக்கொள்ளுவாள். ஆதலால் நான் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டே அமிர்தசாகரன் ஜயகுமாரியிடம் உத்திரவு பெற்றுக் கொள்ளாமலே தன் காதலி அமிர்தவதனு வசித்துக்கொண்டிருக்கும் வீட்டை நோக்கி நடந்தான்.

அமிர்தசாகரன் பிரிவைச் சகியாதவளாய் ஜயகுமாரி கொஞ்சதூரத்தில் தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கும் தன்னுடைய தோழியை விரைவாய் அழைத்து அவளிடம் 'அதோ போகும் அந்த யௌவன புருஷன் இவ்வூரிலுள்ள எந்தத் தெருவில் எந்த வீட்டிற்குப் போகிறாரென்று அவருக்குத் தெரியாமல் அவர் பிறகே சென்று அறிந்துகொண்டுவா' என்று சொல்லியனுப்பினாள்.

அந்தத் தோழியும் அவள் சொன்னபடியே அமிர்தசாகரன் தன்னைப் பார்க்காவண்ணம் அவன் பிறகே சென்று

அவன் அமிர்தவதனுவின் வீட்டிற்குட் சென்றபின் அந்த வீட்டை நன்ருய்க் கவனித்துக் கொண்டு ஜயகுமாரியிடம் சென்று அவளைப் பார்த்து அமிர்தசாகரன் இன்ன வீட்டிற்குப் போனுனென்றும், அந்த வீடு இன்ன தெருவிலிருக்கிறதென்றும் அடையாளத்தோடு சொன்னுள். ஜயகுமாரி அவற்றை ஞாபகமாகக் கேட்டுக் கொண்டு அவளை அனுப்பி விட்டுத் தான் தன்னுடைய அரண்மனைக்குச் சென்ருள்.

பத்தாவது அத்தியாயம்.

ஆண்ரூபம் பெண்ரூபமான அதிசயம்.

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"—திருவள்ளுவநாயனர்.

'மணி ஒன்பது அடித்துவிட்டது. சந்திரன் உதயமாகும் நேரமாயிற்று ஜனநடமாட்டமும் அநேகமாய் அடங்கியது. குமுதமலர்களெல்லாம் குபீரென மலர்ந்து சந்திரன் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றன. கணவனைப் பிரிந்தவுடன் கற்புடைய மங்கையர்களின் முகம் வாடிப் போவதைப்போல சூரியன் சென்றவுடன் தாமரைமலர்கள் குவிந்தன. ஆகாய வெளியில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன. என்னுடைய அன்பும் அறிவும் வேறிடத்தில் சென்றுகொண்டிருக்கின்றன. ஆகையால் எனக்கு ஒரு நிமிஷநேரம் ஒரு மாதம்போல் தோன்றுகிறது. நான் எண்ணியபடியே இந்த உடைகளால் என்னை அலங்கரித்துக் கொண்டேன், இவைகளும் எனக்கு அதிக அழகைத் தரு



கின்றன' என்று இவ்விதம் சொல்லிக்கொண்டு குளக்கரையிலிருந்து வீட்டிற்குட்சென்று ஒரு பட்டுவஸ்திரத்தை எடுத்து முக்காடிட்டுக்கொண்டு கையில் ஒரு சிறிய விளக்குடன் தனக்குத் தெரிந்துள்ள அடையாளப்படி அமிர்தவதனா வசிக்கும் வீட்டைநோக்கி நடந்தான் ஒரு வாலிபன். அவன் அமிர்தவதனாவின் வீட்டிற்குப் போனவுடன் வீட்டின் வெளிக்கதவு சாத்தப்பட்டிருப்பதைக் கண்டான். வீட்டிற்குள் யாரோ இருவர் பேசிக்கொண் டிருக்கிற ஓசை கேட்டது. உற்றுக் கவனித்தான். அமிர்தசாகரனோடு அமிர்தவதனா பேசிக்கொண் டிருக்கிறாளெனத் தெரிந்தது. என்ன செய்கிறதென்று யோசித்தான். முடிவில் வீட்டின் கதவைத் தட்டினான். உடனே 'யார் கதவைத் தட்டுகிறது' என்று கேட்டான் அமிர்தசாகரன்.

'கதவைத் திறவுங்கள்' என்றான் வெளியில் நின்று கொண்டிருந்தவாலிபன்.

கதவைத் திறவுங்களென்று சொன்ன வார்த்தையின் தொனியானது வீணை நாதம்போ லிருந்தது. உடனே அமிர்தசாகரன்மட்டும் நாற்காலியை விட்டெழுந்துவந்து கதவைத்திறந்து பார்த்தான். சாமுத்திரிகா இலட்சணத்திற் சொல்லப்பட்டிருக்கும் முப்பத்திரண்டு உத்தம இலக்கணங்களும் வாய்ந்தவனாய் அதிரூபலாவண்ணியம் பொருந்திய ஒரு யௌவன புருஷன் நிற்பதைக் கண்டு அமிர்தசாகரன் அமிர்தவதனாவின்மீது சந்தேகம் கொண்டான். வெளியில் நின்றுகொண்டிருந்த வாலிபன் அமிர்தசாகரனைப் பார்த்து, 'நீங்கள் யார்?' என்று வினவினான்.

அமிர்தசாகரன்:—நான் இவ்வீட்டி லிருப்பவன்.

வாலிபன்:—இவ்வீட்டில் இருப்பவர்களா! நீங்கள் பூர்வீகமாய் இந்த வீட்டி லிருக்கிறீர்களோ?

அமிர்தசாகரன்:—இல்லை.

வாலிபன்:—இல்லையென்றால்—தாங்கள் இவ்வீட்டிற்கு எப்பொழுது வந்தீர்கள்?

அமிர்தசாகரன்:—நான் இவ்வீட்டிற்கு வந்து இரண்டு நாட்களாயின.

வாலிபன்:—சரி; இவ்வீட்டிற்கு வருவதற்கு முன் இவ் வீட்டிலிருந்தவர்களை உங்களுக்குத் தெரியுமல்லவா?

அமிர்தசாகரன்:—ஆம் தெரியும். அமிர்தவதனை யென்னும் ஒரு ஸ்திரீ இருந்தாள். அவளும் இப்பொழுது இவ் வீட்டில்தான் இருக்கிறாள்.

வாலிபன்:—இவ் வீட்டிலிருக்கும் பெண்மணியின் பெயர் அமிர்தவதனை யென்பது பல மாதங்களுக்கு முன் னரே எனக்குத் தெரியும். இப் பெண்மணியை நீங்கள் எப் போது அறிந்தீர்கள்?

அமிர்தசாகரன்:—ஏன்? இப்பெண்மணியை நான் என் னுடைய சிறுவயதிலிருந்து அறிவேன். அன்றியும் இவள் என்னைக் காதலித்துள்ளவள்.

வாலிபன்:—விந்தையிலும் விந்தை! இதற்குமுன் எத் தனையோதரம் நான் இந்த வீட்டிற்குள்ளிருக்கும் பெண் மணியிடம் வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் இவள் என்னைப் பார்த்து 'நேசா! நான் தங்களையன்றி வேறொரு வனைக் காதலிப்பேனோ? தாங்களே எனக்குக் கணவன்' என்று சொல்லியிருக்கிறாள். தங்களை இந்த ஸ்திரீ காதலித் திருப்பதாகத் தாங்கள் சொல்லுகின்றீர்கள். என்ன! இந்த ஸ்திரீயின் துர் நடத்தையும், துர் எண்ணமும் இப்படியாக இருக்கின்றன? தங்களுக்கும் எனக்கும் நற்கால மிருந்த

படியால் நாமிருவரும் சந்தித்து இப்பெண்மணியின் துர் நடத்தையை அறிந்துகொண்டோம். உத்தம ஸ்திரீகளும் இருக்கிறார்கள். இருந்தபோதிலும் சில ஸ்திரீகளைத் திடமென்று நம்பிவிடுவது உசிதமன்று. அதுபற்றியன்றோ அறிவுவாய்ந்த பெரியோர் 'சேலை கட்டிய மாதரை நம்பினோர் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே' என்று அனுபவித்தறிந்திருப்பதை அப்படியே கூறியிருக்கின்றார்.

அமிர்தசாகரன்'—(மனத்திற்குள்) 'ஆ! கடவுளே! உலகத்தில் வெளிக்கு உத்தம ஸ்திரீகளாயும் இரகசியத்தில் துன்மார்க்கிகளாயுமன்றோ சில ஸ்திரீகள் இருக்கின்றார்கள்! இந்தத் துஷ்டை அமிர்தவதனை என்னைப்பார்த்து 'அன்பரே! நான் உங்களைக் காணாமல் வாடினேன்! வருந்தினேன்!!' என்று சொல்லி என் முன் ஆடினாளே! அடிபாதகீ! உன்னுடைய செய்கை இவ்வண்ணமாகவா இருக்கிறது? சீ! துரோகி! அமிர்தவதனை! உன்னை நான் உத்தமி என்று நினைத்தல்லவோ இதுகால்வரைக்கும் இவ்வுலகத்திலிருந்தேன். உன்னுடைய துரெண்ணம் முன்னரே எனக்குத் தெரிந்திருக்குமாயின் நான் இவ்வீட்டின் வாயிலில்கூட அடிவைத்திருக்க மாட்டேன். போகட்டும்; இனியேனும் யான் இங்கு நிற்காமல் போய்விடுவதே உத்தமம். (வெளிப்படையாக) ஐயா! எனக்கு வெளியில் சிலகாரியங்கள் ஆகவேண்டி யிருக்கின்றன. அந்தக் காரியங்களை முடித்துக்கொண்டு வருகிறேன். பிரியமிருந்தால் தாங்கள் உள்ளே போகலாம்' என்று சொல்லிக்கொண்டே அமிர்தசாகரன் வெளியில் போகப் புறப்பட்டான். அமிர்தசாகரன் அமிர்தவதனையின் மேல் சந்தேகப்பட்டு வீட்டிலிருந்து புறப்பட்டுப் போவதையும், அவன் உள்ளத்திற் கொண்ட எண்ணத்தையும் அவன் பேசிய வார்த்தைகளின் குறிப்பால்

அறிந்துகொண்ட வாலிபன் அமிர்தசாகரனைப் பார்த்து, 'எங்கே போகிறீர்கள்? தங்களை அழைத்துக்கொண்டுபோக வெண்ணியே நான் இவ்வீட்டை நாடி இப்போது வந்தேன்' என்று வழிமறித்து நின்றான்.

அமிர்தசாகரன்:—என்? எதற்காக? எங்கே என்னை அழைத்துக்கொண்டு போக வந்தீர்கள்? என்ன விஷயம்?

வாலிபன்:—ஒரு விஷயம் இருக்கிறது.

அமிர்தசாகரன்:—'ஒரு விஷயமென்றால் அவ் விஷயத்தின் விவரமென்ன?

வாலிபன்:—விஷயத்தின் விவரமா! நீங்கள் இன்று இவ்வூர் ஜமீன்தாரணி ஜயகுமாரியின் அரண்மனைத் தோட் த்திலிருக்கும் சந்திரகாந்த மண்டபத்தில் நித்திரை ய்துகொண் டிருந்த தாங்கள், வரும்போது அங்கிருந்த குமாரியிடமிருந்து எதையோ அபகரித்துக்கொண்டு ந்து விட்டீர்களாம். அதற்காக ஜமீன்தாரணி தங்களை அழைத்துக்கொண்டு வரும்படி என்னிடம் சொன்னாள்.

அமிர்தசாகரன்:—ஐயோ! நான் அந்த ஜமீன்தாரணியிடமிருந்து யாதொன்றையும் அபகரித்துக்கொண்டு வரவில்லையே! இது என்ன தரும சங்கடம்?

வாலிபன்:—அபகரித்துக் கொண்டு வந்தீர்களோ என்னவோ எனக்கு ஒன்றும் தெரியாது. எங்கள் யஜமாட்டி ஜயகுமாரியிடம் வருகிறீர்களா இல்லையா? என் பிரியை அமிர்தவதனாவின் வீட்டிற்கு வந்தவர்களாதலால் இதுவரையில் பொறுத்துக்கொண் டிருந்தேன். இல்லையானால் நான் முன்னமே தங்களைக் கொண்டுபோயிருப்பேன். வேண்டாம். சப்தமின்றி என் பிறகே வாருங்கள். இன்றேல் வம்புக்கு

இடமாகும். அக்கம்பக்கத்தி லிருப்பவர்களுக்கு விஷயம் இன்னதென்று தெரிந்துவிடுமானால் தங்களுக்குத் திருடன் என்னும் பட்டம் கிடைத்துவிடும். பிறகு நான் இரண்டு சேவகர்களைக்கொண்டு தங்களை எங்கள் ஜமீன்தாரணியிடம் அழைத்துக்கொண்டு போகும்படி நேரிடும். அதெல்லாம் எதற்கு? வாருங்கள் போகலாம்.

அமிர்தசாகரன்:—(மனத்திற்குள்) 'கடவுளே! என்னைக் கஷ்டகாலம் நன்றாய்ப் பிடித்திருக்கிறது. இவ்வளவு காலமாய் எத்தனையோ கஷ்டமும், சுகமும் அனுபவித்தேன். நான் அனுபவித்த கஷ்டத்திற்கு அளவில்லை. போகட்டும். இப்பொழுது திருடன் என்னும் பெயர்பெறக் காலம் வந்ததே! ஆ! கடவுளே! எல்லாம் உன் திருக்கூத்தேயன்றி வேறன்று. ஆகையால் கடையேனாகிய யான்செய்வது யாது? இவ்வாலிபனோடு போகிறேன். இறைவனே! பிறகு உன் செயல்படி ஆகட்டும். ஜயகுமாரி என்னை அபகீர்த்திக்குட்படுத்தமாட்டாளென்று நான் நினைக்கின்றேன். பிறகு எப்படியோ? இதோ போகிறேன். (வாலிபனைப் பார்த்து) ஐயா! வாருங்கள் ஜயகுமாரியிடத்திற்குப் போகலாம்.'

என்று அமிர்தசாகரன் சொன்னவுடன் வாலிபன் அமிர்தசாகரனை அழைத்துக்கொண்டு ஜயகுமாரியின் அரண்மனைக்குப் போய் அந்தப்புரத்து ஹாலுக்குட் சென்றவுடன் அமிர்தசாகரனை அங்கிருந்த ஒரு சோபாவின்மீது உட்காரச்செய்து தானும் அவன்பக்கத்தில் உட்கார்ந்தான். உடனே அமிர்தசாகரன் அவ்வாலிபனைப்பார்த்து, 'நான் வந்திருக்கிறேனென்று இனி நீர் சென்று நமது ஜமீன்தார்ணியிடம் அறிவிக்கலாமே?' என்றான்.

அதற்கு அந்த வாலிபன் 'தங்களுடைய கைவிரலிலுள்ள தங்கள் மோதிரத்தைக் கழற்றி என்னிடம் கொடுத்

தீர்களானால் நான் அதைக் கொண்டுபோய் அரசகுமாரியிடம் காண்பித்து, நீங்கள் வந்திருக்கிறீர்களென்று சொல்லுகிறேன்' என்று கூறினான்.

உடனே அமிர்தசாகரன் தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி வாலிபன் கையிற் கொடுத்தான். வாலிபன் அதைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்த ஒரு அறையை அமிர்தசாகரனுக்குக் காண்பித்து, 'அந்த அறைக்குள் எவரேனும் மனிதர்கள் இருக்கிறார்களா' பாருங்கள் என்றான்.

உடனே அமிர்தசாகரன் சோபாவை விட்டெழுந்து வாலிபன் காண்பித்த அறைக்குட்சென்று அந்த அறைமுற்றும் வெகு அமைதியோடு தேடிப் பார்த்தான். அங்கு ஒருவரையும் காணோம். அந்த அறையில் அநேக தீபங்கள் எரிவதையும், அந்தத் தீபங்களின் பிரகாசத்தினால் தோன்[illegible]ின அங்குள்ள கண்கொள்ளாக் காட்சிகளையும் கண்டு [illegible]ியமடைந்தான். இராஜா இரவிவர்மாவின் வேலையோ[illegible]று பார்ப்பவர்கள் எண்ணும்படி உயிருள்ளவைகளைப்[illegible]ல அநேகவித மானிட உருவங்களும், மிருகங்களின்[illegible]வங்களும், நிஜமானவைகளைப் போல அநேகம் படர்[illegible]ொடிகளும், மரங்களும், தடாகங்களும் சுவர்களில் வரை[illegible]ப்பட்டிருந்தன. இரேகையுள்ள பளபளப்பான சலவைக்கற்கள் தளத்தில் பதிப்பிக்கப்பட்டிருந்தன. அநேக கண்ணாடி அலமாரிகளில் ஜயகுமாரியின் ஆடையாபரணங்களும், ஒன்றுக்கொன்று உயர்வான மூன்று தந்தக் கட்டில்களும் இருந்தன. தங்கத்தினால் சித்திரவேலை செய்யப்பெற்று ஒவ்வொன்றும் ஒவ்வொரு விமானத்தைப் போல் விளங்கியது. இக்காலத்தில் சாமான்ய தனவந்தர்களுடைய படுக்கை அறைகளே எவ்வளவோ அழகாயிருக்க, நமது ஜயகுமாரியோ ஒருபெரும் ஜமீன்தாரணி! அவளுடைய பள்ளி

யறையின் விநோதங்களைப் பற்றி நாம் வருணிக்காமலே வாசகர்கள் அறிந்துகொள்வார்களன்றோ? ஆகையால் நாம் ஜயகுமாரியின் பள்ளியறையின் விநோதங்களைப் பற்றி வருணிக்கப் புகுந்திலோம். நிற்க, அறைக்குள்ளிருந்த அமிர்தசாகரன் வெளியில் சோபாவின்மீது உட்கார்ந்து கொண்டிருந்த வாலிபனிடம் வந்து அவனைப் பார்த்து, 'அறைக்குள் ஒருவருமில்லை' என்று கூறினான்.

அதற்கு அவ்வாலிபன், 'அப்படியானால் நான் அந்த அறைக்குள் போய்வருகிறேன். நீங்கள் இந்தச் சோபாவின் மீது உட்கார்ந்துகொண் டிருங்கள்' என்று சொல்லிவிட்டு ஜயகுமாரியின் பள்ளியறைக்குட் சென்றான். கால்மணிநேர மாயிற்று. வாலிபன்சென்ற அறைக்குள்ளிருந்து ஜயகுமாரி அழகிய உடையுடன் வெளியில் வந்து அமிர்தசாகரன் அருகில் உட்கார்ந்தாள்.

ஜயகுமாரியைக் கண்டவுடன் அமிர்தசாகரன் திகைத்து 'ஆ! இஃதென்ன விந்தையாயிருக்கிறது! நான்என்ன கனவு காண்கின்றேனோ?' என்று ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

ஜயகுமாரி அவனைப்பார்த்து, 'இப்போது எவரேனும் அந்த அறைக்குள் இருக்கிறார்களா போய்ப் பாருங்கள்' என்று சொன்னாள்.

மறுபடியும் அமிர்தசாகரன் ஜயகுமாரி சுட்டிய அறைக் குட் சென்று பார்த்தான். அங்கு ஒருவருமில்லை. ஆனால் கண்ணாடி அலமாரிகளிலிருந்த ஜயகுமாரியின் ஆடையாபர ணங்களிற் சில குறைந்திருப்பதையும், ஆண் வேஷத்திற் குரிய ஆடையாபரணங்களிற் சில அங்குள்ள கட்டிலின்மீது கழற்றி வைக்கப்பட் டிருப்பதையும் கண்டு ஆச்சரியங் கொண்டவனாய் அந்த அறையிலிருந்து வெளியில்வந்து ஜய

குமாரியைப் பார்த்து, 'அந்த அறைக்குள் இப்போதும் ஒருவருமில்லை' என்றான்.

ஜயகுமாரி அவனைச் சோபாவின் மீது அங்ஙனமே உட்காரச் செய்து அவனைப் பார்த்து, 'அந்த அறைக்குள் ஒருவருமில்லை யென்றால், சிறிது நேரத்திற்குமுன் அந்த அறைக்குட்சென்ற வாலிபன் யார் என்று நினைக்கிறீர்கள்?' என்று கேட்டாள்.

அமிர்தசாகரன்:—வாலிபன் ஒருவனுமில்லை. தாங்கள் தான் வாலிபனைப்போல வேஷம் புனைந்துகொண்டு அந்த வேஷத்திற்குச் சார்பாக நடித்துக் கொண்டிருந்தவர்களெனத் தெரிகிறது.

ஜயகுமாரி:—'ஆம், அதிலும் சந்தேகமா? வாலிபனைப் போல் வேஷம் புனைந்து கொண்டிருந்தவள் நான்தான். இதோ பாருங்கள்! நான் ஆண் வேஷத்தோடு இருக்கும் போது தங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட மோதிரம் என்று சொல்லிக்கொண்டே தன்னிடமிருந்த அமிர்தசாகரனுடைய மோதிரத்தை அவனிடம் கொடுத்தாள்.

அவன் அதைப் பெற்றுக்கொண்டு தன் மனத்திற்குள் ஜயகுமாரியை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்னும் ஆவலும், இரகசியம் இன்னதென்று அறியாமுன் அமிர்தவேதனைவைத் தூஷித்ததைப்பற்றித் துயரமுங் கொண்டான். ஜயகுமாரி அவனைப்பார்த்து அவனுடைய வரலாறுகளைச் சொல்லும்படி கேட்டுக் கொண்டாள். உடனே அமிர்தசாகரன் தன்னுடைய வரலாறுகளை யெல்லாம் ஒருவாறு சொல்லி முடித்துப் பிறகு தான் பிறந்த குலத்தையும், தன்னுடைய பெயரையும், தான் பீ. ஏ. (B. A. வரையில் வாசித்திருப்பதையும் சொல்லி முடித்தான். அமிர்தசாக

ரன் சொல்லிய விஷயங்களை யெல்லாம் கேட்டவுடன் ஜய குமாரி அவன்மீது அதிகக் காதல் கொண்டவளாய்த் தன் கண்ணிமைகள் அசையாதபடி அவனை உற்றுப் பார்த்தாள். அவனும் அவளை உற்றுப் பார்த்தான். இருவர் பார்வை யும் ஒன்றோடொன்று உறவாடிற்று. இருவர் முகத்திலும் புன்சிரிப்புக் குடிகொண்டது. அமிர்தசாகரன் ஜயகுமாரி யைப் பார்த்து, 'நான் எதையோ தங்களிடமிருந்து அபக ரித்துக்கொண்டு போய்விட்டேனென்று சொல்லி என்னை அழைத்துக்கொண்டு வந்தீர்களே! நான் என்ன வஸ்து வைத் தங்களிமிருந்து அபகரித்துச் சென்றேன்?' அதைச் சொல்லவில்லையே என்று கேட்டான்.

அதற்கு ஜயகுமாரி, தங்களுக்குத் தெரியவில்லையா? தாங்கள் என்னிடமிருந்து அபகரித்துச்சென்ற வஸ்து என் னவெனில் என்னுடைய பிரியம்—காதல்.'

அமிர்தசாகரன்:—எவ்விதம் நான் தங்களுடைய காத லைக் கவர்ந்து சென்றேன்?

ஜயகுமாரி:—எவ்விதமா? எவ்விதமோ எனக்குத் தெரி யாது. இன்று காலை நான் தங்களைக் கண்டது முதல் எனக் குத் தங்கள்மீது காதலுண்டாயிற்று. அதைப்பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. அந்தக் காதலைத்தான் தாங்கள் கவர்ந்து சென்றீர்களென்று சொன்னேன்.

அமிர்தசாகரன்:—(சிரித்துக்கொண்டு) இன்று காலை நான் தங்களைக் கண்டபோது தங்களுக்கு யாரோ ஒரு வரன் கிடைத்திருக்கிறாரென்றும், விவாகம் சீக்கிரத்தில் நிறைவேறிவிடுமென்றும் தாங்கள் சொன்னீர்களே!—அவ் விதமிருக்கத் தாங்கள் என்னைக் காதலிப்பது தருமா?

ஜயகுமாரி:—அன்பரே! தாங்கள் என் இரகசியத்தை அறியவில்லை போலும்! இன்று காலை நான் தங்களைச் சந்தித்தபோது தாங்கள் என்னைப் பார்த்து 'நீ காதலித்தவரன் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டீர்களே,—அப்போது யான் அதற்குத் தங்களிடம் நான் காதலித்துள்ளவரன் இந்தப் பங்களாத் தோட்டத்தில்தான் இருக்கிறாரென்றும், தாங்கள் என்னோடு சம்பாஷித்துக்கொண்டிருப்பதை அவருடைய மனம் கவனித்துக்கொண்டிருக்கிறது என்றும் சொல்லவில்லையா? அதனால் அது நான் தங்களைக் காதலித்திருப்பதாகச் சொன்ன குறிப்பு வார்த்தையென்று தங்களுக்குத் தோன்றவில்லையா? அப்போது தாங்கள் நான் வேறு எவனையோ காதலித்திருக்கிறேனென்று எண்ணிப் போய்விட்டீர்கள். எனக்குத் தங்கள்மீது ஏற்பட்ட காதலானது பெருகப் பெருக என்ன செய்கிறதென்று ஆலோசித்து முடிவில் நான் என்னுடைய தோழியைக் கொண்டு தாங்கள் தங்கியிருந்த தங்கள் காதலியின் வீட்டைத்தெரிந்து கொண்டு ஆசையின் மிகுதியால் தங்களைக் காணக் கொஞ்ச நேரத்திற்குமுன் ஆண் வேஷத்துடன் வந்து தங்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்தேன். அன்பரே! தாங்கள் இனி எதற்கும் ஆலோசிக்க வேண்டாம்.

'எத்தனையோ அரசகுமாரர்களிருக்க, அவர்களையெல்லாம் விடுத்துத் தாங்கள் என்னைக் காதலிப்பானேன்?' என்று அமிர்தசாகரன் சொன்னவுடன ஜயகுமாரி அவனைப்பார்த்து 'நேசரே! தாங்கள் இவ்விதம் சொல்லுகிறது சரியன்று. உண்மையாகச் சொல்லுகிறேன். என்னுடைய மனச்சாட்சியுடன் நான் தங்களை எனக்குத் தகுந்த மணவாளரென்று எண்ணிவிட்டேன். இன்று முதல் என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றும் தங்களுக்குச்

சொந்தமானவையே. தாங்கள் என்னை அங்கீகரித்துக் கொண்டு என்னுடைய அதிகாரத்தையும் தாங்களே கைக் கொள்ளவேண்டும். இது தங்களுடைய கடமை. நேசரே! என்பிரிய நேசரே!! நீங்கள் தான் என்னுடைய மனத்திற் கிசைந்த மாதவர். தடையின்றி என்னை அங்கிகரித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிக்கொண்டே அமிர்தசாக ரன் பாதங்களிற் பணிந்தாள். அமிர்தசாகரன் அப்பெண் மணியைப்பார்த்து, கண்ணே! உன் பிரியப்படியே ஆகுக' என்று கூறினன். உடனே ஜயகுமாரி அமிர்தசாகரன் பக் கத்தில் உட்கார்ந்துகொண்டு அவனேடு கால்மணிநேரம் வரையில் சந்தோஷமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந் தாள். பிறகு அவள் அமிர்தசாகரனைப் பார்த்து 'மித்திரரே! நேரமாகிறது. சித்திராதேவி என்னேடு விளையாட விரும்பு கிருள்' என்று கழறினள்.

'கண்மணீ! உன்னைப்போல் என்னைக் காதலித்துள்ள என் கண்மணியான அமிர்தவதன என்னைத் தேடிக்கொண் டிருப்பாளன்ருே? அவள் எப்படிப் போகிறது?' என்று உசாவினன் அமிர்தசாகரன்.

'கமலநேத்திரரே! மறந்து விட்டேன்! இப்பொழுது ஒரு சேவகியைஅனுப்பி என் தமக்கையாகிய தங்களுடைய பிரியை அமிர்தவதனையை அழைத்துக்கொண்டு வரச்சொல் லுகிறேன்' என்று விளம்பினள் ஜயகுமாரி.

'சேவகி போனல் அமிர்தவதன வரமாட்டாள். ஆகை யால் யான் சென்று அவளை அழைத்துக்கொண்டு வருகி றேன்' என்று பகர்ந்தான் அமிர்தசாகரன்.

'யானும் தங்களோடு வருகிறேன்' என்ருள் மங்கை.

'வரலாம்' என்ருன் நமது கதாநாயகன்.

உடனே ஒரு பட்டு வஸ்திரத்தினுல் முசமூடி இட்டுக் கொண்டு புறப்பட்டாள் ஜயகுமாரி.

அமிர்தசாகரன் அவளை அழைத்துக்கொண்டு அமிர்த வதனுவின் வீட்டிற்குப் போனுன். அப்போது அமிர்த சாகரனைக் காணுமால் வருந்திக்கொண்டிருந்த அமிர்தவதனு அவனைக் கண்டவுடன் மகிழ்வுற்ருள். ஆனல், அவன் அரு கில் நிற்கும் பூமகளைப்போல் அழகுவாய்ந்த ஜயகுமாரியைக் கண்டு ஒன்றுந் தோன்ருமல் திகைத்தாள். ஐந்து நிமிஷம் மௌனம் குடிகொண்டது. அமிர்தவதனு அமிர்தசாகரனை யும் ஜயகுமாரியையும் அங்கிருந்த அழகிய நாற்காலிகளில் உட்காரச் செய்து அமிர்தசாகரனைப் பார்த்து ஜயகுமாரி யைச் சுட்டி 'இப்பெண்மணி யாரோ?' என்று கேட்டாள்.

உடனே அமிர்தசாகரன் அமிர்தவதனுவை நோக்கி ஜயகுமாரியைத் தான் கண்டது முதல் இதுவரையில் நடந்த எல்லா விஷயங்களையும் சொன்னுன். அமிர்தவதனு, அமிர்த சாகரன் சொன்னவைகளைக் கேட்டு மகிழ்வுற்ருள். ஜய குமாரி அமிர்தவதனுவைப்பார்த்து, 'அக்கா! தாங்கள் முத லிற் காதலித்த இவரை யானும் காதலித்துவிட்டேன். இது தெய்வ சங்கற்பம்; அவ்விஷயத்தில் தங்களுடைய எண்ணம் யாதோ?' என்று சாதுரியமாய் வினவினுள்.

அதற்கு அமிர்தவதனு அவளைப்பார்த்து, 'அம்மா! ஜயா! உன்னை யான் என்னுடையு தங்கையைப்போல் எண்ணிவிட்டேன். நீ இனிமேல் எதற்கும் ஆலோசிக்க வேண்டாம்' என்று அன்புடன் மொழிந்தாள்.

பிறகு மூவரும் சந்தோஷமுற்று வேறு சில வார்த்தை களைப் பேசிக்கொண் டிருந்தார்கள். அரைமணி நேரம் சந் தோஷத்தில் மறைந்தது. அமிர்தசாகரனும், ஜயகுமாரியும்

அமிர்தவதனாவை அழைத்துக்கொண்டு வீட்டைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளும்படி வேலைக்காரியிடம் சொல்லிவிட்டு அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மறுதினம் அமிர்தவதனா தன்னுடைய வேலையை வேறொரு நற்குணம் வாய்ந்த ஸ்திரீக்குச் செய்து வைத்தாள். சில தினங்கள் சென்றன. விவாக ஏற்பாடுகள் வெகு விமரிசையாய் நடந்தன. அநேக பிரபுக்களுக்கும், சிற்றரசர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் விவாகப் பத்திரிகைகளை அனுப்பினார்கள். குறித்த தினத்தில் அவர்கள் எல்லோரும் கலியாண மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்கள். மணமகன் அமிர்தசாகரனுக்கும், மணப் பெண்களான அமிர்தவதனா ஜயகுமாரி ஆகிய இருவருக்கும் ஆசாரப்படி சடங்குகளெல்லாம் நிறைவேறின. சுபலக்கினமும் நெருங்கிற்று. பெரியோர்கள் ஆசீர்வதிக்க, மங்கள வாத்தியங்கள் முழங்க அமிர்தவதனா, ஜயகுமாரி ஆகிய இவ்விருவர்களுக்கும் அமிர்தசாகரன் திருமங்கலியங்களைத் தரித்தான். பிறகு நடக்கவேண்டியவைகளெல்லாம் நடந்தன. ஜயகுமாரின் அரண்மனை உத்தியோகஸ்தர்கள் விவாகத்திற்கு வந்தவர்களை எல்லாம் கௌரவித்தார்கள். ஐந்து தினங்கள் சென்றன. வந்தவர்களெல்லோரும் அவரவர்கள் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். அமிர்தசாகரனும் அமிர்தவதனாவும் கலியாணத்திற்கு வந்திருந்த இராம்தாஸ், குணபூஷணர், கருணாகரர், போஸ்ட்மாஸ்டர் ஆகிய இவர்களை அதிகமாய்ப் புகழ்ந்து அநேகம் வெகுமதிகளைக் கொடுத்து அனுப்பியதோடும், செம்படவர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு ஏராளமான திரவியங்களைக் கொடுத்தார்கள். அமிர்தசாகரன் தன் தங்கையின் கணவனான ஞானசம்பந்தனால் தன் குடும்ப விஷயங்களை அறிந்து மங்களபுரி ஜமீனைத் தன்வசமாக்கிக்கொண்டு அவனை அவன்

குடும்பத்தோடு சேதுபுரியிலேயே வைத்துக்கொண்டான். பிறகு ஜயகுமாரியின் உதவியால் அரசாங்கத்தாரின் அனுமதிபெற்று அமிர்தசாகரன் சேதுபுரிக்கும், அதற்குட்பட்ட வேறு சில நாடுகளுக்கும் தலைவனாயினான். எல்லோரையும் தன் உயிரைப்போல் எண்ணி அவரவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான். எல்லோரும் சாலவும் அவனை வாழ்த்திக்கொண்டிருந்தார்கள். அமிர்தவதனாவும், ஜயகுமாரியும் தங்கை, தமக்கைகளைப்போல் ஒற்றுமையுடன் பாலும் நீரும்போல் அந்யோந்யமாயிருந்து அமிர்தசாகரனுக்குப் பணிவிடை செய்வதிலேயே கவலையுடையவர்களாயிருந்தார்கள். அமிர்தசாகரன் தன் ஸ்திதியையும், தான் யார் என்பதையும் இப்போதுதான் விளக்கமாக ஜயகுமாரிக்குத் தெரிவித்தான். அவள் ஆச்சரியப்பட்டாள். பிறகு அவன் சேதுபுரிக்கும் மங்களபுரிக்கும் தலைவனாயிருந்து வாழலானான்.

* * * *

'வசந்தகாலம் மாலை ஐந்தரைமணி. காற்று சுகத்திற்கு வேண்டிய அளவு வீசிற்று. ரோஜா, மகிழம், பவளமல்லிகை முதலிய இன்னும் பலபுஷ்பங்களின் நறுமணம் எங்கும் உலவிக்கொண்டிருந்தது மான் இனங்கள் திரள் திரளாய்த் திரிந்துகொண்டிருந்தன. மயிலின் நடனமும், குயிலின் குரலோசையும் பார்ப்பவர் கண்களுக்குக் காட்சியாயும், கேட்பவர் செவிகளுக்கு இனிமையாயுமிருந்தன. அரண்மனைத் தோட்டத்திலுள்ள சந்திரகாந்த மண்டபத்தின் மேன்மாடியில் ஓர் அழகிய சோபாவின்மீது உட்கார்ந்துகொண்டு அமிர்தசாகரனும், ஜயகுமாரியும் ஒரு சமாச்சாரப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தார்கள். மூன்று வயதுள்ள ஓர் அழகிய பெண்குழந்தை ஜய

குமாரியின் மடியின்மீது உட்கார்ந்துகொண்டு அவளை 'அம்மா! அம்மா!!' என்று அழைத்துக்கொண் டிருந்தது. அமிர்தவதனு மாடியின் ஒருபுறத்தில் ஓர் அழகிய நாற்காலி யின்மீது உட்கார்ந்துகொண்டு அமிர்தசாகரனையும், ஜய குமாரியையும் கடைக்கண்ணுல் உற்றுநோக்கிப் புன்சிரிப் புடன் அன்று தனக்கு வந்த ஓர் இங்கிலீஷ் மாதாந்தச் சஞ்சிகையை வாசிக்க ஆரம்பித்தாள். நான்கு வருஷங் கொண்ட அதி சுந்தரமான ஆண்குழந்தை ஒன்று அவள் வாசிக்கும் சஞ்சிகையைப் பெற ஆவலுற்றுத் தாவிக்கொண் டிருந்தது. அமிர்தசாகரன் கல்வி அழகுற்ற அமிர்தவதனு வோடும், செல்வ அழகுற்ற ஜயகுமாரியோடும், குழந்தை களோடும் வெகுகாலம் வரையில் இன்புற்று எல்லாப் போகங்களையும் பெற்று வாழ்ந்துகொண் டிருந்தான்.

தனது பிரிவாற்ருமையினுல் மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலகம் புகுந்த அருமைத் தந்தையையும் தனது சிற்றன்னையையும் பற்றி அமிர்தசாகரன் அடிக்கடி சிந்தித்து ஆருத்துயரம் அனுபவிப்பதுமுண்டு. அதுசமயம் அவனது பத்தினிகள் இருவரும் அத்துயரத்தினின்று அவனைத் தேற்றுவித்து "உறங்குவதுபோலும் சாக்கா டுறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு" என்ற நாயனர் வாக்கி யத்தை எடுத்துக் கூறி அவனது தந்தையினுடைய ஆன்மா நற்கதி பெற்று உன்னத நிலை அடையுமாறு கடவுளைத் தியானித்துக்கொண்டு வருவதுடன் உலகத்தினது இயற் கை? உலகத்தை முன்னிட்டுக் கடவுளினது அற்புதச் செய் கை முதலியனவற்றைச் சிந்திக்குந்தோறும் அவன் அடை கின்ற ஆனந்தத்திற்கு ஓர் எல்லையும் அன்று.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வானென்பான் துணை" என்ற பொய்யாமொழிப்

படி அமிர்தசாகரன் இல்லறவாழ்க்கையை யாவரும் புகழ இனிதுநடத்தி உலகத்திற்கே ஒரு பேருபகாரியா யிருந்து வந்தபடியினுல் சர்வஜனங்களும் அவனை வாயார மனமார வாழ்த்திக்கொண்டாடினுர்கள்.

கருணைமிகுந்த நமது ஆங்கில கவர்ன்மெண்டார் இவனது கல்வியின் தேர்ச்சி புத்தியின் நுட்பம் முதலிய மேம்பாடுகளைக் கண்கூடாக் கண்டறிந்து தமது அரசாங்க காரியங்கள் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும் இவனது அபிப்பிராயத்திற்கு ஒரு கௌரவமளித்து வருவதுண்டு. சுருங்கக்கூறில் இவனொரு தேசாபிமானியாயும் பாஷாபிமானியாயும் துலங்கித் தமிழ்நாட்டிற்கே அநேக நன்மைகளைச் செய்து தலைமைபெற்று வாழ்ந்துவந்தான்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

நற்குணம் வாய்ந்துளோர்க்கு நற்பதவி கிடைக்கும்.

முற்றிற்று.

not
Punctures
16 2 83

இனிய தமிழ் நாவல்கள்.

அமிர்தசாகரன் அல்லது கோடீசுவரனுடைய குமாரன்	1—4—0
ஆனந்தமனோகரன் அல்லது உலகத்தின் இரகசியங்கள்	1—0—0
மதனகாந்தி படிக்கப் படிக்கத் திகட்டாதது	1—8—0
பொற்றொடி அல்லது பணம்பற்றி மணமா? குணம்பற்றி மணமா ?	1—2--0
கோமதி கோகிலமானது	0 12—0
நீலலோசனி	0—4—0
ராஜீவாக்ஷி	0—8—0
'பார்வதி' உந்நத கல்யாண வைபவம் ஒரு பிராமணமாது எழுதியது	0—4—0
மோஹமுத்கரம் என்னும் பஜகோவிந்தம் சிறந்த வியாக்யானங்களுடன் கூடியது	0—8—0
விவேகானந்தசுவாமிகள் இந்துமதப் பிரசங்கம்	0—6—0

அருணகிரிநாதரருளிச்செய்தது.

சந்தக்குழிப்பும் அரும்பதவுரையும் சேர்ந்துள்ள

திருப்புகழ் பெரிது முதற்பாகம் 642 பாடல்கள் அடங்கியது	2—8—0
ஷை இரண்டாம் பாகம் 611 பாடல்கள் அடங்கியது	2—8—0
நளவெண்பா (மூலமும் விசேடவிருத்தி உரையும்)	2—8—0
திருக்குறள் மூலமும் உரையும் (கிளேஸ்காகிதம்)	3—0—0
ஷை சாதாரணமான காகிதம்	2—0—0
வில்லிபுத்தூராழ்வார் பாரதம் அரும்பதவுரையுடன், மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான் ம. கோபாலகிருஷ்ணய்யரவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது.	4—0—0

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புஸ்தக வியாபாரம், மதுரை.